JL.
[illegible]6:4196m 211,N1
N15.4
160184

# The St. Anthony's Messenger.

## அர்ச். அந்தோனியார் தூதன்.

**Vol. IV.** **January. 1918.** **No. 1.**

புத்தகம் **IV.**] FIDES AC ROBUR. [நம்பர் **1.**

## A Happy New Year.

## பாக்கியமான புது வருஷம்.

அர்ச். அந்தோனியார் தூதனை வாசிப்பவர்களுக்கு இப்புதுவருஷம் பாக்கியமான வருஷமாக இருக்கும்படி சர்வேசுரனைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். வியாதிஸ்தருக்குச் சௌக்கியமும், கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதலும், ஏழைகளுக்கு வேண்டிய உதவியும், பகையாளிகளுக்குச் சமாதானமும், சகலருக்கும் தேவ ஆசீர்வாதமும் உண்டாகும்படி சர்வேசுரனைப்பார்த்து மன்றாடுகிறோம். "தேவ கிருபையும், சமாதானமும் உங்களிடத்தில் வர்த்திக்கக்கடவதாக."

1604264 ... 008.

# MORAL INSTRUCTION

## நல்லொழுக்கப் போதனை.

## On the existence and oneness of God.

### கடவுள் ஒருவரோ உண்டென்பது.

நமது இந்திய பாடசாலைகளில் நல்லொழுக்கப் போதனையை மாணாக்கர்களுக்குக் கற்பிப்பது அவசியமென்று இராஜாங்கத்தார் அபிப்பிராயப்படுகிறார்கள்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" என்றார் பிறரும்.

ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று என்பது நாமெல்லோரும் அறிந்த விஷயமே. கிறீஸ்துவர்களாயினும், இந்துக்களாயினும், மகம்மதியர்களாயினும், மற்ற எந்த மதத்தாராயினும் நல்லொழுக்கம் மனிதர்களுக்கு அத்தியாவசியமானது. ஆனது பற்றிப் பாடசாலைச் சிறுவர்க்கும், மற்றைப் பெரியவர்க்கும் பயன்படும்படி பிரதி சஞ்சிகையிலும் உபந்நியாச ரூபமாக மேற்கண்ட தலைப்பின்கீழ் ஒவ்வொரு விஷயம் குறித்தெழுதல் படும். அத்தகைய வியாசங்கள் இப்பத்திரிகையைப் படிப்பவர்களுக்குச் சமய சஞ்சீவியாய் இருந்து உதவுமென்பது நமது நம்பிக்கை. ஏன்? பத்து ரூபாய் கொடுத்து வக்கீலினுடைய வாக்கைப் பெற்றுக்கொண்டுபோன குடியானவனொருவன் அப் பத்துரூபாய்க்குப் பதின் மடங்கு பயனை அடைந்த கதையை அநேகர் அறிந்திருப்பார்கள். ஆகையால் தாங்களும், தங்கள் குடும்பமும், மித்திரரும், தேசமும் பயனடையுமாறு பின் வரும் முதல் வியாசத்தை இதனடியில் வரைகிறோம்.

நல்லொழுக்கத்தில் தலையாயது தெய்வபக்தி

"கற்றதனால் ஆயபயன் என்கொல் வால்அறிவன்
நற்றாள் தொழார் எனின்." என்றபடி அத்தெய்வபக்தி இல்லாவிடின் மனிதனும் மிருகத்துக்குச் சமானமே. சர்வத்தையும் படைத்த கடவுள் ஒருவர் உண்டு. அவரோ சர்வேசுரன். அவர் உண்டு என்றும், சகலத்துக்கும் சிருஷ்டி கர்த்தா

... 211, N1K
N1514



என்றும் நமக்கு எப்படித் தெரியும்? ஒரு வீட்டின் புகை போக்கி வழியாக ஒருவன் புகையைக் காணுவானானால் உடனே அவ்வீட்டில் நெருப்பு எரிகிறது என்று யூகித்து அறிந்து கொள்வாள். இவன் நெருப்பை அவ்வீட்டுக்குள் போய்க் கண்ணால் பார்க்காமல் போனாலும் அப்புகையினால் நெருப்பு உண்டு என்பதை யூகித்து அறிவான். அதுபோலவே கடவுளைப் பற்றியும் நாம் கருதலாம்.

சிலர் கண்டதே காட்சியென நின்று, "கடவுளை நாம் காண்பதில்லையே. அதனால் அப்படி ஒருவர் இல்லை" என்பார்கள். அவர்கள் பேச்சு குழந்தைப் பருவத்தில் தாயை இழந்த ஒருவன், தான் அத்தாயைக் காணாததினால் தனக்குத் தாயே இல்லையென்று சொல்வதுபோலாகும். ஒரு சிங்கார மாளிகையைக் காணும் நமக்கு அவ்வீட்டைக் கட்டிய புத்தித் தீக்ஷணியமுள்ள ஒருவன் இருக்கவேண்டுமென்று மனதில் படுவதில்லையா? அதுபோல ஒவ்வொரு செயற்கை வஸ்துவையும் காணும்போதெல்லாம் அவ்வஸ்துவைச் செய்தவன் ஒருவன் இருக்கவேண்டுமென்று மனதில் படும். சாதாரண செயற்கை வஸ்துவுக்கே இப்படித் தோன்றினால் இயற்கை வஸ்துக்களுக்குச் சிருஷ்டி கர்த்தர் ஒருவர் உண்டு என்று சொல்லாமலே விளங்கும். இந்த விசாலமான பூமியையும், அவற்றிலுள்ள நானாவித ஜீவராசிகளையும், சடப்பொருள்களையும், வானத்தையும், அவ்வானத்திலுள்ள சூரியன், சந்திரன், நட்சத்திரங்களையும், மற்றும் பல அற்புத காட்சிகளையும் நாம் காணும்போதெல்லாம் அவற்றிற்கு ஆதாரமான கர்த்தா ஒருவர் இருக்கவேண்டுமென்றும், அவர் சர்வ ஞானமுள்ளவரென்றும் நமக்குத் தோன்றுவதில்லையா?

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்றபடி அவருடைய இஷ்டப்படியே இவ்வுலகத்தின் காரியங்கள் நடைபெறுகின்றன. அவர் அநாதி. மற்றப் பொருள்களைத் தாம் படைத்தும், தம்மை வேறொருவரும் படைக்கமுடியாத நிலையிலுள்ளவர். அவருக்குப் பிறப்பு இறப்பு இல்லை. என்றும் அழியாதவர். அவருக்குச் சரீரமில்லை. நன்மையே அவரது உருவம். சர்வவியாபி அவர் ஒருவரே. தன்னையொத்த பிறர் அவருக்கு என்றும் கிடையாது.

உலகத்தில் ஒரு அற்பக் காரியத்தைச் செய்யவேண்டுமானால் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொள்ளவேண்டியிருக்கிறது. தலைவன் அவசரமாயினும், பலர் ஏற்படுவதும் கூடாத

காரியம். ஏனெனில், அதனால் பல அலங்கோலை நேரிடுவதோடுகூட காரியம் சித்திபெறாதுபோம் என்பதில் ஐயமில்லை. இரண்டு எஜமானர்களுக்குள் அகப்பட்ட வேலைக்காரன் உருப்படியாவதில்லை. அப்படியிருக்க, இவ்வண்டபிண்ட சராசரங்களும் இரண்டு தலைவர்களுக்குள் அமைய நேர்ப்படுமானால் என்னகதியாகுமென்று பாருங்கள்! மாறுபாடான திக்குகளில் இழுக்கும் இரண்டு மாடுகள் கட்டிய வண்டி ஒரு நிலையாகச் செல்லாமல் இடைமுறிந்து விழும். அதுபோலவே இவ்வகிலாண்டங்கள் ஒரு தலைவனது ஆணைக்குள் ஒழுகவில்லையாயின் அவை குழப்பத்துக்குள்ளாகி நிலைகெட்டுத் தட்டழியும்.

ஒருநாள் அதிகாலையில் அரபிதேசத்து வழிப்போக்கனொருவன் அவ்வழியே சென்றுகொண்டிருந்த மற்றொரு அரோபியனைச் சந்தித்தான். பேச்சோடு பேச்சாய்க் கடவுளைப்பற்றிய பேச்சும் வந்தது. ஒருவன் நாஸ்திகன். கடவுளைக் காணமுடியாத காரணத்தால் அப்படி ஒருவர் இல்லையென்பதே அவனுடைய ஆழ்ந்த எண்ணம். மற்றொருவனுக்குத் தெய்வ பக்தி அதிகம். கடவுள் இல்லாமல் பொழுது விடியாது என்பது அவனது நிச்சயம். இவ்விருவருக்கும் தர்க்கம் ஏற்பட்டது. யூகசாலியான அந்த ஆஸ்திகன் நாஸ்திகனை நோக்கி, "இவ்வழியில் ஒரு ஒட்டகம் சென்றிருக்கிறது" என்று தான் தற்செயலாய்க் கண்ட அடையாளத்தை நினைத்துச் சொன்னான். அது எப்படித் தெரியுமென்று நாஸ்திகன் கேட்க, ஆஸ்திகன் அவனுக்கு ஒட்டகத்தின் அடிச்சுவடுகளைக் காட்டினான். நாஸ்திகன் இதை மறுத்துப் பேசமுடியாமல் ஒப்புக்கொண்டான். இதுபோலவே கடவுள் உண்டு என்று ஆஸ்திகன் தொடர்ந்து சொன்னபோது அதை ருசுப்படுத்தும்படி நாஸ்திகன் கேட்டுக்கொண்டான். அப்போது பொன்மயமான கிரணங்களோடு சூரியன் உதயமாயிற்று. அச்சூரியனைக் காட்டி, "இது யாருடைய அடிச்சுவடு?" என்று கேட்டான். நாஸ்திகன் பதில் சொல்லத்தெரியாமல் விழித்து நின்றபோது, ஆஸ்திகன், "இதுதான் சர்வேசுரனது காலடி" என்றான். அம்மொழி நாஸ்திகனுக்குப் பசுமரத்தில் ஆணி அறைந்தது போல நன்றாய்ப் பதிந்தது. அதுமுதல் அவன் விசுவாசியானான்.

ஆகையால் இதைப் படிக்கும் சிறுவர் சிறுமிகளே! நீங்களும் கடவுள் உண்டென்றும், அவர் ஒருவரேயென்றும் நம்புங்



கள். ஞான ஆரம்பத்துக்கு முன் அறிகுறி கடவுளிடத்துத் தோன்றும் பயபக்தியேயாம். (சத்தியநேசன்.)

---

## Duties of Parents towards their Children.

*(Continued)*

## பிள்ளைகள் மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.

(தொடர்ச்சி)

அர்ச். கிறிசொஸ்தோம் அருளப்பர், "பிள்ளைகளைப் பெற்றவர்களே! உங்கள் குடும்பமாகிய திருச்சபைக்கு நீங்களே அப்போஸ்தலர்கள். நீங்களே அவர்களை விசாரித்துக் கற்பியுங்கள்" என்கிறார். தாய்தந்தையர் பிள்ளைகளுக்கு முக்கியமாய் என்னத்தைக் கற்பிக்கவேண்டும்?

சிலுவை அடையாளம் சரியாகப் போடவும், பரமண்டல மந்திரம், பிரியதத்தமந்திரம், விசுவாசமந்திரம், பத்துக்கற்பனை, திருச்சபைக்கட்டளை, உத்தமமனஸ்தாபமந்திரம், சரியாகச் சொல்லவும், குறிப்பிடமும், அவைகளின் அர்த்தமும் தெளிவாய் விளங்கவும், விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் முதலிய முயற்சிகளைச் செய்யவும் அவர்களுக்குச் செவ்வையாய்க் கற்றுக்கொடுக்கவேண்டும். இவ்வளவுமாத்திரம் போதுமா? மோக்ஷத்தை அடைகிறதற்கு வேத சத்தியங்களை விசுவசிக்கிறது போதுமா?

கிளிப்பிள்ளைபோல் மனப்பாடமாய் மந்திரம் முதலியவைகளை ஒப்பிப்பது போதுமென்று நீங்கள் எண்ணவேண்டாம். ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவுமா? சர்க்கரையென்று எழுதி வாசித்தால் இனிக்காதே.

அவர்கள் மந்திரமும், குறிப்பிடமும் படித்தபிறகு அதன்படி நடக்க அவர்களைப் பழக்கவேண்டும். தாயானவள் குழந்தைக்குமுன்பாக சாதத்தை வைத்து, "குழந்தாய்! இதோ உனக்குச் சாப்பாடு வைத்திருக்கிறேன். உயிர் பிழைக்க இதை எடுத்துச் சாப்பிடு" என்றால், குழந்தை அதை அறிந்து தானே அதை எடுத்துச் சாப்பிடுமா? சாப்பிடாது. தாய் கட்டாயம் செய்து குழந்தைக்கு அச்சாதத்தையெடுத்து ஊட்டவேண்டும். அதுபோலவே, பிள்ளைகளுக்கு, "இது பாவம். இதை விலக்கு. இது புண்ணியம். இதைச் செய்வாயாக" என்று நடபடிக்கையால் காட்டிவரவேண்டும்.

(இன்னும் வரும்) எதார்த்தவாதி.

---

## What we must do for the Victory of the Allies.

## நேசக் கட்சியார் ஜெயமடையும்படி நாம் செய்யவேண்டியது என்ன?

ஜெர்மன் சக்கரவர்த்தியின் நிஷ்டூரத்தினாலே இவ்வுலகத்தில் ஒரு அகோர சண்டை உண்டாகி, கணக்கில்லாத ஜனங்கள் தங்கள் உயிரையும், சுகத்தையும், சொத்தையும் இழந்து, சொல்லிலடங்காத கஸ்தி துன்பப்பட்டு வருந்துகிறார்கள். கைகால் இழந்து முடவர்களானவர்கள் எத்தனையோ? கண்குருடாகியும் காயம்பட்டும் வருந்துவோர் எத்தனையோ? தகப்பனை இழந்து பரிதபிக்கும் குழந்தைகள் எத்தனையோ? கணவனை இழந்து கலங்கி நிற்கும் கைம்பெண்சாதிகள் எத்தனையோ? கஸ்தி துன்பப்படுவோர் எத்தனையோ? எவ்வளவு கஸ்தி துன்பம் இருந்தபோதிலும் நேசக் கட்சியார் அவைகளைத் தைரியமாய்ச் சகித்துக்கொண்டு பூரணஜெயம் அடையும் வரையில் குற்றமில்லாதவர்களைக் காப்பாற்றவும், அநீதம் செய்துவரும் சத்துராதிகளை எதிர்த்துத் துரத்தவும் யுத்தம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நேசக்கட்சியார் ஜெயமடையும்படியாக நம்மாலான உதவிசெய்யும்படி பிறசிநேகத்தினிமித்தம் நாம் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். ஆனால் வெகுதூரத்திலும், ஏழை அந்தஸ்திலும் இருக்கிற நாம் போர்வீரருக்கும், கஸ்தி துன்பப்படுகிற ஐரோப்பியர்களுக்கும் என்ன உதவி செய்யமுடியும்? (War Fund) யுத்த நிதி, (Red Cross Society) செஞ்சிலுவைச் சங்கம் இவை முதலிய நற்காரியங்களுக்காகப் பணம் வசூல் செய்யப்படும்போது, நமது அந்தஸ்துக்குத் தக்கதுபோல் கூடினவரையில் உதவி செய்யவேண்டும்.

இதுவுமல்லாமல் ஜெபத்தின் பலனை மறக்கவேண்டாம். முத்திப்பேறுபெற்ற (Joan of Arc) ஜான் ஆவ் ஆர்க் சொன்னதுபோல, "மனிதர்கள் போராட்டம் பண்ணுகிறார்கள். ஆனால் ஜெயம் கொடுக்கிறவர் சர்வேசுரன்" என்று நினைத்து நேசக் கட்சியார் சீக்கிரத்தில் ஜெயமடைந்து உலகமெங்கும் சமாதானம் உண்டாகும்படி வல்லமையுள்ள சர்வேசுரனை நோக்கி நாம் வேண்டிக்கொள்ளக்கடவோம்.

இந்த ஐரோப்பிய யுத்தம் தொடங்கிய அந்நாள்முதல் இந்நாள்வரைக்கும் நமது பரிசுத்த பிதாவாகிய அர்ச். பாப்பான



வர் இந்த யுத்தம் சீக்கிரம் முடிவடைந்து சமாதானம் உண்டாகும்படி தபசு செய்யுங்களென்று அடிக்கடி சொல்லிவருகிறார்.

நமது சக்கரவர்த்தியாகிய ஐந்தாம் ஜியார்ஜ் மன்னர் தமது இராஜ்ஜியத்திலுள்ள சகல ஜனங்களும் இம்மாதம் 6-ம் தேதி விசேஷவிதமாய்க் கடவுளை மன்றாடவேண்டுமென்றும், நேசக் கட்சியைச் சேர்ந்த இராஜாக்களுக்கும், சேனாதிபதிகளுக்கும் ஜெயமுண்டாகும்படி தகுந்த விவேகத்தையும் தைரியத்தையும் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திக்கவும் கட்டளையிட்டிருக்கிறார்.

கத்தோலிக் கிறீஸ்துவர்களாகிய நாம் தினந்தோறும் அக்கருத்து நிறைவேறும்படி வேண்டிக்கொண்டு வருகிறோம். சர்வேசுரன் நமது ஜெபங்களைக்கேட்டு நீதிக்காகப் போராடும் நமது நேசக் கட்சியாருக்குச் சீக்கிரம் ஜெயம் உண்டாகும்படி கிருபை செய்வாராக.

---

## The Cooly and the Innkeeper.

## வேலைக்காரனும், கடைக்காரனும்.

ஒரு கடைக்காரனிடம் கூலிக்கு வேலை செய்கிற வேலைக்காரன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு வாரமெல்லாம் கஷ்டப்பட்டு வேலை செய்த பிறகு சந்தை நாளில் தனக்குச் சேரவேண்டிய சம்பளத்தைப் பெற்றுக்கொள்வான். ஒரு நாள் இவ்வாறு தன் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு வீட்டுக்குச் செல்லுகையில் வழியிலுள்ள சாராயக் கடையைத் தாண்டிப் போகும்படி நேரிட்டது. அவன் சம்பளம் வாங்கிக்கொண்டு போவதைக் கண்ட சாராயக் கடைக்காரன் அந்தக் கூலிக்காரனைக் கூப்பிட்டு, "அண்ணா! ஏதோ மெத்த விரைவாய்ச் செல்லுகிறீர்களே! ஒரு வாரமெல்லாம் கஷ்டப்பட்டு வேலை செய்து, ஒரு நாளைக்காவது சந்தோஷம் கொண்டாடாமல் போகிறீர்களே!" என்று சொல்ல, அந்த ஏழைக் கூலிக்காரன் மதி மயங்கிக் கடைக்குள் போய்த் தன்னிடமிருக்கும் பணத்தை அந்தக் கடைக்காரனிடம் கொடுத்துத் தனக்கு வெறி கிளம்பும் வரையில் குடித்துக் கடைசியாகத் தன் சம்ப

ளமே போதாமல் போகும்படி குடிக்க நேரிட்டது. பிறகு கூலிக்காரன் கடைக்காரனைத் தூஷணமாகவும் இகழ்ச்சியாகவும் ஏசிப் பேசித் திட்ட ஆரம்பித்தான். இதனால் கடைக்காரனுக்குக் கோபமுண்டு, "அடே பைத்தியக்காரா! இனிமேல் இவ்விதமான கடைக்குள் உன் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு நுழையாதே. புத்தியில்லாத ஜனங்களை ஏமாற்றிப் பணம் பறிப்பது இங்குள்ள வழக்கம் என்பது உனக்குத் தெரியாதா? உனக்குப் புத்தி கற்பிக்கும்படியாகவே உன் சம்பளம் பூராவும் இன்று செலவு செய்யும்படி செய்தேன்" என்றான். அந்தக் கூலிக்காரனுக்கு மயக்கம் தெளிந்து, தான் செய்ததை நினைத்து மனநொந்து இவ்விதமாய் இனிமேல் மோசம்போகமாட்டேனென்றும், இவ்விதமான கடைக்குள் நுழையமாட்டேனென்றும் நல்ல பிரதிக்கினை செய்துகொண்டு போனான்.

(ஞானி.)

---

## Letter to a Friend.

### சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

பிரிய சிநேகிதா!

ஒரு இரட்சகனை அனுப்புவோமென்று கருணை சமுத்திரமான கடவுள் அளவில்லாத தயவோடு செய்தருளிய இவ்வாக்குத்தத்தத்தை மனுக்குலத்தார் ஆவலோடு ஏற்றுக்கொண்டு உலகத்தை ஈடேற்றுகிறவர் எப்போது வருவாரோவென்று ஆசையாய் எதிர்பார்த்திருந்தார்கள். ஆதி பிதாக்களுள் அநேகர் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, வரப்போகிறவரைச் சிந்தித்து, புண்ணிய வழியில் நடந்து வந்தபின் இறந்து போனார்கள். பிற்காலத்திலேயோ மனிதர்கள் பெருகிப் பல தேசங்களிலும் பரவி, பல பாஷைக்காரராகப் பிரிந்து, ஒரு தேசத்தாருக்கு மற்றொரு தேசத்தார் அன்னியராய்ப் போனதினாலும், சகல பாவ துர்க்குணங்களும் வளர வளர அதனோடு அஞ்ஞானமும் மேற்பட்டு அநேகர் மெய்யான கடவுளையும் அவர் அருளிய திரு வாக்குத்தத்தத்தையும் கற்பனைகளையும் படிப்படியாய் மறந்து அவரவர் தங்களுக்கு இஷ்டமானபடி பற்பல பொய்த் தேவர்களையும், மத ஆசாரங்களையும் உண்டாக்கிப் படைப்புண்ட வஸ்துக்களுக்குத் தேவ ஆராதனை செய்யத் தொடங்கினார்கள். அக்கினி, காற்று,



மழை முதலியன உலகத்துக்கு மிகவும் உபயோகமுள்ளவைகள் ஆனபடியால் அவைகளே கடவுளென்று சிலர் வணங்க, வேறு சிலர் சந்திரன், சூரியன் உலகத்துக்கு ஒளியும் உஷ்ணமும் கொடுத்து உதவுவதால் அவைகளே தெய்வமென்று கைதொழுதார்கள். பயங்கரமானது எதுவோ, பிரயோஜனமுள்ளது எதுவோ, அதைச் சிலர் ஆராதித்தார்கள். இப்படியே மலைகளும், மரங்களும், ஆறுகளும், பாம்புகளும், பிசாசுகளும், பசு முதலிய மிருகங்களும் தெய்வங்களாகக் கொள்ளப்பட்டன. சில வீர சூரரும், இராஜாக்களும், துஷ்டர்களை ஜெயித்து நாசம் பண்ணிக் குடிகளைப் பயமின்றி வாழப்பண்ணினதினால் அறிவற்ற ஜனங்கள் அவர்களைத் தேவர்களாகப் பூசித்து வர, நாள்வட்டத்தில் அவர்கள் ஆராதனை நிலைநிறுத்தப்படலாயிற்று. புலவர்கள் தங்கள் பாடல்கள் காதுக்கு இனிமையாகும்பொருட்டு உயிரற்றவைகளை உயிருள்ளவைகள் போலவும், மனிதர்களைத் தேவர்கள் போலவும் வருணித்துக் கொண்டாட, பிற்காலத்தில் அவைகளை மெய்யென்று ஜனங்களில் சிலர் நம்பிக்கொண்டதினால் கட்டுக் கதைகளும், பொய்த் தேவர்களும் பெருகி அஞ்ஞானம் மென்மேலும் அதிகரிக்கலாயிற்று.

இவ்வாறு அஞ்ஞான இருளினால் மயங்கித் தவறிப் போய்ப் பொய்த் தெய்வங்களைத் தொழுது வந்த ஜனங்களுக்குள்ளேயும் மெய்யான கடவுள் மனுக்குலத்துக்குச் செய்த வாக்குத்தத்தத்தின் நினைவு ஒரு விதத்தில் இருந்துகொண்டே வந்தது. உலக முழுவதையும் ஓர் குடையின் கீழ் ஆளும் பாலகன் வானத்தில் நின்று இறங்கி வந்து பிறப்பானென்று உரோமையர் முதலிய பல ஜாதியார் எதிர்பார்த்திருக்க, ஓர் மகா புண்ணிய புருஷர் எழுந்தருளி வருவாரென்று சீனர் நம்பியிருக்க, கடவுள் தாமே மெய்ஞ்ஞானத்தைப் போதிக்கும் சற்குருவாக வருவாரென்று நமது இந்து தேசத்தவர்கள் கூற, இப்படியே அவரவர் தத்தம் மனச்சார்பின்படி ஆதி வாக்குத்தத்தத்தைப் புரட்டி உருட்டி விசுவசித்து வந்தார்கள்.

ஆனால், தேவபக்தியுள்ளவர்களாக விளங்கின யூத ஜாதியாரோ அவ்வாக்குத்தத்தத்தைத் தப்பறையின்றி விசுவசித்தும், வரப்போகிற மானிட தேவனைச் சிந்தித்து அவருக்கேற்றபடி நடந்தும் வந்தார்கள். அச்சாதியாருக்குள்ளே காலத்துக்குக் காலம் விசேஷ தேவ அருள்பெற்ற தீர்க்கதரிசிகள் தோன்றி, கடவுள் தாமே மெய்யான மனித சுபாவம் எடுத்து ஓர் கன்னிகையிடத்தில் பிறப்பாரென்றும், அவர் இன்ன கால

த்தில் இன்ன ஊரில் பிறப்பார், அவர் பிறக்கும் வேளையில் இன்ன அடையாளங்கள் தோன்றும், அவர் ஜீவியம் இத்தன்மையாய் இருக்குமென்றும், இன்ன வகையாகத் துரோகிச் சீஷன் ஒருவனால் விற்கப்பட்டு, இன்னின்ன பாடுகள்பட்டு மரிப்பார், மரித்தபின் உயிர்ப்பாரென்றும், அவரை உலக முழுவதும் சேவித்துப் போற்றுமென்றும் இவை முதலிய விசேஷங்களை ஐந்நூறு, அறுநூறு, ஆயிரம் வருஷங்களுக்குமுன்னும் தேவ ஏவுதலின்படி அறிவித்திருந்தார்கள். இத்தீர்க்கதரிசனங்கள் பல புஸ்தகங்களில் எழுதப்பட்டும், நானா தேசங்களில் பரம்பியும் இருந்தன. வரவிருந்த தேவசுதன் மெய்யாகவே மனுஷனாய் வந்தபோது அவருடைய தேவ தன்மைக்கு இத்திர்க்கதரிசனங்கள் உறுதியும் அத்தாட்சியுமாயின. இவரைக் குறித்துச் சொல்லப்பட்டவைகள் எல்லாம் தேவ வாக்குகளேயென்றும் தெளிவாய் விளங்கின.

பிரிய சிநேகிதா! பாவத்துக்குப் பரிகாரம் செய்யவும், இழந்துபோன மோட்சபாக்கியத்தை மறுபடியும் மனிதருக்குக் கொடுக்கவும் கடவுள் செய்த பேருபகாரத்தை என்றும் நினைத்து அவருக்கு நன்றியறிதல் செலுத்தக்கடவாய்.

இப்படிக்கு,

உன் உத்தம நண்பன்.

---

## (Chronicle): Rev. Father Dubois and Vaccination.

## சங். டுபோயிஸ் சுவாமியாரும், அம்மை குத்துதலும்.

1791-ம் வருஷத்தில் அந்நிய தேச வேதபோதகர் சபையைச் சேர்ந்த சங். டுபோயிஸ் சுவாமியார் மைசூர் இராஜ்ஜியத்தில் சத்திய வேதத்தைப் போதித்து அநேக கோவில்களையும் பள்ளிக்கூடங்களையும் கட்டினதுமல்லாமல் ஆத்தும விஷயத்திலும் சரீர விஷயத்திலும் கிறீஸ்துவர்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் பிறசிநேகத்தினால் அநேகவிதமாக உதவிசெய்துவந்தார். அக்காலத்தில் மைசூர் இராஜ்ஜியத்தில் பெரிய அம்மை பரம்பி அநேக உயிர்களைக் கொள்ளைகொண்டு போவதைக் கண்டு மனமிரங்கி அவர் Vaccination என்னும் அம்மை



குத்தும் விதத்தைச் சிலருக்குப் படிப்பித்து நாலு திசையிலும் அவர்களை அம்மை குத்தும்படி அனுப்பினதுமல்லாமல் அம்மை குத்திக்கொண்டவர்களுடைய பெயர்களைக் குறித்துத் தன்னிடம் கணக்கு ஒப்புவிக்கும்படி செய்தார். அவரும் மேற்படி கணக்கைச் சர்க்காருக்கு அனுப்பிக்கொண்டுவந்தார். அந்தக் குருவானவருடைய பிரயாசையினால் 1803 ம் ௵ ஜனவரி மாதத்திலிருந்து 1804-ம் ௵ ஜூன் மாதம் வரையில் 25,432 பெயர்களுக்கு அம்மை குத்தப்பட்டது. அந்தச் சகாயத்தினால் அம்மையினால் மோசம் நேரிடாமல் இருந்ததும் தவிர அதிகமாய்ப் பரவாமலும் இருந்தது. இவர்தான் மைசூர் இராஜ்ஜியத்தில் முதல் முதல் (Vaccination) அம்மை குத்துதல் என்னும் வைத்தியத்தை ஏற்படுத்தினார். ("Olim")

---

## Here and There.

### நானா சங்கதிகள்.

East Africa. கீழ் ஆப்பிரிக்காவில் குடியேறியிருந்த ஜெர்மானியருடைய பட்டணங்கள் யாவும் பிரிட்டிஷ்காரரால் பிடிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் குடியேறியிருந்த ஸ்தலம் இங்கிலாந்துதேசத்தைப்போல் ஏறக்குறைய மூன்று மடங்கும், சென்னை இராஜதானியைப்போல் இரண்டரை மடங்கும் விஸ்தீரணமுள்ளதாக இருக்கிறது.

Prisoners. கடந்த வருஷம் நவம்பர் மாதத்தில் 26,000 கைதிகளைப் பிரிட்டிஷ்காரர் யுத்தத்தில் பிடித்திருக்கிறார்கள்.

Jerusalem. சென்ற வருஷம் டிசம்பர் மாதம் 9-ம் தேதி ஜெருசலேம் பட்டணத்தை அங்குள்ள திருஸ்தலங்களைச் சேதப்படுத்தாமல் பிடித்துவிட்டார்கள். இங்கிலாந்து, பிரான்சு, இத்தலி, அமெரிக்கா முதலிய நேச தேசங்களின் ஸ்தானாதிபதிகள் ஆடம்பரத்துடன் அப்பட்டணத்திற்குள் பிரவேசித்தார்கள்.

Russia. ருஷிய கலாபனைக்காரர் தங்கள் தேசத்துக்கும், நேசக் கட்சியாருக்கும் தாங்கள் கொடுத்திருந்த வாக்குத்தத்

தத்தை மீறி ஆஸ்டிரியர், ஜெர்மானியருடன் தனிச்சமாதானம் செய்துகொள்ள ஏற்பாடு செய்து தற்காலம் அவர்களுக்குள் கெடுவு ஏற்படுத்திக்கொண்டு இருப்பதால் சண்டை நிறுத்தப் பட்டிருக்கிறது.

Coimbatore. கடந்த வருஷம் நவம்பர் மாதம் 18-உ கோயம்பத்தூரில் கத்தோலிக் கிறீஸ்துவர்களுக்குள் நடந்த பொதுச் சங்கத்தில் மகா-௱-௱-ஸ்ரீ பெரியநாயக முதலியார், B. A., L. T., சேர்மனாக வீற்றிருந்தார். இச் சங்கத்திற்கு ஐந் நூறுபேர்வரையில் வந்திருந்தார்கள். அதில் தீர்மானிக்கப் பட்ட விஷயங்கள் எவையென்றால்: 1-வது. இந்திய தேசத் திற்குச் சுயஅரசாட்சி தகாதென்றும், 2-வது. சர்க்கார் உத்தி யோகங்களில் உயர்ந்த பதவியில் இந்திய கத்தோலிக்கர்களுக் குத் தகுந்த இடம் கொடுக்கப்படவேண்டுமென்றும், 3-வது. ஊருக்குள் திரிகிற சுய ஆட்சி வேண்டுபவர் கொண்டுவரும் லிஸ்டில் கையெழுத்துப் போடாமலிருக்கும்படி எச்சரிக்கை யாக இருக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள்.

---

## Holy Thought for January.

### ஜனவரி மாதத்தின் பரிசுத்த யோசனை.

சேசுக்கிறீஸ்துநாதருடைய ஜீவியத்தைத் தியானிப்பது நமது மகா உன்னத கவன முயற்சியாக இருக்கக்கடவது. (கி. அ. 1. 1.)

சேசுக்கிறீஸ்துநாதர் வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறார். (அர்ச். அருளப்பர். 14-ம் அதி. 6-ம் வச.)

# The St. Anthony's Messenger.

# அர்ச். அந்தோனியார் தூதன்.

**Vol. IV.** **February 1918.** **No. 2.**

புத்தகம் IV.] FIDES AC ROBUR. [நம்பர் 2.

## Our Bishop's Blessing.

### நமது மேற்றிராணியாருடைய ஆசீர்வாதம்.

நாம் உமது சிறிய தூதனுக்கு நமது அங்கீகாரமும் ஆசீர்வாதமும் கொடுத்து மூன்று வருஷத்திற்கு மேலாகிறது. அக்காலத்தில் அது இவ்வளவு சீக்கிரத்திலும் திடமாகவும் வளருமென்று நாம் நம்பவில்லை. ஆனால் அது நல்ல அமுதை உண்டு வளரும் சிறு குழந்தையைப் போல் சீக்கிரமாய்த் திடங்கொண்டு வளர்ந்து வருகிறது. உமது தூதனில் அடங்கியுள்ள சுகிர்த போதனைகள் ஒரு நல்ல போஜனத்தைப்போல் அதற்குச் செல்வ சுகத்தைக் கொடுத்துவருவதினால் அதை வாசிப்பவர்களுக்கு மெத்தவும் நன்மையாய் இருக்கிறது. அதினிமித்தம் நாம் மெத்தவும் சந்தோஷப் பட்டு, இவ்வருஷப்பிறப்பில் உமது சிறிய தூதனுக்கும் அதை வாசிப்பவர்களுக்கும், விசேஷமாக அதன் பத்திராதிபராகிய உமக்கும் முழு இருதயத்துடன் நமது பட்சமுள்ள ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறோம்.

✠ **Aug. Roy,**
கோயமுத்தூர் மேற்றிராணியார்.

## MORAL INSTRUCTION.

## நல்லொழுக்க போதனை.

### Our Duties to God.

### கடவுளுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகள்.

சர்வேசுரனாகிய கடவுள் ஒருவரே எல்லாப் படைப்புக்கும் மேலானவராய் இருக்கிறபடியால், அவருக்கு நாம் செய்யவேண்டிய கடமைகள் மற்றக் கடமைகளைவிட மேலாக இருக்கின்றன. மேலும் அவைகளை அனுசரிப்பதினால் இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் அளவற்ற நன்மையும், பாக்கியமும், அனுசரியாமல் விடுவதினால் கணக்கில்லாத தீமையும், தண்டனையும் நமக்குக் கிடைக்கும்.

அக்கடமைகள் என்ன?

அவற்றை நாம் அனுசரிப்பானேன்?

1. அவர் நமது ஏக கடவுளும் கர்த்தாவுமாக இருப்பதாலும், சகலத்தையும் சிருஷ்டித்து ஆண்டுவருவதாலும், அவரது அடிமைகளாகிய நாம் அவரை ஸ்துதித்து வணங்கி அவருக்கு மேலான ஆராதனையைச் செய்யக்கடவோம்.

2. சர்வேசுரன் நமது ஆத்துமத்தையும் சரீரத்தையும் சிருஷ்டித்த காரணத்தால் நமது உடலும் ஆவியும் அவரது பொருள்களாம். நாம் முழுதும் அவருக்குச் சொந்தம். அவர் நமது ஆண்டவர், நமது எஜமான். ஆகையால் நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரது சித்தத்தின்படி ஒழுகி, அவர் நமது உள்ளத்தில் இயல்பாகப் பதித்த சட்டதிட்டத்தின்படி நடக்கக்கடவோம்.

3. அவர் அன்புள்ள பிதாவைப்போல் நம்மைக் காப்பாற்றிவருகிறார். அவர் நம்மை ஒருக்ஷணம் கைவிட்டிருப்பாராயின் நாம் சாவோமென்பதற்கு ஐயமில்லை. மேலும் அவர் சகல நன்மைச்சுரூபியாய் இருப்பதால், நாம் அவரிடத்தில் முழுமனதுடன் அன்புவைத்து, அவரைச் சிநேகிக்கக்கடவோம்.



4. அவர் பாவிகளைத் தண்டித்து, பயங்கரமான சிட்சை விதிப்பார். ஆகையால் அவருக்குப் பயந்து, பயபக்தியுடன் நடக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். தெய்வபயம் ஞானத்தின் ஆரம்பமாம்.

மேற்சொன்ன கடமைகளை நிறைவேற்றும் வகை எப்படி?

1. கடவுள் நமக்குப் புத்தியையும் நினைவையும் கொடுத்திருப்பதினால் அவர் தன்மையையும் அவருடைய இலட்சணங்களையும் ஆராய்ந்து பார்ப்பதுமன்றி அவருடைய கற்பனைகளை நினைவுகூர்ந்து அவற்றின்படி நாம் நடக்கவுமகடவோமாக.

2. கடவுள் நமக்குப் பேச்சைக் கொடுத்திருப்பதால் நாம் அவரை வாயார வாழ்த்தி, மனமார ஸ்துதித்து, அவரிடத்தில் நமக்குத் தேவையானவைகளைக் கேட்போமாக.

3. அவர் நமக்குச் சரீரமும் ஆத்துமமுமாகிய இரண்டையும் அளித்திருப்பதால் நமது முழுச்சக்தியோடும் அவருக்கு நாம் ஊழியம் செய்வோமாக.

புருஷர், ஸ்திரீகள், சிறியோர், பெரியோர் என்ற பேதம் இல்லாமல் யாவரும் கடவுளிடத்து அன்போடு மேற்சொல்லிய கடமைகளை அனுசரித்து நடப்பார்களானால், அவர்கள் மன ஆறுதலையும் பரமானந்தத்தையும் அனுபவிப்பார்களென்பதற்கு ஐயமில்லை.

### கதை.

ஒருவன் ஒரு நிலத்தில் தானியம் திருட எண்ணி, ஏழு வயதுள்ள தன் பிள்ளையைக் கூட்டிக்கொண்டுபோனான். அவன் குறித்திருந்த வயலண்டை போய்ச் சுற்றுமுற்றும் பார்த்து, கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் ஒருவரையும் காணாமையால் தன் மகனைக் காவல்வைத்துவிட்டு, வயலில் இறங்கி நெல் பிசையப்போனான். அச்சமயத்தில் பையன் பயந்தவன்போலத் தன் தகப்பனைக் கூப்பிட்டான். திருடனுக்கு அளைப் பலமேயானபடியால், தகப்பன் பயந்து என்னவென்று கேட்டுக்கொண்டே வந்தான். அப்போது மகன், "அப்பா! நீ எல்லா இடத்திலும் பார்த்தாய். ஆனால் ஒரு பக்கத்தில் பார்க்க மறந்துபோனாய்" என்றான். தகப்பன் அதற்குள் தன்னை யாராவது பார்த்துவிட்டார்களோவென்று திடுக்கிட்டு, "எந்தப்பக்கத்தில்?" என்று கேட்டான். உடனே பையன் கையை உயர்த்திக்காட்டி, "வானத்திலிருந்து கடவுள் நமது

இத்திய செய்கையைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் அல்லவா?" என்றான். தகப்பன் வெட்கி வீட்டுக்குத் திரும்பிப் போனான்.

தெய்வபயம் ஞானத்துக்கு அஸ்திவாரமாம்.

சத்தியநேசன்.

---

## Duties of Parents towards their Children.

## பிள்ளைகள்மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.

தாய் தந்தையர் முக்கியமாகப் பிள்ளைகளுக்கு மனிதருடைய கடைசி முடிவைப்பற்றிய சத்தியங்களைச் சொல்லிக் காட்டவேண்டும். சிறுபோதே இந்தச் சத்தியங்களைப் புகட்டவேண்டிய விதமாவது:—

"பிள்ளாய்! நாம் இந்தப் பூமியில் இருப்பது கொஞ்ச நாளைக்கு மாத்திரந்தான். நாம் நினைக்காத நேரத்தில் சாவு வரும். எனக்கும் உனக்கும் ஒருநாளைக்குச் சாவு கட்டாயம் வரும். நமது ஆத்துமம் இந்த உலகத்தையும் நமது சரீரத்தையும் விட்டுப் போகவேண்டும். அந்தச் சாவு வருவது நிச்சயமானாலும் அது எப்போது வருமென்று ஒருவருக்கும் தெரியாது. நானும் நீயும் வருகிற வருஷம், மாசம், நாளைக்கு உயிரோடு இருப்போமோ என்று தெரியாது. ஆனதினால் பிள்ளாய்! நாம் பாவம் செய்யக்கூடாது. புண்ணியமே செய்து வரவேண்டும். அப்படிப் புண்ணியமே செய்துவந்தால் சாவு வரும்போது பயப்படவேண்டியதில்லை. புண்ணியம் செய்து சாகிற சாவு நல்ல சாவு. அது பாக்கியமான சாவுமாகும். நாம் புண்ணியம் செய்து பாக்கியமாய்ச் செத்தால்மாத்திரம் மோட்சத்தில் சுவாமியிடம்போய்ச் சேருவோம். அப்படியின்றிப் பாவம்செய்து பாவத்தோடு செத்தால் நரகத்தில் போய் ஓயாமல், ஒழியாமல் எப்போதும் எப்போதும் நித்தியகாலம் பசாசுகளோடு நெருப்பிலே வேகவேண்டும். ஆனதினால் பிள்ளாய்! கவனித்துக்கேள். நாம் இந்த உலகத்திலே கொஞ்சநாளைக்கு இருப்பது காசு பணம், ஆஸ்திபாஸ்தி சேர்த்து வைப்பதற்காக அல்ல. காசே பெரிது, பணமே பெரிது என்று எண்ணி, சுவாமியை அசட்டை செய்து நடப்பவர்கள் பாக்கியவான்களென்று நினைக்காதே. சாகும்போது நமது காசு பணம் நம்மோடு வராது.



இன்னம் கொஞ்சவருஷம் நாம் உயிரோடு இருப்பது சாப்பிடவும் விளையாடவும் அல்ல. சாப்பாடே பெரிது, வயிறே பெரிது, விளையாட்டே பெரிது என்று நினைத்து, சுவாமியையும் தங்கள் ஆத்துமத்தையும் மறந்து திரிகிறவர்கள் பாக்கியவான்களென்று எண்ணாதே. ஆத்துமம் சரீரத்தைவிட்டுப் போகும்போது சாப்பாடும், வயிறும், விளையாட்டும் கூடவராது.

இன்னமும் நாம் இந்த உலகத்தில் இருப்பது பேர் கீர்த்தி சம்பாதிப்பதற்காக அல்ல. இவனைப்போல் கெட்டிக்காரன், புத்திசாலி இல்லையென்று பேர்வாங்குவதற்காக அல்ல. பேரும் கீர்த்தியும் நம்மை மோட்சத்துக்குக் கூட்டிப் போகாது.

பிள்ளாய்! கொஞ்சநாள் நாம் இந்த உலகத்தில் இருப்பது என்னத்திற்கென்று சொல்லிக்காட்டுகிறேன். கவனித்துக் கேள். நீ குறிப்பிடம் படித்திருக்கிறாயே. "சர்வேசுரன் மனிதர்களை என்னத்திற்காக உண்டாக்கினார்? தம்மை அறிந்து சிநேகித்துச் சேவிக்கவும், அதினால் மோட்சத்தை அடையவும் உண்டாக்கினார்" என்று படித்திருக்கிறாய் அல்லவா? ஆகையால் நாம் சர்வேசுரனுக்குத்தான் பயப்படவேண்டும். எல்லாத்துக்கும் மேலாக, சுவாமியைத்தான் சிநேகிக்கவேண்டும். பத்துக்கற்பனை, திருச்சபைக் கட்டளை இவற்றின் பிரகாரம் நடந்து சுவாமிக்கு நாம் ஊழியம் செய்யவேண்டும். தாய் தகப்பனைப்பார்க்க, காசு பணத்தைப்பார்க்க, சாப்பாடு விளையாட்டைப்பார்க்க, பேர் கீர்த்தியைப்பார்க்க சுவாமியைத்தான் பெரிதாக எண்ணி சுவாமியைத்தான் தேடவேண்டும். அவரையே அதிகமாய்ச் சிநேகிக்கவேண்டும். இப்படி எல்லாத்துக்கும் மேலாகச் சுவாமியைச் சிநேகித்து அவருக்கு ஊழியம் செய்துவந்தால் சாவு வரும்போது பயமில்லாமல் பாக்கியமாய்ச் செத்து, மோட்சத்தில் எப்போதும் எப்போதும் நித்திய பேரின்ப பாக்கியத்தை அனுபவிப்போம்."

யதார்த்தவாதி.

---

## The Fourth Year.

## நான்காவது வருஷம்.

அன்பர்களே! அர்ச். அந்தோனியார் தூதனாகிய நான் பிறந்து நான்காவது வருஷம் துவக்கியிருக்கிறது. இவ்வளவு

சிறு குழந்தையாகிய நான் இக்கொடிய சண்டைக்காலத்தில் தக்க உணவை அருந்தி வளர்ந்து வருவது வெகு கஷ்டமாக இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். ஆயினும் நமது மிகவும் வந்திக்கத்தக்க மேற்றிராணியார் எனக்குக் கொடுத்த பட்சமுள்ள ஆசீர்வாதம் என்னைத் தைரியப்படுத்துகிறதுமல்லாமல் என் நிலைமைக்கு அது ஈடாகவும் இருக்கும். நான் பிறந்த வருஷத்தில் நிர்வாணமாகவும் சிறிதாகவும் இருந்து குன்னூர்க் கிறீஸ்துவர்களிடம் மாத்திரமே பழகி வந்தேன். இரண்டாம் வருஷத்தில் கொஞ்சம் பெரிதாக வளர்ந்து வர்ண உடுப்புப்போல் அட்டையைத் தரித்து நீலகிரியிலுள்ள ஊர்களிலும், வேறு சில ஊர்களிலும் போய்ப் பழகி வந்தேன். மூன்றாம் வருஷத்தில் உபகாரி ஒருவர் என்னைக் கண்டு மனமிரங்கி, "நீ இன்னம் அதிகச் சிறியவனாக இருக்கிறாய். அதிகமாக நீ வளரவேண்டும். நான் உன்னைக் காப்பாற்றுவேன்" என்று தயவுடன் சொன்னதினால் நான் அதை நம்பி, திடப்பட்டு, பின்னும் கொஞ்சம் பெரிதாக வளர்ந்து பக்கத்திலும் தூரத்திலும் உள்ள ஊர்களுக்குப் போய்ப் பழகி வருகிறேன்.

ஆனால் நான் இன்னம் அதிகமாக வளர்ந்து அன்னிய ஊர்களுக்கும் போய் அவர்களிடத்திலும் பழகிவரவேண்டுமென்பது எனது ஆசை. நான் சீக்கிரத்தில் வளர்ந்து உங்களிடத்தில் நடமாடும்படி என்னை உங்கள் மத்தியில் பரவச்செய்யுங்கள். நீங்கள் இதற்காகச் சாலைசாலையாய், வீதிவீதியாய்ப் போய்ச் சந்தாதாரர்களைச் சேர்க்கும்படி நான் கேட்பதில்லை. என்னை வாசிக்கும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சந்தாதாரரைச் சேர்க்கப் பிரயாசப்படுவதே போதுமானது. "பல துளி பெருவெள்ளம்" என்பதுபோல் ஒவ்வொருவரும் ஒரு சந்தாதாரரைச் சேர்த்தால் எத்தனையோ பேராகிவிடும்.

நமது நேசமுள்ள மேற்றிராணியார் சொல்லியிருப்பதுபோல் பத்திராதிபரவர்கள் தங்களால் கூடியமட்டும் எனக்கு நல்ல சாப்பாடு கொடுத்துவருவதினால் நான் இவ்வளவு சீக்கிரத்தில் வளர்ந்திருக்கிறேன்.

ஆனால் அவர் எனது ஞானபோஜனத்தைக் குறித்துத்தான் சொல்லியிருக்கிறார். எனக்கு வயிறு இருக்கிறதல்லவா? அந்த வயிற்றுக்குவேண்டிய சாப்பாடு நீங்கள்தான் கொடுக்கவேண்டும். எப்படியென்றால் ஒவ்வொருவரும் செலுத்தவேண்டிய வருஷ சந்தாவைச் சரிவரச் செலுத்தினால் நான் சுகமாய்ப் பிழைத்துவரமுடியும். நீங்கள் செய்யும் செலவுகளில் எத்தனையோ வீண்செலவு செய்துவிடுகிறீர்கள். நான் அதிகமாய் உங்களைக் கேட்பதில்லை. நீங்கள் வருஷத்திற்கு எனக்கு ஓரோ ஒரு ரூபாய் கொடுத்துவருவீர்களேயானால் அது எனக்கும் உங்களுக்கும் எவ்வளவோ பிரயோஜனமாக இருக்கும். உங்களுக்கு ஸ்தோத்திரம்.



அர்ச். அந்தோனியார் தூதன்.

---

## Letter to a Friend.

### சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

பிரிய சிநேகிதா!

நெடுங்காலம் எதிர்நோக்கப்பட்ட இரட்சகர் யூதேயா தேசத்திலே யூதவமிசத்தில் பாக்கியவதியான மரியம்மாள் என்னும் கன்னிகையிடத்தில் தேவ அருளால் அற்புதமாய்க் கற்பமாகி உற்பவித்துப் பிறந்தார். கடவுள் மனிதனாகப் பிறந்தபோது அவருக்கு 'சேசு' என்னும் திருநாமம் சூட்டப்பட்டது. செல்வமும், அகங்கார கர்வமும், சுகப்பிரியமுமே மனிதர் பாவத்தில் விழ விசேஷ காரணங்களாதலால் இவற்றிற்கு எதிரான வறுமை, தாழ்ச்சி, சரீர ஒறுத்தல் என்னும் புண்ணியங்களைத் தமது முன்மாதிரிகையினால் மனிதருக்குக் கற்பிக்கும்படி ஒரு கற்குகையில் யாருமற்ற பரதேசியைப்போல் பிறக்கத் திருவுளமானார். மனிதர் கண்முன் இவ்வளவு கேவல அந்தஸ்தில் தோன்றினாலும், இச்சமயத்தில்முதலாய்த் தமது தெய்வமகத்துவத்தை நல்ல மனதுள்ளவர்கள் சகலரும் அறியச்செய்தருளினார். அஃதெப்படியெனில், வானத்தில் இனிய கீதங்கள் கேட்கப்படுவதையும், அவ்விடமெல்லாம் பகல்போலப் பிரகாசிப்பதையும் கண்ட இடையர்கள் திடுக்கிட்டு அதிசயிக்க, சில சம்மனசுகள் அவர்களுக்குத் தோன்றி அருகாமையில் உள்ள குகையில் கடவுள் பிறந்திருக்கிற விசேஷத்தை அறிவித்தார்கள். இடையர்கள் இது மெய்தானோவெனப் போய்ப்பார்ப்போமென்று பேசிக்கொண்டு குகையைத் தேடிச் சென்றபோது அதற்குள்ளே திவ்விய குழந்தையையும், அதின் கன்னித்தாயாரையும், அக்கன்னிகைக்குத் துணையாய் இருந்த சூசைமுனி என்னும் விருத்தாப்பியரையும் கண்டு தேவகுழந்தையை ஆராதித்தபின் சகல சங்கதிகளையும் ஊராருக்கு வெளிப்படுத்தினார்கள்.

தேவகுழந்தை பிறந்தபோது நடந்த பின்னுமொரு அதிசயம் யாதெனில், பல நூற்றாண்டுகளுக்குமுன் தீர்க்கதரிசிகள் அறிவித்திருந்தபடி கடவுள் மனிதனாக அவதரித்துப் பிறந்ததற்கு அடையாளமாகக் கீழ்த்திசையிலே ஓர் நவமான நட்சத்திரம் காணப்பட்டது. யூதேயாவிலேதான் உலகத்தை ஆளுகிற ஒருவர் பிறப்பாரென்று தீர்க்கதரிசனவாக்கு இருந்தபடியால் அந்த நவமான நட்சத்திரத்தின் கருத்தை அறிந்தவர்களான மூன்று சோதிட அரசர்கள் பார்சியதேசப்புறங்களிலே நின்று பயணப்பட்டு யூதேயா தேசத்தைநோக்கி வந்தார்கள். அரசர்கள் புறப்பட்டுவந்த முகாந்தரம் யாதென்று அறிந்த யூதேயா தேசத்தின் அரசனான எரோதும் அவன் குடிகளும் பயந்து திடுக்கிட்டு யோசிக்கலானார்கள்.

வரவிருந்த தேவசுதனைக்குறித்து யூதர்களுக்குள்ளே பெரும்பங்கானோர் தவறான எண்ணங்களைக் கொண்டிருந்தபடியால் வரப்போகிறவர் கடவுளோவென்று சிலரும், இராஜாவோவென்று பலரும் அஞ்சி மலைத்துநின்று, பிறந்துவிட்டாரென்று சொல்லப்பட்ட அவரைத் தேடாமல் இருந்தார்கள். சிலர் வரப்போகிறவர் இவர்தானென்றால் மாட்டுக்கொட்டிலினுள்ளே பிறப்பாரோவென்று போக்குநியாயம் சொல்லிக்கொண்டு சும்மா இருந்தார்கள். இராஜாக்கள் மூவருமோ தாங்கள் கண்ட அதிசயமான அடையாளத்தை நம்பி, குழந்தையைத் தேடிப்போய், பெத்லேம் ஊரிலே அவரைத் தாயோடும் கைத்தாதையோடும் கண்டு, இவரே உலகத்தை ஆண்டு நடத்திவரும் கடவுளென்று விசுவசித்து, ஆராதித்து, காணிக்கைகளைச் சமர்ப்பித்து, தங்கள் ஊர்போய்ச்சேர்ந்தார்கள்.

சேசுநாதசுவாமி சில வருஷங்களாக எஜிப்து தேசத்திலும், பின் தமக்கு முப்பது பிராயம் ஆகும்வரையில் நசரேத்தூரிலும் தம்முடைய மாதாவுக்கும் கைத்தாதைக்கும் அமைந்து பணிவிடைசெய்து அந்தரங்கமாய் ஜீவித்துவரத் திருவுளமானார். அக்காலமெல்லாம் தம்முடைய தேவசுபாவத்துக்குரிய அதிசயக் கிரிகைகளை உலகத்துக்குக் காட்டாவிட்டாலும், தேவசுபாவத்தோடு ஒன்றித்திருந்த மனுஷ சுபாவத்துக்குரிய நற்கிரிகைகளை ஆச்சரியத்துக்குரியவிதமாக அநுசரித்துவந்தார். வரவிருந்த மானிடதேவன் அவராகக்கூடுமேயென்று சிலர் கொண்டிருந்த நம்பிக்கையை நாள்வட்டத்தில் மறந்துபோனார்கள்.



பிரிய சிநேகிதா! கடவுள் மனிதனை எவ்வளவு சிநேகித்தாரென்றால், அவர் தம்முடைய ஏக குமாரனை இவ்வுலகில் அனுப்பி, அவர் வழியாகச் சகல மானிடரும் இரட்சணியம் அடையக் கருணைசெய்தார்.

இப்படிக்கு,
உன் பிரிய நண்பன்.

---

## Savariarpalayam.

### சவரியார்பாளையம்

கொச்சியைச் சேர்ந்த எருச்சாம்பதியென்னுங் கிராமத்துக்கருகிலுள்ள சவரியார்பாளையம் என்னும் ஊரில் 1863-ம் வருஷத்தில் அவ்வூர்க் கோவில் பெயர்கொண்ட உற்சவம் நடந்த ஒரு நாள் சில கிறீஸ்துவர்களும் அஞ்ஞானிகளும் சேர்ந்து அஞ்ஞானக் கும்மிப்பாட்டு பாடிக்கொண்டிருந்தார்கள். அதைக் கேள்விப்பட்ட சங். கிறபி சுவாமியார் (Rev. Fr. Graby) அஞ்ஞானப் பாட்டு பாடக்கூடாதென்று சொல்லிக் கிறீஸ்துவர்களைத் துரத்தப்போனார். அவர் வருவதைக் கண்டவுடனே எல்லோரும் பயந்து ஓடி ஒளிய ஆரம்பித்தார்கள். அப்படி ஓடுகையில் அஞ்ஞானி வாலிபனொருவன் கால் தவறித் தற்செயலாய் ஒரு கிணற்றில் விழுந்துவிட்டான். இதை யாரும் கவனிக்கவில்லை. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அவனுடைய தாய் தந்தையர் அவன் வீட்டுக்கு வராததைக் கண்டு, அவன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டுக்கொண்டு அங்குமிங்கும் போய்த் தேடினார்கள். சுமார் இருபது நிமிஷத்துக்குப் பிறகு ஒரு சிறிய பையன் அவர்களிடம் ஓடி வந்து, "நான் அந்தக் கிணற்றில் என்னமோ விழுந்த சத்தத்தைக் கேட்டேன்" என்றான். உடனே அவனுடைய தாய் தந்தையர் அந்தப் பையன் காண்பித்த கிணற்றண்டை போய்ப் பார்க்கையில் தங்கள் மகன் தண்ணீரில் மிதக்கிறதைக் கண்டார்கள்.

அங்கே நின்ற ஜனங்களில் ஒருவன் கிணற்றில் இறங்கி பிரேதம்போல் கிடந்த அந்த வாலிபனைத் தூக்கியெடுக்க, சிலர் வாங்கி அவனைத் தரையில் படுக்கவைத்தார்கள். "ஆ! ஆ! பரிதாபம்! பரிதாபம்! என்ன செய்கிறது! பையன் இறந்துவிட்டான்" என்று எல்லோரும் துக்கித்தார்கள். அவ்விடம் கூடியிருந்த ஜனங்களில் கிறீஸ்துவர்கள், "இந்த

வாலிபனை இவ்வூர்ப் பாதுகாவலராகிய அர்ச். சவேரியார் காப்பாற்றுவார். நாங்கள் அவரை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறோம்" என்று சொன்னார்கள்.

அவ்வாறே அவ்வாலிபனை அக்கோவிலுக்குக் கொண்டுபோய் வைத்தபிறகு, சுவாமியாரை அழைத்துவந்து, அவன்மேல் தீர்த்தத்தைத் தெளித்தபின், நம்பிக்கையோடு அவனுக்காக வேண்டிக்கொண்டார்கள். சற்று நேரத்துக்குள் அவ்வாலிபன் தூங்கி விழிப்பவன்போல் மெதுவாகத் தன் கண்களைத் திறந்தான். அதைக் கண்டவர்கள் எல்லோரும் அதிசயித்து அவனை அநேக கேள்விகள் கேட்டார்கள். அப்போது அவன் அவர்களைப் பார்த்து, "நான் கிணற்றில் விழுந்தவுடனே என்னை ஒரு கத்தோலிக் குருவானவர் தமது கரங்களால் நான் விழிக்கும் வரையில் என்னை ஏந்திக்கொண்டிருந்தார்" என்று சொன்னான்.

அப்படி அற்புதமாக அந்த வாலிபன் பிழைத்தபோதிலும் அவன் கத்தோலிக் வேதத்தில் சேரவில்லை. ஆனால் வருஷா வருஷம் அந்த அர்ச். சவேரியார் கோவிலுக்குத் தவறாமல் காணிக்கை செலுத்திவந்தான்.

OLIM.

---

## The Evils of Drunkenness.

### குடியால் வரும் கேடு.

ஒரு கிராமத்தில் ஒரு தாயானவள் 18, 20 பிராயமுள்ள தன் இரண்டு பிள்ளைகளோடு ஜீவனம் பண்ணிக்கொண்டு வந்தாள். அந்த இரண்டு வாலிபர்களும் ஏழைகளும் படிப்பில்லாதவர்களுமானதால், மண்வெட்டியெடுத்து வேலைசெய்து, ஏதோ தங்களுக்கு கிடைத்த பணத்தை கொண்டுவந்து தங்கள் தாயிடம் கொடுப்பது வழக்கம். தாயும், நெல் குத்தியும், இன்னம் தன்னால் கூடிய வேலைகளைச்செய்தும், அதினால் வந்த சொற்பத்தைக்கொண்டு தன் மக்களுக்கு வேண்டிய சவரக்ஷணை செய்துகொண்டுவந்தாள். ஒருநாள் இந்த இரண்டு வாலிபர்களும் தங்கள் சினேகிதர்களுக்குப் பிரியப்படும்படி அவர்களோடு சாராயக்கடைக்குப் போய் குடித்தார்கள். நாளடைவில் இந்தக் கெட்ட பழக்கம் அதிகரித்து தினந்தினம் அதிகமதிகமாகக் குடித்து வீட்டில் தாயோடு சண்டைபோடத் துவக்கினார்கள். தாய் நாள்முழுதும் நெல்லு குத்தி காய்ச்



சின கஞ்சியை இவர்களிருவரும் குடித்துப்போட்டு அவளை பட்டினியாய்ப் போடவும் ஆரம்பித்தார்கள். இவர்களுடைய கல்நெஞ்சத்தனமும், அக்கிரம துரோகமும் இதோடு நின்றுபோகவில்லை. ஒருநாள் இந்த இரண்டு வாலிபர்களும் அளவுக்கு மிஞ்சிக் குடித்து வீட்டுக்குவந்து இன்னம் அதிகமாய்க் குடிக்க பணம் கொடுக்க வேண்டுமென்று தங்கள் தாயை அலட்டினார்கள். அதற்குத் தாயானவள், "அப்பா என்னிடத்தில் ஒரு காசுமுதலாய் இல்லையே! இன்று முழுதும் நெல் குத்தி சம்பாதித்த அரிசியை கஞ்சியாய்க் காய்ச்சிவைத்திருக்கிறேன். அதில் போட்டு குடிக்க உப்பு வாங்கமுதலாய் என்னிடம் ஒரு காசுமில்லை. நீங்கள் ஏதாவது கொண்டுவருவீர்களென்று காத்திருந்தேன்" என்றாள். உடனே இந்த கல்நெஞ்சுள்ள இரண்டு வாலிபர்களும் குடிவெறியினால் கோபங்கொண்டு தாயின் வாயில் துணியை வைத்து அழுத்தி கழுத்தில் காலை வைத்து தங்களைப் பெற்ற தாயைக் கொன்று, அவள் தரித்திருந்த சொற்ப நகைகளையும் வஸ்திரத்தையும் உரிந்துகொண்டு போய் குடித்தார்கள். இது உடனே சர்க்காருக்குத் தெரிந்து இரண்டு சகோதரர்களையும் பிடித்து நியாயஸ்தலத்துக்குக் கொண்டுபோய் விசாரித்து இரண்டு வாரத்திற்குப்பிறகு இருவரையும் கழுமரத்தில் தூக்கினார்கள். இது எவ்வளவோ நிர்ப்பாக்கியத்துக்குரிய மரணம்!

குடிக்கப்பழகும் வாலிபர்களே! மோசம் போகாதேயுங்கள். இன்றைக்கு மாத்திரம் குடிப்போம். நாளை துவக்கி விட்டுவிடுவோமென்று சொல்லவேண்டாம். ஒவ்வொருநாளும் அப்படித்தான் சொல்லுவீர்கள். கிறீஸ்துவக் குடும்பங்களில் இப்படிக்கொத்த கொலைகள் நடக்காதேபோனாலும் எத்தனையோ சண்டை சச்சரவு, அடிபிடிகளும் உண்டாகிறது. இப்படியாய் அநேகர் தங்கள் தாய் தந்தையர்கள் சேர்த்துவைத்துப்போன ஆஸ்திபாஸ்திகளையும், தாங்கள் தானே சம்பாதித்ததையும் வீணில் அழித்து, தங்கள் பெண்சாதி பிள்ளைகள் உயிர் பிழைப்பதற்குமுதலாய் கூடாத அந்தஸ்தில் விட்டு சாகிறார்கள்.

கிறீஸ்துவர்களே, சர்வேசுரன் உங்களுக்கு கொடுத்திருக்கிற புத்தியைக்கொண்டு நன்றாய் யோசித்துப்பாருங்கள். ஒருவிதத்திலும் பிரயோஜனமில்லாமல் அதற்கு விரோதமாய் எவ்விதத்திலும் உங்களுக்கே கேடாய் முடிகிற இந்தக் குடியினால் வரும் லாபமென்ன? நியாயத்துக்கும், சுபாவத்துக்கும்,

விரோதமான இப்படிப்பட்ட காரியத்தைச் செய்வது மிருகத் தன்மையிலும் கேடுகெட்டதல்லவா? மேலும் குடியானது எத்தனையோ பாவங்களுக்குக் காரணமாயிருக்கிறது. குடிக் கப்பழகினவனுக்கு ஒரு நாளைக்குக் குடிக்க காசு இல்லாவிட்டால் போய் திருடுவான். அதற்காக கொலையும் செய்வான். ஆகையால் உங்களை இத்தனை நிர்ப்பாக்கியத்துக்குள்ளாக்குகிற குடியை விட்டுவிடவேண்டும்.

உண்மைவிளம்பி.

---

## Here and There.

### நாநா சங்கதிகள்.

The War: இப்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்துக்கு முடிவு செய்து சமாதானமாவதற்கு நேசக்கட்சியாருக்குள்ள கருத்து என்னவென்றால், ஜெர்மானியரும் அவர்களைச் சேர்ந்த கட்சியாரும் இப்போது நடந்த சண்டையில் செய்த அநியாயங்களுக்குப் பரிகாரம் செய்யவும், அவர்கள் பிடித்திருக்கும் ஊர்களைத் திருப்பிக் கொடுத்து உத்தரிக்கவும், அழிந்துபோகாதபடிக்குச் சிறிய இராஜ்யங்களைக் காப்பாற்றவும், இனிமேல் இப்படிப்பட்ட யுத்தம் நடவாமலிருக்கும்படி சரியான உடன்படிக்கை செய்யவும் வேண்டுமென்பதே.

மேலே சொல்லப்பட்ட நீதியுள்ள கருத்துகளை ஜெர்மானியர் ஏற்றுக்கொண்டு அவ்விதமே உடன்படிக்கை செய்வார்களேயாகில் சமாதானம் உண்டாகும். இல்லாவிடில் கட்டாயமாக அவர்கள் அவைகளை ஏற்றுக்கொள்ளும் வரைக்கும் யுத்தம் நடக்கும்.

Rev. Fr. Lesponne: பிரான்ஸ் தேசத்தில் நடந்த யுத்தத்தில் சங். லெஸ்போன் சுவாமியார் காட்டிய தைரியத்திற்காகப் புகழ்ப்பெற்று வெகுமானம் பெற்றிருக்கிறார்.

Beer: கோத்தகிரியிலுள்ள எல்லா ஜாதியாரும் சேர்ந்து, சுமார் அறுநூறு பேர் கையொப்பமிட்டு அவ்வூரிலுள்ள ஒரே பீர்க்கடையை எடுத்துவிடவேண்டுமென்று குன்னூர் சப் கலெக்டருக்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள்.

Coonoor: குன்னூர் பங்கு கிறீஸ்துவர்கள், ஷையூர் அர்ச். அந்தோனியார் கோவிலுக்கு ஆறு காந்த விளக்குகள் (Gas lights) வாங்கிக்கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தர்மப் புண்ணியத்திற்காக சர்வேசுரன் அவர்களை ஆசீர்வதிப்பாராக.


# The St. Anthony's Messenger.

# அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. IV. March 191 No. 3.

புத்தகம் IV.] FIDES AC ROBUR. [நம்பர் 3.


## Pastoral.

### மேற்றிராணியாருடைய நிருபச்சுருக்கம்.

கோயமுத்தூர் மேற்றிராணியார் கடந்த மாதத்தில் தபசைப்பற்றி நேர்த்தியான ஒரு நிருபம் எழுதியிருக்கிறார். அதில் அடங்கியுள்ள விசேஷித்த பிரதான விஷயங்களை எடுத்துக்காட்டுவோம்.

1-வது. ஒறுத்தல், உபவாசம், எல்லாருக்கும் அவசரமானது. ஏனெனில் எல்லாரும் பாவிகளாயிருக்கிறபடியால், தங்கள் பாவங்களுக்காகப் பரிகாரம் செய்து உத்தரிக்கச் சகலருக்கும் கடனுண்டு. தபசு செய்யாதேபோனால் எல்லோரும் கெட்டுப்போவீர்களென்று சேசுநாதர்சுவாமி சொல்லியிருக்கிறார்.

2-வது. சரீர ஒறுத்தல் பாவமென்னும் வியாதிக்குத் தகுந்த மருந்து. நமது சுபாவம் நம்மை நமது சரீர சுக இச்சைகளுக்கு இழுக்கிறது. ஆகையால் நமது ஆசாபாசங்களுக்கு விரோதமாய் நாம் எப்போதும் போராடவேண்டியது. ஒருசந்தி, சுத்தபோசனம், இவைமுதலிய ஒறுத்தல், சரீரம், உலகம், பசாசு முதலிய ஆத்தும சத்துராதிகளை அடக்கி அடிமைப்படுத்தக்கூடும்.

3-வது. தபசு புண்ணியத்தின் பள்ளிக்கூடமாக இருக்கிறது. சரீரத்திற்கு நல்ல உணவு எப்படிப் பலம் கொடுக்கிறதோ, அப்படியே ஒறுத்தலானது ஆத்துமத்திற்கு புண்ணிய விஷயத்தில் பலம் கொடுக்கிறதென்பதாய் நீதிசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

கடைசியாக, மேற்றிராணியார் கிறீஸ்துவர்கள் செய்ய வேண்டிய சில பக்திக்கிரியைகளை எடுத்துக்காட்டுகிறார். அவையாவன:—நாள்தோறும் பூசைகாணுதல், கூடியமட்டில் அநுதினம் திவ்விய நன்மைவாங்குதல், வீட்டிலிருக்கும் யத்தாருடன் பொதுவில் ஜெபம்பண்ணுதல், சுவிசேஷத்தையும், ஞானபுஸ்தகங்களையும் வாசித்தல், நாள்தோறும் திவ்விய நற்கருணையைச் சந்தித்தல், வெள்ளிக்கிழமைதோறும் சிலுவைப்பாதை சேவித்தல் இவைமுதலியவைகளாம்.

கோயமுத்தூர் மேற்றிராணியார் உத்தரவின்படி தபசு காலத்து ஒழுங்குகளில் புதிதாய் ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது, பெரிய சனிக்கிழமை பகல் 12-மணிக்குமேல் ஒருசந்தி, சுத்தபோசனக்கடன் தீர்ந்துவிடுகிறது என்பதாம்.

## Three more Bishops bless the Messenger

## இன்னும் மூன்று மேற்றிராணிமார்கள் நமது தூதனை ஆசீர்வதிக்கிறார்கள்.

"உமது சிறிய தூதன் அப்பியாசிக்கத்தக்கதும், சாதாரண வசனநடையுள்ளதுமாக இருக்கிறபடியால், நமது ஏழைக் கிறீஸ்துவர்களுக்கு மெத்த நன்மையாய் இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. இச்சிறு பத்திரிகை சத்தியத்தைப் போதித்து விதைக்கும்படி நாம் அதற்கும் உமக்கும் நமது பட்சமுள்ள ஆசீர்வாதம் கொடுக்கிறோம்." ✠ எலியாஸ் ஜோசேப் மொரேல்,
புதுச்சேரி அதிமேற்றிராணியார்.

"உமது பத்திரிகையானது பிரசங்கத்தைவிட கிறீஸ்துவர்களுக்கு அதிக நன்மைசெய்யும். ஏனெனில் சாதாரணமாய் வலதுகாதில் கேட்ட பிரசங்கம் இடதுகாதில் வெளியே போகும் ஆனால் ஒரு பத்திரிகையானது வீட்டில் தங்கும். அதை மறுபடி மறுபடி வாசிப்பார்கள். அதில் வாசித்ததை மற்றவர்களுக்குச் சொல்லுவார்கள். ஆகையால் அதைப்பற்றி நாம் சந்தோஷப்பட்டு உமது பத்திரிகையை முழுமனதுடன் ஆசீர்வதிக்கிறோம்."
✠ H. தேஸியர்,
மைசூர் மேற்றிராணியார்.

"உமது சிறிய பத்திரிகையாகிய அர்ச். அந்தோணியார் தூதன் நமது பார்வைக்கு எட்டியது. அதை வாசித்து மெத்த சந்தோஷமடைந்தோம். அத்தூதன் சுலபமான வசனநடையில் எழுதப்படுவதினால் நமக்கு அதிக பிரியத்தைக் கொடுக்கிறது. சாதாரணமாகத் தமிழ்ப் பத்திரிகை பிரசுரம் செய்கிறவர்கள் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டும்படி செந்தமிழ் உபயோகித்து எழுதுவது வழக்கம். ஆனால் இத்தூதன் அப்படியில்லாமல் சாதாரண வார்த்தைகளில் தெளிவான வசனங்களால் எழுதப்படுவதினால், அதிலடங்கிய சங்கதிகளைச் சொற்பப் படிப்புள்ளவர்கள்முதலாய் சுலுவாக அர்த்தம் கண்டுபிடிப்பார்கள். ஆகையால், அர்ச். அந்தோணியார் தூதன் அதிகமதிகமான நன்மைசெய்யும்படி அதனை நாம் பட்சமாய் ஆசீர்வதிக்கிறோம்." ✠ Aug. சாப்புயிஸ்,
கும்பகோணம் மேற்றிராணியார்.

## MORAL INSTRUCTION.

## நல்லொழுக்க போதனை.

### Virtue and Vice.

### நன்மையும் தீமையும்.

கடவுள் ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்திலும் தமது கட்டளைகளை அமைத்திருக்கிறார். இது சுபாவமுறையென்று சொல்லலாம். 'தீமையொழி, நன்மைபுரி' என்னும் நீதிவாக்கியத்தில் இச்சுபாவமுறை அடங்கியிருக்கிறது. அது புத்தியின் பிரகாசம்போலவும், மனச்சாட்சியின் குரல்போலவும் இருக்கிறது.

இவ்விதமே கடவுளுடைய ஆணைப்படி நடப்பது முறையாம். அவ்வாணைகளை மீறிநடப்பது முறைப்பிசகாம்.

புண்ணிய பாவங்களை அறியும் சக்தி நமது மனதிற்கு இயற்கையாகவே உண்டு. ஒருவன் நன்மையையே நாடிச் செய்தால் அவனைப் பலரும் கொண்டாடுவார்கள். தீமையைச் செய்ய ஆரம்பிக்கும் ஒருவன் தூஷிக்கப்படுவான். மனிதனிடத்தில் மனம், மனச்சாட்சியென்னும் இரண்டு உண்டு. இவை ஒன்றுக்கொன்று மாறுபாடான குணங்களையுடையவை. மனம் தீமைபுரிவதிலேயே கருத்தாய் இருக்கும்போது மனச்சாட்சி நன்மையைத் தேடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும்.

வழிதெரியாது அலையும் வழிப்போக்கனைப்போல மனிதன் இவ்வுலகமாகிய மார்க்கத்தில் விடப்பட்டிருக்கிறான். அவன் இவ்வுலக பாதையில் இருட்டில் வழி நடப்பவனைப்போலவே செல்லுகிறான். இடையில் கவட்டுவழி காணப்படுகிறது. அக்கவட்டு வழிகளில் ஒன்று நேர் பாதை, குறித்த இடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. மற்றொன்று வளைந்த பாதை, பாதாளத்தில் கொண்டுபோய்விடும். இடையில் கஷ்டமும், திருடர் பயமும் நேரிடும். இவ்விரு வழிகளில் எதன் மார்க்கமாகச் செல்லுவதென்று விழிக்கிறான். சுற்று முற்றும் பார்க்கிறான். அங்கே ஒரு கைகாட்டி மரம் தெரிகிறது. அதன்

உதவியால் உண்மையான மார்க்கத்தை அறிந்து குறித்த இடத்துக்குப் போய்ச் சேருகிறான்.

அப்படியே நன்மை தீமைகளை அறிய விரும்பும் சிறுவர் சிறுமிகளுக்கு இரண்டு வழிகள் கண்ணில் படும். அவற்றில் ஒன்று நன்னெறி; மற்றொன்று தீயநெறி. இவ்விரண்டையும் இத்தன்மையனவென்று காட்டும் கைகாட்டி மரங்கள் ஆங்காங்கு உண்டு. அவற்றைப் படித்தறியவேண்டியது அவசியம். நன்னெறியைக் காட்டும் கைகாட்டிமரம் இதோ தெரிகிறது பார்! அதில் என்ன எழுதியிருக்கிறது? "இந்த நன்னெறிக்கு வழித்துணை தாழ்ச்சி, பொறுமை, உதாரம், பிறர்சிநேகம், சுறுசுறுப்பு முதலியவைகளாம்." என்று எழுதியிருக்கிறது. இம்மாதிரியே தீயநெறியாகிய மற்றதற்கும் உள்ள வழிகாட்டியில், "ஆங்காரம், கோபம், மோகம், போசனப்பிரியம், காய்மகாரம், சோம்பல் முதலியவை இவ்வழிக்கு வேண்டிய குணங்களாம்." என்று வரைந்திருக்கின்றது.

இவ்வுலகத்தில் சாதாரணமாக மனிதன் ஏதாவதொரு துர்க்குணத்தோடேயே பிறக்கிறான். ஏனெனில் பரிபூரண நற்குணமுள்ளவர் கடவுள் ஒருவரே. அந்தத் துர்க்குணங்கள் அவனுடைய வாழ்வாகிய பயிருக்குக் களைகள்போலாம். குடியானவன் பயிரை வளர்ப்பதற்குக் களைகளைப் பிடுங்குவது போலவே, ஒருவன் தன் வாழ்க்கையை நலப்படுத்துவதற்கு இத்துர்க்குணங்களாகிய களைகளை எடுத்தெறியவேண்டும்.

உன்னிலும் வயதில் பெரியவர்களும், அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவர்களுமாகிய மேலோர் சொற்படி நடப்பாயாக. அவர்கள் உன்னைக் கண்டிக்கும்போது அவர்களது நன்மொழியைக் கவனித்து உனது நடத்தைகளைத் திருத்திக் கொள்ளுவாயாக. அப்படிச் செய்தால்தான் நீ நல்லவனாகக் கூடும். அதனால் புண்ணியம் கைகூடும். இவ்வுலகத்தில் உழைப்பில்லாமல் ஓர் உறுதியும் கிடைப்பதில்லை, நன்மை விளைத்தால் நன்மை விளையும்.

கெட்ட செய்கைகளாகிய திருட்டு, பொய், மோசம், இவற்றைச் செய்பவனை யாரும் வெறுக்கிறார்கள். இது எல்லாருக்கும் தெரிந்தது. அப்படியிருக்க, ஏன் ஒருவன் கெட்ட செய்கைகளைச் செய்ய முயலவேண்டும்? கெட்ட காரியங்கள் கற்கண்டிலும் இனிப்பாகக் காணப்படுவதுதான் இதற்குக் காரணம். ஒரு பையன் பள்ளிக்கூடத்துக்குப் போகப் புறப்படுகிறான். வழியில் வேடிக்கை அல்லது விளையாட்டு அவன் கண்ணில் படுகிறது. உடனே மனம் அதனால் இழுக்கப்பட,



அவன் வழியில் நிற்கிறான். காலமாய்விடுகிறது. நேரம் சென்று பள்ளிக்கூடத்தை அடைகிறான். உபாத்தியாயர் கோபித்துக்கொள்ளுகிறார். அடிக்குப் பயந்து ஒரு பொய் சொல்லுகிறான். அவன் மனச்சாட்சி அவனைக் கண்டிக்கிறது. என்றாலும், மறுதடவையும் அவன் அப்படிச் செய்யும்போது பழக்கம் பலப்பட்டுப் போவதினால் மனச்சாட்சி சொல்வதை நிறுத்திவிடுகிறது. ஆகையினால் கொஞ்சங் கொஞ்சமாகத் தீய பழக்கத்தில் விழுந்து அவன் கெட்டுப்போகிறான். அதனால் ஒருவன் முதலிலேயே மனத்தைரியத்தோடு தீமையை நிறுத்த முயலவேண்டும். இல்லாவிட்டால் சங்கடத்தில் வரும். தவறும்போதெல்லாம் தங்களைச் சீர்திருத்தி மேல் நிலைப்படுத்தும் வல்லமையுள்ளோர் மிகச்சிலரே.

**கதை.**—ஒரு வனத்தில் ஒரு முனிவர் வசித்தார். ஒரு நாள் அவருடைய சிஷர்கள் அவரிடம் போய்த் தீமைகளை அடக்கி விலக்கும் வகை எப்படியென்று கேட்டார்கள். உடனே அவர் அச்சிஷர்களை ஒரு சவுக்குத் தோப்புக்குக் கூட்டிக்கொண்டு போனார். அங்குள்ள கன்றுகளையும் மரங்களையும் காட்டி அவற்றை வேரோடு பிடுங்கச் சொன்னார். அவர்களில் சிறியவன் சிறிய கன்றுகளை யாதொரு பிரயாசை வருத்தமில்லாமல் பிடுங்கி யெறிந்தான். அப்படியே சற்றுப் பெரியவன் சற்றுப் பெரிய கன்றுகளையும், இன்னும் பெரியன் பெரிய கன்றுகளையும் பிடுங்கினார்கள். ஆனால் இளமரங்களைக்கூட அவர்களுள் ஒருவனாலும் பிடுங்கமுடியவில்லை, அப்படியானால் பெரிய மரங்களைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா? எல்லாருமாகச் சேர்ந்து சில மரங்களைப் பிடுங்க முயன்றார்கள். அப்பொழுதும் முடியவில்லை. உடனே குரு அவர்களை நோக்கி: "இப்படித்தான் துர்க்குணங்களும், கெட்ட பழக்கங்களும். அவற்றை ஆரம்பத்தில் நீக்கிவிடுவது சுலபம். பழக்கம் அதிகமாக அதிகமாக அப்பழக்கங்கள் முறுக்கேறி வழக்கமாய் அவை இப்பெரு மரங்களைப் பிடுங்க முடியாததுபோலவே நீக்குவதற்கு அருமையாகப் போய்விடும். அதனால் உங்களில் ஒவ்வொருவனும் ஆரம்பத்திலேயே கெட்ட பழக்கங்களை விட்டொழிக்க முயலவேண்டும்." என்றார் (சத்தியநேசன்.)

## The Spiritual War.

### ஞான யுத்தம்.

மகன்.—ஆனா! பள்ளிக்கூடத்தில் இன்று காலை எங்கள் உபாத்தியாயர் முன்காலத்தில் நடந்த யுத்தங்களைப்பற்றியும்,

அந்தந்த யுத்தங்களில் வீரசூரத்துடன் போர்புரிந்த கீர்த்தி பெற்ற வீரர்களைப்பற்றியும், அவர்கள் உபயோகித்துவந்த பயங்கரமான ஆயுதங்களைப்பற்றியும், வெகு சாதுரியமாக வியாக்கியானம் செய்கையில், கேட்பதற்கு வெகு இன்பமாக இருந்தது. நீங்களும் ஒருகாலத்தில் போர்வீரராக இருந்தமையால் உபாத்தியாயரைவிட உங்களுக்கு அதிகம் தெரிந்திருக்குமென்று எண்ணி, அவர் சொல்லாமல் விட்ட மற்றச் சங்கதிகளை உங்களிடமிருந்து அறிந்துகொள்ள ஆசிக்கின்றேன்.

தகப்பன் :—மகனே ! உண்மையாக நான் உனது உபாத்தியாயரைவிடச் சொற்பப் படிப்புள்ளவனாய் இருந்தபோதிலும், அவர் உனக்கு விவரித்த அநேக சம்பவங்களை என் கண்களால் கண்டிருக்கிறேன். அல்லாமலும் என் வாழ்நாளில் அதிகமான காலத்தைப் பயங்கரமான யுத்தங்களிலேயே கழித்திருக்கிறேன். ஆனால் இந்த யுத்தங்களெல்லாம் எனக்கு அவ்வளவு பெரியவைகளாகத் தோன்றவில்லை. நான் போராட நேர்ந்த ஒரோயொரு யுத்தத்தைப்பற்றியும், அச்சமயத்தில் நான் போராடவேண்டியிருந்த சத்துருக்களைப்பற்றியும், நான் உபயோகித்த ஆயுதங்களைப்பற்றியும் உனக்குச் சுருக்கமாக விவரித்துச் சொல்லுகிறேன். கவனமாய்க் கேள்.

மகன் :—நல்லது, ஆஞா ! அப்படியே நான் கவனிக்கிறேன்.

தகப்பன் :—அப்பா ! நான் சின்னஞ்சிறு குழந்தையாக இருக்கையிலேயே என் தாய் தந்தையர் சர்வத்துக்கும் அதிபதியாகிய அரசனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு நான் ஊழியம் செய்யவேண்டுமென்ற கருத்தோடு இராஜமாளிகையில் (கோவில்) அரசருடைய மந்திரிகளில் ஒருவரைக்கொண்டு எனக்குச் சில சடங்குகள்செய்து என் பெயரை அங்குள்ள ஓர் புஸ்தகத்தில் பதிவுசெய்து வைத்தார்கள். அன்றுமுதல் நான் அவ்வரசனுடைய பிள்ளையானேன். மகனே ! இதைத்தான் ஞானஸ்நானமென்று சொல்லுகிறோம். பிறகு நான் வயதில் பெரியவனாகி, போர்வீரர் கற்கவேண்டிய சகல சாஸ்திரங்களையும் கற்றறிந்தவுடன், பகையாளிகளை எதிர்க்க நேர்ந்தால் போதுமான பலசாலியாக இருக்கவேண்டி விலையுயர்ந்த ஒரு ஔஷதத்தைக்கொண்டு என்னைத் திடப்படுத்திக்கொண்டேன். இந்த உன்னத ஔஷதத்தின் பெயர் உறுதிபூசுதல் என்பதாம். ஆ ! மகனே ! இந்த மகா ஔஷதத்தை நான் உபயோகித்தபின், என் உள்ளத்தில் உதித்த ஆநந்தத்தை என்னவென்று சொல்லுவேன். என்னுடைய எதிரி



களை எளிதில் ஜெயிக்க எனக்குப் போதுமான வல்லமை வந்துவிட்டதாகத் தெரிந்தது. பிறகு இதோ ! நான் சத்துராதிகளை எதிர்த்துப் போராடி ஜெயிக்கவேண்டிய காலம் வந்தது.

மகன் :—ஆஞா ! இந்தச் சத்துராதிகள் யாரென்று எனக்குச் சொல்லுங்கள்.

தகப்பன் :—அப்பா ! அவர்கள் உலகம், பசாசு, சரீரம் என்னப்பட்டவர்களேயாம். உலகமென்னும் விரோதி முதல் முதல் என்மீது உபயோகித்த குண்டுகள் எவையென்றால், பெருமை, சலாக்கியம், கீழ்ப்படியாமை என்பவைகளே. பசாசு என்னும் விரோதி வெகு மூர்க்கன். இவன் வெகு சுலபமாக, என்னோடு சேர்ந்திருந்த அநேக வாலிப வீரர்களைத் தன் வலைக்குள் சிக்கும்படி செய்துவிட்டான். T. D. (இன்னும் வரும்).

---

## Good to know.

### அறியவேண்டிய நல்ல காரியம்.

குன்னூரில் Pasteur Institute என்னும் நாய்கடி வைத்தியசாலை ஒன்று இருக்கிறது.

தாமதமின்றி சிகிச்சைக்கு வருகிறவர்களெல்லாரும் சௌக்கியப்படுகிறார்கள்.

பதினாலுநாள் அந்த ஆஸ்பத்திரியிலிருந்து சிகிச்சை செய்யவேண்டும். சொற்ப சம்பாதனை சம்பாதிப்பவர்களுக்கும், ஏழைகளுக்கும் ௸ சிகிச்சைக்குப் போகவர ரயில் சார்ஜும், சாப்பாடும், தங்க இடமும் கொடுத்து உதவிசெய்து வருகிறார்கள். ஆனால் அவ்வித உதவி கிடைப்பதற்கு விஷநாய் கடித்ததற்கு அந்தந்த ஊர் டாக்டர், அப்பாத்தகிரி, தாசில்தார் அல்லது பங்குசுவாமியாரிடமாவது ஒரு சர்ட்டிபிக்கேட் வாங்கிவந்து வைத்தியசாலை அதிகாரிக்கு ஒப்பிக்கவேண்டியது.

வருகிறவர்கள் இவ்விடம் குளிர்ச்சியுள்ளதாக இருப்பதால் அதற்கு வேண்டிய கம்பளி, படுக்கை முதலிய ஜாமான்களைக் கொண்டுவரவேண்டியது.

ஞாயிற்றுக்கிழமைகளில் அவ்வாஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்கு வரும் கிறீஸ்துவர்கள் தடையில்லாமல் காலை 7 மணிக்கு அர்ச். அந்தோனியார் கோவிலுக்கு வந்து பூசை காணலாம்.

நாய்கடி பட்டவர்கள் தங்களைக் கடித்த நாய் விஷநாய் என்று சந்தேகப்படும்பட்சத்தில் அந்நாயை உடனே கொன்றுபோடவேண்டியது.

## Letter to a Friend.

### சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

பிரிய சிநேகிதா!

சேசுநாதர்சுவாமி 30 வருஷமாகத் தமது தேவத்துவத்தை வெளிப்படுத்தாமல் ஜீவித்துவந்த பிறகு முப்பதாம் பிராயத்தில் தமது தேவ மகிமையை உலகத்துக்கு வெளிப்படுத்த எண்ணி, படிப்பில்லாத 12 ஏழைச் செம்படவர்களைச் சீஷராகத் தெரிந்துகொண்டு, கலிலேயா, யூதேயா தேசமெங்கும் ஊர் ஊராய்ச் சுற்றித்திரிந்து உலகத்தார் முன் ஒருபோதும் கண்டும் கேட்டும் அறியாத அற்புத அதிசயங்களைச் செய்து வந்தார். செவிடர்களைத் தமது திருக்கரத்தால் தொட்டமாத்திரத்தில் அவர்கள் கேள்வியடைவார்கள். ஒருபோதும் வாய் பேசியறியாத ஊமைகளைத் தெளிவாய்ப் பேசப்பண்ணுவார். பிறவிக் குருடர்களுக்குக் கண் வெளிச்சம் கொடுப்பார். முடவர் சப்பாணிகளை எழுந்து நடக்கக் கட்டளையிடவே அவர்களும் அப்படியே செய்வார்கள் செத்து நாறிக்கிடக்கும் சவங்களையும் அதிகாரத்தோடே பெயர் சொல்லிக் கூப்பிட்டு, உயிரோடு எழுப்புவார். பேய் ஆவேசம் ஏறினவர்களைக் குணப்படுத்துவார். புசல் காற்றுகளை அதட்டி அமர்த்துவார். சத்துருக்கள், சிநேகிதரென்ற வித்தியாசம் இல்லாமல், பற்பல ஊரார்களும் பகிரங்கமாக அவர் பண்ணிய இவ்வதிசய அற்புதங்களைப் பற்பல சமயங்களிலும் வெவ்வேறு இடங்களிலும் கண்ணாரக் கண்டார்கள்.

மனிதர்கள் தங்கள் உள்ளத்திலே எண்ணும் அந்தரங்கமான யோசனைகளையும் சேசுநாதர்சுவாமி அறிந்து வெளிப்படுத்துவார். பின் நடக்கப்போகிற காரியங்களை முன்னமே அறிவிப்பார். இப்படியே தம்முடைய சீஷர்களில் ஒருவன் தம்மைக் காட்டிக் கொடுப்பானென்றும், யூதர்கள் தம்மைப் பிடித்துக் கட்டியடித்துச் சிலுவையில் அறைவார்களென்றும், மரித்த மூன்றாம்நாள் தாம் உயிர்த்தெழும்புவதாகவும், தம்மைத் தேவசுதனென்றும், இரட்சகனென்றும் விசுவசியாமல் கொலைசெய்யப்போகிற யூத ஜனங்களுடைய பட்டணமும் தேவாலயமும் உரோமையராலே அழிக்கப்படுமென்றும், யூதர் உலகமெங்கும் சிதறடிக்கப்படுவார்களென்றும் தெளிவாய்ச் சொல்லியருளினார். இவைகளெல்லாம் ஒருபோதும் நடக்கக் கூடாத சம்பவங்கள்போல் தோன்றின. ஆனாலும் சேசுநாதர்சுவாமி அறிவித்தபடியே எல்லாம் சம்பவித்தனவென்



பது உலக மறிந்த விஷயம். இப்போதும் அங்கங்கே அலைந்து திரிகிற யூத ஜாதியாரே இச்சம்பவங்கள் எல்லாவற்றிற்கும் உத்தம சாட்சியாம்.

சேசுநாதர்சுவாமி இவ்வாறு தமது தேவத்துவத்துக்கு அத்தாட்சியான அதிசயங்களைப் பண்ணிவருகையில் மனுக்குலத்தோர் அனுசரிக்கவேண்டிய உத்தம சுகிர்த வழியையும் போதித்துக்கொண்டு வந்தார். அவர் ஒருபோதும் கல்வி சாஸ்திரங்களைப் படியாதிருந்தும், ஞானிகள் எல்லோரும் பிரமித்து நிற்கும்படி சன்மார்க்கத்தைப் போதித்து வருவார். சேசுநாதர்சுவாமியைக் கண்டவர்கள் அவரை உலகம் ஒருபோதும் கண்டிராத புண்ணியவானென்றும், பரிசுத்தரென்றும் உணருவார்கள். சாந்தம், தயை, இரக்கம், அருள் முதலிய புண்ணியங்கள் எந்த மனிதரிடத்திலும் காணப்படாத அளவாய் அவரிடத்தில் பிரகாசித்தன.

அவர் பரிசுத்தராகவும், பாவ நடத்தையைக் கண்டிக்கிறவராகவும் இருந்ததின்பொருட்டு, அவரைப் பகைத்த சில அதிகாரிகள் அவரைப் பேச்சிலாவது குற்றப்படுத்தவேண்டுமென்று எத்தனையோ தந்திர வஞ்சகங்கள் செய்தும் அவரிடத்தில் ஓர் அற்பக் குற்றமாவது, குற்றத்தின் நிழலாவது அவர்களால் காணமுடியாமல் போயிற்று. சேசுநாதர்சுவாமி செலுத்திய அதிகாரத்தையும், உரைத்த வல்லமைநிறைந்த போதகத்தையும், அவருடைய ஜீவியத்தில் விளங்கிய பரிசுத்ததனத்தையும் பார்த்துப் பலர் அவரை மகா தீர்க்கதரிசியென்று கொண்டாடினாலும், சிலர் பொறாமையால் அவரைப் பகைத்தார்கள். ஆயினும் அவர் எவருக்கும் அஞ்சாமல் தாமே உலகத்தை ஈடேற்றும்படி பரலோகத்திலிருந்து இறங்கிவந்த கடவுளென்று பிரசித்தமாய்ப் போதித்துவந்தார். "இத்தனை பரிசுத்தமுள்ள ஒருவர் பிறரை ஏமாற்றக்கூடுமா? புத்திசுவாதீனமுள்ள மனிதன் தன்னைத் தேவனென்று சாதிக்கக் கூடுமா? அரிய புண்ணியங்களைச் செய்கிறவரும், உலகத்தின் ஞானிகள் சகலருடைய அறிவுக்கும் மேற்பட்ட ஞானத்தைப் போதிக்கிறவரும் பயித்தியராவாரா?" இல்லையே!

பிரிய சிநேகிதா! இந்த அதிசயமான மனிதனுடைய அற்புதக் கிரிகைகள், இவர் மனிதனல்ல, தேவனேயென்று காட்டுகின்றன. இந்தப் பரிசுத்தருடைய வார்த்தைகளும், இவர் கடவுளென்றே வெளிப்படுத்துகின்றன. இவரைத் தேவனென்று நீ அங்கீகரித்து விசுவசித்தால் இரட்சணியம் அடைவாய்.

இப்படிக்கு, உன் பிரிய நண்பன்.

## Missionaries at the front.

## போர்முகத்திலிருக்கும் குருக்கள்.

அநேக குருக்கள் தங்கள் தங்கள் பங்குகளை விட்டு போர்முகத்திற்குப் போய் அங்கே பலவிதமாய் நன்மைசெய்து வருகிறார்களென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்திய கிறீஸ்துவர்கள் அப்படிப்போயிருக்கும் தங்கள் தங்கள் குருக்களை வெகுகாலம் பார்க்காமலிருப்பதினால் அவர்களை மறந்திருப்பார்களாக்கும். ஆனால் அந்தக் குருக்கள் தங்கள் ஞானப்பிள்ளைகளை மறப்பதில்லை. முன்போல் தங்கள் தங்கள் பங்கு விசாரணைகளுக்குத் திரும்பிவர அவர்கள் ஆசைப்படுகிறார்கள். அவர்கள் சமயாசமயங்களில் எழுதும் கடிதங்களில் தங்கள் பங்குக்கிறீஸ்துவர்களைப்பற்றியும், ஊரின் க்ஷேமத்தைப்பற்றியும் விசாரித்து வருகிறார்கள். மேலும் அவர்களில் சில குருக்கள் தாங்கள் கற்ற தமிழ்ப்பாஷையை மறவாமலிருக்கும்படி தங்கள் ஓய்வு நேரங்களில் தமிழ் புஸ்தகங்களை வாசிப்பதுமல்லாமல் அவர்கள் ஒருவருக்கொருவர் எழுதும் கடிதங்களையும் தமிழிலேயே எழுதிவருகிறார்கள்.

அதனால் குருக்கள் தங்கள் தங்கள் பங்குக் கிறீஸ்துவர்கள் பேரில் வைத்திருக்கும் பட்சமும், பிறசிநேகமும் எவ்வளவென்று நாம் அறிந்துகொள்ளலாம்.

இதை வாசிக்கும் கிறீஸ்துவ சகோதரரே! போர்முனைக்குச் சென்றிருக்கும் நமது ஞானத்தந்தையர்கள் கூடியசீக்கிரம் யுத்தம் முடிவடைந்து அவர்கள் அனைவரும் க்ஷேமமாய் திரும்பிவந்து நம்மெல்லோரையும் கண்டு களிக்கும்படி சர்வேசுரனைப்பார்த்து மன்றாடுவோமாக.

---

## A Brave Indian boy.

## தைரியசாலியான ஒரு இந்திய சிறுவன்.

இப்போது கும்பகோண மேற்றிராசனத்தைச் சேர்ந்த விரகாலூர் என்னும் கிராமத்தில் 1867-ம் வருஷத்தில் ஒன்பது பிராயமுள்ள ஒரு அஞ்ஞானிப்பையன் இருந்தான். அவன் பெயர் அருணாசலம். அவன், தனக்குப் பிரியமில்லாமலிருந்தபோதிலும், தன் தகப்பனாருடைய உத்தரவுக்கிணங்கி புராணங்களை வாசித்துவருவான். இப்படியிருக்குங்கால் ஓர் நாள் சங். (Rev. Fr. Goust) கூஸ்த் சுவாமியார் அவனுக்கு ஒரு ஞானோபதேசப் புஸ்தகம் கொடுத்தார். அதை வாசிக்க வாசிக்க அவனுக்கு மன ஆறுதலும் ஞான சந்தோஷமும்



உண்டாயிற்று. சங். கூஸ்த் சுவாமியார் வயதாகி இறந்து போனபிறகு அவர்பேரில் அதிக பட்சமாயிருந்த அப்பையன் அவர் கல்லறைக்குப்போய் தான் அநுபவிக்கும் கஸ்திகளையும், சந்தோஷங்களையும் சொல்லுவது வழக்கம். ஒருநாள் அவன் தூங்கும்போது சங். கூஸ்த் சுவாமியார் அவனுக்குத் தரிசனையாகி அவனை நோக்கி, "பிள்ளாய்! நீ மனந்திரும்பி கிறீஸ்து வேதத்தில் சேரவேண்டும். அதனால் உனக்கு பல இடையூறுகள் நேரிடும். அவைகளுக்கு நீ பயப்படாமல் உன் ஆத்தும நன்மையைமாத்திரம் தேடு. இனிமேல் உன் பெயரை மாற்றி தேவசகாயம் என்று வைத்துக்கொள்வாயாக" என்று சொன்னார்.

அந்நாள் துவக்கி அருணாசலம் ஞானஸ்நானம் பெற வேணுமென்று வெகு ஆசைப்பட்டான். இந்த சங்கதியைச் சொல்லித் தன் கருத்தை நிறைவேற்ற அவன் இருபது மைல் தூரம் நடந்து ஒரு குருவானவரிடம் போகவேண்டியிருந்தது. அங்கே போய் வேத சத்தியங்களைப் படித்து ஞானஸ்நானம் பெற்று தேவசகாயம் என்று பெயர் வைத்துக்கொண்டு பிறகு புது நன்மையும் வாங்கினான். அதன் பிறகு அவன் தன் ஊருக்குப் போனான். அங்கே போன பிறகு அவனுடைய சொந்தக்காரர்கள் இது சங்கதிகளையறிந்து அவன் கிறீஸ்து வேதத்தை விட்டு விடும்படியாக சகல உபாய தந்திரங்களைத் தேடினார்கள். ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் அவனை ஒரு சிறைச்சாலையில் அடைத்து அஞ்ஞானி தெய்வங்களுக்குப் படைக்கப்பட்ட பண்டங்களை அவனுக்கு உணவாகக் கொடுத்தார்கள். அவன் அவைகளைப் புசிக்காமல் மூன்று நாள் வரையிலும் உபவாசமாயிருந்தான். ஒரு நாள் இராத்திரியில் அதிக பசியாயிருக்கும்போது அவன் அடைபட்டிருந்த இடத்தில் மதுரமான பழங்கள் அற்புதமாய் அவனுக்குக் கிடைத்தன. அவைகளைப் புசித்து அவைகளில் சிலவற்றை மறுநாளைக்கு மீதி வைத்துக்கொண்டான். ஆனால் மீதியாயிருந்த அப்பழங்கள் மறுநாள் வெறும் இலைகளாக மாறிப்போயின. அவனை நீதிஸ்தலத்துக்குக் கொண்டு போனபோது, அங்கே அவன் சொன்ன மறுமொழிகள் எவ்வளவு நியாயமாயும், தைரியமாயுமிருந்ததென்றால், அவனுடைய சத்துராதிகள் ஆச்சரியப்பட்டு, அவனை விடுதலை செய்து, அவன் தன் தகப்பன் வீட்டுக்குப் போகும்படி தீர்மானித்தார்கள். அவ்வீட்டிலே முதலாய் அவனுக்குப் பல சங்கடங்கள் நேர்ந்தன. எப்படியெனில், ஞானஸ்நானத்தின்

ஞானமுத்திரையை அழிக்கவேண்டுமென்று அவனுடைய பெற்றோர்கள் எண்ணி, எலுமிச்சம் பழத்தை அவன் தலையில் தேய்த்துத் தண்ணீர் ஊற்றி கழுவிக் குளிப்பாட்டினார்கள்.

பிறகு அவன் கழுத்தில் போட்டிருந்த ஜெபமாலையை எடுக்கப் பிரயாசப்பட்டார்கள். அதற்கு அவன், "என் கழுத்தை அறுத்தாலல்லாமல் ஜெபமாலையை எடுக்க விடமாட்டேன்" என்றான். அதன்பேரில் கட்டாயமாக அந்த ஜெபமாலையை அவன் கழுத்திலிருந்து அறுத்து எடுத்தார்கள். அதைக்கண்டு அவ்வாலிபன், "என் கழுத்திலிருந்த ஜெபமாலையை அறுத்துவிட்டீர்கள். ஆனால் என் இருதயத்திலிருக்கும் ஜெபமாலையை அறுக்க ஒருக்காலும் உங்களால் முடியாது" என்றுரைத்தான். இதைக்கண்ட ஜனங்கள் அவனை அவன் இஷ்டம்போல் விட்டுவிட்டார்கள். இந்தத் துன்பம் எல்லாம் தீர்ந்த பிறகு அவன் மகா வந்திக்கத்தக்க (Rt. Rev. Godelli) கோடெல்லி ஆண்டவரிடம் போய்ச் சேர்ந்து அவருடைய பராமரிப்பில் எப்போதும் நல்ல கிறீஸ்துவனாய் நடந்து வந்தான்.

OLIM.

---

## A hymn to St. Joseph.

### அர்ச். சூசையப்பர் பேரில் பாடல்.

1. ஆதியந்த மில்லாத
அமல னருளும் வேதமதில்
நீதி மானென் றியம்பிடவே
மேன்மை பெற்ற சூசைமுனி.

2. தேவ வரங்கள் நிறைந்திலங்கித்
தீய காமம் வெறுத்தகற்றிப்
பூவில் மாறாத் துறவியாய்ப்
புகழ்ச்சி நிறைந்த புண்ணியரோ.

3. மாசில் கன்னி மரியனைக்கு
வாட்சி வாய்ந்த காவலரோ
சேசு பாலுக் குணவளிக்கத்
தேவ கிருபை பெற்றவரோ.

4. பூவில் வாழு மடியவர்க்காய்ப்
புனித பரனை வேண்டி வர
'ஆவ லோடு கோருகின்றோம்
அன்பு நிறைந்த தந்தையரோ.



# The St. Anthony's Messenger.

## அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. IV. April 1918. No. 4.

புத்தகம் IV.] FIDES AC ROBUR. [நம்பர் 4.



## MORAL INSTRUCTION.

## நல்லொழுக்க போதனை.

### Humility and Pride.

### தாழ்ச்சியும், அகங்காரமும்.

நற்செய்கைகள் இருவகைப்படும். அவற்றுள் ஒன்று தேவ சம்பந்தமான புண்ணியமென்றும், மற்றொன்று நல்லொழுக்க சம்பந்தமான புண்ணியமென்றும் சொல்லப்படும். நாம் கடவுளை நாடி நமது புத்தி மனதை அவருக்கே கீழ்ப்படுத்தச் செய்யும் தேவ சம்பந்தமான புண்ணியங்களைப்பற்றி முன்பு சொன்னோம். இப்பொழுது மனிதனுடைய நடவடிக்கைகளைச் சுபாவ சட்டத்துக்குக் கீழ்ப்படுத்தி, அவைகளைச் சீர்ப்படுத்தச் செய்யும் நல்லொழுக்க சம்பந்தமான புண்ணியங்களைப்பற்றிச் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

நல்லொழுக்க சம்பந்தமான புண்ணியங்களில் முதன்மையானது தாழ்ச்சி. தாழ்ச்சியென்பது ஒருவன் தன் குறைகளை நன்றாய் அறிந்து, தன்னை அற்பமாக எண்ணிப் பிறரை தக்கபடி மதிக்கச் செய்யும் மனநிலையாம். இக்குணமே மற்ற எல்லா நற்குணங்களுக்கும் அஸ்திவாரமாம். தாழ்ச்சியென்னும் இந்த ஒரு குணமில்லாமல் மற்ற நற்குணங்களைத் தேடுவது அஸ்திவாரமில்லாமல் வீடு கட்டுவதுபோலாகும். தாழ்ச்சியென்னும் புண்ணியமே மற்ற நற்குணங்களுக்கெல்லாம் தாயும்; அரசியுமாகும்.

தாழ்ச்சியுள்ளவன் தனது குலச்சிறப்பு, புத்தி, ஞானம், சரீர அழகு, திறமை, இவற்றைக் கடவுள் தனக்கு அளித்த வரமாக எண்ணித் தன்னாலாவது ஒன்றுமில்லையென்று உணருகிறான். அன்றியும், "சீரோராயினும் தாழ உரை" என்னும் நீதி வசனப்படி நடந்துகொள்ளுகிறான்.

எவ்வளவு தாழ்ந்த வேலைகளைச் செய்பவனையும் இத்தாழ்ச்சியுள்ளவன் இழிவாக மதிப்பதில்லை. தனது நடவடிக்கைகளைப்பற்றியும் அவசரமின்றிப் பேசுகிறதில்லை. தன்னைப் பிறர் புகழ்ந்து பேசும்போதும் அவற்றிற்குச் செவிகொடுப்பதில்லை. தான் எல்லோருக்கும் கடைசியானவனென்ற எண்ணமே அவன் மனதில் என்றும் உள்ளது.

பலர் கூடின இடத்தில் அவன் ஒரு மூலையில் அமருவான். பேசவேண்டிய அவசரம் இருந்தாலொழியப் பேசமாட்டான். பெரியோர் தன் குற்றங்களையெடுத்துக் காட்டிக் கண்டிக்கும்போது அதைப்பற்றி மனதில் யாதொரு விசாரமும் வருத்தமுங் கொள்ளாமல் அவர்கள் சொல்லும் புத்தியைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு தன்னைத் திருத்திக்கொள்வான். மெய்யான தாழ்ச்சியுள்ளவன் கள்ளவேஷம் போடமாட்டான்.

ஆனால் அகங்காரியோ இவற்றிற்கு நேர் விரோதமான நடக்கைகளையுடையவனாம். ஒருவன் தன்னை மிதமிஞ்சி மதிப்பதும், தன்னைப் பிறரிலும் மேலானவனாக எண்ணச் செய்வதும் இவ்வகங்காரமே. இதுவே எல்லாத் துர்க்குணங்களுக்கும் காரணம்.

ஒரு அகங்காரியைப் பார். அவனிடத்துள்ள டம்பத்துக்குக் கணக்கு வழக்கில்லை. மற்றவர்களை அவன் இகழுகிறான். அவர்களைத் தூஷிக்கிறான். வயதிலும், கல்வியிலும், குணத்திலும், பெரியவர்களைக்கூட அவன் இலட்சியம் செய்கிறதில்லை. அவர்களுடைய உத்தரவுகளுக்கு மீறி நடப்பதிலேயே கர்வங்கொள்ளுகிறான். தெருவில் போகும்போதுகூடத் தன் டம்பத்தைப் பிறர் பார்க்கிறார்களாவென்று சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு நடக்கிறான். தன் தலையை அடிக்கடி நிமிர்த்தி ஏழைகளை அசட்டைபண்ணுகிறான். பிச்சை கொடுத்தாலும் வேறு எந்த நன்மை செய்தாலும் பலரும் அறியும்படி செய்கிறான். "உனது வலது கை செய்வதை உனது இடது கை அறியாதிருக்கட்டும்" என்ற நீதி வாக்கியம் அவனுடைய மனதில் படுவதில்லை. அவன் செய்வ



தெல்லாம் தற்பெருமைக்காகவும், பிறர் தன்னைப் புகழ்வதற்காகவுமேயன்றி மற்றொன்றுக்காகவுமல்ல.

அவன் தன்னபிப்பிராயம் மேலானதென்று எண்ணுவானேயொழிய, பிறரது நியாயங்களைக் கேட்பதில்லை. பிடிவாதமே அவனது முதற்குணம். ஒரு அகங்காரி பிறர் தன்னை மேலாக மதிக்கும்படி செய்யும்போதெல்லாம் ஜனங்கள் அவனைப் பார்த்து உள்ளத்தில் வெறுத்து வெளியில் நகைக்கிறார்கள். ஏனெனில் அவனுடைய இத்துர்க்குணம் மனிதர் முன்னிலையிலும், கடவுள் முன்னிலையிலும் வெறுப்புக்கிடமானது.

உன்னை நீ அறிந்தாயானால் கர்வப்பட உனக்கு யாதொரு காரணமுமில்லையென்று தெரியும். உன்னால் உலகத்தில் ஒன்றும் செய்ய முடியாதென்பதை நீ உணர்வாயாக. ஆகையால் கர்வம் கொள்ளாமல் பணிவுடன் நடப்பாயாக. நிறைகுடத்தில் நீர் தளம்பாது. கனமான வஸ்து உள்ள தட்டு, தராசில் கீழிறங்கும். இலேசான தட்டு மேல் நோக்கிச் செல்லும். தாழ்ச்சி என்றும் அடங்கியேயிருக்கும். அகங்காரமோ உயரப் பறந்து கேட்டை அடையும். "அற்பப் படிப்புத்தான் அகந்தைக்கு இருப்பு" என்பதை அறிந்துகொள்.

**கதை**:—பூர்வகாலத்தில் கிரீஸ் தேசத்தில் மெனக்கிரட்ஸ் என்னும் சாஸ்திரியொருவனிருந்தான். அவன் வெகு கர்வி. தனது சாமர்த்தியத்தைத் தானே பெரிதாக எண்ணித் தன்னை (Jupiter) ஜூப்பிட்டர் (மனிதரை இரட்சிப்பவன்) என்று சொல்லிக்கொண்டு வந்தான். பிலிப் என்னும் அரசன் அவனுக்குப் புத்தி கற்பிக்கவேண்டுமென்று எண்ணி, ஒருநாள் மந்திரி பிரதானிகளுக்கென்று தான் செய்த விருந்துக்கு இந்த ஜூப்பிட்டரையும் கூப்பிட்டான். இவனைத் தனியாக ஒரு உயர்ந்த மேடையில் உட்காரவைத்து அவனது முன்னிலையில் ஒரு மேசையின்மேல் தங்கத் தூபக்கால் நிறுத்திச் சாம்பிராணிப் புகை காட்டிக்கொண்டிருக்கத் தன் ஊழியர்களுக்குக் கற்பித்தான்.

கடவுளுக்கு மாத்திரம் செலுத்தத்தகும் தேவ ஆராதனை போன்ற சகல சங்கை மரியாதையும் தனக்குச் செலுத்தப்படுவதைக் கண்டு அவன் உள்ளத்தில் சந்தோஷப்பட்டபோதிலும், அது அவனுக்குத் திருப்தி கொடுக்கவில்லை. ஏனென்றால், மற்ற விருந்தாடிகள் எல்லோரும் ருசிகரமான பதார்த்தங்களை உண்டு ஆடிப் பாடி உல்லாசம் கொண்டாட, தான் மாத்திரம் சாம்பிராணிப்புகை தவிர வேறே யாதொரு

ஆகாரமும் இல்லாமல் பட்டினியாய் இருப்பதை நினைத்துக் கலங்கி மயங்கினான். தன்னைப் பெரியவனாக எண்ணிக் கர்வங் கொண்ட மெனக்கிரட்ஸ் பசியால் வருந்துவதைக்கண்ட விருந்தினர் இதுவே அவனுடைய ஆங்காரத்துக்குத் தகுந்த கூலியென்று சொல்லி அவனைப் பழித்து நகைத்தார்கள். மெனக்கிரட்ஸும் விருந்தாடிகளால் தான் நடத்தப்பட்ட விதத்தையும், அவர்களால் அவ்வளவு கேவலமாக எண்ணப்பட்டதையும் நினைத்து வெட்கி, தான் அன்று கற்றுக்கொண்ட நற்புத்தியை என்றும் மறக்கக்கூடாதவனாய்ப் பட்டினியோடு வீடு போய்ச்சேர்ந்தான்.

தன்னை எப்போதும் தாழ்வாகவே மதிப்பவன் மகிமை பொருந்தியவனாவான். மேலே மேலே பார்த்துத் தன்னை உயர்வாக எண்ணுபவன் கேட்டை அடைவான். இதைப் பற்றியே, "தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்." என்றார் பெரியவர். (சத்தியநேசன்.)

---

## Duties of Parents towards their Children.

*(Continued.)*

### பிள்ளைகள் மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.

(தொடர்ச்சி.)

இந்த விதமாக மனிதனுடைய கடைசி முடிவுகளைப்பற்றி அடிக்கடி நினைப்பூட்டுவதோடு, பாவத்தை விலக்கவும், பாவத்தின்பேரில் மெய்யான அருவருப்பு உண்டாக்கவும் தக்க பக்திமாதிரிகைகளைப் பலமுறையும் பின்வருமாறு சொல்லிக்காட்டவேண்டும்.

"பிள்ளாய்! சுவாமியுடைய கட்டளையை மீறுகிறது பாவம். பாவம் சுவாமிக்கு விரோதமான துரோகமாகும். பாவம் செய்கிற பிள்ளைகள்மேல் சுவாமிக்கு அதிக கோபமும் வெறுப்பும் உண்டாகும். பாவம் செய்கிற பிள்ளைகள் சுவாமிக்கு பிரியப்படமாட்டார்கள். சுவாமியுடைய கட்டளையை நாம் மீறுவதினால் அவருக்கு வெகு கஸ்தியுண்டாகும். நமக்கு ஆத்துமமும், சரீரமும், உயிரும், தாய் தகப்பன் முதலிய சகலமும் சுவாமிதான் கொடுத்தார். அப்படியிருக்க அவர் கட்டளையை மீறிப் பாவம் செய்யலாமா? பாவத்தினால் நாம் அவருக்குக் கஸ்தி வருவிக்கலாமா? கெட்டபிள்ளைகளைச் சுவாமி தண்டிப்பார். ஆகையினால் பிள்ளாய்! ஒருபோதும்



நீ பாவம் செய்யாதே, பொய் சொல்லாதே, திருடாதே, கெட்டவார்த்தை பேசாதே, மற்றவர்களோடு சண்டை போடாதே, துஷ்டப்பிள்ளைகளோடு சேராதே, என்ன துன்பம் வந்தாலும் ஒரு அற்பப்பாவத்தை முதலாய்ச் செய்யச் சம்மதியாதே.

உன் கண் குருடாய்ப் போனால் எதையும் நீ பார்க்க முடியாது. உன் தாய் தகப்பனையும், சகோதரர் சகோதரிகளையும் ஒருவரையும் பார்க்கக் கூடாதவனாவாய். இது உனக்குப் பெரிய பொல்லாப்பாயிருக்கும். ஆனால் சுவாமியுடைய கட்டளையை மீறி அவருக்குத் துரோகம் செய்வது இதைவிடப் பெரிய பொல்லாப்பாயிருக்கும்.

உன்னை உயிரோடு கட்டி, எரிகிற நெருப்பில் போட்டுவிட்டால் உனக்கு எவ்வளவு வேதனையாயிருக்கும்! இது எவ்வளவோ பெரிய பொல்லாப்பு! ஆயினும் பாவம் செய்து சுவாமிக்குக் கஸ்தி வருவிக்கிறது இதைப்பார்க்கிலும் எவ்வளவோ பெரிய பொல்லாப்பாகும். ஆதலால் ஒரு சிறிய அற்பபாவத்தையுங்கூட தள்ளி விடு.

உன் தாய் தகப்பனாகிய நாங்கள் செத்துப்போனால் உன்னை யார் கவனிப்பார்? உனக்கு வேண்டிய சாப்பாடு, துணிமணி முதலியவற்றைக் கொடுப்பவர் யார்? இது உனக்கு எவ்வளவு விசனமாயிருக்கும்? இது எவ்வளவு பெருத்த பொல்லாப்பு? ஆயினும் ஓரே ஒரு பெரிய பாவம் செய்து சுவாமிக்கு அவமானமுண்டாக்கிக் கஸ்தி வருவிப்பது எல்லாப் பொல்லாப்பிலும் பெரிய பொல்லாப்பென்று நினைத்துக் கொள். ஆகையினால் பிள்ளாய்! பாம்பைக் கண்டால் நீ பயந்து ஓடிப்போவதுபோலவே பாவத்தைக் கண்டவிடத்தும் நீ பயந்து ஓடிப்போய்விடுவாயாக." என்று இப்படியாகப் பல உதாரணங்களினால் பிள்ளைகளுக்குப் பாவத்தின்பேரில் பயமும் அருவருப்பும் வருவிக்கவேண்டும்.

பிரான்ஸ் தேசத்தில் இராக்கினியும் புண்ணியவதியுமாயிருந்த பிளான்ஸ் என்னும் துரைசானி தன் மகன் ஞானப்பிரகாச இராஜாவுக்கு தினந்தோறும் கற்றுக்கொடுத்த பாடத்தைப் பாருங்கள். "என் நேச மகனே! என்னை நான் நேசிக்கிறதைப் பார்க்கிலும் அதிகமாக உன்னை நான் நேசிக்கிறேன். இந்த உலகத்தில் எனக்கு உற்ற துணையும் ஏக நம்பிக்கையும் நீயே. பிரான்ஸ் தேசத்தின் இராஜாவும் நீயே. வேண்டுமென்று நீ ஒரு சாவான பாவத்தைச் செய்து சுவாமிக்குத் துரோகியாய்ப் போவதைப் பார்க்கிலும் நீ அதற்கு

முந்திச் சாவதே நல்லது" என்று சொல்லி வருவாள். மகனும் தன் தாயின் புண்ணியங்களைப் பார்த்து, அவளுடைய நல்ல படிப்பினையையும் கேட்டுப் பரிசுத்தமாக ஜீவித்துப் பெரிய அர்ச்சியசிஷ்டவரானார். தாய் தந்தையர்களே! நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குக் காட்டும் நன்மாதிரிகை என்ன? கற்றுக் கொடுக்கும் படிப்பினை என்ன? சாவைப்பற்றியும், பாவத்தைப்பற்றியும் அவர்களிடத்தில் பேச உங்களுக்கு மனத்துணிவு உண்டா? இல்லை! இல்லை! அப்படிப் பேசுவது கெட்ட சகுனமென்று நினைக்கிறீர்கள். சாவைப்பற்றிப் பேசினால் பிள்ளைகள் பயப்படுவார்களென்றும், செத்துப்போவார்களென்றும் நீங்கள் அஞ்சுகிறீர்கள். (இன்னும் வரும்.)

யதார்த்தவாதி.

---

## Bokapur

### பக்காப்பூர் பேயாட்டமும், சில கிறீஸ்துவர்களுடைய திண்டாட்டமும்.

ஒத்தகமந்திலிருந்து சுமார் 18 மைலுக்கு அப்பால் பக்காப்பூர் என்று சொல்லப்பட்ட ஒரு இடமுண்டு. அங்கே சிற்சில இடங்களில் மலைவாசிகளாகிய குரும்பர்தான் வசிக்கிறார்கள். இந்த இடத்தில் வருஷத்திற்கு ஒருமுறை ஓர் உற்சவம் கொண்டாடப்படுவது வழக்கம். நீலகிரி ஜில்லாவின் நாலு பக்கங்களிலுமிருந்து திரளான ஜனக்கும்பல் அங்கே அச்சமயத்தில் போய் ஆடு, கோழி முதலியவற்றைப் பலியிடுவது வழக்கம்.

இக்கும்பலில் விசுவாசமில்லாத அநேக கிறீஸ்துவர்களும் அஞ்ஞானிகளோடு சேர்ந்து அவர்கள் செய்வதுபோலவே ஆடு கோழி முதலியவற்றைக் கொண்டுபோய் மேற்படி பேய்த் தேவதைக்குப் பலியிட்டுக் காணிக்கை செலுத்திவருகிறார்கள். இப்பேர்ப்பட்ட கிறீஸ்துவர்களை அஞ்ஞானக் கிறீஸ்துவர்களென்று சொல்வது உசிதமென்று எண்ணுகிறேன். ஏனெனில் ஒரு ஊழியன் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்வது எவ்வாறு முடியாதவிஷயமோ அவ்வாறே இவர்கள் மெய்யான கடவுளுடைய பிள்ளைகளென்று ஏற்பட்டிருந்தும் பசாசுக்கு ஊழியம் செய்துவருகிறார்கள். இவர்கள் ஞானஸ்நானத்தினால் கிறீஸ்துவர்களாக இருந்தும் நடத்தையில் அஞ்ஞானிகளாக இருப்பதால் இவர்களை அஞ்ஞானக் கிறீஸ்துவர்களென்று சொல்வது பொருந்தும்.



ஓ! அஞ்ஞானக் கிறீஸ்துவர்களே! உங்களுக்கு ஏன் இப்பேர்ப்பட்ட மதியீனம்? நீங்கள் செய்யும் இப்படிப்பட்ட ஈனத் தொழிலினால் நமது சத்திய வேதத்தையும், குருக்களையும், உத்தம கிறீஸ்துவர்களையும், புறமதஸ்தருடைய ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாக்குகிறீர்கள். உங்கள் பெண்டு பிள்ளைகள், உற்றார் பெற்றார் கஞ்சிக்குக் காற்றாய்ப் பறக்கையில் அதைச் சிறிதும் கவனியாமல், கடன்பட்டாவது ஆடு கோழியிவற்றை வாங்கிப்போய், பேய்க்குப் பலி செலுத்துவது மதியோ? சொற்ப வியாதி குணப்பட்டதென்றோ அல்லது வேறு யாதொரு காரியம் பலித்ததென்றோ இப்படிப் பேய்க்குப் பலி செலுத்துகிறீர்கள்? இந்துக்களில் முதலாய் அநேகர் இப்பேய்க்கு ஊழியம் செய்யப் பின்வாங்குகிறார்கள். ஆனால் நீங்கள் மட்டும் இதில் வெகு ஊக்கமாயிருப்பது மெத்தக் கேவலமல்லவா?

அஞ்ஞானக் கிறீஸ்துவர்களே! இந்தத் தடவையில் பக்காபூர்ப் பேய் ஆடின ஆட்டத்தையும் உங்கள் திண்டாட்டத்தையும் கவனித்தீர்களா? தேவனுடைய கோபம் பக்காப்பூர்மேல் இறங்கினது. பலி செலுத்தப் போனவர்களில் அநேகர் வாந்தி பேதிக்கு இரையானார்கள். சந்தோஷத்தோடு போனவர்களில் அநேகர் துக்கத்துடன் வீட்டுக்குத் திரும்பினார்கள். ஏன்? ஏனென்றால் பக்காபூர் மாரிக்கு ஆடு கோழி மாத்திரம் பலி செலுத்தினது போதாமல், தங்கள் தங்கள் மக்களையும், பெண்டிரையும், புருஷரையும் பலி கொடுத்தார்கள். இப்படிப்பட்ட உத்தமர்களில் அவர்களைப் பின் பற்றிய கிறீஸ்துவர்களும் சிலர் உயிர்விட நேரிட்டது. இந்த கிறீஸ்துவர்களிலுங் கூட கோயில் முகமறியாத பேதைகள் அநேகர். இவர்கள் தங்கள் வாழ்நாளையெல்லாம் பாவ ஜீவியத்தில் செலவழித்து வந்ததினால் மரணசமயத்திலே அவஸ்தைப்பூசுதல் முதலாய்ப் பெற்றுக்கொள்ளும் பாக்கியமில்லாமல் உயிர்விட நேர்ந்தது. ஆ! என்ன பரிதாபம்! இப்படி மரணமடைந்த கிறீஸ்துவர்களுடைய கதியென்னவென்று இதனை வாசிப்போரே யூகித்துப் பாருங்கள். பக்காபூர் பேயை நம்பி மோசம்போகிற கிறீஸ்துவர்களே! எச்சரிக்கை!

அஞ்ஞானக் கிறீஸ்துவர்களாய் நடவாமல் மெஞ்ஞானக் கிறீஸ்துவர்களாய் நடக்கப் பிரயாசப்படுங்கள். உங்கள் வியாதியிலும், கஸ்தி துன்பத்திலும் மெய்யான கடவுளை நம்பி அவருடைய அடைக்கலத்தைத் தேடுங்கள். வியாதி வந்ததோ பசாசுக்குப் பொருத்தனைசெய்யாமல் நமது தாயாகிய திருச்

சபையில் குறிக்கப்பட்டிருக்கும் அர்ச்சியசிஷ்டவர்களை வேண்டிக்கொள்ளுங்கள். கிருபைநிறைந்த சர்வேசுரன் தமது அர்ச்சியசிஷ்டவர்களின் வேண்டுதலைக்கேட்டு உங்கள் விண்ணப்பத்திற்குத் தயவுடன் காதுகொடுப்பார்.

பசாசுக்கு ஊழியம் செய்கிறவன் பசாசுக்கே அடிமையாவானென்று மனதில் வைத்துக்கொள்ளுங்கள். மறுவருஷத்தில் யாதொரு பொருத்தனையும் மேற்படி பேய்க்கு நேர்ந்துகொள்ளாமல் உத்தம கிறீஸ்துவப் பிள்ளைகளாக நடக்கப் பிரயாசப்படுங்கள். அப்பொழுது நாம் நம்பிக்கையோடு கேட்கும் ஒவ்வொரு காரியத்தையும் கருணைநிறைந்த சர்வேசுரன் நமக்குத் தாராளமாய்க் கொடுப்பார்.

(கத்தோலிக்கன்.)

---

## Letter to a Friend.

### சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

பிரிய சிநேகிதா!

யூத ஜாதியார்களுக்குள்ளே முதன்மையாய் இருந்த ஆசாரியர்கள் (குருக்கள்) சேசுநாதர்சுவாமி செய்துவந்த புதுமைகளைக்கண்டு காய்மகாரங்கொண்டு அவரை எப்படியாவது கொன்றுபோடவேண்டுமென்று வழிதேடினார்கள். இந்த மனிதன் செய்கிற அற்புதங்களை மறுப்போமானால் அவரால் குணமடைந்தவர்களும், உயிரடைந்தவர்களுமே நமக்கு விரோதமாகச் சாட்சி சொல்லுவார்கள். இதோ! பாதி ஜனம் இம்மனிதனைப் பின்செல்லுகிறது. இப்படி நடந்துவர விட்டுவிட்டால் நமது குலத்துக்கும், ஜனத்துக்கும் பழுது நேரிடுமே. நாமே இவனைக் கொல்வதும் தகாது. ஆகையால் தேச சட்டத்தின்படி இவனைக் குற்றவாளியாக்கி மரணத் தீர்ப்புக்கு ஆளாக்குவோம் என்று அவர்கள் கூட்டங்கூடி ஆலோசித்தார்கள். யூதர்கள் பலதடவைகளில் சேசுநாதர்சுவாமியைப் பிடிக்க எத்தனித்தபோதிலும், மனிதர் பாவத்துக்காகப் பாடுபட்டுத் தம்முடைய இரத்தத்தைச் சிந்தும்படி தேவ பிதாவினால் குறிக்கப்பட்ட காலம் வருமட்டும் அவர் தம்மைத் தமது எதிராளிகள் கையில் ஒப்படைக்கவில்லை. கடைசியாய், தேவ திருவுளப்படியே குறிக்கப்பட்ட காலம் வந்தவுடன் மனப்பூரணமாய் மனிதருடைய பாவத்துக்குப் பரிகாரம் செய்யவும், அவர்களுக்கு மோட்சவாசலைத் திறக்கவும் பலியாக வேண்டி, தம்மைப் பிரதான ஆசாரியர்களால் அனுப்பப்பட்ட சேவகர்



கள் கையில் ஒப்புவிக்கவே அவர்கள் அவரைப் பிடித்துக் கட்டி அவ்வாசாரியர்களிடத்தில் கொண்டுபோய்விட்டார்கள்.

சேசுநாதர்சுவாமிக்குச் செய்யப்பட்ட நிந்தை அவமானங்கள் எம்மாத்திரமென்று யார் யூகிக்கக்கூடும்? இந்த மாசற்றவர்மேல் பொய்யான பல குற்றங்களைச் சாட்டி எப்படியாவது இவரை மரணாக்கினைக்குத் தீர்ப்புச் செய்யவேண்டுமென்று அதிகாரிகளை அலட்டித் தொந்தரவு செய்தார்கள். பிலாத்தென்னும் அதிகாரி சேசுநாதர் மாசற்றவரென்று கண்டு விடுதலை செய்யப் பார்க்கையில், அவர்கள் அவனைச் சேசார் சக்கரவர்த்திமுன் குற்றஞ்சாட்டுவதாகச் சபதம் கூறிப் பயமுறுத்தினார்கள். கோழை நெஞ்சனான பிலாத்து பயந்து தன் மனச்சாட்சிக்கு மாறாக இவரைச் சிலுவையில் அறைந்து கொல்லக் கற்பித்தான். யூதர் சேசுநாதரை ஓர் கற்றூணோடு சேர்த்துக் கட்டி அவர் சரீரத்திலிருந்து இரத்தம் ஏராளமாக வடிந்து ஒழுகுமட்டும் அடிப்பித்தார்கள். கூரிய முட்களுள்ள ஓர் முடியை அவர் தலையில் வைத்து அடித்து இறக்கினார்கள். பின்பு ஓர் பாரச்சிலுவை மரத்தை அவர் தோள்மேல் சுமத்திப் பெரிய பாதகனைப்போல் கல்வாரிமலைக்கு நடத்திச் சென்றார்கள். அவ்விடத்தில் அவர் சுமந்துபோன சிலுவையிலே அவரை மூன்று ஆணிகளால் அறைந்து அதை உயர்த்தி நட்டுவிட்டார்கள். சேசுநாதர்சுவாமி அதிசயமான அமரிக்கையோடு சாந்தமுள்ள செம்மறிப்புருவைபோல யாதொரு முறைப்பாடுமில்லாமல் தமது வருத்த வேதனையைப் பொறுத்துக்கொண்டு, தம்மை வாதைப்படுத்தினவர்கள் அறியாமல் செய்த குற்றத்தைப் பொறுத்தருளவேண்டுமென்று தேவ பிதாவை மன்றாடினார். மனிதருடைய பாவத்துக்காகப் படாத பாடுபட்டு, நிந்தை அவமானங்களால் பூரிக்கப்பட்டு, தாம் சிவபலியாகவேண்டுமென்பது தேவசித்தமாகையால் சேசுநாதர்சுவாமி இந்த வாதை துன்பங்களையெல்லாம் மனிதருடைய இரட்சணியத்தின் பொருட்டுச் சந்தோஷமாய் அநுபவித்தார். கடைசியாக, தம்மைக் குறித்துத் தீர்க்கதரிசிகள் எழுதிவைத்தவைகளெல்லாம் நிறைவேறினதாகத் திருவுளம்பற்றியபின், தலைசாய்த்து உயிர்விட்டார்.

சேசுநாதர்சுவாமி மரணமடைந்தபோது நடந்த அதிசயங்களைக் கண்டவர்கள் வெகுவாய்ப் பயந்து கலங்கினார்கள். சூரியன் மங்கி உலகமெங்கும் அந்தகாரம் நிரம்ப, பூமி அதிர்ந்து நடுங்க, கற்பாறைகள் பிளந்துபோக, எல்லோருடைய இருதயங்களிலும் பெரும் பயங்கரம் மேலிட்டது. இதனால், அதி

பதியும், அவன் சேவகர்களும் உள்ளபடியே இவர் தேவகுமாரனாய்த்தான் இருக்கவேண்டுமென்று அறிக்கையிட்டார்கள். சேசுநாதர்சுவாமியுடைய சிஷர்கள் தங்கள் குரு யூதர் கையில் அகப்பட்டதுபோலத் தாங்களும் பிடிபடவேண்டிவருமேயென்று அஞ்சி ஓடிவிட்டார்கள். ஆனால் சேசுநாதர்சுவாமியை விசுவசித்து இரகசியத்தில் அவருடைய சிஷராயிருந்த இருவர் அவருடைய திருச் சரீரத்தை சங்கை வணக்கத்தோடு அடக்கம்பண்ணக் கருதி, பிலாத்தென்கிற தேசாதிபதியிடம் உத்தரவு கேட்க, அவரும் மெய்யாகவே மரித்தாரென்று அறிந்துகொண்டபின் அவ்வதிபதி உத்தரவு கொடுத்தான். பிறகு அத்திருச்சரீரத்தைச் சிலுவையினின்று இறக்கிப் பரிமள தைலத்தால் பூசியபிறகு கல்லிலே வெட்டிய ஒரு புதுக் கல்லறையில் அடக்கம் செய்தார்கள்.

பிரிய சிநேகிதா! சேசுநாதர்சுவாமி மரணத்துக்குக் கட்டாயத்தினால் உட்பட்டவராய் அல்ல, ஆனால் மரணத்தின் மேல் அதிகாரம் உள்ளவராய் நரஜென்மத்தின் பாவத்துக்குப் பரிகாரம் செய்யவேண்டித் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்தபடியால் அவரே உன் இரட்சகரென்று அங்கீகரிக்கக்கடவாய்.

இப்படிக்கு,

**உன் பிரிய நண்பன்.**

## Spiritual War. *(Continued.)*

### ஞானயுத்தம்.—(தொடர்ச்சி)

ஒவ்வொருவனையும், முக்கியமாய் வாலிபனை, கெட்ட தோழரோடு சேரும்படிசெய்வது, கெட்டநாடகம், கூத்து இவைகளைப்போய்ப் பார்க்கும்படிசெய்து மனதில் காம அக்கினியை மூட்டுவது, வாயினால் துர்ப்பாஷைகளைப் பேசச்செய்வது, மனதில் அசுசியான எண்ணங்களை நினைக்கச்செய்வது, இவைகள்தான் பசாசினுடைய முக்கிய நோக்கம். மகனே! எச்சரிக்கை! இந்தச்சத்துராதி நல்லவன்போல் பாசாங்குசெய்து மனிதர்களை ஏமாற்றுவான். சரீரமென்னும் விரோதி மகா போக்கிரி. நம்முடைய மனதை எப்பொழுதும் கெட்டதை நாடும்படி செய்வதே இவனுடைய அலுவல். எப்பொழுதும் டம்பமாக உடுத்தி, சொகுசான பதார்த்தங்களைச் சாப்பிட்டு ஆடல்பாடல்களில் காலங்கழிக்கச் செய்வான். தாய் தகப்பன் போகவேண்டாமென்று சொல்லுமிடங்களுக்குப் போகும்படி செய்வான். வெள்ளிக்



கிழமை மாமிசம் சாப்பிடவேண்டாமென்ற திருச்சபைக் கட்டளையை மீறி அன்றையத்தினம் கண்டிப்பாய் அதைச் சாப்பிடச்செய்வான். இவனை நாம் வெல்லாவிடில் பசாசு என்னும் விரோதி எளிதில் நம்மைத் தோற்கடிப்பான். இந்த மூன்று விரோதிகளையும் நான் வெகு எளிதில் வென்றேன். அஃதெப்படியென்றால் இவர்கள் என்மீது பிரயோகித்த குண்டுகளை எளிதில் தடுத்து, சூட்சமாய்ப் பதுங்கியோடித் தப்பித்துக்கொள்ளவேண்டிய வழிகளையும், ஒழுங்குகளையும் அடிக்கடி பட்டாளத்து உத்தியோகஸ்தர் எனக்கு விவரித்துக் காட்டிவந்தார். அவர்தான் நமது குருவானவர். இவர் செய்துவந்த புத்தி பிரசங்கங்களினாலேயும், ஞான உபதேசங்களினாலேயும் என் ஆத்துமம் பலன்கொண்டபடியால் நான் என் ஆத்தும சத்துருக்களை அவ்வளவு எளிதில் ஜெயிக்கும்படியாயிற்று.

மகன் :—ஆனா! இந்த விரோதிகள் மெய்யாகவே வெகு கெட்டவர்கள்தான். நீங்கள் இவர்களை ஜெயிக்க உபயோகித்த ஆயுதங்கள் இன்னவையென்று சொல்லுங்கள்.

தகப்பன் :—மகனே! முதல் முதல் ஜெபம் என்ற வாள்தான் அந்த எதிரிகளைச் சிதறடிக்கும்படி செய்யும் ஆயுதம். இந்த ஜெபத்திலுங்கூட எதிரிகளுக்கு அதிக பயங்கரத்தைக் கொடுக்கும் பட்டயம் ஒன்று உண்டு. அதுதான் பரிசுத்த ஜெபமாலை. மெய்யாகவே இந்தப் பட்டயம் எதிரிகளுக்கு மிகுந்த அச்சத்தையும் திகிலையும் வருவிக்கிறது. இந்தப் பட்டயத்தின் உதவியினால் வெற்றியடையாத ஞான யுத்தம் ஒன்றும் இல்லை. மகனே! இப்படிப்பட்ட எதிரிகளுடன் போராடுகையில் சமயாசமயங்களில் அவர்களுடைய ஆயுதங்களால் எனக்குக் காயம்பட்டது உண்டு. ஆனால் இப்படிப்பட்ட காலங்களில் அரசரால் ஏற்படுத்தப்பட்ட கைதேர்ந்த வைத்தியர்களிடம் செல்வேன். இவர்கள் நமது சத்தியவேத சற்குருக்கள். இவர்களண்டை சென்று என் காயங்கள் யாவையும் ஒன்றும் ஒளியாமல் காண்பிப்பேன். உடனே இவர்கள் ஒவ்வொரு இரணத்தையும் பரிசோதித்துத் தகுந்த மருந்தைக்கொண்டு விரைவில் சௌக்கியப்படுத்தி விடுவார்கள். இந்த மருந்து இன்னதென்று உனக்குத்தெரியுமா? இதுதான் "பாவசங்கீர்த்தனம்" என்னப்படும். தவிர, நாம் இவ்வித யுத்தங்களில் காயம்பட்டுப் பலவீனர்களாய்ப் போனாலும், மறுபடி நமக்கு நல்ல பலன் வரும்படி தகுந்த போஜனம் எவ்வாறு அவசியமோ அவ்வாறே நமது ஆத்துமத்துக்கு

ஞானபோஜனமும், ஔஷதமுமாகிய திவ்வியநற்கருணையை நாம் அருந்தி, இழந்துபோன பலத்தையும் சுகத்தையும் மறுபடி பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திவ்வியநற்கருணையில் நமது திவ்விய இரட்சகருடைய திருச்சரீரமும், இரத்தமும் நமக்கு மெய்யாகவே கொடுக்கப்படுகிறபடியால் நமது ஆத்துமத்துக்குப் புதுப்பலனும் திடமும் உண்டாவதற்குச் சந்தேகமில்லை. மகனே! இவ்வித எத்தனங்களைக்கொண்டுதான் நான் என்னுடைய எதிரிகளோடு மகா பெரிய யுத்தங்களைப் புரிந்து, வெற்றியடைந்து, இப்பொழுது அரசர் எனக்கு தயவோடு அளிக்கப்போகிற பெரிய வெகுமானத்தை, அதாவது, மோட்ச பேரின்ப பாக்கியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முஸ்திப்பாயிருக்கிறேன். ஆதலால் மகனே! நீயும் உன்னுடைய சோதனைகாலங்களில் என்னைப்போல் இம்மூன்று சத்துருக்களோடு போராடி ஜெயம்பெறவேண்டுமானால் மேற்சொன்ன ஔஷதங்களையும் ஆயுதங்களையும் பிரயோகித்துக் கொள்வாயாக. அப்படிச் செய்துவருவாயாகில் என்னைப்போல் வெற்றி பெற்று, ஓர்நாள் நீயும் மோட்சமுடி பெறுவாயென்பது சத்தியம்.

மகன் :—நல்லது, ஆஞா! நான் அப்படியே செய்துவருகிறேன். நீங்கள் எனக்கு விவரித்துக் காட்டிய இந்த புத்தம் உண்மையில் வெகு கொடூரமுள்ளதே. நீங்கள் போராட நேர்ந்த எதிரிகளோடு நானும் போராடி உங்களைப்போல் வெற்றியடையக் கடவுள் அருள்புரிவாராக.

T. D.

---

## Temperance Notes.

### மட்டசனம்.

ஒரு குருவானவர் பத்திராதிபருக்கு எழுதியிருக்கிறதாவது:—

உமது பத்திரிகையில் குடியினால் விளையும் கெடுதியைப் பற்றிச் சமயத்துக்குச் சமயம் எடுத்துககாட்டி அதை விலக்கும்படி கண்டிப்பான போதனை போதித்து வருவது மெத்த நல்லது. ஏனெனில் குடியானது நமது பங்குகளைச் சேர்ந்த கிறீஸ்துவர்களுக்குப் பெரிய பொல்லாப்பு, எல்லாப் பொல்லாப்புகளுக்கும் இதுதான் காரணம் என்று சொல்லலாம்.

விஷபேதி, கொள்ளைநோய், வைசூரி இவை முதலியவற்றைவிடக் குடியானது பெரிய தீமையை விளைவிக்கிறது.

23 MAY 1918

# The St. Anthony's Messenger.

# அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. IV. May 1918. No. 5.

புத்தகம் IV.] FIDES AC ROBUR. [நம்பர் 5.

## MORAL INSTRUCTION.

## நல்லொழுக்க போதனை.

### Obedience.

### கீழ்ப்படிதல்.

நற்குணத்தின் முதல் மகளாகிய தாழ்ச்சியென்னும் சொல்லுக்குக் கீழ்ப்படிதல் என்று அர்த்தமாம். கீழ்ப்படிதல் இல்லாவிட்டால் தாழ்ச்சியும் இராது. தாழ்ச்சி இல்லாவிட்டால் கீழ்ப்படிதலும் இராது. பெரியோர்களுக்குக் கீழ்ப்படிவது நல்லொழுக்கத்திற்கு அத்தியாவசியமான அஸ்திவாரமாம்.

மனிதன் இவ்வுலகத்தில் உள்ளவரையில் எப்போதும் சில பெரியோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறான். ஆகையால், எந்தப் பிராயத்திலும், எந்த அந்தஸ்திலும் கீழ்ப்படிய வேண்டியது மனிதனுக்கு ஒரு அவசரம். ஆனால், விசேஷமாய் வாலிபர்களுக்கு இந்த நற்குணம் மிகுதியாக வேண்டியிருக்கிறது. ஏனெனில், அவர்கள் அநேக காரியங்களில் அநுபோகமில்லாதவர்கள். ஆனதுபற்றி, அவர்களுக்குப் பெரி

யோர்களுடைய புத்திமதியும், பராமரிப்பும், பாதுகாவலும் வேண்டும். வாலிபர்கள் பெரியோர்களுடைய சொற்படி கேட்டு நடப்பார்களானால், அநேக தீமைகள் தங்களுக்கு நேரிடாதபடி விலக்கி நன்மைகளை அடைவார்கள். ஆனால், அவர்கள் பெரியோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடவாமல் போனால், அவர்களுக்கும் பெரியோர்களுக்கும் அடிக்கடி சச்சரவு உண்டாகி, அதனால் தீமை நேரிடும். கீழ்ப்படியாமையால் குடும்பங்களில் எத்தனையோ கலகமும் துன்பமும் உண்டாகின்றன.

பெரியோருடைய புத்தியைக் கேளாத சிறியோர்களில் எத்தனையோபேர் கெட்டுப்போகிறார்கள்! அகங்காரிகளுக்குக் கீழ்ப்படியாமை அதிகாரி. ஒருவன் தனது சிறு பருவத்தில் கீழ்ப்படிந்து நடந்துவந்தால், வளர்ந்து பெரியவனானபிறகு தனது அதிகாரத்தை ஞாயமாய் உபயோகிக்க வேண்டுமென்று அறிந்துகொள்ளுவான். கீழ்ப்படிந்து நடக்காதவனோ அப்படி அறிந்துகொள்ளமாட்டான். பிள்ளைகள் தங்கள் தாய் தகப்பனுக்கும், மாணாக்கர்கள் தங்கள் உபாத்தியாயர்களுக்கும், ஊழியர்கள் தங்கள் எஜமானர்களுக்கும், குடிகள் தங்கள் அரசனுக்கும், கீழ்ப்படிந்து நடக்கவேண்டிய முறைகளை ஒவ்வொன்றாய் யோசிப்போம்.

எந்த அந்தஸ்திலிருந்தபோதிலும், உண்மையான கீழ்ப்படிதல் என்பது அடிமைத்தனமல்ல. பயத்தினாலாவது, கட்டாயத்தினாலாவது ஏற்படும் கீழ்ப்படிதலை அடிமையின் கீழ்ப்படிதல் என்னலாம். மெய்யான கீழ்ப்படிதலோ, தன் மனச்சாட்சி கடமையென்று கூறுகிறபடி ஒருவன் காட்டும் பணிதலாம்.

ஆகையால், நீ எப்போதும் உன்னிலும் பெரியோரிடத்தில் நன்மனதோடு கீழ்ப்படிந்து நடந்துகொள். பெரியோர்கள் உன் துர்க்குணத்தை அறிந்து கண்டிக்கும்போதும், தண்டிக்கும்போதும், உனக்கு ஒரு வேலை கொடுக்கும்போதும், அவர்களை எதிர்த்துத் திட்டாமல், அவர்கள்மட்டில் நன்றியறிதலுள்ளவனாய் நடக்கக்கடவாய். "அடங்காத பாம்புக்கு இராஜா மூங்கில் தடி" என்றும், "துஷ்ட பிள்ளைக்கு ஊரார் புத்தி" என்றும் வழங்குகிற வசனங்களை நினைத்துப் பார்ப்பாயாக.

**கதை:**—ஏழாம் எட்வர்ட் சக்கரவர்த்தி சிறுவராயிருந்த காலத்தில் ஒரு நாள் தாம் படிக்கவேண்டிய பாடத்தைப் படிக்காமல் அரண்மனை ஜன்னலண்டை நின்று வழிப்போக்கர்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவருடைய உபாத்தியாயர் அவ



ரைப்பார்த்துப் பாடத்தைப் படிக்கச் சொல்ல, அவர் "நான் படிக்கமாட்டேன்" என்று மறுத்துப்பேசினார். அப்போது உபாத்தியாயர், "நீர் அப்படிச் செய்வீரானால் நான் உம்மைத் தண்டித்து ஒரு மூலையில் நிறுத்திவைப்பேன்" என்று சொல்லிப் பயமுறுத்தினார். அவர், "நான் இராஜ வம்சத்தில் பிறந்தவன். நான் படிக்கமாட்டேன். என் இஷ்டம்போலத் தான் நான் செய்வேன்" என்று சொல்லி, ஜன்னலின் ஒரு கண்ணாடியை உடைத்தார். உபாத்தியாயர் மறுபடியும் புத்தி சொல்ல, அவர் மற்றொரு கண்ணாடியை உடைத்தார். உடனே உபாத்தியாயர் ஆல்பர்ட்டென்னும் பிரபுவாகிய அவருடைய தந்தையிடத்தில்போய் நடந்த சமாச்சாரத்தைத் தெரிவித்தார். தகப்பனார் வந்து தன் பிள்ளையை நோக்கிக் கோபித்து ஒரு மூலையில் நிற்கவைத்து, "அடியாத மாடு படியாது" என்றும், "முறுக்கி வளர்க்காத மீசையும், அடித்து வளர்க்காத பிள்ளையும் சரிப்படா" என்றும் சொல்லி, பிரம்பால் அடித்து, உபாத்தியாயர் திரும்பவும் உத்தரவு கொடுக்கும் வரையில் படித்துக்கொண்டிருக்கச் சொல்லிக் கண்டித்தார். அதுமுதல் எட்வர்ட் சிறுவர் கீழ்ப்படிதலோடு நடந்து, நற்குணமுள்ள பெரிய சக்கரவர்த்தியானார்.

அப்படியே நமது நாட்டில் உள்ள குழந்தைகளுக்குத் தாய்தந்தையர் உண்மையான கீழ்ப்படிதலைக் கற்றுக்கொடுத்து அவர்களை நல்ல நகரவாசிகளாகச் செய்வார்களாயின், சுய ஆட்சி அடையத்தக்க பெருமை வாய்ந்தவர்களாவார்கள் என்பதில் யாதொரு தடையுமில்லை.

(சத்திய நேசன்.)

---

## Duties of Parents towards their Children.

### பிள்ளைகள்மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.

(தொடர்ச்சி).

பாவத்தை வெறுத்துத்தள்ளவாவது அவர்களைப் பழக்குகிறீர்களா? இல்லை. பிள்ளைகளுடைய சௌக்கியமோ, படிப்போ, வேலையோ, கலியாணமோ இவைகளைப்பற்றிப் பேசுகிறீர்கள். ஆனால் பாவத்தைத் தள்ளவாவது புண்ணியத்தைச் செய்யவாவது அவர்களிடத்தில் ஒரு வார்த்தையும் பேசமாட்டீர்கள். ஏன்? பிள்ளைகளுக்கு இவ்விஷயத்தில் புத்தி சொல்வது தாய் தகப்பனுக்கு ஆகாதோ? தாய் தகப்பன் என்கிற கௌரவத்துக்குக் குறைவு வந்துவிடுமோ?

அல்லது பிள்ளைகளிடத்தில் பேச வெட்கமா? கூச்சமா? பிள்ளைகளுடைய குணத்தையும் நடத்தையையும் உங்களைவிடப் பரீட்சித்துப் பார்த்தவர் யார்? இனிமேலாவது இந்தத் தப்பான எண்ணங்களை விட்டுவிட்டு, உங்கள் பிள்ளைகளுடைய தப்பு தவறுதல்களைக் கவனித்து அவர்களுடைய நாட்டங்களை அறிந்து, தக்க புத்திமதிகளைச் சொல்வது உங்கள் கடமை.

தாய் தந்தையர்கள் கூச்ச நாச்சத்தினால் பேசாமல் இருப்பதுமாத்திரமல்ல. அவர்களே பரிதாபம்! பிள்ளைகளுக்கு இடறலாய் இருக்கிறார்கள். சிலர் பிள்ளைகளுக்குச் சிறு போதே கெட்ட உதாசன வார்த்தைகளைக் கற்றுக்கொடுத்து அந்த வார்த்தைகளை அவர்கள் பேசுவதைக் கேட்டு ஆநந்தம் கொள்வார்கள்.

சில தாய் தந்தையர்கள் தங்களுக்குப் பீர் சாராயம் வேண்டுமானால் கடைக்குப் பிள்ளைகளை அனுப்பி வாங்கிவரச் சொல்வார்கள். அப்படியே அவர்கள் வாங்கிவந்த பிறகு நன்றியறிதலாக அப்பிள்ளைகளுக்கும் குடிக்கக் கொடுக்கத் தவறமாட்டார்கள்.

கற்புக்கு விரோதமான பேச்சுகளையும், தமாஷ்களையும் சிலர் பிள்ளைகளைப் பக்கத்தில் வைத்துக்கொண்டுதான் உல்லாசமாகப் பேசுவார்கள். மகன் பள்ளிக்கூடம் போய் ஞானோபதேசம் படித்ததினால் ஞாயிற்றுக்கிழமையில் பூசை காணக் கோயிலுக்குப் புறப்படுவதைக் கண்டால் தகப்பன் கோபித்துக்கொண்டு, “பயலே! ஏது பத்தி ஜாஸ்தியாகி விட்டது. வீட்டிலிருந்து உன் தாயாருக்கு உதவி செய். குழந்தையைப் பார்த்துக்கொள்” என்று சொல்லி மிரட்டி விடுகிறான்.

மகன் புது நன்மை வாங்கியபின் வெள்ளிக்கிழமையில் மாம்சம் சாப்பிடமாட்டேனென்று தைரியமாகப் பேசுவதைத் தாய் பார்த்து, “அடி அம்மா! இந்தப் பிள்ளைக்கு மாத்திரம் என்ன இவ்வளவு படாய்! உன் பத்தியை அறியமாட்டார்களா? இன்றைக்குக் கறி சாப்பிட்டால் சாப்பிடு. இல்லாவிட்டால் பட்டினியாய் இரு. பார்க்கலாம்” என்று சபதம் போடுகிறாள்.

பிள்ளைகள் தங்கள் வீட்டில் தங்களைக் கேட்காமல் ஏதாவது ஒரு பண்டத்தை யெடுத்துத் தின்றுவிட்டால், தாயும் தகப்பனும் தடியெடுத்து அவர்களைப் புடைப்பார்கள். ஆனால் அயல் வீட்டார், அண்டை வீட்டாருடைய காசு, பணம்,



நகை நட்டுகளை எடுத்து வந்தார்களானால் பத்திரமாக அவைகளை வைத்துக்கொள்வார்கள். இதைப்பற்றி வெளியே பேசக்கூடாதென்று சொல்லிப் பிள்ளைகளுக்கு எச்சரிக்கை செய்வார்கள்.

தாய் தந்தையர்களே! மாசற்ற சம்மனசுகளுக்கு ஒப்பான உங்கள் சிறு பிள்ளைகளுக்கு நீங்கள் கொடுக்கும் படிப்பினை இதுதானோ? இதற்காகத்தானோ சர்வேசுரன் அவர்களை உங்களிடம் ஒப்பித்திருக்கிறார்? இவைகளையெல்லாம் யோசித்துப்பார்த்து இனிமேலாவது எப்போதும் பாவத்தை விலக்கவும், புண்ணியத்தைச் செய்யவும், நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்துவருவீர்களாக.

(யதார்த்தவாதி.)

## Church of the Sacred Heart at Coimbatore.

## கோயமுத்தூரில் ஸ்தாபிக்கப்படும் திருஇருதய கோவில்.

தற்காலம் நடைபெறும் ஐரோப்பிய மகா யுத்தம் முடிந்தபிறகு கோயமுத்தூரைச் சேர்ந்த உப்பிலியபாளையத்தில் சிறந்த ஓர் திரு இருதய கோவில் கட்டும்படி சரியாய் வந்திக்கத்தக்க கோயமுத்தூர் மேற்றிராணியார் தீர்மானித்திருப்பதைப்பற்றி ஷை மேற்றிராசனத்தைச் சேர்ந்த சகல கிறீஸ்தவர்களும் சந்தோஷமடைவார்கள்.

நமது மேற்றிராணியாருடைய கருத்துப்பிரகாரம் அந்தச் சிறந்த திரு இருதய கோவிலைக் கட்டி முடிப்பதற்குக் குறைந்த பட்சம் (60,000) அறுபதினாயிரம் ரூபாய் வேண்டியிருக்குமென்று நமக்குத் தெரியவருகிறது.

திரு இருதயத்தின்பேரில் பக்தியுள்ளவர்கள் எல்லோரும் தங்களால் ஆனமட்டும் இந்த நற்கருத்து நிறைவேறும்படி திரவிய சகாயம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். ஆகையால் தங்கள் வேண்டுதல்கள் நிறைவேறியதற்காக நன்றியறிந்த தோத்திரக் காணிக்கை முதலியவைகளைச் செலுத்துகிறவர்கள் அவைகளை இந்தத் தர்ம காரியத்துக்குக் கொடுத்து உதவினால் பெரிய புண்ணியமாகும் என்பதற்குச் சந்தேகமில்லை.

அப்படிப்பட்ட காணிக்கை முதலிய பொருளுதவி செய்யப் பிரியமுள்ளவர்கள் இப்பத்திரிகையின் பத்திராதிபருக்காவது, கோயமுத்தூர், கத்தோலிக் மேற்றிராசனத்தின் புரொக்கியூரேட்டராகிய பொக்கிஷதாருக்காவது அனுப்பி வைக்கலாம்.

ஒரு ரூபாய் அல்லது அதற்கு மேல் கொடுக்கப்படும் தொகையையும், கொடுப்பவர்களுடைய பெயர்களையும், இப்பத்திரிகையில் பிரசித்தப்படுத்துவோம்.

நமது நேச மேற்றிராணியாருடைய மேற்சொல்லிய இச்சுகிர்த கருத்து அதிசீக்கிரத்தில் நிறைவேறும்படி இரக்கம் நிறைந்த திரு இருதய ஆண்டவராகிய சேசுநாதசுவாமி கிருபை செய்வாராக. (பத்திராதிபர்.)

---

## Letter to a Friend.

### சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

பிரிய சிநேகிதா !

சேசுநாதர்சுவாமி உயிரோடிருந்த நாட்களில் தாம் மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தெழும்புவோமென்று சொல்லியிருந்ததை யூதர்கள் நினைவுகூர்ந்து, ஒருவேளை இவருடைய சீஷர்கள் இவர் சரீரத்தையெடுத்துக்கொண்டு போய் மறைத்துவிட்டு உயிர்த்தெழுந்தாரென்று கட்டுக்கதை சொல்லி ஜனங்களை ஏய்க்கக்கூடும்; ஆகையால் இவருடைய சரீரத்தை யாரும் எடுத்துக்கொண்டு போகாதபடிக்குக் காவல் செய்வதே புத்தியென்று யோசித்து, கல்லறைவாயிலுக்கு இராஜ முத்திரையிட்டு ஆயுதபாணிகளான சேவகர் கூட்டமொன்றை இராப்பகல் ஓயாமல் கல்லறையண்டையில் காவலாக விழித்திருக்கும்படி செய்தார்கள்.

ஆனால் மனிதர் பாவங்களுக்காகத் தமது உயிரைத்தந்த கர்த்தர் தாம் மரித்த மூன்றாம் நாள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் மகா பராக்கிரம வல்லமையோடு தமது உயிரை மீளவும் கைப்பற்றிக் கல்லறையினின்று உயிர்க்கலானார். தாம் பலமுறை வசனித்திருந்த தீர்க்கதரிசன வாக்கியத்தை இப்படி நிறைவேற்றினதுமல்லாமல், தாம் தேவனும் மனிதனும் ஒன்றான மனுஷாவதாரக் கடவுளேயென்ற சத்தியத்தைக் குறித்து எவரும் சந்தேகம் கொள்ளாவண்ணம் பிரத்தியட்ச அத்தாட்சியும் காட்டியருளினார். நடந்த அதிசயத்தைக் கண்ணுற்ற சேவகர்கள் பயந்து திடுக்கிட்டு ஓடிப்போய் யூத ஆசாரியர் பிரதானிகளிடம் இச்சம்பவத்தைச்சொல்ல, அவர்களோ தங்கள் ஞானக்குருட்டாட்டத்தை அப்போதாகிலும் விட்டுவிடாமல் சேவகரை நோக்கி, 'நாங்கள் நித்திரையாய் இருக்கையில் சேசுநாதருடைய சீஷர்கள் வந்து அவருடைய



சரீரத்தைத் திருடிக்கொண்டு போய்விட்டார்கள்' என்று ஊரிலே கதை பரப்பிவிடுங்களென்று கற்பித்து, அதற்குக் கூலியும் கொடுத்து அனுப்பிவிட்டார்கள். ஆனால் இப்படிப்பட்ட கதையை யூதபிரதானிகளைப்போலொத்த ஞானக்குருடரோயன்றி வேறொருவரும் நம்பக்கூடாமலிருந்தது. ஏனெனில், யூதர்களுக்குப் பயந்து ஓடி ஒளிந்துகொண்டிருந்த சீஷர்கள் ஆயுதபாணிகளாய்க் கல்லறையைக் காவல் செய்துகொண்டிருந்த சேவகர்களுக்கு அஞ்சாமல் போய் அச்சரீரத்தை எடுத்துக்கொண்டு போவது எப்படி முடியும்? அச்சரீரத்தையெடுப்பதற்கு முன் கல்லறை மூடப்பட்டிருந்த கல்லை வெளியில் உருட்டித்தள்ளவேண்டுமே. அவர்கள் அப்படிச் செய்திருப்பார்களேயானால் அதை உருட்டிய சத்தத்தைக்கேட்டுச் சேவகர்களுள் ஒருவனாகிலும் விழித்துக்கொள்ளக்கூடாமல் போனதென்ன? நித்திரை செய்துகொண்டிருந்தால், அச்சமயத்தில் நடந்ததை அவர்கள் கண்டதெப்படி? கண்டால், ஏன் அவர்கள் சீஷர்களைப் பிடிக்கவில்லை? சீஷர்கள் அச்சரீரத்தைத் திருட்டுத்தனமாய் எடுத்துப்போனார்களென்று வைத்துக்கொண்டாலும், சேசுநாதர் உயிர்த்தாரென்று பொய் சொல்லி அதனால் இராஜாங்கத்தாராலும் பிறராலும உபத்திரவப்படுவதால் அவர்கள் கண்டடையக்கூடிய லாபமென்ன?

யூத குருக்கள் நடந்த அதிசய சம்பவத்தைக் கண்டும் ஞானக்கண்களைத் திறவாமலிருக்க, உயிர்த்த கர்த்தர் தமது கல்லறையண்டைக்குப் போய்க்கொண்டிருந்த பத்தியுள்ள சில ஸ்திரீகளுக்கு முதல் முதல் தரிசனையானார். இவ்விசேஷத்தை இவர்கள் சீஷருக்கு அறிவிக்க, அவர்களோ அதை நம்பவில்லை. அதனால் சேசுநாதர்சுவாமி அவர்களுக்கும் பலமுறையும் பல இடத்திலும் தரிசனையானதுமல்லாமல், அவர்களோடு பந்தியில் அமரவும் திருவுளமானார். பின்னும் ஒருமுறை ஐந்நூறுக்கு அதிகமான பேர்கள் கூடியிருக்கையில் அவர்களெல்லோருக்கும் காணப்பட்டார்.

சேசுநாதர்சுவாமி உயிர்த்த விசேஷம் இவ்வாறு விரைவாய் ஊரெங்கும் பரவினபோதிலும், உலக சுக செல்வங்களின்பேரில் மிதமிஞ்சிய பற்றுதலினால் மயங்கியிருந்த பலர் அதை விசுவசியாமல் இருந்தார்கள். உயிர்த்த கர்த்தர் நாற்பது நாள் வரையில் தமது சீஷர்களுக்கு இடையிடையே காணப்பட்டு, அவர்களுக்குத் தமது திருவேதத்தின் சத்தியங்களை விவரித்துக்காட்டி, அவர்களுள் ஒருவராகிய இராயப்

பனைத் தமது விசுவாசிகளுடைய கூட்டமாகிய திருச்சபைக்குத் தலைவராக ஏற்படுத்தினார். நாற்பதாம் நாள் தமது சீஷர்களோடும், திரளான ஜனங்களோடும் ஒலிவேத்து என்னும் மலைமேல் ஏறிப்போய், சீஷர்களை நோக்கி, "இதோ! நாம் உலக முடிவுபரியந்தம் உங்களோடு எந்நாளும் இருப்போம். நீங்கள் உலக எத்திசையிலும் போய் மனிதருடைய ஈடேற்றத்திற்காக நாம் உண்டுபண்ணின வழியைப் பிரசங்கித்து, சகல மனிதரையும் சீஷராக்கி, அவர்களுக்குப் பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துடையவும் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுங்கள்" என்று சொல்லி, அனைவரையும் ஆசீர்வதித்துப் பரலோகத்துக்கு ஆரோகணமானார்.

பிரிய சிநேகிதா! இந்த இருபது நூற்றாண்டுகளாகத் திருச்சபைக்கு நேரிட்ட துன்பங்களிலும், வேத கலாபனைகளிலும் மங்காமல் ஜெகஜோதியாய் அது பிரகாசிக்க, அதுவே சத்திய வேதமென்று பலர் உணர்ந்து அதில் சேர்ந்திருப்பது போல் நீயும் சத்திய வேதத்தை அடைந்தால் உனக்கும் இரட்சணியம் கிடைக்கும்.

இப்படிக்கு.

உன் பிரிய நண்பன்.

---

## Correct things in the Church.

## கோவிலில் அநுசரிக்கவேண்டிய சில ஒழுங்குகள்.

1. கோவிலில் அநேக குழந்தைகள் தங்கள் இஷ்டம் போல் ஓடி ஆடித்திரிகிறது உண்டு. அநேக கைக்குழந்தைகள் அழுது சத்தம் செய்வது உண்டு. 'அழுத பிள்ளை உரம் பெறும்' என்று நினைத்து, குழந்தைகள் அழுவதைக் கேட்பது தாய்மாருக்கு இன்பமாய் இருக்கக்கூடும். ஆனால் குழந்தைகளை அமர்த்தாமல், அழுவதைப் பார்த்துக்கொண்டிருப்பது தாய்க்கு அழகுமல்ல, ஒழுங்குமல்ல. பூசை நேரத்தில் பத்து, இருபது குழந்தைகள் அழுது சத்தம் செய்தால், அதினால் அநேகருடைய பக்தி, ஜெபம் கெட்டுப்போவதுமல்லாமல், பாடலுக்கும் இடைஞ்சல் உண்டாகிறது. பிரசங்க



நேரத்தில் அப்படிச் சம்பவித்தால் அதினால் பிரசங்கம் செய்பவருக்கும் அதைக் கேட்பவர்களுக்கும் எவ்வளவோ சங்கடம் உண்டாகிறது. இதினால் பெண்பிள்ளைகள் தங்கள் குழந்தைகளைக் கோவிலுக்குக் கொண்டுவரவேண்டாமென்று நாம் சொல்வதில்லை. ஏனெனில் அநேகர் அவ்வாறு கொண்டு வராமல் வேறு விதமாய் ஏற்பாடு செய்ய முடியாது. ஆதலால் குழந்தைகளைக் கூடியமட்டும் சரியாய் அமர்த்தி அழுது சத்தம் செய்யாதபடி பார்த்துக்கொள்ளவேண்டியது. மாசில்லாத அந்தக் குழந்தைகள் அழுது சத்தம் செய்யும்போது கொஞ்ச நேரமாகிலும் வெளியே கொண்டு போகவேண்டும். ஓடியாடித் திரியக்கூடிய குழந்தைகளைப் பெற்றோர்கள் தங்கள் அருகிலேயே வைத்துக்கொண்டு மரியாதையோடிருக்கும்படி கவனிக்கவேண்டியது.

2. பெரியோர்களில் முதலாய்ச் சிலர் மேரை மரியாதையோடு இருக்கிறதில்லை. பூசை நேரத்தில் தேவ நற்கருணை எழுந்தருளியிருக்கும்போது சிலர் சுகமாய் உட்கார்ந்திருக்கிறார்கள். அது ஒழுங்கல்ல. நமது திவ்விய இராஜாவாகிய சேசுநாதர்சுவாமி தமது சிம்மாசனமாகிய பீடத்தின்பேரில் வீற்றிருக்கும் சமயத்தில் பக்தியாக எல்லோரும் முழங்காலில் இருப்பது ஒழுங்கு.

3. சிலர் தங்கள் நாய்களைக் கோவிலுக்குக் கொண்டு வருவது உண்டு. பூசை நேரத்தில் நாய்கள் வீட்டுக்குக் காவலாய் இருக்க வேண்டுமே யொழிய மற்றப்படி அவைகளைத் தேவாலயத்துக்குக் கொண்டுவந்து திரிய விடுவது தகாது.

4. நடுப்பூசை நேரத்தில் சிலர் தேவநற்கருணை எழுந்தேற்றம் ஆகையில் மிளகு கடலை வீசுகிறார்கள். அது அஞ்ஞான வழக்கமாதலால் அதைச் செய்யக்கூடாது. அந்நேரத்தில் தேவ ஆராதனை செய்து ஜெபங்களை ஒப்புக்கொடுக்க வேண்டுமே யொழிய தங்களுக்கு முன்னால் இருக்கும் ஜனங்கள்மேல் மிளகு கடலை வீசலாகாது.

சேசுநாதர்சுவாமி ஓரே விசை மாத்திரம் கோபித்ததாகச் சுவிசேஷத்தில் காண்கிறோம். அது எந்தச் சமயத்திலென்றால், ஒருநாள் தேவாலயத்தில் ஜனங்கள் ஒழுங்கீனமாக இருந்ததை அவர் கண்டு கோபித்துக்கொண்டு, ஒரு சவுக்கை எடுத்து, "என் வீடு ஜெபத்தின் வீடு" என்று சொல்லி அவர்களைத் துரத்திவிட்டார்.

---

## Temperance Story.

### மட்டசனத்தைப்பற்றிய கதை.

ஒரு சிறிய கிராமத்தின் வழியோரத்தில் கள்ளுக்கடை ஒன்று இருந்தது. அந்தக் கடையருகில் அப்போதுதான் வந்து இறங்கிய புதிய கள் நிறைந்த குடமொன்று வெளியே பாதை ஓரத்தில் ஒரு நாள் வைக்கப்பட்டிருந்தது. கடைக்காரன் உள்ளே இருக்கும் சமயத்தில் அவ்வழியாய் வந்த ஒரு கழுதை அந்தக் கள்ளுக்குடத்தைக் கண்டதும் அதனருகே சென்று கள்ளை முகர்ந்து ருசி பார்த்து பெரும் சத்தமிட்டுக் கத்திக்கொண்டு நாற்கால் பாய்ச்சலினால் ஓடிப்போய்விட்டது. பிறகு ஓர் பன்றி வந்து ஷை கள்ளுக் குடத்தை முகர்ந்து ருசி பார்த்து உடனே உரத்த சத்தமாய் உறுமி வாலை முறுக்கிக் கொண்டு ஓட்டம் பிடித்தது. அதற்குப்பிறகு ஒரு நாய் அவ்வழியாக வந்தது. அந்த நாயும் அவ்வாறே அந்தக் கள்ளுக் குடத்தை முகர்ந்து ருசி பார்த்தவுடனே தும்மி நாய்கள் செய்கிற வழக்கம்போல் குடத்தின்மேல் காலைத்தூக்கி அக்குடத்துக்குச் செய்யவேண்டிய மரியாதை செய்துவிட்டுப்போயிற்று. கடைசியாக ஒரு மனிதன் அவ்வழியாக வந்தான். அவன் அக்குடத்தைப் பார்த்ததும் அதிலிருப்பது இன்னதென்று அறிந்துகொண்டு அக்கடைக்காரனைக் கூப்பிட்டு தான் சம்பாதித்திருந்த கூலியைக் கொடுத்து அதே குடத்திலிருந்த கள்ளை வாங்கிக்குடிக்க ஆரம்பித்தான். அதைக் குடிக்கக் குடிக்க அவனுக்கு அது ருசிகரமாயிருந்தது. ஆனால் கொஞ்ச நேரத்தில் அவன் புத்தி மயங்கி, தலை கிறு கிறு என்று சுற்ற, வெறிகொண்டவனைப்போல் தன் வீட்டுக்குத் தட்டித் தடுமாறிக்கொண்டு போய்ச்சேர்ந்தான்

கள்ளானாலும் சரி, பீர் சாராயமானாலும் சரி, கழுதை, பன்றி, நாய், இவைகளுக்கு வெறுப்பாக இருக்கும். இப்படிப் பட்ட மதுபானம் மனிதனுக்கு பிரியமாய் இருப்பது எவ்வளவோ மானக்கேடு! லாகிரி வஸ்துக்களை உபயோகித்துவரும் மனிதன், தன் புத்தி, சௌக்கியம், மகிமை இவைகளைக் கெடுத்துக்கொள்ளுகிறான். ஐயோ! இது பரிதாபம்! பரிதாபம்!!

(Olim.)

---



## Here and There.

### நானா சங்கதிகள்.

**The War.** ருஷியர் ஜெர்மானியரோடு சமாதானம் செய்துகொண்டதால் ருஷியருக்கு விரோதமாய் வைக்கப்பட்டிருந்த ஜெர்மன் சேனைகள் அனைத்தையும் ஜெர்மானியர் மேற்கெல்லையாகிய பிரான்ஸ் தேசத்தின் யுத்த முனைக்குக் கொண்டு வந்து நேசக் கட்சியாரோடு அகோர யுத்தம் செய்து தங்கள் சேனையில் அநேகரை உயிர்ப்பலி கொடுத்து, கொஞ்சம் முன்னேறி வந்ததினால் நேசக் கட்சியார் சற்று பின்னடையும்படி நேரிட்டது.

இந்த யுத்த சமயத்தில் பிரிட்டிஷ்காரர், பிரெஞ்சுக்காரர், அமெரிக்கர் அடங்கிய எல்லா சேனைகளுக்கும் பொதுவாக (Foch) போஷ் என்பவரைச் சேனாதிபதியாக நியமித்திருக்கிறார்கள். இவர் ஓர் உத்தம பிரெஞ்சு கத்தோலிக்கர்.

**Anaimalays.** ஆனை மலையில் அநேக (Tea) தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்யும் கிறீஸ்துவ கூலியாட்களுக்காக வால்பாறை என்னும் ஊரில் சங். திக்னுஸ் (Rev. Fr. Tignus) சுவாமியார் ஒரு கோவில் கட்டுகிறார். இது அம்மலைமீதுள்ள கிறீஸ்துவவாசிகளுக்கு மெத்தவும் உபகாரமாயிருக்கும்.

**Coonoor.** சென்ற் மேரீஸ் பாடசாலையில் வாசிக்கும் பெண்பிள்ளைகளுக்கு இங்கிலீஷ் பாஷை கற்றுக்கொடுக்கப்படுகிறது. (Mrs. Barboza) கனம் பார்போஸா துரைசானியவர்கள் இங்கிலீஷ் பாடங்களை நடத்திவருகிறார்கள்.

**Coonoor Municipality.** குன்னூர் முனிசிப்பாலிட்டியாருடைய உத்தரவின்படி கெரோசின் எண்ணெய் டின் அதாவது நாலு காலன் 3 ரூபாய் வீதமாகவும், புட்டி ஒன்று 2 அணா 6 பை. வீதமாகவும், சானா மானா (S. M. & Co.) ஷாப்பில் விற்கப்படுகிறது. இரண்டு புட்டி கெரோசின் எண்ணெய்க்குமேல் அதிகமாக ஒரே தடவையில் வேண்டியவர்கள் முனிசிப்பாலிட்டியாரால் தயவாய்க் கொடுக்கப்படும் பாஸைக் கொண்டுபோய்க் காண்பித்து வாங்கிக்கொள்ளவேண்டியது. முனிசிப்பாலிட்டியார் இந்த ஏற்பாடு செய்தது ஜனங்களுக்குப் பெரிய சகாயமாக இருக்கிறது.

**Appeal to India.** இங்கிலாந்து தேசத்தின் பிரதான மந்திரி இந்தியாவின் இராஜபிரதிநிதிக்கு இந்த யுத்த

சமயத்தில் இந்தியர் செய்த பண உதவி, ஜன உதவிகளுக்காக நன்றியறிந்திருப்பதாகவும், உலகத்தின் சத்துராதிகளை ஜெயிக்கும்பொருட்டு இன்னும் அதிகமான உதவிகளைச் செய்து வரும்படி கேட்டுக்கொள்வதாகவும் அறிவித்திருக்கிறார்.

**Transfers.** சங். ரிவியெர் சுவாமியார் குருமடத்துக்கும், சங். பெரியர் சுவாமியார் புரோக்கியுரேட்டராகவும், சங். அருள்நாதர் சுவாமியார் கொடிவெரியிலிருந்து கோயமுத்தூர் போர்டிங்கிக்கும், சங். மார்சியல் சுவாமியார் கொடிவெரிக்கும் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

---

## A Hymn to the Mother of God.

### தேவமாதாவைக் குறித்துப் பாடல்.

1. அமல னருளினால்—இந்த—அவனி மீதிலே  
அமலியாக உற்பவித்த எங்கள் அரசியே.
2. தூய கன்னியாய்—என்றும்—துலங்கு மாமரி  
தூய தேவ சுதனை யீன்ற உனக்குத் தோத்திரம்.
3. சோதி யாடையும்—மின்னும்—சுடருடுமுடியும்  
பா்த மீது மதியும் புனைந்த பரம ராக்கினி.
4. வானம் பூமியும்—மிக—வணங்கி வாழ்த்திட  
ஞான பரனுக் கன்னை யான நல்ல நாயகி.
5. எண்ணில் புதுமைகள்—நீ—இரக்கம் செய்ததால்  
மண்ணில் நடக்கக் கண்ட நாங்கள் உன்னை அண்டி [னோம்.
6. பாவம் நீங்கவும்—பரி—சுத்தம் ஓங்கவும்  
தேவ பரனை ஆவலோடு வேண்டல் செய்குவாய்.
7. பூமி மீதிலே—பெரும்—போர்கள் நடப்பதை  
சாமி நீக்கி யெம்மைக் காக்கத் தயவாய் வேண்டுவாய்.
8. பஞ்சம் தீரவும்—பல—பிணிகள் மாறவும்  
தஞ்சமான தற்பரன்பால் கேட்க வேண்டினோம்.
9. சிலுவை மீதிலே—நம—துலக ரட்சகர்  
மலர்ந்த வாக்கா லெமக்கு மன்னை யான மாமரி.
10. அன்பு நிறைந்திடும்—எம—தமல தாய்மரி  
துன்ப நீக்கி உலகி லெமக்குத் துணைநின்றுதரி.

(பக்தன்.)

The St. Anthony's Messenger.

அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. IV. June 1918. No. 6.

புத்தகம் IV.] FIDES AC ROBUR. [நம்பர் 6.

14 JUN 1918

## MORAL INSTRUCTION.

## நல்லொழுக்க போதனை.

### Filial Piety.

### பிதிர் பக்தி.

பிள்ளைகள் தங்கள் தாய்தந்தையரிடத்து நடந்துகொள்ள வேண்டிய கடமைகளெல்லாம், 'பிதிர் பக்தி' என்னும் ஒரு சொற்றொடரில் அடங்கும். இந்தப் பிதிர் பக்தி அல்லது பெற்றவர்களிடத்துக் காட்டும் அன்பு நான்கு வகைப்படும். அவை, நேசம், கீழ்ப்படிதல், மரியாதை, உதவி என்னும் நான்குமாம்.

பகுத்தறிவில்லாத மிருகங்களும் தம்மைப்பெற்ற தாய் மிருகத்தினிடத்துப் பக்ஷமாயிருக்கக் காண்கிறோம். அதனால் பகுத்தறிவுள்ள மனிதர்கள் இந்த சுபாவ குணத்தை எப்போதும் அநுசரிக்கக்கடவார்கள்.

1. நேசம் :—தாய் தகப்பன்மார் தங்களுடைய குழந்தைகளை வளர்க்கவும், காப்பாற்றவும், படிப்பிக்கவும், நல்லொழுக்கங்களைக் கற்பிக்கவும், அவர்களுக்கு ஜீவனமார்க்கம்

வருகிறார்கள். அவற்றையெல்லாங் கவனித்துப் பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களை நேசித்து அவர்களுக்குக் கஸ்தி, துன்பம், கோபம், வருத்தம் முதலியவற்றை வருவிக்காமலிருக்க வேண்டும். பெற்றோர்கள் எவ்வளவு ஏழைகளாயிருந்தாலும், அவர்களை ஒருபோதும் வெறுக்காமலும், அவர்களுக்கு வருத்தத்தை உண்டுபண்ணாமலும் ஓரேவிதமாய் அவர்களைப் பிள்ளைகள் நேசிக்கவேண்டும்.

2. கீழ்ப்படிதல்:—நல்லொழுக்கத்திற்கும் குடும்பத்தின் நன்மைக்கும் சம்பந்தமான காரியங்களில் பிள்ளைகள் தங்கள் பெற்றோருடைய அதிகாரத்துக்கு அடங்கி நடக்கவேண்டும். தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் பிள்ளைகள் இவ்வுலகத்தில் செல்வம், பாக்கியம், சுகம் இவைகளையடைந்து நெடுநாள் வாழ்வார்கள். ஆகையால், பிள்ளைகளே! உங்கள் தாய் தகப்பனுடைய நியாயமான கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடவுங்கள். அவர்கள் உங்களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினாலும், படிப்பு முடிந்தபின் வேலைக்கு அனுப்பினாலும், அல்லது நல்ல உத்தியோகத்துக்கு அனுப்பினாலும், முறுமுறுக்காமல், சுறுசுறுப்புடன் அவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள்.

3. மரியாதை:—'பிதாவையும் மாதாவையும் கனப்படுத்துவாயாக.' என்று கடவுள் யாவருக்கும் கட்டளையிட்டிருக்கிறார். சற்குணமுள்ள பிள்ளை எவ்வளவு பிராயமானாலும் தன் பெற்றோர்களைக் கவுரவமாக மதித்து, தேச ஆசாரத்தின்படி அவர்களை வணங்கி, அவர்களிடத்தில் மரியாதையாகப் பேசுவானேயொழிய, அவர்களுக்கு எவ்வித மரியாதைக் குறைவையும் செய்யமாட்டான். தாய் தகப்பனை எதிர்த்துப் பேசுதலும், அவர்களை நிந்தித்துக் கோபித்தலும், சபித்துப் பழித்தலும், அவர்கள் பேரில் குறை கூறுதலும், கூடாவொழுக்கமாம். கோபத்தினால் அவர்களைத் தொட்டு அடிப்பது கொலைபாதகத்துக்குச் சமமாம். தன் தாய் தகப்பனுக்கு மரியாதை செய்பவன் யோக்கியன். அவர்களை நிந்திப்பவன் அயோக்கியன்.

4. உதவி:—பிள்ளைகள் தங்களால் கூடியமட்டும் தாய் தந்தையருக்கு உதவி செய்யவேண்டும். அவர்கள் பெரியோரான பிறகு தமது தாய் தந்தையருக்கு அன்னவஸ்திரங் கொடுத்து ஆதரிப்பது அவர்கள் கடமை. பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களை வறுமையில் விடுவது அநீதமும் கொடுமையுமாம். நன்றாய்ச் சம்பாதிக்கும் சில பிள்ளைகள் தங்கள்



பெற்றோரைப் பிச்சை எடுக்க விடுவது எவ்வளவு அநியாயம்! எவ்வளவு கொடுமை!

பிள்ளையே! நீ இவ்வுலகத்தில் நெடுநாள் வாழ்வோடிருக்கும்படியாக, உன் பிதாவையும், உன் மாதாவையும் மரியாதையாக நடத்துவாயாக.

**கதை:** இரத்தினம் என்னும் ஒரு வாலிபன் கிழவனாகிய தன் தகப்பனுக்கு ஊழியம் செய்துவந்தான். அக்கிழவன் தீரா வியாதியுள்ளவனாயிருந்ததுமல்லால் முன்கோபக்காரனுமிருந்தான். அப்படியிருந்தும், இரத்தினம் தன் பொறுமைகெடாமல், பயபக்தியுடனும், சுறுசுறுப்புடனும் இரவும் பகலும் அவனுக்கு ஊழியஞ் செய்துவந்தான். கிழவனோ அவனிடத்து கொஞ்சமேனும் திருப்தியைக் காட்டாமல் அவனை அடிக்கடி திட்டுவதும், கோபிப்பதுமாக இருந்தான். இப்படியாக 12 வருஷகாலம் இரத்தினம் தன் தந்தைக்கு ஊழியஞ் செய்தான். ஒருவிசையாகிலும் அவனிடத்துத் தந்தை சந்தோஷமான முகத்தைக் காட்டினதில்லை. பட்சமானவார்த்தையும் சொன்னதில்லை. கடைசியாய்த் தனக்கு மரணகாலம் சமீபித்ததைக்கண்டு, அக்கிழவன் பக்கத்து வீட்டுக்காரர்களை வரவழைத்து, 'சிநேகிதரே! இதோ இந்த இரத்தினம் என்னும் பையனை உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேன். என்னுடைய சொத்துக்களுக்கு இவனே பாத்தியஸ்தன். நான் இவனை எவ்வளவோ கோபித்துத் திட்டியிருந்தபோதிலும் அவன் அவற்றைக் கவனிக்காமல் வெகு பொறுமையோடு இந்தப் பன்னிரண்டு வருஷகாலமும் ஊழியஞ் செய்துவந்தான். இவனைப்போலொத்த பிள்ளையை நீங்கள் பார்ப்பது அரிது' என்று சொல்லி உயிர்விட்டான்.

(சத்திய நேசன்.)

## Duties of parents towards their children.

## பிள்ளைகள்மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.

தாய் தந்தையரே! பிள்ளைகளுக்குச் சமயோசிதமான புத்திமதிகளைச் சொல்வதோடு, அவர்களுடைய நடத்தையைப்பற்றியும் கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும். பாவத்தைவிலக்கவும், புண்ணியத்தைச் செய்யவும், மோட்சத்தைத் தேடவும், தக்க புத்திகளைப் புகட்டினோம். அதுவே போதுமென்று பிள்ளைகளுடைய மனசுபோல் நடக்கும்படி விட்டு

விடக்கூடாது. பிள்ளைகளுடைய இஷ்டமானால் நற்புத்திகளைச் சொல்லிப் பிரயோஜனமென்ன? ஆனதுபற்றித்தான் பிள்ளைகளுடைய நடத்தையைப்பற்றி, அதாவது அவர்களுடைய நினைவு, வார்த்தை, கிரிகைகளைப்பற்றிக் கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டுமென்கிறேன். கண்பார்வை ஓயாமலும், மனக்கவலை குறையாமலும் அவர்கள்மீதிருக்க வேண்டும்.

உங்களுடைய அநுபோகத்தில் கண்டதில்லையா? 'பூனை இல்லாத வீட்டில் எலி கொண்டாட்டம்' என்பதுபோலப் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் இருக்குமட்டும் மாணாக்கர்கள் அடங்கி ஒடுங்கி வெகு பதவிசாக வாய் திறவாமல், கைகால் அசைக்காமல், விழித்தது விழித்ததுபோல சம்மனசுக்களுக்கு ஒப்பாக நடிப்பார்கள். சற்றுநேரம் உபாத்தியாயர் வெளியே போகட்டும். உடனே பிள்ளைகள் வாலில்லாத வானரங்களுக்கு ஒப்பாக ஒருவனையொருவன் பிடித்து இழுத்துச் சண்டைபோட்டுக் கரகோஷ்டம் செய்வான். உங்களுடைய வீட்டிலேயே நடக்கிறதைக் கவனித்தது இல்லையா? தகப்பன் இல்லாதபோது தாயோடு ஓயாத போராட்டம் செய்வதையும், தாயும் தகப்பனும் வீட்டிலில்லாதபோது பிள்ளைகள் இஷ்டம்போல் நடந்து சண்டை போட்டுத் தட்டுமுட்டுகளை உடைத்து நாசஞ் செய்வதையும் கவனித்தது இல்லையா?

ஆகவே, தாய்தந்தையரே! மக்களுடைய இஷ்டம் போல் விடாமல் உங்கள் படிப்பினைப்பிரகாரம் அவர்கள் நடக்கிறார்களோ இல்லையோவென்று கவனிப்பது உங்கள் கடமை. பெற்றோர்மீது பக்தி என்னும் ஓர் அறிவு சர்வேசுரன் பிள்ளைகளுக்குக் கொடுத்திருக்கிறார். அந்த உணர்வினால் தான் தாய் தந்தையரைப் பேணிப்பணிந்து நடக்கிறார்கள். ஆகையினால், பெற்றோர்களே, பிள்ளைகள்மீது சர்வேசுரன் உங்களுக்குக் கொடுத்த அதிகாரத்தை வியர்த்தமாக்காமல், அவர்களுடைய ஆத்தும நன்மையைக் கோரி, அவர்களுடைய நடத்தையை எப்பொழுதும் வெகு நுணுநுணுக்கமாய்க் கவனித்து அவர்களைக் கண்டித்து வருவது உங்கள் கடமை.

பிள்ளைகள்மட்டில் கவனிக்கவேண்டியதென்ன? பிள்ளைகள் மனம் வாக்குக் காயங்களால் செய்யும் குற்றம் என்ன? செய்கிற நன்மையென்ன? தெய்வபக்தியும், தேவசிநேகமும், அவர்கள் இருதயத்தில் பதிந்திருக்கிறதா? அநுதினமும்



திவ்விய பூசைக்குப் போகிறார்களா? வாரந்தோறும் பாவசங்கீர்த்தனஞ்செய்து தேவநன்மையை உட்கொள்ளுகிறார்களா? ஞான உபதேசத்துக்குப் போவதோடு புத்தி பிரசங்கங்களைக் கவனித்துக் கேட்கிறார்களா? காலைச்செபம், மாலைச்செபங்களைப் பத்தியோடு செய்கிறார்களா? விளையாட உலாவப் போகும்போது எந்த இடங்களுக்கு யாரோடு போகிறார்கள்? அவர்களோடு சகவாசம் செய்யும் பிள்ளைகளால் தங்கள் ஆத்துமத்துக்கு வரும் லாபநஷ்டம் என்ன? அவர்களை விருந்துக்கு அழைக்கும் உற்றார் உறவினருடைய குணமும் நடத்தையும் என்ன? பாடங்களைப் படிக்கிறநேரம் தவிர்த்து, சோம்பலுக்கு இடங்கொடாமல், விளையாடவும், சரீரப்பிரயாசமான வேலையைச் செய்யவும் அவர்களைப் பழக்குவதோடு துஷ்டப்பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடவும், உலாவப் போகவும், ஒருபோதும் விடக்கூடாது.

நமது தேசத்தில் நடப்பது என்ன? தாய்தந்தையர்களில் அநேகர் இரவும் பகலும் தேச விசாரணை செய்வார்கள். இந்த ஊர் சமாச்சாரம் என்ன? அந்த ஊரில் என்ன சங்கதி? இந்த வீட்டில் அந்த வீட்டில் என்ன நடந்தது என்று ஏக கவலையாயிருப்பார்கள். தங்கள் பிள்ளைகளுடைய சங்கதியைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படமாட்டார்கள்.

வேறு சில தாய்தந்தையர் விசாரிக்கிறது என்ன? இவன் அவன் சாப்பாட்டுக்கு வந்தானா? பிள்ளைகள் வயிறு நிறைந்தால் போதும். பிறகு எந்தப்பதர்களோடு சேர்ந்துதிரிந்தாலும் சரி. இரவில்கூட எந்தநேரத்தில் வீட்டுக்கு வந்தாலும் சரி. அக்கறையில்லை.

வேறு சிலர் ஊரார் பிள்ளைகளினுடைய குணம், நடத்தை, இவைகளைப்பற்றி வாய் சலியாமல் பேசி, தங்கள் மக்களுடைய நடத்தையைப்பற்றித் தங்களுக்குள் ஒருவார்த்தையும் பேசிக்கொள்ளமாட்டார்கள்.

பிள்ளைகளைப் பெற்றவர்களே! மக்களுடைய குணாதிசயங்களைக் கவனித்துச் சீர்திருத்தாமல், இரவும் பகலும் உழைத்து ஆஸ்திபாஸ்தி, நிலபலங்களைச் சேகரித்ததினால் பலனென்ன? வீட்டில் உள்ள ஆடுமாடுகளையும், நாய் பூனைகளையும் தீனி போட்டு வளர்க்கிறதுபோல உங்கள் மக்களை வளர்த்தால் போதுமா? (இன்னும் வரும்.)

(யதார்த்தவாதி.)

## Some new rules of the canon Law.
## திருச்சபைச் சட்டத்தின் சில புது ஒழுங்குகள்.

1. மேற்றிராணியாருடைய உத்தரவின்றி, யாரும் குருக்களைக் கச்சேரிக்குப் பிரதிவாதிகளாகவாவது, சாட்சிகளாகவாவது இழுக்கக்கூடாது. பாப்பானவர் உத்தரவின்றி மேற்றிராணியாரைக் கச்சேரிக்கு இழுக்கக்கூடாது. இந்த ஒழுங்கை மீறிப்போகிற கிறீஸ்துவர்கள் திருச்சபையின் கண்டனமான தண்டனைக்குட்படுவார்கள்.

2. விசுவாசிகள் திருச்சபைக்குச் சேர்ந்த சபை சங்கங்கள் தவிர இதரமத சங்கங்களில் சேரக்கூடாது.

3. ஒரு மாதமாக வியாதியாயிருந்து குணமடைவதற்கு இன்னும் நாளாகுமென்றிருக்கும்போது நடுச்சாமத்திற்குப் பிறகு மருந்தாவது பானமாவது சேர்த்திருந்தபோதிலும் ஆத்தும குருவானவரின் யோசனையின்படி வாரத்திற்கு இரண்டு தடவை திவ்விய நன்மை உட்கொள்ளலாம்.

4. விசுவாசிகள் தங்கள் பங்கு விசாரணைக் கோவிலில் பாஸ்கு கடனைத் தீர்ப்பது ஒழுங்கு. யாதாமொரு முகாந்தரத்தினால் வேறொரு பங்கு விசாரணைக் கோவிலில் பாஸ்கு கடனைத் தீர்த்திருந்தால் தங்கள் பங்கு சுவாமியாருக்குத் தெரிவிக்கவேண்டியது.

5. விசுவாசிகள் தாங்கள் ஞானஸ்நானம் பெற்ற கோவிலில்லாமல் வேறு கோவிலில் மெய்விவாகம் செய்யும்பட்சத்தில், மெய்விவாகம் கொடுக்கும் குருவானவருக்குத் தங்கள் ஞானஸ்நான ஸர்டிபிகேட்டை ஒப்புவிக்கவேண்டியது.

6. கூடியமட்டும் கலியாணஞ் செய்யுமுன் உறுதிபூசுதல் பெற்றிருக்கவேண்டும்.

7. பதினாறு வயதுக்குக் குறைந்த ஆணுக்கும், பதினாலு வயதுக்குக் குறைந்த பெண்ணுக்கும் கல்யாணத்துக்கு உத்தரவில்லை.

8. இனிமேற்பட நான்காம்கால் இரத்த உறவும், மூன்றும் நான்காம் கால் கலந்த இரத்த உறவும், கல்யாணத்திற்கு விக்கினம் ஆகாது.

9. ஆகமனகாலம் முதல் ஞாயிற்றுக்கிழமையிலிருந்து கர்த்தர் பிறந்த திருநாளோடும், விபூதித் திருநாளிலிருந்து



கர்த்தர் உயிர்த்த திருநாளோடும் கலியாண ஆடம்பரம் விலக்கப்பட்டிருக்கிறது.

10. சரியான முகாந்தரமிருந்தாலொழிய கடைசி ஓலை வாசித்து மூன்று நாள் இடையில்லாமல் கல்யாணம் நடத்தக்கூடாது.

---

## Letter to a friend.
## நண்பனுக்கு ஓர் கடிதம்.

பிரிய சிநேகிதா,

சேசுநாதர்சுவாமி பரலோகத்துக்கு எழுந்தருளிப்போனபின் பத்து நாட்களாக அவருடைய சீஷர்கள் தியான யோகத்திலிருந்து இஸ்பிரீத்துசாந்துவின் அருளையடைந்தபின் புறப்பட்டுப்போய் சேசுநாதர்சுவாமியைச் சிலுவையில் அறைந்து கொல்வித்த யூதர்முன், "நீங்கள் கொலைசெய்த மனுஷாவதாரக்கடவுள் உயிர்த்தெழுந்தருளினார்: அவரை விசுவசித்து இரட்சண்யம் அடைந்துகொள்ளுங்கள்" என்று பிரசங்கிக்க, முதல் நாளில் 3000 பேரும், மற்றொரு நாளில் 5000 பேருமாக இப்படியே திரளான யூதர்கள் விசுவசித்து சத்திய வேதத்தில் உட்படுவதைக்கண்ட யூதப்பிரதானிகள், கோபஆவேசங்கொண்டு சீஷர்களைப் பிடிப்பித்துச் சிறையில் வைத்துக் கசைகளால் அடிப்பித்து, இனி இந்த வேதத்தைப் பிரசங்கிக்காதபடி பயமுறுத்தி அனுப்பினார்கள். பயமுறுத்தி அனுப்பியுமென்ன? அதிகாரிகளாலும், சாமானிய ஜனங்களாலும், கொடூரமாய் நடத்தப்பட்டு, யாதொரு துணையில்லாதவர்களாயிருந்தும், கல்வி, சாஸ்திரம் முதலிய வல்லபம் அற்றவர்களாயிருந்தும், ஞானவிதமாய்த் தங்களோடிருந்த சேசுக்கிறீஸ்துவின் பின்பலத்தினால் ஈடேற்ற வழியாகிய சத்திய வேதத்தைப் போதித்துக்கொண்டே வந்தார்கள்.

சீஷர்கள் யூதருக்கு மாத்திரமல்ல, உலகத்தின் எல்லாத் திசைகளிலும் பிரிந்துபோய் சகல ஜாதி ஜனங்களுக்கும் சத்தியத்தைப் போதித்துக் கணக்கில்லாத பேரை மனந்திருப்ப, அவர்களும், "சேசுநாதசுவாமியே ஏக மெய்யான கடவுள், அவர் போதித்து அருளியவழியே இரட்சண்யவழி" என்று விசுவசித்துக் கைக்கொண்டார்கள். ஜனங்கள் தங்கள் பாரம்பரையான தெய்வங்களின் ஆசாரத்தை விட்டுக் கிறீஸ்துவர்களானதைக்கண்ட பூசாரிகள் இராஜாக்களிடம்போய் முறையிட, சீஷர்களைப்பிடித்துக் கொல்லுவித்தார்கள். சேசுக்கிறீஸ்து

நாதருடைய சீஷரைக்கொன்றபின் அவருடைய வேதம் முன்னிலும் அதிக விரைவாகப் பரவினபடியால், இராஜாக்கள் அங்கங்கே கிறீஸ்துவர்களைப் பிடித்து, "நீங்கள் கிறீஸ்து வேதத்தை மறுதலித்து எங்கள் தேவர்களை ஆராதிக்காமற் போனால் உங்களைச் சித்திரவதைசெய்து கொல்லுவோம்" என்று பயமுறுத்தினார்கள். சத்தியவேதத்தைக் கைக்கொண்ட கிறீஸ்துவர்களோவென்றால், தாங்கள் மெய்யான ஏககடவுளை மறுதலிப்பதைக் காட்டிலும் உயிரைக்கொடுப்பது நலமென்று துணிந்து இளம் மாதரும், பாலரும் முதலாய்ச் சத்திய வேதத்துக்குச் சாட்சிகளாய் உயிர்விட்டார்கள். இப்படியாய் உரோமையருடைய அரசாட்சிக்குட்பட்டிருந்த தேசங்களிலும், பாரஸீகம், சீனா முதலிய இன்னும் அநேக நாடுகளிலும் அந்நாள்தொட்டு இந்நாள் மட்டும் சத்திய வேதத்துக்காக ஜீவனைவிட்டவர்களுடைய தொகை கணக்கில் அடங்காது.

சேசுநாதருடைய சீஷர்களை இராஜாக்கள் கொன்றபோதிலும், அச்சீஷர்களால் மனந்திருப்பப்பட்ட கிறீஸ்துவர்களையும் அழித்து வந்தபோதிலும், சத்திய வேதம் மென்மேலும் சகல ஜாதி ஜனங்களுக்கும், தழைத்தோங்கி வந்திருக்கிறது. அத்திரு வேதத்திலேயே இதுவரையிற் சேர்ந்து பரகதியடைந்த மன்னர்கள், பிரபுக்கள், இவர்களின் தொகையைக் கணக்கெடுப்பதார்? அத்திரு வேதத்தில் மாத்திரம் தங்கள் புத்திக்கு மனோகரத்தையும், மனதிற்கு ஆனந்தத்தையும் அடைந்துகொண்ட ஞானிகளும், புலவர்களும் எத்தனையோ பேர். அத்திருவேதத்தையே தங்கள் குல மகிமையிலும், செல்வச்சிறப்பிலும் மேலாக எண்ணி அநுசரித்துவந்த மேன்மக்களுடைய எண்ணிக்கையை யார் அளவிடக்கூடும்? ஆசாபாசங்களின் அடக்கமும், பாவவெறுப்பும், சுகிர்த ஒழுக்கமும் போதித்துவரும் சத்திய வேதத்தில் யாதொரு பலவந்தமுமில்லாமல் இத்தனை லட்சாதி லட்சக் கணக்கானோர் எக்காலத்திலும் சேர ஏவப்பட்டதையும், இதற்காகக் கொடிய வேதனைகளையும் சகிக்கத் துணிந்ததையும் யோசித்துப்பார்த்தால், இச்சம்பவம் தேவ அருளினாலேயல்லாமல் மற்றப்படி ஆனதல்லவென்றும், இவ்வேதம் சத்திய வேதமானபடியால் இதுபரவுவதற்குக் கடவுள் இப்படிப்பட்ட அருளைச்செய்தருளினார் என்றும் துணிவாய்ச் சொல்லலாம்.

பிரிய சிநேகிதா! ஒரு மனித போதகத்துக்காக யாராவது உயிர்விடத் துணிவார்களா? இலட்சக்கணக்கான பேர்



ஜீவனை விடும்படி ஏவிவிட்ட போதகம் மனித போதகமல்லவென்றும், இதைப் போதித்தவர் மனுஷனல்ல, பரலோகத்திலின்று இறங்கி வந்த கடவுளேயென்றும் கண்டுணரக் கடவாய்.

இப்படிக்கு, உன் நண்பன்,
சேசு பக்தன்.

## Pride Punished.
## கேர்வம் சிட்சையடைந்தது.

### கெடுவான் கேடு நினைப்பான்.

ஒரு ஊரில் ஒரு துரையினிடத்தில் கிறீஸ்துவன் ஒருவன் பட்லர் உத்தியோகஞ் செய்துவந்தான். அவன் சொந்தக்காரரில் ஒருவன் தன் குழந்தைக்கு ஞானத் தகப்பனாக அவனைக் கூப்பிட்டான். அவன் அதற்குச் சம்மதித்து நல்ல உடுப்பு அணிந்து வெகு கர்வத்துடன் கோவிலுக்குப் போனான். அங்கே கொஞ்சம் சங்கடம் நேர்ந்தது. அது என்னவென்றால், அவன் பாஸ்கு கடன் தீர்க்காதவனும், ஒழுங்கு தவறி நடப்பவனுமாயிருந்ததினால் திருச்சபைச் சட்டப்படி அவனைக் குருவானவர் ஞான தகப்பனாக ஏற்றுக் கொள்ளவில்லை. அவனுக்குப்பதிலாய் வேறொரு கிறீஸ்துவனை நியமித்துக் குருவானவர் அக்குழந்தைக்கு ஞானஸ்நானங் கொடுத்தார். ஞானஸ்நானங் கொடுத்தபின், அந்த பட்லர், சுவாமியார் அறைவீட்டுக்குப் போய்க் கோபத்துடன் சண்டையிட்டு அவரை இழிவாகப் பேசினான். மேலும் குருவானவரை ஆங்காரத்துடன் நோக்கி, "உமக்கு என்ன சம்பளம்? நான் முப்பது ரூபாய் சம்பளக்காரன். நான் உமக்குப் பிச்சை கொடுக்கிறேன். இதோ ஒரு ரூபாய் வாங்கிக் கொள்ளும்" என்று மரியாதையில்லாமல் சொன்னான். குருவானவர், "சரி, உன் பிச்சை எனக்கு அவசரமில்லாமற் போனபோதிலும், என் பங்கின் ஏழைகளுக்கு உதவியாயிருக்கும். தவிர உனக்குக்கூட ஏதோ ஒரு சமயத்தில் பிரயோஜனப்படும்" என்று சொல்லி அந்த ரூபாயை வாங்கிக் கொண்டார். அந்த பட்லர் அவமானப்பட்டுக் கோபத்துடன் வீட்டுக்குப் போனான்.

சிலகாலத்துக்குப் பிறகு மேற்சொல்லிய குருவானவர் ஒரு வியாதிக்காரனை விசாரிக்க வழியில் போகும்போது

கேவலமான உடுப்புத் தரித்த ஒரு மனிதனை எதிரிற் கண்டார். அவன் வெட்கப்பட்டுத் தன்னை ஒளித்துக்கொள்ளுமாறு சுவாமியார் வரும் வழியின் வேறுபக்கத்தின் ஓரமாய்த் தலை குனிந்து சென்றான். அவன் முன் சொல்லிய ஆங்காரமுள்ள பட்லரொன்று குருவானவர் அறிந்துகொண்டு அவன் பக்கத்திற்போனார். அவன் அவரைத் தப்பித்துக்கொள்ள முடியாமல் ஸ்தோத்திரஞ்செய்து சுவாமியாரைக் கும்பிட்டான். குருவானவர் அவனை நோக்கி, "என்ன அப்பா, வெகு கேவலமாயிருக்கிறாயே! உனக்கு என்ன நேரிட்டது?" என்று கேட்க, அந்த பட்லர், "சுவாமி, நான் உமக்கு முன் செய்த அவமானத்தை மன்னியும். இரண்டு மாதத்திற்குமுன் என்னைத் துரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார். இப்போது எனக்குச் சாப்பாட்டுக்குக் கஷ்டமாயிருக்கிறது" என்றான். அதற்குக் குருவானவர் "நீ சம்பாதித்த 30 ரூபாயில் மீதிவைக்கவில்லையா?" என்ன, "இல்லை, சுவாமி, நான் பிள்ளைகுட்டிக்காரன்" என்றான். அப்போது குருவானவர் தன் பையை எடுத்து இதோ அப்பா, நீ எனக்கு முன்பு கொடுத்த ஒரு ரூபாய் இன்னும் இருக்கிறது. வாங்கிக்கொள்" என்று ஆசீர்வாதம் கொடுத்து அனுப்பினார். அவன் தலைகுனிந்து வெட்கி வீட்டுக்குச் சென்றான்.

'தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்' என்று இதனால் அறிந்துகொள்ளலாம்.

(Olim.)

---

## Correct things for a religious festival.
## உற்சவ நாளில் அநுசரிக்கவேண்டிய ஒழுங்குகள்.

திருநாட்களில் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து திவ்ய நன்மை வாங்குவது ஒழுங்கு. திருநாட்களில் வேடிக்கைக்காகக் கோவிலுக்கு வராமல் பத்தி விசுவாசத்துடன் சர்வேசுரனையும், அர்ச்சியசிஷ்டவர்களையும் வேண்டிக்கொள்வது ஒழுங்கு.

சுற்றுப்பிரகாரத்தில் ஒழுங்குடன் வரிசையாய்ப் பத்தியுடன் செல்வது ஒழுங்கு பேசுவதும், சிரிப்பதும், ஓடுவதும், அங்குமிங்கும் அலைவதும் ஒழுங்கல்ல.

தேரின்மேலும், கோவிலில் ஜனங்கள் பேரிலும், மிளகு, கடலை, காசு இவை முதலியவற்றை இறைப்பது ஒழுங்கல்ல.



சுற்றுப்பிரகார முடிவில் தேர் நிலையிலிருக்கையில், அத்தேருக்கு ஜோடினை செய்திருக்கும் காகிதம், பூமாலைகளைப் பிடுங்கித் தேரைச் சாயும்படி செய்வது ஒழுங்கல்ல. அதனால் சுரூபங்களுக்கு மோசம் வருவதுமன்றி ஆபத்தும் நேரும். மேலும் அச்செய்கை அவமரியாதையையும் காட்டும்.

பூசைநேரத்திலும் தேவநற்கருணை ஆசீர்வாத நேரத்திலும் பக்தியுடன் இருக்கவேண்டுமேதவிர, அர்ச்சியசிஷ்டவர்களுடைய சுரூபங்களுக்குமுன் முழங்காலால் நடந்து நேர்ச்சி வேண்டுதல் செய்வது ஒழுங்கல்ல.

பாவசங்கீர்த்தனத்தில் தாங்கள் சொல்வதை ஆத்தும குருவானவர்மட்டும் அறியவேண்டியிருக்க, மற்றவர்கள் அவசரப்பட்டு நெருங்கிவந்து பாவசங்கீர்த்தனஞ் செய்பவர்களுக்கு இடைஞ்சலாயிருப்பது ஒழுங்கல்ல.

---

## Here & There.
## நானா சங்கதி.

The war :—மேற்குப்போர்முனையில் ஜெர்மானியர் உயிர்ச்சேதத்தைக் கவனியாமல் (ypres) ஈப்ரஸ் (Amiens) அமீன்ஸ் என்னும் நகரங்களைப்பிடிக்க வெகு பிரயாசப்பட்டும் முடியவில்லை. நேசக்கட்சியார் அவர்களை வெகு தைரியமாய்த் தடுக்கிறார்கள். ஜெர்மானியர் மறுபடியும் பலமாய் எதிர்க்க முயற்சி செய்து வருகிறார்கள். ஆனால், பிரிட்டிஷ், பிரெஞ்சு, அமெரிக்கா முதலிய சேனைகளின் இரும்புச் சுவர்களுக்குள் நசுங்கிமாளுவார்களே தவிர ஜெயங்கொள்ளமாட்டார்கள்.

Pastoral visit :—சரியாய் வந்திக்கத்தக்க கோயம்புத்தூர் மேற்றிராணியார் ஏப்பிரல்-மீ 21-உ வெல்லிங்டன் அர்ச். சூசையப்பர் கோவிலில் 50 பேருக்கும், 28-உ குன்னூர் அர்ச். அந்தோனியார் கோவிலில் 79 பேருக்கும், மே-மீ 12-ம் தேதி ஒத்தை இருதயநாதர் கோவிலில் 32 பேருக்கும், 19-ம் தேதி மோட்சராக்கினிமாதாக் கோவிலில் 80 பேருக்கும் உறுதிபூசுதல் என்ற தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றினார்.

Coonoor :—அர்ச். அந்தோனியார் பாடசாலையில் மே-மீ 9-ம் தேதி மாணாக்கர்களுக்குப் பரிசளிக்கப்பட்டது. அர்ச். சூசையப்பர் ஐரோப்பிய பாடசாலை ப்ரின்ஸிபால் Revd. Bro. Forde என்பவர் அக்கிராசனம் வகித்தார். அவரது பிரசங்கம் வெகு நேர்த்தியாயிருந்தது. பின்னர் விடுமுறை நாள் விடப்பட்டது. தற்காலம் ஷை பாடசாலையில் சென்ற வருஷத்தைவிட 38 மாணாக்கர்கள் அதிகமாகப் படிக்கிறார்கள். இவ்வருஷத்தில் மாணாக்கர்களின் தொகை 261. மே-மீ 7-ம் தேதி நடந்த இன்ஸ்பெக்ஷன் நாளில் 8-வது ஸர்க்கிள் இன்ஸ்பெக்டராகிய க்ரீன் துரையவர்கள், பள்ளிக்கூடத்து மாணாக்கர்களும் உபாத்தியாயர்களுமாக ஒன்று சேர்ந்து, ரூபாய் 150. வசூலித்து யுத்தபண்டுக்குக் கொடுத்ததற்காக வியந்து பேசினார். ஜூன்-மீ 10-ம் தேதி அர்ச். அந்தோனியார் பாடசாலையும், ஸெயின்ட் மேரீஸ் பெண் பாடசாலையும் திறக்கப்படும்.

Kumbakonam :—கும்பகோணம் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். (Revd. Father J. M. Jegorel) ஜெகரல் சுவாமியார் மே-மீ 2-ம் தேதி செயின்ட் தியோடர்ஸ் ஸானடோரியத்தில் தமது 70-வது பிராயத்தில் தேகவியோகமடைந்தார். இவர் இந்தியாவில் 42 வருஷகாலம், அந்நிய தேச வேதபோதகர் சபையில் உழைத்து வேலை செய்தவர். R. I. P.

Transfers :—(Rev. J. M. J. Gaucher) சங். கோஷர் சுவாமியார் தாராபுரத்திற்கும், (Rev. M. Dominique) சங். தோமினிக் சுவாமியார் நகலூருக்கும், (Rev. A Lazarus) சங். லாஜர் சுவாமியார் எருச்சாம்பதிக்கும் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

---


# The St. Anthony's Messenger.

## அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. IV. July 1918. No. 7.

புத்தகம் IV.] FIDES AC ROBUR. [நம்பர் 7.


24 JUL 1918

## MORAL INSTRUCTION.

## நல்லொழுக்க போதனை.

### Obedience to Teachers.

### உபாத்தியாயருக்குக் கீழ்ப்படிதல்.

தாய் தகப்பனுக்கு அடுத்த பெரியவர் உபாத்தியாயர் ஆகையால் மாணாக்கர்கள் தங்கள் உபாத்தியாயருக்கு மரியாதை செய்து அவர் கற்பிப்பதைக் கவனமாய்க் கேட்டுப் படித்துக்கொள்வார்களாக. கல்வி, நல்லொழுக்கம் முதலிய விஷயங்களில் அவர்கள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதுபோலவே, தங்கள் உபாத்தியாயருக்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது. உபாத்தியாயர் தமது சுகத்தையும் செல்வத்தையும் கவனியாமல் நாள்தோறும் குறித்த காலத்தில் பள்ளிக்கூடத்திற்கு வந்து சிறுவர்களுக்குக் கல்வியையும் நல்லொழுக்கத்தையும் கற்றுக்கொடுக்க எவ்வளவோ பிரயாசப்படுகிறார். அவரது பிரயாசை வீணாய்ப் போகாதபடி சரியாகப் படித்து அவருக்குப் பணிந்து நடக்கவேண்டியது மாணாக்கருடைய கடமையாகும். இல்லாவிட்டால் மாணாக்கர்கள் படிப்பில் மேன்மையடையாமல் தங்கள் காலத்தையும் பணத்தையும் வீணாய்ச் செலவழித்தவர்களாவார்கள். அத

னால் மாணாக்கர்கள் உபாத்தியாயருக்குக் கீழ்ப்படிந்து பாடம் படிப்பது உபாத்தியாயருடைய நன்மைக்காக அல்ல, தங்கள் சொந்தப் பிரயோஜனத்துக்காகவேயென்பது பிறகு நன்றாய்த் தெரியவரும்.

உபாத்தியாயர் கடவுளின் ஸ்தானாதிபதியாகவும் கல்விக்குத் தூதனாகவும் இருக்கிறார். ஆதலால் அவரைப் பள்ளிக்கூடத்தில் மாத்திரமல்ல, வேறு வெளியிடங்களிலும் காணும்போது வணக்கத்துடன் மரியாதை செய்வது நற்குணமுள்ள மாணாக்கருக்கு அழகு.

உன்னுடைய சுபாவமும், நற்குண துர்க்குணங்களும், உன் உபாத்தியாயருக்கு நன்றாய்த் தெரியும். நீ தூர தேசத்துக்குப் புறப்பட்டுப் போகிறதாக நினைத்துக்கொள். கொஞ்ச தூரம் சென்றவுடன் இரண்டு மூன்று கிளை வழிகளைக் கண்டால் நீ எந்த வழியில் போவாய்? அவ்விடத்தில் ஒரு மனிதன் நின்று நீ செல்லவேண்டிய ஊருக்குப் போகும் பாதையைக் காட்டும்போது அவன் வார்த்தையை நம்பாமல் நீ வேறு வழியில் போவாயா? போகமாட்டாய். அதுபோலவே சரியான வழி தெரிந்தவர் உன் உபாத்தியாயர். அவர் உனக்கு முன் அவ்வழியில் நடந்திருக்கிறார். அவ்வழி எவ்வளவு கஷ்டமாய் இருந்தபோதிலும் அவரை நம்பி அவரைப் பின்சென்று நடப்பாயாக.

நீ தப்பிதம் செய்யும்போது உன்னைக் கண்டிப்பதில் உன் உபாத்தியாயர் பிரியப்படுவதில்லை; ஆனால் உன் சோம்பலையும் அசட்டைத்தனத்தையும் மற்றும் உன்னுடைய பல துர்க்குணங்களையும் குற்றங்களையும் திருத்தித் தண்டிப்பது அவருடைய கடமையாக இருக்கிறது. அதனால், உன்னை அவர் திருத்தித் தண்டிப்பதற்காக அவர்பேரில் கோபம் கொள்ளாமல் அடங்கி நடப்பாயாக. தவிர, அவருக்கு விரோதமாக நீ முறையிடாதே; ஏனென்றால், அவர் செய்வதெல்லாம் உனது நன்மைக்காகவே செய்கிறார்.

உபாத்தியாயரிடத்தில் எதிர்த்துப் பேசுவதும், அவர்பேரில் அவதூறான மொழிகளைக் கூறுவதும் அவரைப்பற்றி இழிவாகப் பேசுவதும் கெட்ட பிள்ளைகளின் சுபாவமாம். நீ செய்த குற்றத்திற்காக உன் உபாத்தியாயர் உன்னைக் கண்டித்தால் நீ வீட்டுக்குப் போய் உன் பெற்றோரிடத்தில் அவரைப்பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லிக் கோள் மூட்டுவது



தவறு. அறிவுள்ள பெற்றோர்கள் நீ அப்படிச் செய்ததற்காக உன்னையே கண்டிப்பார்கள்.

குறித்த காலத்தில் மாணாக்கர்கள் பள்ளிக்கூடத்தில் வந்திருக்கவேண்டும். அஜாக்கிரதையினால் காலதாமதமாக வருகிற மாணாக்கர்கள் தங்கள் வகுப்பிலும் படிப்பிலும் பின்னடைவார்கள்.

பள்ளிக்கூட நாட்களில் சரியான காரணமில்லாமலும், உபாத்தியாயரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொள்ளாமலும் நீ வீட்டில் நின்றுவிடாதே. பள்ளிக்கூடத்துக்குப் போகாமல் தெருத்தெருவாய்ச் சுற்றிக்கொண்டும், சோலைகளில் ஒளிந்துகொண்டும் இருந்தால் உன் தாய் தகப்பனை நீ ஏமாற்றுவதுமன்றி உன்னையும் நீயே கெடுத்துக்கொள்ளுகிறாய்.

படிக்கிற நேரத்தில் நன்றாய்ப் படித்து உன் உபாத்தியாயர் கற்பிப்பதை நன்றாய்க் கவனிப்பாயாக. கிரமமாகப் பள்ளிக்கூடத்திற்கு வந்து உபாத்தியாயருக்குக் கீழ்ப்படிந்து நடப்பாயானால் வருஷக் கடைசியில் நீ பரீட்சையில் தேறுவதுடன் உன் காலம் வீணாகாதபடி நற்குணத்தையும் மேன்மையையும் ஒழுங்கையும் கற்றுக்கொண்டு பிற்காலத்தில் உனக்கும் உன் குடும்பத்துக்கும் வேண்டிய செல்வத்தையும் நற்பெயரையும் அடைவாயென்பது நிச்சயம்.

**கதை:**—முற்காலத்தில் கான்ஸ்டான்டிநோபில் (Constantinople) என்னும் பட்டணத்தில் மஹா தியோடோஸ் (Theodose the Great) என்னும் ஒரு ராஜா இருந்தார். ஆர்க்காடியஸ் என்னும் அவருடைய மூத்த குமாரனுக்குப் பத்து வயதானபோது அவனுக்குக் கல்வியும் நல்லொழுக்கமும் கற்பிக்க, ஆர்சேன் என்னும் ஒரு நற்குணமுள்ள உபாத்தியாயனை அழைப்பித்து, "இதோ! என் புத்திரன் ஆர்க்காடியஸை உமது வசத்தில் ஒப்புவிக்கிறேன். என்னைவிட நீரே அவனுக்குத் தகப்பனும் துணையும்" என்று சொன்னார். ஆர்சேன் தன் மாணாக்கனுக்குப் பாடம் கற்பிக்கும்பொழுது தான் நின்றுகொண்டிருந்தாலும், அப்பையனை இராஜாவினது பிள்ளையானதுபற்றி உட்காரவைத்தே பாடம் சொல்லிக்கொடுப்பது வழக்கம். ஒருநாள் அவனது பிதா திடீரென்று அங்கு வந்து பார்த்தபோது உபாத்தியாயர் நிற்பதும், தனது பையன் உட்கார்ந்திருப்பதும் மரியாதைக் குறைவாக அவருக்குத் தோன்றியபடியால், பையனை நிற்க வைத்துத் தாம் உட்கார்ந்து பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று உபா

த்தியாயரிடத்தில் சொன்னார். "பையன் உட்கார்ந்திருக்க உபாத்தியாயர் நின்றிருப்பது உமது பெருமைக்குக் குறைவு" என்றும் சுட்டிக்காட்டினார். உபாத்தியாயர் தமது மாணாக்கன் இராஜ குமாரனென்றும் அவனது உடையே அதைக் காட்டுமென்றும் சொல்ல, அரசர் உடனே தமது புத்திரனுடைய இராஜ குழந்தைக்குரிய அடையாளங்களையெல்லாம் கழற்றியெறியும்படி செய்து சாதாரண குழந்தையைப்போல உடை உடுத்தி, பையன் நிற்கவும், உபாத்தியாயர் உட்கார்ந்து பாடம் சொல்லிக்கொடுக்கவும் உத்தரவிட்டுச் சென்றார்.

அன்றுமுதல் இராஜ குமாரனாகிய அர்க்காடியஸுக்கு உபாத்தியாயர் தன்பேரில் கடுமையாய் இருப்பதாக மனதில் பட்டது. உபாத்தியாயரும் அரசரது ஆணைக்குப் பயந்து இராஜ குமாரன் விஷயத்தில் கண்டிப்பாகவேயிருக்கத் தலைப்பட்டார். ஆனால் சிறுவனுக்கு மாத்திரம் அது பிடிக்காமற்போயிற்று. சில சமயங்களில் உபாத்தியாயர்மேல் பழி வாங்கக்கூட யத்தனித்துவிட்டான். அவர் அதை லட்சியம் செய்யாமல் அவனை நல்வழிப்படுத்த வெகுவாக முயன்றார். சிறுபிள்ளைத்தனத்தினாலும் அதிகாரச் செருக்கினாலும் அவன் தன்னைத் திருத்திக்கொள்வதற்குப் பதிலாக உபாத்தியாயரைக் கஷ்டத்துக்கு உள்ளாக்கும் வழிகளைப்பற்றியே யோசிக்கத் தொடங்கினான். உபாத்தியாயரும் இனி இராஜகுமாரனுக்குப் புத்தி கற்பிப்பதில் பயனில்லையென்று கண்டு அவ்வூரை விட்டகன்றார்.

சில காலத்திற்குப்பிறகு தியோடோஸ் அரசன் இறந்துபோக அர்க்காடியஸ் அரசனானான். அரசனானதும் அவனுக்கு அறிவு வந்து தன் உபாத்தியாயர் இருக்கும் இடத்தை அறிந்து அவருக்குச் சிறந்த வெகுமதிகளும் வணக்கமாக ஒரு கடிதமும் அனுப்பினான். அக்கடிதத்தில் அவன் தான் முன் செய்த குற்றங்களையெண்ணி விசனப்படுவதாகவும், தான் கொடுத்த கஷ்டங்களுக்காகத் தன்னை அவர் மன்னிக்கவேண்டுமென்றும் எழுதினான். ஆனால் அவ்வுபாத்தியாயராகிய ஆர்சேன் அந்த வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ளவில்லை. அறியாமையோடிருந்தகாலத்தில் அர்க்காடியஸ் தன்னை அவமதித்தானாயினும், தாம் அவனுக்குப் படிப்பித்த புத்திமதிகள் வீணாகப்போகவில்லையென்றும், அவற்றின் பயனாகவே அவ்வளவு வணக்கமும் மரியாதையும் அவனால் தமக்கு ஏற்பட்டதென்றும் தெரிந்து உபாத்தியாயர் சந்தோஷப்பட்டார்.

சத்திய நேசன்.



# Duties of parents towards their Children.

*(Continued.)*

## பிள்ளைகள்மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.

(தொடர்ச்சி.)

தத்துவ ஞானியாகிய பிலுட்டார்க் என்பவன் எழுதி வைத்திருப்பதாவது: "ஓ! உலகவாசிகளே! எங்கே போகிறீர்கள்? உங்களுடைய பலபல வேலைகளிலேயே நேரமெல்லாம் போக்கி, கவனமெல்லாம் செலுத்துகிறீர்கள். இவ்வளவு கஷ்டப்பட்டுச் சேர்த்து வைக்கிற பணம் யாருக்கு? உங்கள் பிள்ளைகளுக்கல்லவா? அப்படியானால் அந்தப் பிள்ளைகளைக் கவனிப்பதற்குத்தானோ உங்களுக்கு நேரமில்லை."

பிள்ளைகளுடைய சரீர சுகத்துக்காக நீங்கள் நெஞ்சுமுறியப் பாடுபட்டும், அவர்களுடைய ஆத்துமத்தைக் கவனியாமல் இருப்பது சுத்தப் பைத்தியமல்லவா! செடிகளைக் கவனியாது நல்ல செடிகளோ முட்செடிகளோ என்றும், அவை ஒழுங்காகவோ ஒழுங்கீனமாகவோ வளருகின்றன என்றும் கவனியாமல் தண்ணீர் மாத்திரம் பாய்ச்சி வந்தால் அப்படிச் செய்பவனைப் பைத்தியக்காரனென்று சொல்வார்களல்லோ? ஆகையால், தாய் தந்தையரே! பிள்ளைகளுடைய சரீர சுகத்தைப்பார்க்க அவர்களுடைய ஆத்தும சுகத்தையே அக்கறையாய்த் தேடுங்கள். அவர்களுடைய நினைவு, வார்த்தை, கிரிகைகள் மட்டில் கண்ணும் கருத்துமாக இருங்கள். இல்லாவிட்டால் தீர்வை நாளில் சர்வேசுரனுக்கு நீங்கள் கண்டிப்பான கணக்கு கொடுக்கவேண்டியிருக்கும். அப்போது என்ன ஞாயம் சொல்லுவீர்கள்? பிள்ளைகள் கெட்டுப்போனால் அவர்களே காரணமென்று சொல்லுவீர்களோ? இளம்பிராயத்தில் அவர்களை நீங்கள் கவனியாத குறையே அவர்களுடைய கேட்டுக்குக் காரணம். சிறுபோது அவர்களுடைய நடத்தையின்மட்டில் உங்களுடைய கவனக்குறைவும் அஜாக்கிரதையுமல்லவா அதற்குக் காரணம்? உதாரணமாக, உங்கள் கடைக்குக் காவலாக ஒருவனை ஏற்படுத்தினீர்களென்று வைத்துக் கொள்வோம். அவன் காவல் செய்வதற்குப் பதிலாக, கடையைவிட்டு அங்குமிங்கும் போய்த் தூங்கி விழுந்துகொண்டு அஜாக்கிரதையாக இருப்பானாகில் திருடர்கள் வந்து கடையிலுள்ள முதலெல்லாம் கொள்ளையடித்துப் போவார்கள். அப்போது கடைக்கு எஜமானர்களாகிய நீங்கள் என்ன

சொல்லுவீர்கள்? காவற்காரனுடைய அஜாக்கிரதையினால் பொருள் திருட்டுப் போயிற்றென்று சொல்லி நஷ்டத்துக்கு உத்தரிக்கவேண்டுமென்று அவனைக் கட்டாயப்படுத்துவீர்களல்லவா? அவனைக் காவலிலும் வைப்பீர்களே. அது போலவே பிள்ளைகளுடைய ஆத்துமமும் உங்கள் கையில் ஒப்பிக்கப்பட்டிருக்கிறபடியால் சிறுபோதே நீங்கள் அவர்களுடைய நடத்தையைக் கவனியாவிட்டால் அவர்கள் பெரியவர்களானபிறகு கட்டிக்கொள்ளும் சகல அக்கிரமங்களுக்கும் நீங்களே காரணமாக இருப்பீர்கள். ஆனதுபற்றியே கடைசி நாளில் சர்வேசுரனுக்கு கண்டிப்பான கணக்கு கொடுக்கவேண்டியிருக்கும். சிறுபோதே கவனியாது கெட்டுப்போன பிள்ளைகளுடைய சரிதையொன்று கேளுங்கள். ஓர் பட்டணத்தில் ஓர் தகப்பனுக்கு இரண்டு குமாரர்களும், ஒரு குமாரத்தியும் இருந்தார்கள். தகப்பன் பிள்ளைகளுடைய ஆத்துமத்தைச் சிறிதேனும் கவனியாமல், சர்வேசுரனைப்பற்றிய ஞானத்தைத் தவிர்த்து, அதாவது மந்திரம், குறிப்பிடம், ஞான உபதேசம் இவைகளைப்பற்றி ஒன்றும் சொல்லிக்கொடுக்காமல் சர்வேசுரன் என்னும் வார்த்தையை முதலாய் உச்சரிக்கச் செய்யாமல், மற்றப் படிப்புகள் யாவும் குறையறக் கற்றுக்கொடுத்தான். தெய்வ பயமில்லாமல் வளர்ந்த அந்தப் பிள்ளைகள் மூவரும் மூடர்களாய்ச் சூதாடித்திரிந்து காமாதுரர்களாக மாறினார்கள். அவர்களுடைய தாயார் பிள்ளைகளுடைய நடத்தையைப்பார்த்து விசனத்தால் இருதயம் பிளந்து சடுதியில் இறந்தாள். தாய் இறந்ததும் இந்தத் துஷ்டப்பிள்ளைகள் வீட்டிலுள்ள சொத்துக்களையெல்லாம் அபகரித்துக்கொண்டு தகப்பனை அட்ட தரித்திரத்தில் விட்டுவிட்டார்கள். கொஞ்ச நாளைக்குள் அந்த நிர்ப்பாக்கிய தகப்பனுடைய மக்களில் ஒருவன் தான் செய்த அக்கிரம கொலைபாதகங்களுக்காகக் கழுமரத்தில் தூக்கப்பட்டு மரித்தான். குமாரத்தி லங்காகானாவில் அதாவது தரும அன்னசாலையில் தன் காலத்தைக் கழித்துச் செத்தாள். மற்றொரு மகனோ தன் பெண்சாதி பிள்ளைகளால் கைவிடப்பட்டு அவமானத்திற்கும் சகல துன்பங்களுக்கும் ஆளானான்.

யதார்த்தவாதி.

---

## Some New Rules of the Canon Law. (*Continued.*)

### திருச்சபைச் சட்டத்தின் சில புது ஒழுங்குகள். (தொடர்ச்சி.)

11. ஒரு கலியாணத்திற்குக் கொடுக்கப்படும் வாக்குத்தத்தம் செல்லுமானாலும் அதற்குச் சரியான முகாந்தரமில்லாதபோதிலும் கட்டாயமாய்க் கலியாணத்தை நிறைவேற்ற வேண்டுமென்று முயற்சியெடுக்கக்கூடாது. அதற்காக வியாஜ்ஜியம் தொடுத்தாலும் அந்த வாக்கு செல்லாது. ஆனால் அப்படிப்பட்ட வாக்குத்தத்தத்தினால் ஒருவருக்கு நஷ்டமுண்டானால் நஷ்டப்பட்டவர் அந்த நஷ்டத்துக்கு உத்தரிப்பு செய்யக் கேட்கலாம்.

12. எல்லா கத்தோலிக் பள்ளிக்கூடங்களிலும் ஞானோபதேசம் கற்பிக்கப்படும். பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தவும், அதற்குவேண்டிய பொருளுதவி செய்யவும், விசுவாசிகள் தங்கள் அந்தஸ்துக்குத்தக்கதுபோல் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

13. கோவிலுக்குச் சொந்தமான எவ்வித சொத்து அல்லது பொருள்களையும் அபகரிக்கிறவர்களும், அவைகளை அபகரிக்க உபாயம் தேடுகிறவர்களும், கோவிலுக்குச் சேரவிருக்கும் வரும்படிகளை வராதபடிக்குத் தடை செய்கிறவர்களும், அப்பேர்ப்பட்ட சொத்துக்களை உத்தரிக்கும் வரையில் திருச்சபையின் சாபனைக்கு உட்பட்டிருக்கிறார்கள்.

14. வேண்டுமென்று மனசு பொருந்தி கெற்பம் அழிக்கிறவர்களும், அதை அழிக்க உபாயம் தேடி அழித்தவர்களும், திருச்சபையின் சாபனைக்கு உட்படுகிறார்கள்.

15. திருச்சபைக்கும், அல்லது முறையான அதிகாரமுள்ள சர்க்காருக்கும் விரோதமாய் ஏற்படுத்தப்பட்ட சபைகளிலும், விலக்கப்பட்ட இரகசிய சபைகளிலும் சேருகிற கத்தோலிக் கிறீஸ்துவர்கள் திருச்சபையின் சாபனைக்கு உட்பட்டிருக்கிறார்கள்.

16. இதர மதத்தில் கலியாணம் செய்கிற கத்தோலிக் கிறீஸ்துவர்கள் திருச்சபையின் சாபனைக்கு உள்ளாகிறார்கள்.

17. இதர மதத்தில் தங்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிற கத்தோலிக் கிறீஸ்துவர்கள் திருச்சபையின் சாபனைக்கு உள்ளாயிருக்கிறார்கள்.

18. கத்தோலிக் வேதத்தைத்தவிர இதர மதத்தில் தங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கிறவர்களும், வளர்க்கிறவர்களு

மான கத்தோலிக் தாய் தந்தையரும் அல்லது அவர்களுக்குப் பதிலாக அப்பிள்ளைகளை வளர்த்துக் காப்பாற்றிவருகிற கத்தோலிக் கிறீஸ்துவர்களும் திருச்சபையின் சாபனைக்கு உட்பட்டிருக்கிறார்கள்.

19. திருச்சபையின் சாபனைக்கு உட்பட்டிருக்கிறவர்கள் ஷெ சாபனை தீரும்வரையில் பாவசங்கீர்த்தனம், திவ்விய நன்மை, இன்னும் மற்ற தேவதிரவிய அநுமானங்களைப் பெறக்கூடாது. அதுவுமல்லாமல் திருச்சபையின் திவ்வியபூசை, செபம் இது முதலிய நன்மைகளுக்குப் பங்காளிகளல்ல.

20. சாபனைக்கு உட்பட்டிருக்கிறவன் அதினின்று நீங்கி மன்னிப்பு அடையவேண்டுமானால் விக்கினங்களை விலக்கித் திருச்சபைக்குக் கீழ்ப்படிந்து மேற்றிராணியாராலாவது, அதிகாரமுள்ள குருவானவராலாவது கொடுக்கப்பட்ட அபராதத்தைத் தீர்த்து நிவர்த்தி செய்துகொள்ளவேண்டியது.

---

## Letter to a Friend.

### சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

பிரிய சிநேகிதா !

மனிதருடைய பாவப்பழியைப்போக்கி அவர்களை மோட்சக் கரைசேர்க்க, கடவுள் இவ்வுலகத்தில் மனிதனாகப்பிறந்து உன் பாவங்களைத் தாமே சுமந்து உனக்காக அவர் தமது ஜீவனைவிட்டார். உன் அழியாத ஆத்துமம் முடியாத பாக்கியத்தை அடைய நீ நடக்க வேண்டிய வழியைக் காண்பித்திருக்கிறார். சரீர ஆசாபாச சிற்றின்பச் சேற்றில் ஆழ்கியிருந்த பொல்லாத மனிதர்கள் இச்சன்மார்க்க நெறியை அழிக்க என்றும் எவ்வளவோ முயன்றும் அவர்களுடைய பிரயாசை சித்தி பெறவில்லை. "இதோ! பூலோகமுடியுமட்டும் எப்பொழுதும் உங்களோடு இருக்கிறேன்" என்று தமது சீஷர்களுக்குக் கர்த்தர் உரைத்த வாக்கியம் பொய்யாகுமா? அச்சத்திய நெறியை உலகமுழுதும் விசுவசிக்கிறதைக் காண்கிற நீயும் அதை விசுவசிக்கவேண்டாமா? நீ ஈடேறும் சத்திய நெறியை அவர் காண்பித்திருக்க நீ அதைச் சட்டைபண்ணாமல் இருக்கலாமா?

ஆனால் ஒரு ஊருக்குப்போகப் பல பாதைகள் இருப்பது போல மோட்சம் அடைவதற்கும் பலமார்க்கங்கள் இருக்கக்கூடுமென்று நீ சொல்வாயாக்கும். அப்படிச் சொல்வது



தவறு. ஏனென்றால் ஒரு ஊர் எந்தத் திசையில் இருக்கிறதென்று அறிந்தவன் அந்தத் திசையை நோக்கிச் செல்லுகிற ஒரு பாதையிலே சென்றால்தான் ஆசிக்கிற அவ்வூரில் போய்ச் சேருவான். ஊர் மனிதர் கண்ணாலே பார்க்கக்கூடிய காரியமாகையால் அதைக் காண்பவர் அதற்குப் போகப் பல பாதைகளையும் உண்டாக்கிக்கொள்ளுகிறார்கள். ஆனால் கடவுள் கண்ணுக்குத் தென்படாதவர். அவர் மனிதனுடைய ஞானத்துக்கு எட்டாதவர். அவரை மனிதன் தன்னுடைய அற்ப புத்தியால் சரியாய் அறிய முடியாது. ஆனபடியால் அவரிடத்தில் போகும் வழியையும் மனிதன் நிச்சயமாய்க் கண்டுபிடிக்கமுடியாது. ஒரு ஊரை அறிந்தவன்முதலாய்ச் சில சமயங்களில் அவ்வூருக்குச் செல்லும் வழி தப்பிவிடக்கூடும். மனிதன் தன் மங்கலான புத்தி வெளிச்சத்தினால் கடவுளைச் சரியாய் அறியக்கூடாமலிருக்கும்போது அவரிடம் போகும் வழி தப்பிப்போவது ஆச்சரியமா? இப்படியே மனிதன் கடவுளிடத்திற்குப் போவதற்காகத் தானாகவே வழி கண்டுபிடிக்கக் கூடாமல், பற்பல தப்பறையான மார்க்கங்களை ஏற்படுத்திக்கொண்டு வந்தபடியால்தான் கடவுள் மனிதனாகி சேசுவென்னும் நாமம் தரித்து உலகத்தில் புண்ணிய போதகராய் எழுந்தருளிவந்து சத்திய ஈடேற்ற வழியைக் காண்பித்தருளினார்.

சேசுநாதர்சுவாமி போதித்தருளிய சத்திய மார்க்கந்தான் மோட்சத்துக்குச் செல்லும் ஏகபாதை மற்றப்பாதைகளெல்லாம் ஞானக் குருடரான மனிதரால் உண்டாக்கப்பட்டிருக்கிறபடியால் அப்பாதைகளில் நடக்கிறவர்கள் வழிதப்பிப் போகிறவர்களாகிறார்கள். சேசுநாதர்சுவாமி போதித்த சத்திய நெறியைத்தவிர மற்ற மார்க்கங்களெல்லாம் தள்ளிவைக்கப்படவேண்டும். உன் சமயம் எவ்வளவு ஆதி பாரம்பரையான சமயமாக இருந்தாலும் அதினால் பயனில்லை. உன் வேத கோட்பாட்டின்படி நீ எத்தனை தீர்த்தங்களை ஆடினாலும், எத்தனை விரதங்களை, நோன்புகளை அநுஷ்டித்தாலும், எத்தனை ஆலயங்களைத் தரிசித்தாலும் உனக்கு ஈடேற்றம் இல்லை. உன் மதக் கிரிகைகள் எவ்வளவு புண்ணியமுள்ளவைகளாக இருந்தாலும் இருக்கட்டும். அவைகள் இரட்சணிய வழியாகக் கடவுளால் நியமிக்கப்படவில்லை. காடெல்லாம் பற்றியெரிகிற பெரு நெருப்பை ஓர் துளி தண்ணீரால் அவித்துவிடக் கூடாததுபோலவே, சர்வலோக ஆண்டவராகிய தேவனுக்கு விரோதமாகச் செய்யப்பட்ட பாவப்பழி மனி

தர்களால் கற்பிக்கப்பட்ட எவ்வித சடங்கு ஆசாரங்களினாலும் விமோசனமாகமாட்டாது. ஆகையினால் மனிதருடைய மட்டில்லாத துரோக அக்கிரமத்தை நிவர்த்தி செய்வதற்காகவே, மட்டில்லாத தேவசுதன் மனிதனாய் அவதாரம் செய்துவந்து அதற்குப் பரிகாரம் செய்து அவர் பட்ட பாடுகளின் பேறு பலனை அடைய விரும்புவோர் நடக்கவேண்டிய வழியை நியமித்திருக்கிறார். கடவுள் நியமித்த அந்த வழி எது? அவர் 1900 வருஷங்களுக்கு முன் உலகத்திலே மனுஷ அவதாரம் பண்ணிவந்தபோது போதித்தருளிய சத்திய வேதமே அந்த வழி. அந்த வழியையே கத்தோலிக்கு கிறீஸ்துவர்களாகிய நாங்கள் கைக்கொள்ளுகிறோம்.

ஆகையினால், பிரிய சிநேகிதா! நீயும் மறு உலகில் நித்திய பாக்கியம் அடைய வேண்டுமானால் கத்தோலிக்கு கிறீஸ்து வேதத்தைக் கைக்கொண்டு அதைச் சரிவர அநுசரித்து வருவது உனக்கு இன்றியமையாத அவசரமாயிருக்கின்றது என்று அறிந்துகொள்வாயாக.

இப்படிக்கு,
உன் பிரிய நண்பன்.

---

## St. Thomas and India.
## அர்ச். தோமையாரும், இந்தியாவும்.

சேசுநாதர் பரலோகத்திற்கு எழுந்தருளின பிறகு அப்போஸ்தலர்கள் இஸ்பிரீத்துசாந்துவை அடைந்து உலகமெங்கும் போய்ச் சத்திய வேதத்தைப் போதித்தார்கள். அர்ச். தோமையாருக்குப் பற்பல தேசங்களோடு இந்தியா தேசமும் நியமிக்கப்பட்டது.

அர்ச். தோமையார் தூரத்தினிமித்தம் இந்தியாவுக்குப் புறப்பட்டு வரத் தத்தளித்துப் பயப்பட்டுக்கொண்டு தாமதம் செய்தார்.

அதைப்பற்றி ஒரு நல்ல கதை சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:—

முற்காலத்தில் இந்தியாவில் குண்டப்பாரா என்னும் ஒரு மஹா ராஜன் இருந்தான். ஒரு நாள் அவன் அழகிய ஒரு தேவாலயத்தையும் அரண்மனையையும் சொற்பனத்தில் கண்டான். விழித்தவுடன் அவன் தான் காட்சியில் கண்டது போல் தேவாலயமும் அரண்மனையும் கட்டத் தீர்மானித்தான்.



(Habban) ஹப்பன் என்னும் ஒரு வர்த்தகனை அவன் வரவழைத்துத் தேசங்களிலெல்லாம் நல்லதும் அழகுள்ளதுமாகிய மேற்கு தேசத்திற்குப் போய் நான் கனவில் கண்ட அரண்மனையையும் தேவாலயத்தையும் கட்டக்கூடிய ஆளைக் கூட்டிக்கொண்டுவாவென்று கட்டளையிட்டு அனுப்பினான். வர்த்தகன் அவ்வண்ணமே கப்பலேறிச் சீர்மைக்குப் போய்ச் சேர்ந்து கடலோரத்தில் ஒரு நாள் உலாவிக்கொண்டிருக்கையில் அர்ச். தோமையார் எதிரில் வருவதைக் கண்டு அவரை நோக்கி, "என்னுடைய இராஜாவுக்கு அழகிய நல்ல அரண்மனையும் தேவாலயமும் கட்டக்கூடியவர் நீர்தானல்லவோ?" என, அவர், "ஆமாம், என்னால் கட்ட முடியும்" என்று சொல்லிச் சம்மதித்தார்.

மறுபடியும் அர்ச். தோமையார் இந்தியாவுக்குப் புறப்படத் தத்தளிக்கையில் சேசுநாதர் தரிசனையாகி, "தோமாஸ்! இந்தியாவுக்கு உடனே புறப்பட்டுப் போய் அங்கே அஞ்ஞான இருளில் இருக்கும் ஜனங்களுக்குச் சத்திய வேதத்தைப் போதிக்கக்கடவாய்" என்று சொல்ல, அவர், "தயவுசெய்து இந்தியா தேசத்தைத் தவிர வேறு எந்த தேசத்துக்கு அனுப்பினாலும் போகச் சித்தமாயிருக்கிறேன்" என்றார். அப்போது சேசுநாதர், "இந்தியாவுக்குப் போகப் பயப்படாதே. உன்னைக் கைவிடாமல் நான் உன்னோடேகூட இருப்பேன். உனக்கு அங்கே அநேக கஷ்ட துன்பங்கள் நேரிடும். எல்லாவற்றையும் சகித்து அங்கே சத்திய வேதத்தைப் போதித்த பிறகு உனக்கு நான் மோட்ச ராச்சியத்தில் சம்பாவனை கொடுப்பேன்" என்று சொல்ல, அவர், "ஆண்டவரே! உமது ஊழியனை இந்தியாவுக்கு அனுப்பாதேயும். அது கஷ்டம் நிறைந்த தூர தேசம், தவிர அத்தேசத்தார் காட்டு மனுஷர்களாயும் துஷ்ட குணமுள்ளவர்களாயும் இருக்கிறார்கள்" என்றார். அதற்குச் சேசுநாதர், "தோமாஸ்! உடனே நீ புறப்பட்டுப் போ. நான் உதவியாக இருப்பேன்" என்று சொல்ல, அவர், "ஆண்டவரே! என் சர்வேசுரா! உமது சித்தம் செய்யப்படுவதாக" என்று சொல்லிவிட்டு, மற்ற அப்போஸ்தலர்களிடம் போய், " "நான் இந்தியாவுக்கு நித்திய ஜீவியத்தின் அரண்மனையைக் கட்டும்படி போகிறேன். எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" என்று சொல்லி, அவர்களுடன் கண்ணீர் விட்டழுதுவிட்டு இந்தியாவுக்குப் புறப்பட்டார்.

Olim.

---

## Here and There.
## நானா சங்கதிகள்.

The War.—ஜெர்மானியர் முன்பு பிரான்ஸ் தேசத்தின் வட எல்லையிலுள்ள கடலோரத்தைப் பிடிக்கப் பிரயாசப்பட்டு முடியவில்லை. பிறகு பாரீஸ் பட்டணத்தைப் பிடிக்க ஆசைப்பட்டு முயற்சிசெய்து வருகிறார்கள். நேசக்கட்சியார் ஒரே மனதோடும் தைரியத்தோடும் அவர்களைப் பலமாய் எதிர்க்கிறார்கள். ஜெர்மானியருக்குள் உயிர்ச்சேதம் அகோரமாயிருக்கிறது.

ஜெர்மனியிலும், ஆஸ்டிரியாவிலும் ஜனங்கள் படும் கஷ்டம் அதிகம். விசேஷமாய் ஆஸ்டிரியர் சமாதானமும் உணவும் வேண்டுமென்று கூவுகிறார்கள். அவர்கள் தாங்கள் ஜெர்மானியரோடு சேர்ந்து சண்டையில் இறங்கினது தப்பென்று கண்டுபிடித்து முறையிடுகிறார்கள்.

சங். கோலர் சுவாமியார் (Rev. Fr. J. Kohler) குன்னூர் உதவி பங்கு சுவாமியாராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

(Rev. Fr. Drouhin) சங். துருஹேன் சுவாமியார் தமது 46-வது வயதில் கடந்த மே-மீ 26-உ பெங்களூர் அர்ச். மார்த்தம்மாள் ஆஸ்பத்திரியில் மரணமடைந்தார். இவர் புதுச்சேரி மேற்றிராசனத்தில் 21 வருஷகாலமாக உழைத்தவர். விசேஷமாக இவர் கடலூர் பங்கு குருவானவராக உழைத்து வந்தார். இவர் பங்கு வேலை விஷயத்திலும், பள்ளிக்கூட விஷயத்திலும் மெத்த பிரயாசை யெடுத்துக்கொண்டதுமல்லாமல் (Children's Friend) "குழந்தைகளின் நேசன்" என்னும் சிறிய தமிழ்ப் பத்திரிகையொன்றைப் பள்ளிக்கூட விஷயங்களைப்பற்றிச் சாமர்த்தியமாகப் பிரசுரம் செய்து வந்தார்.

Rupee Notes.—தற்காலம் வழங்கிவரும் ஒரு ரூபாய், இரண்டரை ரூபாய் நோட்டுகள் நம்பர் மாத்திரம் கெடாமல் அழுக்கடைந்திருந்தாலும் கொஞ்சம் கிழிந்திருந்தபோதிலும் செலாமணியாகுமென்று யாவரும் அறிந்துகொள்ளவேண்டியது.

## For the Church of the Sacred Heart Coimbatore.
## கோயம்புத்தூர் திரு இருதயக்கோவில் கட்டடத்திற்கு தர்மம்

| | |
|---|---|
| ஒத்தகமந்து : | அந்தோணி கூக் — ரூபாய் 1. |
| குன்னூர் : | ஆரோக்கியசாமி — ரூபாய் 1. |

---


# The St. Anthony's Messenger.
# அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. IV. August 1918. No. 8.

புத்தகம் IV.] FIDES AC ROBUR. [நம்பர் 8.


1-AUG 1918

## MORAL INSTRUCTION.
## நல்லொழுக்க போதனை.

### Loyalty.
### இராஜ பக்தி.

ஒரு தேசத்து ஜனங்கள் தங்கள் அரசரிடத்துக் காட்ட வேண்டிய கடமைகள் எல்லாம் இராஜபக்தி அல்லது இராஜ விசுவாசத்துள் அடங்கும்.

இராஜாவுக்கு மரியாதைசெய்வதும், அவரை நேசிப்பதும், அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதும் பிரஜைகளுடைய கடமைகளாம். "எல்லார்க்கும் தெய்வம் இலைமுகப் பைம்பூண் இறை" என்றபடி, இராஜா கடவுளது அனுக்கிரகத்தால் தமது அதிகாரத்தைப் பெற்றுத் தமது தேசத்தை நீதி தவறாமல் ஆண்டு, தமது பிரஜைகளை நல்வழிப்படுத்தி, அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைத் தேடுவதால் அவர் கடவுளுக்குப் பதிலாக இருப்பவராவார்.

அரசர் கையில் பிடித்திருக்கும் செங்கோல் துஷ்டர்களைக் கண்டித்துச் சிஷ்டர்களைப் பரிபாலிக்கும் ஒரு அடையாளமாய் இருக்கிறது. அவரது கிரீடம் மேன்மைக்கு அறிகுறி. ஆகையால் நாம் அவருக்கு மரியாதை செய்வோமாக.

இராஜா பொது நன்மைக்காக ஏற்பட்ட சட்டதிட்டங்களைக் காப்பவராகையினால் நாம் அச்சட்டங்களை அனுசரிப்பதில்

அவ்வரசருக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளவேண்டியது. அச்சட்டங்களை மீறி நடப்பவர்களைத் தண்டிக்கும் அதிகாரமும் அவருக்கே உரியது.

அச்சட்டங்களின் உதவியினாலேயே அவர் நீதியையும், நல்லொழுக்கத்தையும் ஒழுங்குப்படுத்தி நமது சொத்துக்களையும் ஜீவனையும் காப்பாற்றி வருகிறார். ஒழுங்கான சட்டதிட்டங்கள் ஏற்பட்டிராத தேசம் பாழாகும். அத்தேசம் அலங்கோலப்படும். அங்கே திருடர், கொலைபாதகர், கூட்டக் கொள்ளைக்காரர்முதலிய துஷ்டர்கள் வன மிருகங்களைப் போல சஞ்சரித்து ஜனங்களைப் பயமுறுத்தி அவர்களுக்குப் பல ஆபத்துக்களை விளைவிப்பார்கள். மேலும் அந்நாட்டுக்கு அத்திருடர் முதலியோரோ பெரியதனக்காரர் ஆவதுடன் அந்நாடெங்கும் அக்கிரமம் தலை துளிர்த்துவிடும்.

விக்டோரியா சக்கரவர்த்தினி என்னும் நல்லரசியின் நாள்முதல் நாளது தேதிவரையில் நமது இந்தியா தேசம் இங்கிலீஷ் துரைத்தனத்தாருக்கு உள்ளடங்கி எத்தனையோ நன்மைகளை அடைந்திருக்கின்றது. ஆகையால் அவ்விராஜாங்கத்தாருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே நாம் நமது இராஜ விசுவாசத்தைக் காட்டும் வழியாகும். மேலும் நமது சக்கரவர்த்தியார் தக்க மந்திரிகளோடு ஆலோசித்துத் தமது அதிகாரத்தை நடத்திவருவதினாலும், நாம் அவரை நேரில் கண்டு மரியாதை செய்வது அசாத்தியமானதாலும், அவருக்குப் பிரதிநிதிகளாக இங்கே அமைந்து அவரது காரியங்களைத் தமது சொந்தக் காரியங்களைப்போல எண்ணி சர்வ ஜாக்கிரதையாகவும் தவறு நேரிடாமலும் நடத்தும் வைசிராய், கவர்னர், கலெக்டர், தாசில்தார்முதலிய அவருடைய சிப்பந்திகளுக்கு அடங்கி நடப்பது நாம் அவருக்கு மரியாதை செய்ததுபோலாகும்.

வேந்தனது உத்தியோகம் இலகுவும் சுகமுமானதென்று நினைப்பது தவறு. “கிரீடம் தரித்த தலை நிம்மதியற்றுக் கிடக்கிறது” என்பது ஒரு பெரியவர் வசனம். ஏன்? அரசனுக்குக் கணக்கில்லாத சஞ்சலம் உண்டு. ஒரு குடும்பத்தை நடத்தும் தாய் தந்தையர்களுக்குள்ள சஞ்சலம் சொல்லப்படாததானால் அநேகமாயிரம் குடும்பங்களை நடத்தும் அரசனது சஞ்சலத்தை எண்ணவும் முடியுமா?

இவ்வுலகத்தில் ஒரு குடும்பத்துக்குப் பல விரோதிகள் இருப்பதுபோலவே ஒவ்வொரு தேசத்துக்கும் பல பகைவர்கள் இருப்பார்கள். அவர்கள் தங்கள் படைக்கலங்களைக்



கொண்டு யுத்தம் செய்கையில் இராஜா அவர்களைத் துரத்தித் தமது நாட்டைக் காக்க மிகவும் முயற்சி செய்கிறார். அப்பொழுது பிரஜைகள் அவருக்கு வேண்டிய உதவி செய்து அப்பகைவர்களைத் துரத்தக் கடமைப்பட்டவர்களாம். சத்துருக்கள் நமது நாட்டில் படையெடுத்து, நமது வீடுகளையும், நிலபலன்களையும் சுட்டுக் கெடுத்து, நமது பெண்களையும் குழந்தைகளையும் கொல்லுகையில் நாம் பேசாமல் இருக்க முடியுமா? நமது உயிரைக் கொடுத்தாயினும் தேச க்ஷேமத்தைக் கருதுவோமல்லவா? அப்பேர்ப்பட்ட காலங்களில் தேசத்துக்கு நாயகனாகிய இராஜாவுக்கு உதவி செய்பவர்களே நல்ல இராஜ விசுவாசம் உள்ளவர்களாம்.

மேற்சொன்ன பகைவர்கள் புறப்பகைவர்களாம். ஒரு அரசனுக்குச் சில உட்பகைவர்களும் உண்டு. இவர்கள் ஒருவனது தேகத்தில் உண்டான இரத்தக்கட்டிபோன்றவர்கள். அக்கட்டியானது சரீரத்தை எப்படி நோய்க்கு உட்படுத்தி மற்ற நரம்புகளிலும் வலியை விருத்தி செய்து சரீரத்தை அழிக்கிறதோ அப்படியே இவ்வுட்பகைவர்களும் இராஜாவினிடத்து ஜனங்களுக்குள்ள விசுவாசத்தைக் கெடுத்து அவர்களை இராஜாங்கத்துக்கு விரோதமான காரியங்களைச் செய்யும்படி தூண்டி, நாட்டின் செம்மையைக் கெடுத்து முடிவில் நாட்டையே சீர்குலைத்துவிடுகிறார்கள். சரீரத்தின் நன்மைக்காக அக்கட்டிகளைத் தக்க ரண வைத்தியர்களைக்கொண்டு சத்திரம் செய்வித்து அழித்துவிடுவதுபோலவே, நாமும் அக்கட்டி போன்ற உட்பகைவர்களை இராஜபக்தியென்ற கத்தியினால் அறுத்து, இராஜாங்க உத்தியோகஸ்தர்களாகிய வைத்தியர்களைக்கொண்டு சிட்சை செய்வித்து நாட்டைச் சுத்தப்படுத்தி நன்மைக்குக் கொண்டுவரவேண்டும். இத்தகைய உட்பகைவர்கள் “இருப்பதைக் கைவிட்டுப் பறப்பதைப் பிடிக்க” முயலுபவர்கள். இவர்கள் ஜனசமூகத்துக்கே விரோதிகள். இவர்களது சொல்லை நம்பவாவது, இவர்களது துர்ப்போதனைக்குக் காது கொடுக்கவாவது கூடாது. “கடவுளை நம்பு. அரசனுக்கு அடங்கு” என்னும் உத்தரவுக்குக் கீழ்ப்படி.

கதை:—தற்காலம் நடந்துவரும் ஐரோப்பிய மகா யுத்தம் 1914-ம் வருஷத்தில் ஆரம்பித்தபோது பிரான்ஸ் தேசத்தில் 15-வயதுள்ள சிறுவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு மாடு மேய்ப்பது வேலை. பிரெஞ்சு போர்வீரர்கள் சத்துருக்களாகிய ஜெர்மானியரை எதிர்க்கச் செல்லுகையில், அச்சிறுவன் தானும் அச்சத்துருக்களோடு சண்டை செய்வதாக

உடன் வந்தான். ஆனால் சேனை உத்தியோகஸ்தர் அவனைக் கண்டு, "தம்பீ! நீ வராதே. சிறுவனானதால் ஜெர்மானியர் உன்னைக் கொன்றுவிடுவார்கள். நீ திரும்பவும் உன் வீட்டுக்குப்போ" என்றார். அதற்கு அச்சிறுவன், "என் உயிர் போனால் போகட்டும். அதைப்பற்றி எனக்குப் பயமில்லை. என் தேசத்திற்கு நான் உதவிசெய்வேன். ஆயிரம் பட்சிகளைச் சுட்டிருக்கிறேன். என் சத்துருக்களையும் சுடுவேன்" என்றான். அந்த உத்தியோகஸ்தர் அவன் கையில் இருந்த துப்பாக்கியைப் பிடுங்கிக்கொண்டு அவனைத் துரத்திவிட்டார். ஆனாலும் அந்தப் பையன் மனஞ்சோராமல் வேறு போர்வீரர்களது கூட்டத்தோடு சேர்ந்து யுத்தத்துக்குச் சென்றான். சண்டையில் குண்டுபட்டு இறந்துபோன ஓர் போர்வீரனுடைய உடுப்பையும் துப்பாக்கியையும் எடுத்துக்கொண்டு கஷ்டத்தையும் ஆபத்தையும் கவனியாமல் அநேக பகைவர்களைக் கொன்றான். ஒரு நாள் ஒரு வீட்டில் ஒளிந்திருந்த சில ஜெர்மானியரைக் கைதிசெய்து வெகு பெருமையாக உத்தியோகஸ்தரிடம் ஒப்புவித்தான். அந்த உத்தியோகஸ்தரும் மற்றவர்களும் அவனை மெச்சி மறுபடியும் வீட்டுக்குப் போகும்படி அவனை அனுப்பினார்கள்.

அதனால் ஒவ்வொருவரும் இந்தப் பையனைப்போல் தனது தேசத்தையும் இராஜாவையும் நேசித்து, அரசர்க்குச் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்தி, தம்மால் ஆனவரையில் இராஜபக்தியைக் காப்பாற்றி வரக்கடவார்களாக.

(சத்திய நேசன்.)

## Duties of Parents towards their Children.
(Continued.)

## பிள்ளைகள்மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.
(தொடர்ச்சி.)

மாதா பிதாக்களே! உங்கள் பிள்ளைகள் மட்டில் நீங்கள் கண்ணும் கருத்துமாக இருப்பதோடு அவர்கள் குற்றம் செய்யும்போது, "அடிப்பது ஒரு கை, அரவணைப்பது ஒரு கை." என்பதைக் கடைப்பிடித்து, அவர்களைத் தண்டிக்கவேண்டியது. உங்கள் பிள்ளைகள் பிற்காலத்தில் யோக்கியர்களாக வாழவேண்டுமோ, மெய்யான கிறீஸ்துவர்களாக ஜீவிக்கவேண்டுமோ சிறுபோதே அவர்களுடைய குற்றங்களைக் காட்டி அவர்களைத் தண்டிப்பது உங்கள் கடமை.

நமது தேசத்திலுள்ள பெற்றோர்கள் இந்த விஷயத்தில் குற்றவாளிகள் ஆகிறார்கள். எப்படியென்றால், ஒன்றில் பிள்ளை



களுடைய தீக்குணங்களைப் பாராமுகமாய்க் கொஞ்சமேனும் கவனியாது விட்டு விடுகிறார்கள்; அல்லது, "கோபம் சண்டாளம்." என்றபடி மூர்க்கமாக வெறிபிடித்தவர்களைப்போல ஈவு இரக்கமில்லாமல் கண் காதென்றும் பாராமல் அநியாயமாய் அடித்துத் தண்டிப்பார்கள். பிரம்பைக் கையில் எடுக்காமல் பிள்ளைகளைச் செல்லமாய் வளர்த்து வரும் தாய் தந்தையரே! உங்கள் கடமையைச் சற்று யோசித்துப் பாருங்கள். புறத்தியான் ஒருவன் உங்களுக்குத் துரோகம் செய்தகாலத்தில் அவனுக்குத் தகுந்த புத்தி சொல்லிக் கண்டிக்க உங்களுக்குக் கடமை உண்டு. அப்படியிருக்க உங்கள் பிள்ளைகளுடைய தப்பிதங்களைக் கண்டிக்கவேண்டியது உங்கள் கடமையல்லவா? "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றம் செய்தால் அவனிடத்தில் நீ போய்த் தனிமையாக அவன் குற்றத்தை அவனுக்குக் காட்டி அவனைக் கண்டிப்பாயாக. அவன் உனக்குக் காது கொடுத்தால் உன் சகோதரனை நீ ஆதாயப்படுத்திக்கொண்டாய்" என்று பரிசுத்த சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. புறத்தியார் செய்த தப்பிதத்தை உணர்த்தக் கடமையுள்ள பெற்றோரே! சர்வேசுரனுக்கும் உங்களுக்கும் துரோகம் செய்த பிள்ளைகளின் குற்றங்களுக்காக அவர்களைத் தண்டிக்க உங்களுக்குக் கடமை இல்லையா?

சர்வேசுரன் புத்திர பாக்கியத்தை உங்களுக்குக் கொடுத்தபோதே பெரும் சுமையை உங்கள் தலைமேல் சுமத்தியிருக்கிறார். பிள்ளைகளுடைய ஆத்தும சரீர நன்மைகளைத் தேடி அவர்களைக் காப்பாற்றவே அவர்கள்மேல் அதிகாரம் கொண்டிருக்கிறீர்கள். இந்த அதிகாரத்தை முன்னிட்டுத் தானே பிள்ளைகள் உங்களைப் பயபத்தியோடு பேணி, உங்களுக்குப் பணிந்து நடக்கிறார்கள். காரியம் இப்படியிருக்க சர்வேசுரனிடமிருந்து நேராக நீங்கள் பெற்றுக்கொண்ட இந்த அதிகாரத்தைச் செவ்வனே செலுத்தி வருகிறீர்களோ? குற்றவாளிகளான பிள்ளைகளைக் கவனியாது கண்டியாது விடுதல் நீங்கள் பெற்றுள்ள அதிகாரத்துக்குத் துரோகமல்லவா? மிதமிஞ்சின செல்லத்துக்கும் இளக்காரத்துக்கும் இடங்கொடுப்பது பிள்ளைகளுக்குத் தின்மையே தவிர நன்மையல்ல. தங்கள் பிள்ளைகளை உண்மையாக நேசிக்கிறவர்கள் சமயத்துக்குச் சமயம் அவர்களைத் தண்டியாது விடமாட்டார்கள். "தன் குமாரனை நேசிக்கிறவன் அவனை அடிக்கடி கண்டிக்கக்கடவான், அடங்காத குதிரை மூர்க்கமாகப் போகின்றது. சுய இஷ்டத்

துக்கு விடப்பட்ட குமாரன் துரிதமாகச் செல்வான். அவன் பிடிவாதக்காரன் ஆகாதபடிக்கும், அதனால் உன் ஆத்துமத்துக்குக் கஸ்தி உண்டாகாதபடிக்கும் வாலிபத்திலேயே அவன் கழுத்தை வளைத்துச் சிறுபோதே அவன் பக்கங்களைப் புடை" என்பது வேதவாக்கியம. ஆகவே மாதா பிதாக்களே! குழந்தைப் பருவ முதற்கொண்டே உங்கள் பிள்ளைகளைத் தண்டித்து வரவேண்டியது அவசியமென்று அறிந்துகொள்ளுங்கள். கோபக்குணம், பிணக்கு, பிடிவாதம் இவைகளைக் காணும்போதே இரண்டொரு அடி கொடுத்து அவர்களைச் சீர்ப்படுத்தவேண்டும. பகையும் காய்மகாரமும் முளைக்கும்போதே அவற்றைக் கிள்ளியெறியவேண்டும். பொய்யும் பித்தலாட்டமும தலையெடுக்கும்போதே அவைகளை நசுக்கிவிடவேண்டும. ஆங்காரமும் கர்வமும் முட்டும்போதே தலை நிமிர விடாமல் அவற்றை அமுக்கிவிடவேண்டும். (இன்னும் வரும்.)

யதார்த்தவாதி.

## True and False Devotion.

### மெய்யான பக்தி விசுவாசமும், கள்ள பக்தி விசுவாசமும்.

| மெய்யான பக்தி விசுவாசம் உள்ளவன். | கள்ள பக்தி விசுவாசம் உள்ளவன். |
|---|---|
| 1. சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட ஆயக்காரனைப்போல் தான் பாவியென்று எண்ணி தாழ்ச்சி யுள்ளவனாக இருப்பான். | 1. சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட பரிசேயனைப்போல் மற்றவர்களைப் பார்க்கிலும் தான் புண்ணியவான் என்று எண்ணி ஆங்காரமுள்ளவனாக இருப்பான். |
| 2. தர்ம குணமுள்ளவன். அவன் தர்மம் செய்யும்போது தான் வலது கையால் செய்வது அவனது இடது கைக்குத் தெரியாதபடி இரகசியமாகச் செய்வான். | 2. தன்னை மாத்திரம் நினைத்துக்கொள்வான். ஒரு தர்மம் செய்தாலோ தன்னை யாவரும் புகழும்படி ஊர் முழுதும் பறை சாற்றுவான். |
| 3. தயவுள்ளவன் புறத்தியார்பேரில் வீண் சந்தேகப்படுவதில்லை. | 3. கன்னெஞ்சன் புறத்தியார்பேரில் கெட்ட எண்ணம் கொள்வானேயொழிய நல்லெண்ணம் வைப்பதில்லை. |



| மெய்யான பக்தி விசுவாசம் உள்ளவன். | கள்ள பக்தி விசுவாசம் உள்ளவன். |
|---|---|
| 4. இரக்கமுள்ளவன், "எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்போலே எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும்" என்பதை உயர்வாக மதித்து மற்றவர்கள் குற்றங்களை எளிதாய் மன்னிக்கிறான். | 4. நிர்த்தாக்ஷணியமுள்ளவன் அடிக்கடி அந்தச் சுகிர்த ஜெபத்தைச் சொல்லி வந்தாலும் புறத்தியாருடைய அற்ப குற்றங்களைமுதலாய் மன்னிப்பதில்லை. |
| 5. கீழ்ப்படிதலுள்ளவன். | 5. எல்லா விஷயத்திலும் பத்தி விசுவாசங்களில்முதலாய் தன் இஷ்டம்போல் நடக்க மனதுள்ளவன். |
| 6. இடைவிடாமல் கோவிலிலும், வீட்டிலும், மற்றெவ்விடங்களிலும் ஒரேவிதமான மாறாத பக்தி விசுவாசமுள்ளவன். | 6. இன்று அர்ச். அந்தோனியாருக்கு வேண்டுதல் செலுத்த முழங்காலால் நடப்பான்; நாளைக்கு மொகரம பண்டிகையில் புலி வேஷம் போட்டுத் தடியெடுத்து ஆடுவான். ஒரு நாள் கோவில் சமனசு, மற்றொரு நாள் வீட்டுப் பசாசு. |
| 7. எல்லா விஷயத்திலும் பக்தி விசுவாசமுள்ள ஒழுங்கு அநுசரித்துக்கொண்டு, தன் அந்தஸ்தின் கடமைகளையும் பக்தி விசுவாசத்தோடு சரியாய் நிறைவேற்றுவான். | 7. ஒழுங்கு அநுசரியாமல் தான் செய்யவேண்டிய தன் அந்தஸ்தின் கடமைளைச் சரியாய் நிறைவேற்ற மனமில்லாமல் வேலை நேரத்தை ஜெப நேரமென்றும், ஜெப நேரத்தில் வேலை அதிகமென்றும் சொல்லி, வீண் சாக்குப்போக்கு தேடுவான். |
| 8. இப்பூலோகத்தில் செலாமணியாகும் நல்ல நாணயமாகிய பக்தி விசுவாசம் பரலோகத்திலும் செல்லும். | 8. இப்பூலோகத்தில் செல்லாத நாணயமாகிய கள்ளப் பக்தி விசுவாசம் நரகத்தில் செல்லும். |

## Letter to a Friend.

### சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

*பிரிய சிநேகிதா!*

முன் சொல்லிய வியாசங்களைக்கொண்டு கத்தோலிக்கு திருச்சபையே கரையேறுவதற்காகக் கடவுள் நமக்கு அருளிய சத்தியமார்க்கமென்றும், அதை நீ அநுசரித்து ஒழுகினாலன்றி உனக்கு மீட்பு இல்லையென்றும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகக் கண்டுணர்ந்திருப்பாய். ஆனால் "இந்து மார்க்கத்தில் பிறந்து வளர்ந்து அதையே இவ்வளவு நாளாய் அநுஷ்டித்துக்கொண்டுவந்த நான் இப்பொழுது அதை விட்டு கிறீஸ்துவனாவது எப்படி? இவ்வளவு நாளாய்த் தகப்பனென்று நான் அழைத்துவந்தவரைத் தள்ளிப் புறக்கணித்து இப்பொழுது வேறொருவரை அப்பாவென்று கூப்பிடுவது எப்படி?" என்று சொல்வாயாக்கும். அப்படிச் சொல்வது ஞாயமல்ல. உன்னை உண்டாக்கிக் காப்பாற்றிப் போஷித்து வரும் தகப்பன் மெய்யான கடவுள்தாம் அல்லவா? இத்தனை நாளும் இந்த மெய்யான கடவுளை நீ அறியாமலும் அவரைக் குறித்து நம்பத்தகாத காரியங்களை நம்பியும் வந்திருக்கிறாய். இப்போது நீ செய்யவேண்டியதென்ன? இவரை நீ உண்மையாக அறியவேண்டும். உள்ளபடி இவர் எப்படிப்பட்டவர்? இவர் மனிதர் கரையேறுவதற்கு ஏற்படுத்திய வழிபாடுகள் எவை? இவரை வணங்கி ஆராதிக்கவேண்டிய விதம் என்ன? என்பவற்றை நீ சரிவர அறிந்துகொள்ளவேண்டும். இவைகளையே சத்தியவேதம் போதிக்கின்றது.

ஆனபடியால் நீ வேறொருவரை அப்பாவென்று கூப்பிடுகிறதல்ல; இதுவரைக்கும் நீ அறியாமலிருந்த உன் சொந்த தகப்பனை (கடவுளை) இப்போது அறிந்துகொண்டாய். முன்னே நீ சிறு பிள்ளையாக இருந்தகாலத்தில் யோசிக்கும் தன்மை உன்னிடம் அதிகமாக இருந்ததில்லை. மற்றவர்கள் சொல்வது மெய்யோ பொய்யோ என்று கவனியாமல் நம்பிவந்தாய். ஆனால் இப்போது நீ வளர்ந்திருக்கிறபடியால் முன்னே நீ அறியாத எத்தனையோ காரியங்களை அறிந்திருக்கிறாய். மனிதர்கள் சொல்வதை முற்றும் ஏற்றுக்கொள்ளாமல் அவைகள் நம்பத்தக்கனவோ அல்லது வெறும் கட்டுக்கதைகளோவென்று இப்போது நீ யோசித்து ஆராய்ந்து பார்க்கிறாய். சிறுபத்தில் முழு உலகமும் உன் வீடேயென்று நினைத்திருக்க, நீ



வளர வளர அந்த எண்ணம் எவ்வளவு விபரீதமாக மாறிப் போயிற்று.

உன் முன்னோர்கள் இந்துமதஸ்தராய் இருந்ததினாலென்ன? அவர்கள் தவறாய் நம்பி வந்தவைகளை நீயும் நம்பவேண்டுமா? பூமி தட்டையானதென்று ஆதி பாரம்பரையாகச் சகலரும் எண்ணி வந்தார்களே. ஆனால் இப்பொழுது அது உருண்டைவடிவானதென்று சொல்பவர்களோடு நீயும் ஒத்துக்கொள்ளுகிறதில்லையா? சூரியன் பூமியைச் சுற்றி ஓடுகிறதென்று ஆதிதொட்டு நமது தேசத்தார் நம்பிவந்ததை இப்போது சகலரும் பொய்யென்று தள்ளிவிடவில்லையா? அப்படியே நீயும் இதுவரையும் அநுசரித்துவந்த மார்க்கம் சத்திய சமயமல்ல என்று காணும்போது உன் பழய மார்க்கத்தை விட்டுச் சத்தியமார்க்கத்தைச் சேர்ந்துகொள்ளலாம்; அதில் சேர்ந்துகொள்ளவும் வேண்டும்.

நீ சத்திய மார்க்கத்தில் சேர்ந்தால் உன் சுற்றத்தார் சிநேகிதர் உன்னைப் பழித்து நகைப்பார்களென்று பயப்படாதே. அவர்கள் அப்படி உன்னை இகழ்வதினால் எவ்வளவு நியாயமற்றவிதமாக நடந்துகொள்ளுகிறார்களென்று பார். நீ மகா துஷ்டனாய், துன்மார்க்கனாய், குடிகாரனாய் நடக்கப்போனால் அதைப்பற்றி ஒன்றும் பேசார்கள்; உன்னைக் கவனிக்கவுமாட்டார்கள். நீ நன்றாய் விசாரித்தறிந்து உன் மனச்சாட்சியின்படி சத்தியமறையில் சேரும்போது அவர்கள் உன்னை நிந்திப்பது பெருந்தப்பறை; அது ஞாயத்துக்கும் நீதிக்கும் அடுக்காது. உன் இன சனத்தார் உன்னை இதற்காக இகழ்ந்தால்தானென்ன? கொஞ்சகாலம் அவர்களுக்குப் பிரியப்படுவதற்காக ஊழியுள்ளகாலம் நரக நெருப்பில் வேக மனங்கொள்வாயோ? பரிச்சேதமில்லை. உள்ளபடி பார்த்தால் நடக்கிறதென்ன? ஒரு இந்து மதஸ்தன் சத்திய வேதத்தைத் தழுவிக்கொண்ட துவக்கத்தில் அவன் உற்றார் பெற்றார் அவனை இகழ்வார்கள். ஆனால் சில நாள் கழிந்தோ அவனுடைய தைரியத்தையும் நல்லொழுக்கத்தையும் கண்டு அவனைப் புகழ்வார்கள். கடைசியாய்த் தாங்களும் சத்திய மார்க்கத்தில் சேருவதே புத்தியென்று உணர்ந்து அதைத் தழுவிக்கொள்வதை அநுபோகத்தினால் கண்டுவருகிறோம். ஆகையினால், பிரிய சிநேகிதா! தைரியத்தைக் கைவிடாமல் உன் மனச்சாட்சியின் நல்ல ஏவுதலைப் பின்பற்றி நீ நடப்பாயாக.

இப்படிக்கு,
உன் பிரிய நண்பன்.

## Evils of Drunkenness.

### மதுபானத்தினால் விளையும் துன்பங்கள்.

மதுபானம் செய்கிற மதியீனர்கள் பணத்தைக் கொடுத்துப் பைத்தியத்தை விலைக்கு வாங்குவதுபோல் விலக்கற்கரிய பல துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். அவர்களுடைய குடியே குடியைக் கெடுக்கின்றது. தாயென்றும் தாரமென்றும், நல்வினையென்றும் தீவினையென்றும், கீர்த்தியென்றும் அபகீர்த்தியென்றும், பேதம் தெரியாமல் வீட்டைவிற்று, மாட்டை விற்று, உடைமையை விற்று, மானம் கெட்டு, மரியாதை கெட்டு, மதி கெட்டு, பெண்சாதி ஒரு பக்கம், பிள்ளைகள் ஒரு பக்கம், சொந்தக்காரர் ஒரு பக்கம், தாங்கள் ஒரு பக்கமாகத் திரிகிற குடியர்களுடைய பெருமை என்னென்று சொல்லலாம்!

"அவர்களுக்குக் கள், சாராய, பீர்க்கடைகளே ஆஸ்தி; குப்பை மேடே குடியிருப்பு; புழுதியே போர்வை; சாணியே தலையணை; ஆகாசமே ஆடை; மதுபானமே அன்னபானாதிகள்; வறுமையே துணை," என்று நாம் தாராளமாகச் சொல்லலாம். கள்ளையோ, சாராயத்தையோ, பீரையோ குடித்தவுடனே அவர்கள் தங்கள் சரித்திரங்களைத் தாங்களே சொல்லிக் கொள்ளுகிறவர்களாதலால் அவர்கள் மகத்துவத்தை இங்கே விஸ்தரித்துச் சொல்லவேண்டியதில்லை. "கள்ளைக் கொடுத்து உள்ளதைக் கேள்;" "சாராயத்தைக் கொடுத்துப் பூராயத்தை அறி" என்னும் பழமொழிகள் வழங்குகின்றனவே. கள்ளுக்குச் சொல் விளம்பி யென்றும் ஒரு பெயருண்டு.

"போதைக்காரன் பேச்சு பொழுது விடிந்தால் போச்சு" என்றபடி சொல்லாததைச் சொல்லித் தின்னாததைத் தின்று செய்யாததைச் செய்து வாயில் வந்ததைக் கண்டபடி பிதற்றி எங்குந் திரிந்து விழுந்து கிடந்து எழுந்து நடந்தால் இடறி விழுந்து, குடிக்கக் கையில் பணம் இல்லாத சமயத்தில் கொள்ளையடித்து, சூதாடி, கண்டவர்களைத் திட்டி, கன்னமிட்டு, பிறரை யேமாற்றி, கடுந்தண்டனை அடையும் குடிகாரரின் பரிதாப ஸ்திதியை நாம் கண்டும் கேட்டும் இருக்கிறோம்.

அந்தோ! மதுபானம் செய்வோர்கள் அறிவு மயக்கத்தால் கண்ணிருந்தும் குருடராகவும், காதிருந்தும் செவிடராகவும், வாயிருந்தும் ஊமைராகவும், கல்வி யிருந்தும் மூடராகவும், செல்வமிருந்தும் தரித்திரராகவும் காணப்படுவார்களேயொழிய எக்காலத்தும் தங்கள் இயற்கை சுபாவத்தோடு விளங்க மாட்டார்கள். மேலும் கள், பீர், சாராயம் சாப்பிடுவதால்



இவர்கள் அறிவு கெட்டு, முயற்சி பயனற்று, மானம் மரியாதை அழிவதுடன் பத்து மாதம் சுமந்து பெற்ற தாயும், பத்தி பிரமாணிக்கமுள்ள பத்தினியும், பிரியமேவும் பிள்ளைகளும் கோபித்துவெறுத்து அசூயை அடையும்படி சம்பவிக்கின்றது. அன்றியும் மது மயக்கத்தால் மானங் கெட்டு நாணமிழந்து திரிகையில், குடிகாரரைக் கண்டோர் பாம்பைக் கண்டாற் போலவும் தீய பாதகரைப் பார்த்தாற் போலவும் அஞ்சி நடுங்கி இகழ்ந்து விலகிக்கொள்வர். காமம் எவ்வாறு ஒழுக்கங்களைக் கெடுக்கின்றதோ அவ்வாறே குடியும் அறிவைக் கெடுத்து மயக்கத்தை விளைப்பதால் இக்குடியானது காமத்துக்கு முதற் காரணமாகின்றது. திரண்ட செல்வராயினும், சிறந்த அரசராயினும், தேர்ந்த கற்றோராயினும் அன்னோர் மதுபானப் பழக்க முடையோராயின் சில நாளைக்குள் தம்மிடத்துள்ள சகலத்தையும் இழந்து பாழடைவர்; தமது ஊழியராலும் தூஷிக்கப்படுவர். ஆகவே பெரியோர்களால் துன்மார்க்கரென்னும் பட்டப்பெயரடைந்து மதிப்புக் கெட்டுப் போகவேண்டுமென்று விரும்புவோர் யாரோ அவரோ இம்மதுவை அருந்தல் வேண்டும். (இன்னும் வரும்.)

---

## The Priest and the Brahmin.

### குருவானவரும், பிராமண சாஸ்திரியும்.

முற்காலத்தில் வசித்துவந்த பொங்கனூர் மகாராஜா (Rev. Fr. Jarrige) சங். ஜாரிஷ் என்னும் கத்தோலிக் குருவானவர்பேரில் மிக்க பட்சமுள்ளவராக இருந்தார். ஒருநாள் அவர் தமக்கு முன்பாகவும் தமது ஜனங்களுக்கு முன்பாகவும் தம்முடைய பிராமண சாஸ்திரியாரைக் கூப்பிட்டு, அவருக்கும் மேற்படி குருவானவருக்கும் வேதத்தைப்பற்றி ஒரு தர்க்கம் நடத்தத் தீர்மானித்து இதற்காக ஒரு நாள் நியமித்து அரண்மனை முன்னிலையில் அவர்களை வரவழைத்தார். அப்படியே குறிக்கப்பட்ட நாளில் அவ்விருவரும் தர்க்கம் செய்ய ஆரம்பிக்கையில் முதலில் பிராமண சாஸ்திரியார் வேதத்தைப்பற்றி ஒன்றும் சொல்லாமலும் கேளாமலும் தமது சமஸ்கிருதத்திலுள்ள வேத சங்கிதை யென்னும் சில வாக்கியங்களை மாத்திரம் மனப்பாடமாய் எடுத்துச் சொன்னார். குருவானவர் அதைக்கேட்டு அப்பாஷை தமக்குத் தெரியாமையினாலும்

இப்படிப்பட்டவர்களுக்கு வேத சத்தியங்களை விவரித்தும் பயனில்லையென்று நினைத்தமையினாலும் அக்கூட்டத்தில் எழுந்து நின்று இனிய குரலோடு (Laudate Dominum omnes gentes.) லொதாத்தே தோமினும் ஓம்னெஸ் ஜென்தெஸ், அதாவது, சகல ஜாதிகளே கர்த்தரைப் புகழுங்கள் என்று ஆரம்பிக்கும் சங்கீதத்தை லத்தீன் பாஷையில் பாடினார். எல்லோரும் ஒரே மவுனமாயிருந்து கேட்டார்கள். பிறகு சாஸ்திரியார் கண்திறந்து பார்த்து தமக்கு ஒன்றும் தெரியவில்லையென்று சொல்லிக் கோபித்து முறையிட்டார். அதற்கு இராஜா சிரித்துக்கொண்டு, "அது மெய்தான், நீர் அந்தக் குருவானவருக்குத் தெரியாத பாஷையில் பேசினீர், அவரும் அவரது சீமை சமஸ்கிருத பாஷையில் பேசினார். அவர் சொன்னது சரிதான்" என்று சொல்லி அவர்களுக்கு உத்தரவு கொடுத்து அனுப்பினார். அடுத்த நாள் அந்த இராஜா ஷெ குருவானவருக்குச் சந்தோஷமாகச் சில வெகுமானங்களை அனுப்பிவைத்தார். "அடிக்கும் பிடிக்கும் சரியாய்ப் போச்சு."

(Olim)

---

## Here and There.

### நானா சங்கதிகள்.

The War. இத்தாலியர் பிரிட்டிஷ், பிரான்ஸ் இவற்றின் உதவியைக்கொண்டு ஆஸ்டிரியரைத் தோற்கடித்து ஒரு முக்கியமான இடத்தில் ஜெயமடைந்தார்கள். ஆஸ்டிரியருக்கு உயிர்ச் சேதமும் சாமான்கள் சேதமும் அதிகம். பிரான்ஸ் தேசத்தில் முன்பு ஜெர்மானியரால் பிடிபட்ட கிராமங்களில் சிலவற்றை நேசக்கட்சியார் மறுபடியும் பிடித்துக்கொண்டார்கள். மாஸிடோனியா போர்முகத்தில் நேசக் கட்சியார் சில ஊர்களையும் கைதிகளையும் பிடித்திருக்கிறார்கள். ஜெர்மானியரின் நீர் மூழ்கி அல்லது ஜல கீழ்கப்பலால் உண்டான சேதங்களை நேசக்கட்சியார் அவைகளுக்குத் தகுந்த உபாயம் தேடித் தடுத்திருக்கிறார்கள்.

இந்த ஐரோப்பிய மகா யுத்தம் துவக்கி நான்கு வருஷம் கடந்து ஐந்தாவது வருஷம் துவக்குகிறது. இந்த ஐந்தாவது வருஷத்தில் நேசக்கட்சியாருக்கு ஜெயமும் பூலோகத்திற்குச் சமாதானமும் உண்டாகும்படி கடவுளைப் பிரார்த்திப்போமாக.


# The St. Anthony's Messenger.

## அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. IV. September 1918. No. 9.

புத்தகம் IV.] FIDES AC ROBUR. [நம்பர் 9.


## MORAL INSTRUCTION.

## நல்லொழுக்க போதனை.

### Covetousness.

### உலோபம்.

கிரமம் தப்பி செல்வத்தின்மேல் ஆசைப்படுவது உலோபம் என்று சொல்லப்படும்.

அநேகர் திரவிய சம்பன்னராவதற்குப் பற்பல அநியாயங்களையும், சூதுவாதுகளையும், பொய்யையும், திருட்டையும், மற்றும் பல அயோக்கியமான காரியங்களையும் செய்வதுண்டு. அவ்வகை செய்யமுடியாத சிலர் எவ்வளவு உழைத்தாலும் கருதிய பயனை அடையாமல் வறுமையால் வருந்துகிறார்கள். பேராசை பெரும் பைத்தியமென்றே சொல்லலாம்.

உலோபிக்கு ஆஸ்தி யதேஷ்டமாக கிடைத்தாலும் அவனுக்கு மனச்சாந்தி கிடைக்கிறதா? இல்லை. ஏனெனில், அவனுக்குப் பொருள் அதிகமாகக் கிடைக்கக் கிடைக்கப் பேராசையும் அதிகமாகின்றது. தாகம் உள்ளவன் உப்பு நீரைக் குடிக்கக் குடிக்கப் பின்னும் அவனுக்குத் தாகம் அதிகப்படுவதுபோலவே, பேராசைக்காரனுக்குப் போதுமென்ற மனமே பொருந்தாமல் பின்னும் பின்னும் பொருள் சேர்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கிறான். அப்பொருள் எவ்வழியாக வருகிறதென்பதை அவன் சற்றும் கவனிப்ப

இல்லை. பணத்தின் பெருமை அது தரும் பயனால் என்பதை உணராமல் பணத்தைத் தொகுப்பதற்காக அப்பணத்துக்கு ஊழியம் செய்கிறான். அவன் பணத்துக்குச் செய்யும் ஊழியத்தின் அளவுக்கு அப்பணம் அவனுக்குத் தக்க பலன் தருவதில்லை. அப்பணத்தைச் சேகரிக்க அவன் படும் பாடும், விசாரமும் கணக்கில் அடங்கா. 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பதும், 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே, அல்கா நல்குரவு அவா எனப்படுமே' என்பதும் அவனுக்குப் படுவதில்லை அப்பொருளை யீட்டுவதும் துன்பம், அதனைப் பாதுகாத்தலும் துன்பம், அதனை அளிப்பதும் துன்பம், அதனைப் பிறரிடத்தில் இழத்தலும் துன்பமேயாகும். அன்றியும் அப்பொருள் திருடர்களது கையில் படாதபடி காப்பது கஷ்டமும் அபாயகரமுமானது. 'அதிக ஆசை அதிக தரித்திரம்' என்பதுபோல எங்கே பண ஆசை அதிகரிக்கிறதோ அங்கே நற்குணமும் குறைந்துபோகின்றது. 'ஆசை இல்லையானால் அழுகையும் இல்லை' என்னலாம்.

மனிதனுக்கு வேண்டிய அன்னவஸ்திரம் முதலியவைகளுக்கு அத்தியாவசியமான செலவுகளுக்கு வேண்டிய பணம் இருந்தால் போதும். மனிதனுக்கு அதிகம் அவசியமில்லை. 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமே.' பூமியில் பொன் புதைந்துள்ள இடங்களில் மற்றொன்றும் பயிராவதில்லை. அதுபோல், பொன்னாசையுள்ளவன் மனத்திலும் மற்றொன்றும் தோன்றுவதில்லை அவனது மனம் வாக்குக் காயங்கள் பொன்னாசையிலேயே நிற்கும். பொருளாசை உள்ளவனுக்குக் குரு இல்லை, பந்துவும் இல்லை, அவன் இருதயம் கல்லைப்போல் கடினமானது. அவன் சொல்லிலும் செட்டுச் செய்து, பொருள் தேடுவதிலேயே கவனமாக இருப்பான்.

ஒருவன் பிறக்கும்போது உலகிற்குக் கொண்டுவந்தது ஒன்றுமில்லை. உலகைவிட்டு இறக்கும்போதும் கூடக் கொண்டுபோகப் போவது ஒன்றுமில்லை. அல்லது அவன் வருந்திப் படைத்த சொத்தை நெடுநாள் அனுபவிப்பானென்பதும் இல்லை. அப்படியிருக்க அவன் அப்பொருளைத் தேடப் படும் கஷ்டத்துக்கோ அளவில்லை. அவன் இறக்கும்போது தான் ஒன்றும் கொண்டுபோக முடியாமையினால், தான் பட்ட அவ்வளவு சிரமமும் வீணாய்ப்போக, வாழ்நாளைத் தெய்வ சிந்தையில்லாமல் வீண் நாளாக்கினோமே யென்ற வருத்தத்தோடு, கொல்லனுலையைப்போல மூக்கு பெருமூச்சுவிட வருந்தி, அத்தனை சொத்தையும் வைத்துவிட்டுப் போகிறோமேயென்ற



விசனத்தோடு இறப்பான். கிஜினி மகம்மூதின் உடலெல்லாம் மண்ணாய்ப் போனாலும் அவன் கண்கள் மாத்திரம் உலகத்தில் தான் வைத்துவிட்டுப் போன அளவற்ற திரவியங்களையும் தேடிப் பார்த்துக்கொண்டிருக்கிறதாகக் கூறியுள்ள 'குலாபித் தோட்டம்' என்ற ஒரு பாரஸீகப் பத்தியத்தை அறியாதார் யாவர்?

'அதனால் பணத்தின்மேல் ஆசை வைக்காதே. உன்னுடைய மகிமை பணத்தேட்டத்தால் ஏற்படுவதல்ல. 'தேட்டம் மரியாதை காணும். தரியாது காணும் தனம்' என்ற கிழவி சொல்லைக் கேட்டதில்லையா?

**கதை** :—ஒரு ஊரில் ஒரு உலோபி இருந்தான். அவனுக்குப் பலவழிகளிலும் பணம் சம்பாதிப்பதும் அவற்றைக் கெட்டிப்படுத்திவைப்பதுமே வேலை. நாளுக்கு நாள் அவனது செல்வமும் விருத்தியாகிக்கொண்டே வந்தது. அதன் பிறகு ஒரு நாள் அவன் தான் சம்பாதித்த பணத்தைக் கெட்டிபண்ண எண்ணி ஒரு நிலவறை ஏற்படுத்தி அதற்கு இரும்புச் சட்டங்களும் இரும்புக் கதவும் தயார் செய்வித்தான். அவ்விரும்புக் கதவு வில் வைத்தது. அதைத் திறக்கும்போது தக்க முன்ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளாமல்போனால் அது திறந்தவுடன் தானாகவே பூட்டிக்கொள்ளும். பின் உள்ளே போனவன் எவ்வளவு பிரயாசப்பட்டாலும் அதைத் திறக்க முடியாது. இவ்விஷயத்தை அப்பூட்டுக் கதவு செய்த கொல்லன் அக்கதவின்மேல் எழுதிவைத்தான். இப்பேராசைக்காரன் பிரதிதினமும் தக்க முன்ஜாக்கிரதையாகக் கதவு பூட்டிக்கொள்ளாதபடி ஏற்பாடு செய்துவிட்டு உள்ளே போய், தான் சேர்த்துவைத்துள்ள பணப்பைகளையெல்லாம் நெடு நேரம் உட்கார்ந்து எண்ணிப் பார்ப்பது வழக்கம். ஆனால் ஒரு நாள் தனக்கிருந்த பணவாசையின் வேகத்தினால் கதவு பூட்டிக்கொள்ளாதபடி தக்க முன்ஜாக்கிரதை யெடுக்காமல் உள்ளே நுழைந்து தன் பண வெறியை அனுபவித்துக்கொண்டிருந்தான். இதற்கிடையில் கதவைப்பற்றிய ஞாபகம் வரவே திடீரென்று திகிலடைந்தான். உள்ளிருந்து கத்திப்பார்த்தான். ஆனால் அவனுடைய சத்தம் ஒருவருக்கும் காதில் கேட்காததினால் யாரும் வரவில்லை. அவனுடைய வீட்டார் அவன் நெடுநேரமாக வராததைக்கண்டு அங்குமிங்குமாகத் தேடிப் பார்த்தார்கள்; அவனைக் காணவில்லை. இப்படிச் சில நாட்களாயின. அவன் காணாமற்போன சங்கதியைக் கொல்லன் கேள்வியுற்று அவ்வீட்டிற்கு வந்து அந்நிலவறையின்

இரகசியங்களைச் சொன்னான். கதவை உடைத்து உள்ளே போய்ப் பார்த்தபோது அவன் பணவெறியெல்லாம் பசிவெறியாக மாறித் தன் கைச் சதையைக் கடித்துத் தின்று பின் இறந்து அப்பணக் குவியலின்மேல் கிடப்பதைக் கண்டார்கள். என்ன பரிதாபம்! அவனுடைய பொக்கிஷ சாலை அவனுக்குக் கல்லறை ஆயிற்று.

ஆகையால், மனிதனே! ‘அதிக ஆசை அதிக நஷ்டம்’ என்பதை அறி. மனிதனுக்கு இவ்வுலக வாழ்வை நடத்துவதற்கு வேண்டியது சொற்பந்தானென்றும், அந்தச் சொற்பமும் சொற்ப நாட்களுக்குத்தான் தேவையென்றும் உணர்ந்து உள்ளதைக்கொண்டு திருப்தியடைந்திருப்பாயாக.

வளம்பட வேண்டாதார் யார்யாரும் இல்லை
அளந்தன போக அவரவ ராற்றல்
விளங்காய் திரட்டினார் இல்லை களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல். (நாலடி.)

சத்தியநேசன்.

---

## Duties of Parents towards their Children.
(Continued)

## பிள்ளைகள்மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.
(தொடர்ச்சி)

இதற்கு மாறாக, தாய் தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளைச் செல்லமாக வளர்க்கிறதுமல்லாமல் அந்தப் பிள்ளைகளின் துர்க்குணங்களையும் வளர விடுகிறார்கள். அன்னையும் பிதாவும் கெட்ட பிள்ளைகளை அடிக்கக் கையோங்கமாட்டார்கள். பிள்ளை என்ன தப்பிதம் செய்தாலும் சரி, எவ்வளவு ஆங்காரம் படைத்தாலும் சரி, அதை அதட்டி மிரட்டி அதற்குக் கஸ்தி வருவிக்க அவர்களுக்கு மனம் வராது. கண்டித்தால் என் பிள்ளை அழுமே, அதைக் கண்ணாலே பார்க்க முடியாதென்று தங்கள் மனதைத் தேற்றி, பிள்ளை இஷ்டம்போல் நடக்க விட்டுவிடுவார்கள். இந்த மதிகெட்ட தாய் தந்தையருக்குப் பிள்ளை வைத்ததே சட்டம். பிள்ளை கேட்டதெல்லாம் இவர்களிடத்தில் அகப்படும்; ஆசித்ததெல்லாம் சித்தியாகும். வீட்டுக்கு எஜமான் தகப்பனல்ல; பிள்ளையே. இந்த எஜமானுடைய கட்டளைப்படி அன்னையும் பிதாவும் அணிவிடை பணிவிடை செய்து நடப்பார்கள். இது என்ன பைத்தியம்! எவ்வளவு மதியீனம்! பிள்ளையுடைய இஷ்டம்போல் நடக்கவா மாதா பிதாக்களென்று ஏற்பட்டார்கள். இல்லை! இல்லை!!



160924

‘ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது’ என்றபடி இப்பொழுதே சிறுபோதுதானே அடக்கி வளர்க்காத பிள்ளை பிறகு யாருக்குமே அடங்காது.

அன்றியும், கோப வெறியால் அநியாயமாய்ப் பிள்ளைகளைத் தண்டித்துவரும் தாய்தந்தையர்களே! உங்கள் அநீத தண்டனையால் வரும் லாபம் என்ன? “நீ சாப்பிட்டாலும், பானம் பண்ணினாலும், வேறென்னத்தைச் செய்தாலும் சர்வேசுரனுடைய தோத்திரத்திற்காகச் செய்” என்ற நமது ஆண்டவருடைய ஆசைப்படியே பிள்ளைகளைத் தண்டிக்கிற அலுவலையும் நிறைவேற்றவேண்டும். பிள்ளைகளைத் தண்டிப்பது அவர்களைச் சர்வேசுரனுக்கு உகந்தவர்களாக்கத்தான். ஆயினும் தெய்வபக்தியுள்ள தாய்தந்தையர்கள் இந்த விஷயத்தில் குற்றவாளிகளாகிறார்கள். எப்படியென்றால் தங்களுக்குக் கோபம் வரும்போது மாத்திரமே தண்டிப்பார்கள். தப்பிதம் செய்யும் பிள்ளையை அநேக நாள் பராமுகமாக விட்டு, ஒரு நாள் தங்களுக்கு நல்ல குணம் இல்லாத சமயத்தில் ஒரு சிறு தப்பிதத்திற்கும் தலைக்கு மிஞ்சிக் கோபங்கொண்டு மாட்டை அடிப்பதுபோல் கண் காதென்று பாராமல் துடைப்பக்கட்டையோ, விளக்குத்தண்டோ அல்லது வேறெதுவோ கைக்கு வந்ததை எடுத்துக்கொண்டு கைசலிக்க அடித்து அரை உயிராக்குவார்கள். இது தர்மமா? உங்கள் கோபத்தைத் தீர்க்க இவ்வாறு தண்டிப்பது ஞாயமா? பிள்ளையுடைய குற்றத்துக்கு அப்போதைக்கப்போது தக்க தண்டனை கொடுக்காமல் பல நாள், பலமாதம் விட்டு விட்டு, ஏக சமயத்தில் எல்லாத் தண்டனையையும் சேர்த்து ஒருமிக்கக் கொடுத்தால் பிள்ளை திருந்துமா? தான் செய்த தப்பிதம் அல்ல, ஆனால் பெற்றோர்களின் கோபமே இத்தண்டனைக்குக் காரணமென்று அறிந்த பிள்ளை சீர்திருந்துமா?

நீதியில்லாமல் பிள்ளைகளைத் தண்டிக்கும் பெற்றோர்களும் சிலர் உண்டு. இவர்கள் தங்கள் பிள்ளைகள் தங்களுடைய விருப்பத்துக்கு மாறாக நடக்கும்போதும் அற்ப சொற்பப் பொருள் நஷ்டம் உண்டாக்கும்போதும் மாத்திரமே பிள்ளைகளைத் தண்டிப்பார்கள். மற்றப்படி என்னசெய்தாலும் சரி, எப்படி நடந்தாலும் சரி, அவர்களைக் கவனிக்கமாட்டார்கள். உதாரணமாக, ஒரு வளையல் அல்லது ஒரு பீங்கான் உடைத்த பிள்ளை தண்டனைக்குத் தப்பாது. ஆனால் அதே பிள்ளை ஞாயிற்றுக்கிழமை பூசைக்குத் தப்பினாலும்சரி, அயலார் தோட்டத்தில் எதையும் திருடி வந்தாலும்சரி, அசுசி

JL
O6;419bm 211, N15

யான வார்த்தைகளைச் சொன்னாலும்சரி இவைகளைக்கண்டு கொள்ளாமல் இளக்காரமாய் நடத்துவார்கள். பிள்ளைகள் ஆத்துமம் கெட்டுச் சர்வேசுரனுக்கு நிந்தை வருவிப்பது அவர்களுக்கு அக்கறையில்லை. தஙகளுக்கு நஷ்டம் வரும் போது மாத்திரம பிள்ளைகளைத் தண்டிப்பது நீதியல்ல. தப்பிதத்துக்குத் தக்க தண்டனை அப்போதைக்கப்போதே கொடுத்து வருவது உங்கள் கடமை.

யதார்த்த வாதி. (இன்னும் வரும்.)

---

## Ornaments of a Christian House.

## கிறீஸ்துவ வீட்டின் ஜோடினை.

1. ஒரு கிறீஸ்துவ வீட்டின் ஜோடினை சுத்தமாம் சுத்தமே வீட்டின் அழகாகும். அவ்வீடு எவ்வளவு தரித்திர கோலமாக இருந்தபோதிலும் அதிலுள்ள ஜாமான்களை ஒழுங்கோடு வைத்திருப்பதும், சமயா சமயங்களில் சுவர்களுக்குச் சுண்ணாம்பு பூசுவதும், வீடு முழுமையும் சுத்தமாக வைத்திருப்பதும் நல்லது. மேலும் வீட்டின் சுத்தம் தேக சௌக்கியத்துக்கு அவசரமான காரியங்களில் ஒன்று.

2. ஒரு கிறீஸ்துவ வீட்டிலே பாடுபட்ட சுரூபம் ஒன்று முக்கியமான ஓரிடத்திலே வைத்திருக்க வேண்டும். இது கிறீஸ்துவர்களுடைய அடையாளமாக இருக்கிறதுமல்லாமல் அது அவர்களுடைய ஆதரவுமாக இருக்கிறது. அந்தச் சுரூபம் வாய் திறக்காமலிருந்தாலும் குடும்பத்தாருக்கு இடைவிடாத போதனைக்கு இடமாயிருக்கும். எப்படியென்றால் குடும்பத்தாருக்குப் பக்தி பற்றுதல், பொறுமை, பிறசிநேகம் இவை முதலிய புண்ணியங்களை இடைவிடாமல் மனதில் போதிக்கும்.

3. பாடுபட்ட சுரூபத்திற்கு எதிரில் திரு இருதய படம் ஒன்று அகத்தியமாக இருக்கவேண்டும். திரு இருதயத்தைக் குடும்பத்தின் இராஜாவாக நியமிக்கவேண்டும். "அவர்களுடைய குடும்பங்களில் சமாதானத்தை விளைவிப்போம்" என்றும், "எங்கெந்த வீடுகளில் நமது இருதயப்படத்தை ஸ்தாபித்துச் சங்கிப்பார்களோ அவர்களை ஆசீர்வதிப்போம்" என்றும், நமது திவ்விய இரட்சகர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

4. பாடுபட்ட சுரூபத்தின் ஒரு பக்கத்தில் கண்ணாடிச் சட்டம் போட்ட தேவமாதாவின்படம் ஒன்று வைப்பது ஒழுங்கு. அந்தப் படத்தின் பார்வையானது பரிசுத்த தாயா



ரைப்பற்றி நினைக்கச் செய்யும். அந்தச் சுகிர்த நினைவு குடும்பத்தாரின் மனதில், கற்பு, அடக்கவொடுக்கம், சாந்தகுணம், பக்தி, இவை முதலிய நற்குணங்களை ஏவித்தூண்டிவரும்.

5 பாடுபட்ட சுரூபத்தின் மற்றொரு பக்கத்தில் அர்ச். சூசையப்பருடைய படம் வைத்திருப்பது ஒழுங்கு. ஏனென்றால், அர்ச். சூசையப்பர் கிறீஸ்துவ குடும்பங்களுடைய பரிபாலனரும் மாதிரிகையுமாக இருக்கிறார். மேலும் சேசு, மரி, சூசை யென்னும் மூவரும் நசரோத்தூரிலிருந்த தங்கள் வீட்டில் ஒருமிக்க வசித்து வந்ததுபோல, கிறீஸ்துவர்களுடைய வீடுகளிலும் இம்மூவரும் இருப்பது நல்லது. அர்ச். சூசையப்பர் ஏழையாக இருந்து சேசுநாதரையும், தேவமாதாவையும், தாம் தச்சு வேலை செய்து உழைத்துக் காப்பாற்றியது போல் கிறீஸ்துவர்களுக்குச் சுகிர்த மாதிரியாக இருந்து அவர்களுடைய தொழிலிலும் கஷ்டங்களிலும் அவர்களைத் தைரியப்படுத்திச் சுவாமிக்காகவே வேலை செய்ய வேண்டுமென்றும் அப்படத்தின் பார்வை கற்பிக்கும்.

6. தங்களுக்கு இஷ்டமான வேறு திருப்படங்களையும் வீட்டில் வைக்கலாம. ஆனால் எவ்வித சிற்றின்ப படங்களையும் அஞ்ஞான படங்களையும் வீட்டில் கண்டிப்பாய் விலக்கிவிடவேண்டியது.

7. கிறீஸ்துவ வீட்டின் முக்கிய அழகு என்னவென்றால் பக்தி, கீழ்ப்படிதல், ஒழுக்கம், இவைமுதலிய நற்குணமுள்ள பிள்ளைகளே. இவர்களைத் தர்ம வழியாக நடப்பிக்கிற தாய் தகப்பன்மார் ஆறுதலும் தேவாசீர்வாதமும் பெறுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

---

## Letter to a Friend.

## சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

பிரிய சிநேகிதா !

கடவுள் ஒருவரே யென்றும், மனிதன் ஈடேற்றமடைய அவர் ஏற்படுத்திய சத்திய மார்க்கம் ஒன்றே யென்றும், அது கத்தோலிக்கு வேதமேயென்றும் நீ அறிந்துகொண்டபிற்பாடு, இன்னும் உனக்கு இருக்கும் சொற்ப காலத்தை வீணாய்ப் போக்காமல், யாருடைய ஆட்சேபனைக்கும் காது கொடுக்காமல் அச்சத்திய மறையைத் தழுவி முடிவில்லாத பேரின்ப பாக்கியத்தையடைய உன்னை முஸ்திப்பு செய்யக் கடவாய். நீ கிறீஸ்துவனானால் ஜாதிக்கு அவமானம் வருமென்று அஞ்சுகிறாயோ? மேற்குலத்தாரொன்று சொல்லப்படு

கிறவர்கள் ஆயிரக்கணக்காகக் கிறீஸ்துவர்களாகி வருகிறதைப் பற்றி நீ கேள்விப்பட்டதில்லையா? கிறீஸ்து வேதம் ஜாதிக் கட்டுப்பாட்டை அழிக்க எக்காலத்திலாவது தேடியதில்லை. ஆத்தும ஈடேற்றத்துக்குரிய விசுவாசத்தைப் போதிக்கிறதேயன்றி மற்றக் காரியங்களில் அது தலையிடுவதில்லை. ஆகையால் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் அனைவரும் ஓரே கடவுளை ஓரே விதமாய் ஓரே ஆலயத்தில் தொழுது வந்தாலும், உலக விஷயங்களில் அவரவர் ஜாதிக்கட்டுப்பாட்டை அவ்வவ் ஊருக்குத் தக்கபடி அநுசரித்தே வருகிறார்கள்.

உன் உறவின் முறையார் உன்னை அவர்கள் சபையினின்று தள்ளிவைத்தாலும் என்ன? ஞானஸ்நானம் பெற்றுக் கிறீஸ்துவனாகினால் நீ பரலோக பாக்கியத்தை அநுபவிக்கும் விருந்துப் பந்திக்கு உரித்தாளியாக்கப்படுகிறாயே. நாலு நாளைக்கு மனிதரால் தள்ளிவைக்கப்படுவதற்கல்ல; நித்திய காலமாகக் கடவுளால் நரக பாதாளத்தில் தள்ளிவிடப்படுவதற்கே நீ அதிகமாய் அஞ்சவேண்டியது. சில சமயம் உன் பிழைப்பு கெடுமென்று பயப்படுகிறாயாக்கும். உனக்குப் பிழைப்பைத் தருகிறவர் யார்? உன்னை எக்ஷணத்திலும் ஜீவனோடு பாதுகாத்து வருகிறவர் யார்? ஏக மெய்யான கடவுள் அல்லவா? நாலைந்து மனிதர் கைவிடுகிறதோ அல்லது அளவில்லாத சர்வ வல்லபமுள்ள கடவுள் கைவிடுவதோ எது உனக்கு அதிக மோசம்? நீ கடவுளுக்காக உன் இனத்தாருடைய பகைக்கு ஆளானால் அவர் உன்னைப் பராமரிப்பார். உன்னைப்படைத்து இதுவரைக்கும் காத்துக்கொண்டிருக்கிற மெய்யான கடவுள் தம்மை வணங்கத்தொடங்குகிற உன்னை மறந்துவிடார். துரோகம்செய்து அவருக்குத் தூரமாயிருந்த நாளெல்லாம் பொறுமையாய்க் காத்துவந்தவர் தமக்கு ஊழியம் செய்யத் தொடங்குகிற உன்னைக் கைவிடுவாரோ?

பிரிய சிநேகிதா! பயப்படாதே. தைரியங்கொள். நாலு நாள் நிலைத்திருக்கிற சரீரத்துக்காகவும் சொற்ப பணம் தேடுவதற்காகவும மனிதர் எவ்வளவோ கஷ்டங்களை அநுபவிக்கிறார்கள். அழியாத ஆத்துமத்துக்காகவும் மோட்ச சம்பத்தை அனுபவிப்பதற்காகவும் சற்றே துன்பங்கள் வந்தாலும் அவைகளைச் சகிக்கப் பின்வாங்கவேண்டாம். ஆகையால் ஏக மெய்யான தேவனைத் தொழுதுவர ஓரே மனமாய்த் துணிந்துகொள். அவர் மானிடசுபாவம் எடுத்து மனிதருடைய பாவங்களைத் தமதுமேல் சுமந்து சகலருக்காகவும் எண்ணிக்கையில்லாத பாடுகளைப்பட்டுச் சிலுவைமரத்தில் பிராணனை விட்டாரென்



பதை விசுவசி. உன் மனதில் தோன்றுகிற சந்தேகங்கள், கலக்கங்களையெல்லாம் ஓட்டி அவருடைய திருச்சித்தத்தை அறிவிக்கிறதாகிய சத்திய கத்தோலிக்கு வேதத்திலே நீ சேர்ந்து அம்மார்க்கத்தில் உன் மரணமட்டும் நடக்க உனக்குப் பலம் கொடுக்கும்படி கேள். உன் மன்றாட்டை அவர் கேட்டு வரப்பிரசாதமாகிய ஞான வெளிச்சத்தை அவர் அருளுவார். பின்னும் தாமதியாமல் ஓர் கத்தோலிக்குக் குருவிடம் போய் உன் மனதின் நிலையை அவருக்குத் தெரிவித்து அவர் சொல்லுகிறபடி கேட்டு நட. ஏனென்றால் சாவு வருமென்பது நிச்சயம்; ஆயினும் அது எப்போது, எவ்விதமாய் வருமென்பதோ சந்தேகம். அவ்வேளையில் உன்மனம் சொல்லிமுடியாத கிலேசம், கலக்கங்களுக்கு உட்பட்டிருக்கும். அச்சமயத்தில் சத்தியவேதத்தைப்பற்றி அறியவும் ஞானஸ்நானம் பெறவும் கூடாமலிருக்கும். ஒரு பக்கத்தில் உலக இன சனமும், மற்றொருபக்கத்தில் பசாசும் அந்நேரத்தில் உன் மனதைக் குழப்பி, உன் நல்ல எண்ணத்தின்பிரகாரம் நீ நடக்காதபடிக்கு இடையூறாயிருப்பார்கள். இவைகளை இப்பொழுதே யோசித்துக்கொள். தாமதியாதே; தாமதித்தால் கடவுளுடைய கோபாக்கினையை உன்மேல் வரவிடுவதற்குக் காரணமாய் இருப்பாய்.

ஆகையால், பிரிய சிநேகிதா! தைரியமாய்ச் சத்திய கத்தோலிக்கு வேதத்தை உடனே கைக்கொண்டு, மரணபரியந்தம் அதில் நிலைநின்று, ஈடேற்றத்தை அடைந்துகொள்வாயாக.

இப்படிக்கு, உன் பிரிய நண்பன்.

---

## Evils of Drunkenness.

### மதுபானத்தினால் விளையும் துன்பங்கள்.

தகப்பன் வழியாக வந்த பொருளைக்கொண்டாவது அல்லது தான் சம்பாதித்த பொருளைக்கொண்டாவது அறிவை விருத்திசெய்து பலராலும் நன்கு மதிக்கப்படுவதை விட்டு, அப்பொருளைத் தகாத வழியில் அழித்து, அறிவைக்கெடுத்துக்கொண்டு, நீங்காப் பழிபூண்டு, யாவராலும் இகழ்ந்துரைக்கும்படி நடந்து வறியவராகிவிடுவது எவ்வளவு மதியீனம்! மது உண்ட ஒருவன் மது மயக்கத்தால் கால்வாயென்றும், ஜலதாரையென்றும், வீதியென்றும், வீடென்றும், புறந்திண்ணையென்றும், புழக்கடையென்றும், தெரியாமல் விழுந்துகிடப்பதைப் பலகால் கண்ணாரக் கண்டும், ஐயோ இதனை உட்கொண்டால் நம்மையும் இப்படித்தானே நாசப்படுத்துமென்

பதைக் கொஞ்சமேனும் உணராமல் மேலும் மேலும் அக்குடியை விரும்பும் நிர்ப்பாக்கிய குடியனைப்பார்த்து எவர்தான் நகையார்? மதுபானம் அறிவை மயக்குவதினால் மலத்தை அமுதமெனப் புசிக்கவும், அக்கினியை மலர்ந்த புஷ்பமெனக் கையிலெடுக்கவும், கொடுமை விளைக்கத்தக்க விரோதிகளிடத்தில் நேரே அகப்பட்டுக்கொள்ளவும் செய்யும். மதுபானிகளுக்கு விளையும் கொடிய தீமையை எவரால் வரையறுத்துக் கூறமுடியும்? மதுவை அருந்துவோருடைய கஷ்டங்கள் கோடி கோடி பல்லாயிரங் கோடி யென்னலாம். அத்தனை தீங்கும் கஷ்ட நஷ்டங்களும் இக்கொடிய மதுவை அருந்துதலொன்றாலே நேருகின்றனவெனத் தேர்ந்த புத்தியுடன் அறிந்துகொண்ட ஒருவன் மீண்டும் அதனை அருந்துவானாகில் அவனை மிருகங்களில் கடை கெட்ட மிருகமென்று சொல்வதில் என்ன தப்பிதம்? குடி பழகிக்கொண்டவர்கள் அக்குடியினால் வரும் கெடுதிகளையெல்லாம் தாங்களே அறிந்திருந்தும் அதை விலக்கிவிடச் சிறிதும் முயற்சிக்கிறார்களா? இல்லையே! அதை விலக்கிவிடக் கொஞ்சமேனும் பிரயாசை எடுப்பதைக் காணோம். இதற்கு ஒரு உதாரணம் கூறுவோம்.

ஒரு நாள் ஒரு குடிகாரன் தானுண்ட மதுவின் மயக்கத்தால் அதிக அசுசியான ஓரிடத்தில் வாயை ஆவெனத் திறந்துகொண்டு தலை கீழாக விழுந்து ஸ்மரணையின்றிக் கிடந்தான். அவ்வீதி வழியே கால் தள்ளாட நடந்து போய்க்கொண்டிருந்த சிறிது மயக்கக் குறைவுள்ள மற்றொரு குடியன் பிரக்ஞையின்றிக் கிடக்கும் அப்பெருங் குடியனைக் கண்டு, "சபாஷ்! சபாஷ்!" எனக் கை தட்டிக்கொண்டு தலை கீழாகக் கிடப்பவனைத் தூக்கிவிடாமல் அவனருகிலேயே உட்கார்ந்து வெகு ஆவலோடு அவனையே உற்றுப் பார்த்துக்கொண்டே யிருந்தான். ஒரு பெருங் குடியன் நினைவு தடுமாறித் தலை கீழாக விழுந்து கிடப்பதையும், மற்றொரு முக்காற் குடியன் அவனை உற்றுப் பார்த்துக்கொண்டே அருகில் அமர்ந்திருப்பதையும் அவ்வழியே சென்ற புத்திசாலி ஒருவன் கண்டு, "ஆ! இதென்ன ஆச்சரியம்! காரியம் ஒன்றும் தெரியவில்லையே! பரிதாபமான இக்காட்சி வெகு விநோதமாக இருக்கிறது. இதனை அறிந்து செல்வோம்" என்று ஒரு பக்கமாக ஒதுங்கி நின்று பார்த்துக்கொண்டிருந்தான். கைப்பொருளைக் கொடுத்து மது உண்டு மயங்கித் தலை கீழாகக் கிடந்தவன் சிறிது நேரத்தில் கொஞ்சம் மயக்கம் தெளிந்து கண்ணைத் திறந்து பெரு மூச்சு விட்டுப் புறண்டு படுத்தான். அவன் எப்போது



கண் திறப்பானோவென்று காத்திருந்த அந்த முக்காற் குடியன் அவனது உடம்பை அசைத்து, "ஹலோ! பிரதர்! எந்தக் கடையில் நீ இந்தச் சரக்கை வாங்கி உண்டாய்? நான் பக்காக் குடியனாக இருந்தும் நீ இப்போது குடித்திருக்கும் சரக்கைப் போல நான் ஒரு நாளும் குடித்ததில்லையே! ஆஹா! என்ன சத்துள்ள சரக்கு நீ சாப்பிட்டிருக்கிறாய்! இதல்லவா மதுபானம்? நீ இந்த மதுபானத்தை வாங்கி உண்ட கடையின் அடையாளத்தை அல்லது அக்கடைக்காரன் பெயரை எனக்குச் சொல்லவேண்டும் பிரதர். என்ன பாடுபட்டும் நான் அந்தக் கடைக்குப் போய்க் குடித்தால் தான் என் ஆவல் அடங்கும். ஆகையால் தயவு செய்ய வேண்டும் பிரதர்" என மிக்க பேராசையுடனும் பெருங் களிப்புடனும் கேட்டான். ஆ! இதென்ன மதியீனம்! (இன்னும் வரும்.)

## The Prince of Jaffna.

### யாழ்ப்பாணத்து இராஜ புத்திரன்.

முன் காலத்தில் யாழ்ப்பாணத்தை அரசாண்டு வந்த இராஜா ஒருவன் தன் இராஜ்ஜியத்திலிருந்த கிறீஸ்துவர்களை உபத்திரவப்படுத்திக்கொண்டிருந்தான். அச்சமயத்தில் 18 வயதுள்ள அவனுடைய புத்திரன் இராஜாவுக்குத் தெரியாமல் சத்திய வேதத்தில் சேர்ந்துகொண்டான். இராஜா அதையறிந்து வெகு கோபங்கொண்டு அவனைக் கூப்பிட்டு அந்த வேதத்தை மறுதலித்து விட்டுவிடும்படிக்கான வழிபாடுகளெல்லாம் தேடிப் பிரயாசப்பட்டான். ஆனால் அவ்வாலிபன் ஒன்றுக்கும் இணங்காமல், வெகு தைரியத்தோடு தன் தகப்பனை நோக்கி, "அப்பா! பசாசின் அடிமைத்தனத்திலிருந்து என்னை இரட்சிக்கச் சர்வேசுரன் கிருபை செய்தார். நான் இப்பொழுது கிறீஸ்துவனாயிருக்கிறபடியே நான் சாகும் பரியந்தம் இருப்பேன்." என்றான். இதைக் கேட்ட இராஜா அவனைப் பார்த்து, "நம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்ய என்னோடே வரவேண்டும். இல்லாவிட்டால் சாவாய்" என்று சொன்னான். அதற்கு அந்த இராஜ புத்திரன், "அப்பா! நான் வர மாட்டேன். மெய்யான கடவுளுக்குத் துரோகம் செய்வதைவிட நான் என் உயிரைக் கொடுக்க முஸ்திப்பாயிருக்கிறேன்" என்றான். அதைக் கேட்டு அந்த நிஷ்டூர இராஜா அவனுக்கு மரணத் தீர்வையிட்டு, கொலையாளிகளை யழைத்து, காட்டில் தன் புத்திரன் தலையை வெட்டிப் போட்டு வரும்படி உத்தரவு செய்தான்.

அதையறிந்து ஒரு குருவானவர் இரவிலே சென்று அந்தப் பிரேதத்தை யெடுத்து நல்லடக்கம் செய்தார். அடக்கம் செய்த மறுநாள் காலையில் ஒரு அற்புதமான சிலுவை அக்கல்லறையின்பேரில் காணப்பட்டது. இராஜா அதை யறிந்து ஷை கல்லறையை இடித்துத் தரை மட்டம் செய்யக் கட்டளை யிட்டான். மறு நாள் அக்கல்லறையின்மேல் முன் போலவே சிலுவை காணப்பட்டது. மறுபடியும் இராஜா அதை இடிக்கச் செய்தும் பயன்படவில்லை இடிக்க இடிக்க அற்புதமாக மூன்று நாள் வரையில் அக்கல்லறையின்பேரில் அச்சிலுவை காணப்பட்டே வந்தது. நாலாம் நாள் அச்சிலுவை அக்கல்லறையின்பேரில் நில்லாமல் அதற்கு நேர்மேலாக ஆகாயத்தில் காணப்பட்டது. இதைக் கண்ட அஞ்ஞானிகளில் பலர் ஓடிப்போனார்கள், சிலர் ஞானஸ்நானம் பெற்றுக் கிறீஸ்துவர்களானார்கள். (Olim.)

## Here and There.

## நாநா சங்கதிகள்.

The War: கடந்த சில வாரங்களாக ஐரோப்பிய யுத்தத்தில் நேசக் கட்சியாருக்கு அநுகூலமான சங்கதி வந்துகொண்டிருக்கிறது. ஜூலை-மீ 18-உயிலிருந்து இந்நாள் வரையில் பிரான்ஸ் போர்முனையில் மகத்தான ஜெயமடைந்து வருகிறார்கள். எழுபத்தையாயிரம் ஜெர்மானியரை கைதிசெய்து அநேக ஊர்களையும் யுத்த தளவாடங்களையும் பிடித்துக் கொண்டு சத்துருக்களைப் பின் தள்ளிவருகிறார்கள். ஜெர்மானியர்களின் மொத்த சேதம் ஷை ஜூலை-மீ 18-உயிலிருந்து மூன்று இலட்சத்து அறுபதினாயிரம் (3,60,000) பேர். ஜெர்மானியரோடு சமாதானத்திற்கு அடங்காத ருஷியருக்கு உதவியாக ஜப்பானியர் சைபீரியா வழியாக நேசக் கட்சியாருடன் சேர்ந்து தங்கள் சேனையை அனுப்பியிருக்கிறார்கள்.

Coimbatore: சரியாய் வந்திக்கத்தக்க அகுஸ்தீன் ரூவா ஆண்டவரவர்கள் சின்னப்பள்ளம், மேட்டூர், சவரியார்பாளையம், நகலூர், மிக்கேல்பாளையம் முதலிய பங்குகளை விசாரணை செய்துகொண்டு உறுதிபூசுதலென்னும் தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றி வருகிறார்.

Rev. Fr. Trideau: சங். திரிடோ சுவாமியார் சண்டையில் காயம்பட்ட ஓர் போர்வீரனுக்கு ஆபத்துக்கு அஞ்சாமல் போய் உதவி செய்ததற்காக இரண்டாம் தடவையாக அவருக்கு வெகுமானம் அளிக்கப்பட்டது.


# The St. Anthony's Messenger.

# அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. IV. October 1918. No. 10.

புத்தகம் IV.] FIDES AC ROBUR. [நம்பர் 10.


## MORAL INSTRUCTION.

## நல்லொழுக்க போதனை.

### Theft.

### திருட்டு.

பொருள் ஆசையினால் அநேக துர்க்குணங்கள் உண்டாகின்றன. அவைகளில் திருட்டுப்புத்தி ஒன்று.

பிறனுடைய சொத்தை அவனுக்குத் தெரியாமலும், அவன் மனதுக்கு விரோதமாகவும் அபகரிப்பதும், அதனை வைத்துக்கொள்ளுவதும் திருட்டாகும். தானே பொருளை அபகரிப்பதுமாத்திரமல்ல; பொருள்களை அபகரிக்கும்படி பிறனொருவனைத் தூண்டுவதும், திருட்டுக்கு உதவிசெய்வதும், திருட்டேயாகும்.

இத்திருட்டுத்தனம் சாதாரணமாக ஓரே நாளில் உண்டாவதில்லை. "இன்றைக்கு இலையறுத்தவன் நாளைக்கு குலையறுப்பான்" என்பதுபோல ஆரம்பத்தில் அற்பத்திருட்டாயிருந்தது நாளடைவில் கால் திருட்டு, அரைத்திருட்டு, முக்கால் திருட்டாகிக் கடைசியில் பக்காத் திருட்டாக மாறும். சிறு வயதில் தாய் தகப்பன் வீட்டில் சிறு திருட்டை ஆரம்

பித்துப் பிறகு வெளி வீட்டில் பெரும் பொருளைத் திருடத் துணிவான்.

துவக்கத்தில் பள்ளிக்கூடத்தில் அடுத்த பையன் பென்சில் திருடப் பழகி, வரவர மற்றப் பொருள்களையும் திருட ஆசையாகிப் பொருளாசையினால் பெரும் பொருள்களையும் திருடத் துணிவான்.

அவ்விதமே பிறருடைய காசுகளைத் திருடத் தொடங்கிக் கடைசியில் பொக்கிஷத்தைக் கொள்ளையடிக்கும் அயோக்கியனாய்விடுவான்.

இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கும் கதையாகத் திருட்டுப் பயிற்சியுள்ளவன் உத்தியோகஞ் செய்கையில் தன் எஜமானனுடைய கணக்கை மாற்றித் தனக்கு இஷ்டமான பணத்தையும் பொருளையும் அபகரித்துக்கொள்வான். வியாபாரத்தில் அமர்ந்தாலோ பிறரை ஏமாற்றி அதிக இலாபம் சம்பாதிக்க ஆசைப்பட்டு அநியாயமான விலை கூறுவான். கடன்பட்டாலோ கெடுப்பிரகாரம் கடனைத் தீர்க்கமாட்டான். தண்டனைக்குப் பயந்து கடனைத் தீர்த்தபோதிலும் அப்பணம் வேறொருவனை ஏமாற்றிப் பெற்றதாக இருக்கும்.

திருடன் ஒரு பொருளைக் கண்டெடுத்தால் அப்பொருளுக்குச் சொந்தக்காரன் யாரென்று விசாரித்துக்கொடுக்கமாட்டான். அவ்விஷயத்தைப்பற்றிப் பிறரிடத்துச் சொல்லவுமாட்டான். அப்பொருளைத் தனது சொந்தப் பொருளாகப் பாவித்து வைத்துக்கொள்வான்.

இதர திருடர்களுக்கு இடங்கொடுப்பதுமாத்திரமேயன்றி, அவர்கள் திருடின சொத்துக்களையும் மறைத்து வைப்பான். திருட்டுப் பொருளென்று தெரிந்ததும் அப்பொருளைச் சகாயமான விலைக்கு வாங்கிப்போடுவான். இவ்விதமான செய்கைகளுங்கூட திருட்டேயாகும்.

"காணி ஆசை கோடி கேடு" என்றபடி அவன் திருட்டுப் பொருள்களுக்குக் கொடுத்த விலை பதின்மடங்கான நஷ்டமும் பணச்செலவும் கொண்டுவரும் விஷயத்தை அவன் உணர்வதில்லை. திருடனுக்குத் தெய்வமில்லையானாலும் அவன் மனிதனுக்குப் பயப்படுவான். திருடனுக்கு எப்போதும் அரைப் பலந்தான். திருடும்போது யாரும் கண்டுவிடுவாரோ என்னும் பயம், பிறகு அப்பொருளை ஒருவருக்குந் தெரியாமல் காத்துவைப்பதில் உண்டாகும் அச்சம், பிறகு அதனை ஒன்றுக்குப் பாதியாகப் பின்னப்படுத்தி மாறுவதின் சிரமம் இவையெல்லாம் திருடனுக்கு என்றும் உள்ள துன்பங்களாம்.



வெளிச்சத்தைக் கண்டு நடுங்கும் ஆந்தைபோல, திருடன் மனக்கவலையினால் எப்போதும் பகலில் வெளிவராமல், அப்பட்சியைப்போல் நிசாசரனாகத் திரிந்து, தன் அவமானம் எப்போது வெளியாகிவிடுமோ என்று சதாகாலமும் அச்சப்பட்டுக்கொண்டேயிருப்பான்.

திருடன் சர்க்கார் தண்டனைக்குத் தப்பினாலும் தேவ தண்டனைக்குத் தப்பமுடியாது. மனிதன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும். பலநாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான். தன் தலையை மாத்திரம் மறைத்துக்கொள்ளும் தீக்குருவி மனிதர் கையில் அகப்பட்டுக்கொள்வது போலவே, தன் தலையை மறைத்துக்கொண்டு திரியும் திருடன் தன் செய்கையால் அகப்பட்டுக்கொண்டு அவஸ்தைப்படுவான்.

ஆகையால் பிறரது சொத்து ஒரு சிறு துரும்பானாலும் அதைத் தொடாதே. மற்றெவ்விதத்திலும் பிறருக்கு நஷ்டமும் மோசமும் செய்யாதே. வீட்டிலுங்கூட அற்ப பொருளாயிருந்தாலும் கேட்டு வாங்கிக்கொள். சிறுமையில் திருட்டுப் பழக்கத்தை அப்பியசித்தவன் கதி யாதாயிற்றென்பதைச் சொல்லுகிறேன், கேள்.

**கதை:**—ஒரு ஊரில் ஒரு சிறு பையன் இருந்தான். அவன் ஒரு நாள் வேறொருவனது தோட்டத்தில் இருந்த ஒரு காயைத் திருடிக்கொண்டு வந்து தன் தாயிடத்தில் கொடுத்தான். அவன் தாய் அவனை அக்குற்றத்துக்காகத் தண்டிக்கவில்லை. அப்படிச் செய்தது பிசகென்று சொல்லவுமில்லை. மறுநாளும் பையன் அப்படியே செய்தபோது அவனது மூடத் தாய் அவனுடைய சாமர்த்தியத்தைப் புகழ்ந்து பேசினாள். காயிலிருந்து தானியமும், தானியத்திலிருந்து பணப்பெட்டியுமாகத் திருடி, வரவரப் பெரிய கொள்ளைக்காரனானான். ஒரு நாள் ஒரு பெருந் தீவர்த்திக்கொள்ளையில் அகப்பட்டு, கொள்ளை, கொலை யென்னுங் குற்றங்கள் சாற்றப்பட்டு, தூக்குத் தண்டனையை அடைந்து, கொலைக்களத்துக்குக் கொண்டு போகப்பட்டான். அச்சமயத்தில் தன் தாய் அழுதுகொண்டு வருவதைப் பார்த்து ஏதோ இரகசியம் சொல்லப்போகிறவன் போல அவளை நெருங்கி அவளது காதைக் கடித்துத் தூரத்தில் துப்பிச் சொன்னதாவது:—"நான் குற்றவாளியல்ல. இவளே பெருந் துரோகி. நான் சிறுவனாயிருக்கையில் இந்தத் தாய் நான் காய் திருடின அன்றைக்கே என்னைக் கண்டித்து நல்வழியில் திருப்பியிருந்தால், நான் இன்றைக்கு இவ்வளவு அருங்கேடனாய்த் தூக்குக்கு வந்திருக்கவேமாட்டேன்" என்று அதிகாரிகளிடத்தில் சொன்னான்.

ஆகையால் சிறு வயதில் திருட்டில் பழகாதே. பெரியவனான பிறகு உனது குழந்தைகளும் இதர பந்துக்களின் குழந்தைகளும் திருட்டில் பழகாதபடி காப்பாயாக.

சத்தியநேசன்.

## Duties of Parents towards their Children

*(Continued)*

## பிள்ளைகள்மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.

(தொடர்ச்சி)

சில தாய் தந்தையரோ ஒற்றுமையாய்ப் பிள்ளைகளைத் தண்டிக்கிறதில்லை. அநேகமாய்த் தகப்பன் பிள்ளைக்கு மிஞ்சிய இளக்காரம் காட்டுவதனால் தாய்க்கு அப்பிள்ளை அடங்குகிறதில்லை. குற்றங்களை அறிகிறது தாயேயாகையால் மகனை, மகளைக் கண்டிக்கப்போனால் இதே பிள்ளை அவளை நோக்கி, "அடி பார்க்கலாம், ஐயா வரட்டும், வந்தபின் சொல்லுகிறேன் பார்" என்று சொல்லி மிரட்டுவதோடு, தகப்பன் வந்ததும் முறையிடவே புத்தியற்ற தகப்பனும் பிள்ளையோடு சேர்ந்துகொண்டு தாயை மனம் நோகச் செய்வதுண்டு. இது நீதியல்ல. தாயும் தகப்பனும் ஒற்றுமையாய்த் தீர யோசித்துத் தண்டிப்பதே முறை.

வேறு சில தாய் தந்தையர் ஏதோ நல்ல மனது வைத்து ஒற்றுமையாய்ப் பிள்ளைகளைத் தண்டித்தபோதிலும் அவர்கள் அழுவதைப் பார்த்துத் தாங்களும் கஸ்திப்பட்டு, பிள்ளைகளைக் கொஞ்சிக் குலாவுவார்கள். அதனால் பிள்ளைகள் தைரியங்கொண்டு பழயபடி தங்கள் இஷ்டம்போல் நடந்துகொள்ளுவார்கள். இந்த இளக்காரமான கண்டிப்பினால் பிரயோசனமில்லை. செய்த தப்பிதத்திற்கு எப்போதும் அருவருப்பையே காட்டவேண்டும்.

வேறு சிலரோ பிள்ளை ஏதோ ஓர் பெரும் தப்பிதம் செய்ததற்காக உடனே கோப வெறியோடு தண்டிப்பதுமல்லாமல் தமக்கு முன்னால் அப்பிள்ளை நிற்க ஒருபோதும் சகிக்கமாட்டார்கள். அந்தப் பிள்ளை எப்போதும் தகப்பனுக்குப் பயந்தே நடக்கவேண்டும். இவ்வித கண்டிப்பு பிள்ளைக்குத் தீங்காகவே முடியும். ஏனென்றால் இப்படி வளரும் பிள்ளை பிறகு தகப்பனை மதிக்காது; தன் இஷ்டம்போலவே நடந்துகொள்ளும். இதற்கு விரோதமாக, அடிப்பது ஒரு கை அரவணைப்பது ஒரு கையென்றபடி தகப்பனுக்குரிய நயத்தோடும் பயத்தோடும் நடத்திவந்தால், பிள்ளையும் பிள்ளைக்குரிய பயபக்தியோடு நடந்துகொள்ளும்.



மற்றும் சில தாய் தந்தையரோ எல்லாப் பிள்ளைகளையும் ஒருகண்ட சீராய்ச் சிநேகித்துக் கண்டிப்பதில்லை. ஒரு பிள்ளை தாய்க்கோ தகப்பனுக்கோ செல்லப்பிள்ளை. இந்தப்பிள்ளை செய்வதெல்லாம் தப்பேயானாலும், தாயும் தகப்பனும் இதைக் கண்டிக்கமாட்டார்கள். மற்றப்பிள்ளையோ சற்று பிடிவாதமுள்ள பிள்ளை; மந்தக்குணமுள்ள பிள்ளை; அங்கஈனமுள்ள பிள்ளை. பிரியமில்லாத பிள்ளை செய்வதெல்லாம், குற்றமாகப் பாவித்துத் தாய் தந்தையர் பிரம்பும் கையுமாய் எப்போதும் கொடுமையாக நடத்துவார்கள். செல்லப் பிள்ளைக்கு எல்லாச் சுதந்தரமும் உண்டு. மற்றப் பிள்ளையோ எல்லாருக்கும் அடிமை. தாய் தந்தையரே! இப்படி வஞ்சனையாக நடத்துவது நீதியல்ல. செல்லப் பிள்ளைமேலிருக்கும் பக்ஷத்தை வெளிக்குக் காட்டாமல் எல்லாப் பிள்ளைகளையும் ஒன்றுபோல் சிநேகித்து, தக்க சமயத்தில் தக்கபடி தண்டிப்பது தாய் தந்தையரின் கடமை. இல்லாவிட்டால் பிள்ளைகள் தங்கள் பெற்றோருடைய வஞ்சனையை அறிந்து அவர்களை வெறுப்பதுமல்லாமல் கடைசியில் தங்களுக்குள் காய்மகாரப்பட்டு ஒருவரையொருவர் பகைத்து வருவார்கள். இதற்கு உதாரணமாக நடந்த ஒரு சரித்திரத்தைப் பாருங்கள்.

ஒரு ஊரில் ஒரு தகப்பனுக்கு இராயப்பன், சின்னப்பன், ஆரோக்கியம் என்று மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். இவர்களில் இராயப்பனும் சின்னப்பனும் வயது முதிர்ந்து புத்தி விவரமறிந்தவர்கள். இவ்விருவரில் தகப்பன் இராயப்பனை அதிகமாய் நேசித்து இவனுக்கே தன் பட்சத்தை முழுதும் காட்டிவந்தான். சின்னப்பன் கொஞ்சம் முரட்டுக்குணமுள்ளவனானதால் தகப்பன் இவனைத் தன் பக்கத்திலே முதலாய் வரவிடமாட்டான். சின்னப்பன் இந்த ஓரவஞ்சனையைப் பல வருஷம் சகித்தும் ஆறுதல் அடையாமல், கடைசியில் மனங்கசந்து ஒரு நாள் தன் தகப்பனையும் தமையனையும் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டுத் தானும் தன்னைச் சுட்டு மாய்த்துக்கொண்டான்.

ஆகையால் தாய் தந்தையரே! ஓரவஞ்சனையால் வரும் கேடுகளை யோசித்துப்பார்த்து, இனிமேலாக எல்லா மக்களையும் ஒரே சீராய்ச் சிநேகித்துக் கண்டித்து வந்தால் சர்வேசுரனுடைய ஆசீர்வாதம் பெற்று இகத்திலும் பரத்திலும் பாக்கியசாலிகளாக இருப்பீர்கள். (முற்றிற்று.) யதார்த்தவாதி.

## The Nilgiri Festival.

### நீலகிரி உற்சவம்.

கோத்தகிரி அர்ச். ஆரோக்கியமாதாத் திருநாளை நீலகிரி உற்சவமென்று சொல்லலாம். ஏனென்றால் இத்திருநாள் சமயத்தில் மலைமீதுள்ள சகல ஊர்களிலுமிருந்து கிறீஸ்துவர்களும் அஞ்ஞானிகளும் கூட்டம் கூட்டமாய்க் கோத்தகிரிக்கு வந்து சேருகிறார்கள். நானும் இவ்வருஷம் திருநாள் சமயத்தில் அங்கே போயிருந்தேன். ஆனால் நான் திருநாளுக்கு முந்தின நாளாகிய சனிக்கிழமை சுங்க சாவடியைத் தாண்டிப் போகையில் அங்கேயிருந்த சுங்கக்காரன் என்னைப் பார்த்துத் திருநாளுக்கு அநேக ஜனங்கள் போகிறார்கள். சென்ற இராத்திரியிலிருந்து ஜனங்கள் இடைவிடாமல் அவ்விடம் போய்க்கொண்டிருக்கிறார்களென்றான். மெய்யாகவே அவன் சொன்னதுபோல வழியில் அநேகர் போவதைக் கண்டேன். காலை 10 மணிக்கு அவ்விடம் சேர்ந்தபோது வழக்கமாக வெறுமையாய் இருக்கும் கோயில் சுற்றுப்புறமெங்கும் பெருங்கூட்டமாக ஜனங்கள் நிறைந்திருப்பதைப் பார்த்தேன். சில வியாபாரிகள் சுறுசுறுப்பாய்த் தங்கள் கடைகளை வைப்பதைப்பற்றித் தர்க்கித்துக்கொண்டிருந்தார்கள். கோயிலுக்குச் சமீபத்தில் சத்தமும் நெருக்கமும் ஆகாதென்றும், நல்ல ஒழுங்கோடு இருக்கவேண்டுமென்றும் பங்கு சுவாமியார் அவர்களுக்குச் சொல்லி, கொஞ்சம் தூரத்தில் கடைகளை வைத்துக்கொள்ளும்படி தக்க இடங்களை அவர்களுக்குக் காண்பித்தார். அந்நேரத்தில் திரு யாத்திரைக்காரர் சத்திரம், பள்ளிக்கூடம் முதலிய இடங்களிலெல்லாம் நிறைந்திருந்தார்கள். திருயாத்திரைக்காரருக்குத் தங்குவதற்கு வசதியான இடம் இல்லாமலிருந்ததுதான் குறை. இக்குறையைக் கண்ட ஒரு கிறீஸ்துவர் சத்திரமொன்று தர்ம வேண்டுதலாகக் கட்டிவைப்பதாய்ச் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். அவர் அந்தக் கருத்தைச் சீக்கிரம் நிறைவேற்றினால் பெரிய புண்ணியமாகும்.

சனிக்கிழமை இரவு நடுச்சாமத்தில் வெலிங்டன் பான்ட் (Band) வாத்தியம் தூரத்தில் வருவதாகச் சத்தம் கேட்கப்பட்டது. அது பெரிய திருநாள் சமயத்தில் விழிப்புக்கு அடையாளமாகக் காணப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்கைக்குரிய அம்புரோஸ் சுவாமியார் (Rev. Fr. Ambrose) பாட்டுப் பூசை



செய்தார். அன்று சாயரட்சை $5\frac{1}{2}$ மணிக்கு சங்கைக்குரிய பிரியான் சுவாமியார் (Rev. Fr. Briand) தேவநற்கருணை ஆசீர்வாதம் கொடுத்த பிறகு, சங்கைக்குரிய அம்புரோஸ் சுவாமியாரால் தேவமாதாவின் பிறப்பைப்பற்றி நேர்த்தியான பிரசங்கம் செய்யப்பட்டது. இராத்திரி 9 மணிக்கு ஊரின் நெருக்கமான வீதிகளில் பான்ட் வாத்தியம் முழங்க, காந்த விளக்குகள் (gas lights) ஜொலிக்க, வாண வேடிக்கைகள் நடக்க, பாடல்கள் ஒலிக்க, ஜனங்கள் ஆண்களும் பெண்களும் ஜெபமாலை வேண்டிக்கொண்டுவர, சுற்றுப்பிரகாரம் மெல்ல மெல்ல நடைபெற்றது. அப்பொழுது அங்கே கூடியிருந்த ஜனக்கூட்டம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. கிறீஸ்துவர்களும், அஞ்ஞானிகளும், துலுக்கர்களும் மலைவாசிகளாகிய படுகர், கோத்தர் முதலிய எல்லோரும் சேர்ந்திருந்தார்கள். அன்று இரவு 10 மணிக்கு நல்ல ஒழுங்கோடு திருநாள் முடிவுபெற்றது.

கலெக்டர் துரையுடைய உத்தரவுப்படி பீர், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்கள் விற்கும் கடைகள் சாத்தப்பட்டிருந்தபடியால் ஜனங்கள் அந்த நாளில் வெகு மரியாதையாக நடந்துகொண்டார்கள்.

ஆயினும் அந்த ஊரில் இரவு 9 மணிக்கு சுற்றுப்பிரகாரம் நடத்துவதைவிட சாயங்காலம் 6 மணிக்கு நடத்தினால் உத்தமமாக இருக்குமென்பது எனது அபிப்பிராயம்.

பரிசுத்த ஆரோக்கிய மாதாவுக்குத் தோத்திரம்.

(ஓர் திருயாத்திரைக்காரன்.)

## Reverence to the Clergy.

### குருக்களுக்குச் செய்யவேண்டிய சங்கை.

நமது நேச இரட்சகர் தமது திருச்சபையை ஏற்படுத்தியபோது அதைப் பாதுகாத்து நடத்திவரும்படியாக அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினார். அவர்கள் ஸ்தானத்திலிருந்து திருச்சபையைக் கண்காணித்து வரும் மேற்றிராணிமார்கள் தங்களுடைய பிரதிநிதிகளாக குருப்பிரசாதிகளைப் பூலோகமெங்கும் அனுப்பி வருகிறார்கள். இவர்கள் தாய்க்குரிய அன்புடன் தங்கள் ஞான மக்களுடைய ஆத்தும விஷயமாக இரவும் பகலும் உழைத்து வருவதோடு, கிறீஸ்துநாதரில் நமக்குத் தந்தைகளாக இருந்து தங்கள் ஜீவிய காலம் முழுதும் நமக்காகவே ஒப்புக்கொடுத்து உழைத்து வருகிறார்கள். நம்

மூடைய ஞான நன்மையின் பொருட்டுப் பூலோக சுக செல்வங்களை வெறுத்துத் தள்ளி நாம் சர்வாதி கர்த்தரைப் புகழ்ந்து ஆராதிக்கும்படியாக தேவாலயங்களைக் கட்டவும், நமது பிள்ளைகளுடைய புத்தியை விசாலப்படுத்தி உலகத்தில் மரியாதையுள்ள நிலைமையை அடையும்படி உத்தம பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்கவும் எவ்வளவோ பிரயாசப்பட்டு வருகிறார்கள். நாம் நல்லவர்களாக நடக்கவேண்டுமென்றும், நமது மரணத்துக்குப் பின் அழிவில்லாத பேரின்ப மோட்ச பாக்கியத்தைச் சுகிக்கவேண்டுமென்றும் ஆசைகொண்டு எவ்வித பிரயாசைக்கும் பின் வாங்காமல் உழைத்துவருவதை யார் அறியார்? பெரியோருக்கும் சிறியோருக்கும் நல்ல புத்தி பிரசங்கம் செய்து, ஞானோபதேசம் படிப்பித்து, நாம் நம்முடைய மேலான கதியை அடையும்படி இவர்கள் படாத பிரயாசையில்லை; உபயோகிக்காத வழிபாடுகள் இல்லை. இவ்வளவு பிரயாசையினால் இவர்கள் தேகபலன் நாள்வட்டத்தில் குறைவுபடுவதினால், நமக்காகவே தங்களைப் பலியாக ஒப்புக்கொடுத்துவிடுகிறார்கள். பகலிலும் சரி, இரவிலும் சரி; எந்த நேரத்திலானாலும் நாம் மரண படுக்கையில் இருக்கிறோமென்று அறிந்தவுடனே நம்மிடம் வந்து, நம்மை ஆற்றித் தேற்றி, தேவதிரவிய அநுமானங்களை நமக்கு நிறைவேற்றி நாம் நல்ல மரணம் அடையும்படி முஸ்திப்பு செய்கிறார்கள். இவ்வுத்தம உபகாரிகளான ஞானத்தந்தைகளுக்கு நாம் என்ன பிரதி நன்றி செய்யப்போகிறோம்? இவர்கள் மனுமக்களுக்கு அவசியமாக வேண்டியவர்களெனச் சொல்லவும் வேண்டுமோ? எல்லோரும் இரட்சணியம் அடைய வேண்டுமென்றால் இச்சிறந்த பரோபகாரிகள் மூலமாகவே அடையலாமொழிய மற்றப்படியல்ல என்பது தேவ திருவுளம்.

நமது ஆத்தும சரீர நன்மையின் பொருட்டு அன்போடு உழைத்துவரும் இக்குருமாரை அவமதியாது எப்போதும் இவர்களிடத்தில் நன்றியறிதலுள்ளவர்களாக நடந்து இவர்களைச் சங்கித்து வருவது நமது கடமை. எவ்வளவோ கணக்கற்ற நன்மைகளை இவர்கள் செய்து வந்தபோதிலும் நன்றியறியாத சில பாதகர்கள் தங்கள் கருத்துக்கு மாறாக குருக்கள் யாதொன்றைச் செய்யும்போது, அல்லது தங்கள் ஒழுங்கீனங்களைக் கண்டிக்கும்போது பித்துப்பிடித்தவர்கள்போல வாயில் வந்தபடி தூஷண வார்த்தைகளைச் சொல்லி ஏசி நகைப்பது எவ்வளவு அக்கிரமம்! என்ன பரிதாபம்! குருக்களுடைய மகிமையை உள்ளபடி அறிந்திருந்தால் இக்கொடி



யர் இப்படிப் பேசுவார்களா? சம்மனசுகளுக்கு முதலாய்க் கொடுக்காத அதிமிக வல்லபத்தைச் சர்வேசுரன் குருக்களுக்கு அளித்திருக்கிறார். ஒரு பாவியின் பாவத்தை மன்னிக்கவும், திவ்விய அப்பமாகிய நற்கருணையைத் தொடவும் சம்மனசுகளுக்கு அதிகாரமில்லையாதலால், குருக்களே சம்மனசுகளைவிட மேலானவர்களென்று அர்ச். தெரோசம்மாள் ஒப்பிக்கிறாள். சர்வேசுரனுடைய ஸ்தானாதிபதிகளைப் பழித்து ஏளனம் செய்து வந்தவர்கள் எவ்வளவோ கடினமாய்த் தண்டிக்கப்பட்டார்களென்று அநேக திருஷ்டாந்தங்கள் வேத சரித்திரத்தில் காணலாம். குருக்களோடு எதிர்த்து வாதிட்டு அவர்கள் மனம் நோகச்செய்த குடும்பங்கள் கெட்ட கேட்டையும் பட்ட பாட்டையும் நமது கண்ணால் பார்த்திருக்கிறோம். “உங்களுக்குச் செவி கொடுக்கிறவன் எனக்குச் செவி கொடுக்கிறான், உங்களைப் புறக்கணிக்கிறவன் என்னைப் புறக்கணிக்கிறான்” என்று திருவுளம்பற்றின நமது இரட்சகரின் கோபாக்கினைக்கு ஆளாகாவண்ணம், நமது உலக நன்மையை, மேன்மைப்படுத்தவும், நமக்குப் பரலோக வழியைக் காட்டவும் இடைவிடாது உழைத்துவரும் இப்பரோபகாரிகளைச் சங்கித்து அவர்கள் சொல்லும் புத்திமதியின்படி நடந்து வருவோமாக.

## Evils of Drunkenness (Contd.,)

## மதுபானத்தினால் விளையும் துன்பங்கள் (தொடர்ச்சி.)

இம்மதியீனத்தைக் கண்டிருந்த புத்திசாலி குடியர்களுடைய மதிகேட்டைப் பார்த்து பரிதாபமடைந்து, “ஐயோ! இதென்ன விபரீதம்! மதுவுண்டு மயங்கிச் சாக்கடையில் தலைகீழாக விழுந்து சாகும் நிலைமையில் இருக்கும் குடியனைப் பார்த்து குடியின்பேரில் வெறுப்பும் பயங்கரமும் ஒருவனுக்கு உண்டாக வேண்டியதிருக்க, இந்தக் குடியனுக்கு அதன்மேல் அதிக விருப்பமுண்டாயிருக்கிறதே! குடியருடைய மதியீனத்தை என்னென்று சொல்வது?” என்று சொல்லிக்கொண்டு போய்விட்டான்.

ஆகவே மது உண்போர் மதுவினால் விளையும் தீமைகளை ஒருபொருட்டாக நினையாமல் பின்னும் பின்னும் மதுவை உண்டே மாளுவார்கள். இன்னும் இம்மதுபானிகளுக்கு மது உண்பதினால் தேகத்திற்கு உண்டாகும் நோய்கள் பல. அந்நோய்கள் தீரும்படி மருந்து சாப்பிட நேர்ந்தால் இரண்டு மூன்று நாள் மதுபானம் செய்யக்கூடாதென்று கட்டாயப்

படுத்திச் சொன்னாலும் கேளாமல் முரட்டுத்தனமாய் மருந்தோடு மதுவையும் அருந்தி ஒரு பங்கு நோயைப் பத்துப் பங்காகப் பெருக்கிக்கொண்டு அதிக உபத்திரவப்படுவதுமன்றி அகால மரணத்துக்கும் ஆளாகிறார்கள்.

பின்னும் கள் குடிப்போனை, "ஏன் கள்ளைக் குடித்துக் கெட்டுப்போகிறீர்கள்?" என்று கேட்டால், "நீங்கள் இளநீர் குடிப்பதில்லையோ? தேகத்துக்குக் குளிர்ச்சி தருமென்று நீங்கள் பனைநொங்கு தின்பதில்லையோ? இளநீரும் பனைநொங்கும் உண்டாகும் அதே பாளைகளிலிருந்து சுரந்துவரும் அமுதத்தைக் கெட்டதென்று நீங்கள் மறுப்பதென்ன?" என்று அம்மதியீன மதுபானிகள் கூறுகின்றனர்.

ஐயோ! இந்தப் பாழுங் குடியினிமித்தம் ஒரு பிரபு தமது பற்களையே விற்றுவிட்ட கதையைக் கேளுங்கள். மிக்க தனவந்தரான ஒரு சீமான் குடியை விடாப்பிடியாய்க் கைக்கொண்டு, தாம் குடித்து வருவதுபோலவே தமது மனைவிக்கும் அக்கொடிய பழக்கத்தைப் பழக்கிவிட்டார். இருவரும் குடித்துக் கடைசியில் தங்கள் ஆஸ்தியை யெல்லாம் இழந்துவிட்டு இவர்கள் தங்கள் கையையும் காலையுமே சொத்தாக வைத்திருந்தார்கள். இப்போது அவர்கள் குடிப்பதற்குக் கையில் ஒரு காசுமில்லாதபடியால், இலக்ஷாதிகாரியாயிருந்து பிக்ஷாதிகாரியாய்ப் போன இவருக்கு இப்போது ஓர் யோசனை உண்டாயிற்று. அத்தேசத்தில் பிரேதங்களின் பற்களைப் பிடுங்கி விற்கும் வழக்கம் இருந்தது. அதனால் அவர் தமது மனைவியைப் பார்த்து, "பெண்ணே! கவலைப்படவேண்டாம். இன்று ஒரு பாட்டில் (bottle) விஸ்கி கிடைக்கும். நன்றாய்க் குடித்துக் களிகூறலாம்" என்றார். அப்பெண்மணி மிக்க ஆச்சரியமுற்று, "அது எப்படி?" என்று கேட்க, அவர், "உனது பற்கள் முத்துப்போலிருப்பதால் அதிக விலைக்குப் போகும்" என்றார். அதைக் கேட்டு இந்தக் குடிகாரப் பெண்ணும் தன் பற்களைப் பிடுங்கி விற்க உடன்பட்டாள். தினம் ஒவ்வொன்றாகப் பிடுங்கி விலைப்படுத்தி இருவரும் குடித்து மகிழ்ந்தனர். அந்தோ! பரிதாபம் இயற்கைக்கு மாறாகப் பற்பிடுங்கப்பட்ட பெண்டிர் கடைசியில் ஜன்னிகண்டு மிகுந்த கொடுமையாய் மாண்டாள். பத்தினி செத்தும் இவர்க்குப் புத்தி வந்ததா? இல்லை யில்லை. மதுபானிக்கு மதியும் வருமா? வராது. ஆகவே தாமும் தமது பற்களை ஒரு வர்த்தகனுக்கு அடைமானச் சீட்டு எழுதிக்கொடுத்துக்



கடன் வாங்கிக் குடித்துக் கெட்டழிந்தாராம். இதென்ன நூதனம்! எவ்வளவு வெட்கக்கேடு! பாருங்கள்.

ஓ மதுபானிகளே! மதுவினால் வரும் கேட்டைப் பாருங்கள். அந்தோ! குடியேறினால் வெறியேறும். வெறியேறினால் முடியாத சண்டைதான். குடியினால் மானம் இழந்து, சென்றிரல் ஜெயில் (Central jail) கூழைக் குடித்து, குரும்பன் கம்பளி தரித்து, கொல்லன் காப்பு அணிந்து, ஒட்டன் மண் வெட்டி தோளில் சுமந்து, குறவன் தட்டைத் தலையில் தாங்கி, ரோட்டுப் பள்ளங்களுக்கு மேட்டிமையாக மண் சுமக்க வேண்டிவரும்.

## Two new Tamil Books.

### இரண்டு புதிய தமிழ்ப் புஸ்தகங்கள்.

**லீலிமலர், வாலர்தீபிகை** யென்னும் இரண்டு புதிய தமிழ்ப் புஸ்தகங்கள் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டன.

இவ்வுலகம் மோக பாவத்தால் அழிவடைகிறது. மற்றத் தலையான பாவங்களெல்லாம் அழிக்கிறதை விட இந்தப் பாவம் ஒன்றே அநேக ஆத்துமங்களை நித்தியத்துக்கும் நாசமாக்குகிறது. "**லீலிமலர்**" என்னும் புதுப்புஸ்தகம் இப்பாவத்தை வெறுக்கவும், ஆத்துமம் லீலி புஷ்பம்போல் இருப்பதற்குப் பரிசுத்தமான கற்பென்னும் புண்ணியத்தை நேசிக்கவும் செய்யும்.

இப்பரிசுத்தமான புண்ணியத்தின் மேன்மையையும், நன்மையையும், இதற்கு விரோதமான மோகபாவத்தின் இழிவையும் தீமைகளையும் இச்சிறு புஸ்தகத்தில் எல்லோரும் கண்டுபிடிக்கக்கூடிய எளிதான வசன நடையில் விளக்கிக் காட்டியிருக்கிறது. மேலும் அதிலுள்ள ஒவ்வொரு அதிகாரத்திலும் அடங்கியிருக்கும் விஷயங்களுக்கு உதாரணமாகத் தகுந்த சரித்திரமும் சொல்லப்பட்டிருக்கிறது.

நமது கிறீஸ்துவ வாலிபர்களும் மற்றவர்களும் இச்சிறு புஸ்தகத்தை வாங்கி வாசித்து அதின் பிரகாரம் நடந்து வருவார்களானால் சர்வேசுரனுக்கும் மனிதர்களுக்கும் முன்பாக நமது சீவியம் எவ்வளவோ பரிசுத்தமுள்ளதாகும்.

அந்தஸ்தைத் தெரிந்துகொள்வதில் நமது பாக்கியமும் நிர்ப்பாக்கியமும் அடங்கியிருப்பதால் சர்வேசுரன் நம்மை எந்த அந்தஸ்துக்குக் குறித்திருக்கிறாரோ அதை அறிந்து பின்பற்றுவதற்கு "**வாலர் தீபிகை**" என்னும் புஸ்தகமானது எவ்வளவோ பிரயோஜனமும் ஆதாரமுமாகும். வாலிபர்களைத்

துறவற அல்லது சந்நியாச அந்தஸ்துக்கு இழுத்துக்கொள்வது இதன் நோக்கமல்ல. இல்லறத்துக்கு அழைக்கப்பட்டிருந்தாலுஞ் சரி, துறவறத்துக்கு அழைக்கப்பட்டிருந்தாலும் சரி, அதை அறிந்து தெரிந்துகொள்வதற்காகவே இப்புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. எத்தனையோ வாலிபர்கள் தங்கள் சுய நலத்தை அல்லது ஆசாபாசத்தை நாடிச் சர்வேசுரன் தங்களை அழைக்காத அந்தஸ்தைத் தெரிந்தெடுத்து ஆத்தும இரட்சணியத்தை இழந்துபோகக் காரணமாகிறார்கள். குருத்துவ அந்தஸ்தைத் தெரிந்துகொள்ளுகிறவர்களும் வீணான உலக முகாந்திரங்களைப்பற்றி அதில் பிரவேசியாமல் இருக்கும்படி அதன் முக்கிய கடமைகளும் அதிலுள்ள மோசங்களும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகத்தைக் கவனத்துடன் வாசிப்பவர்கள் சர்வேசுரன் தங்களுக்குக் குறித்த அந்தஸ்தைத் தெரிந்துகொண்டு தங்கள் ஆத்தும இரட்சணியத்தை அடைவதுடன் மற்றவர்களுடைய ஆத்தும இரட்சணியத்துக்கும் உதவுவார்களென்று சொல்லத் தேவையில்லை.

லீலி மலர் விலை அணா 8. வாலர் தீபிகை விலை அணா 12.

வேண்டியவர்கள் திருச்சினாப்பள்ளி ஸெயின்ற் ஜோசப்ஸ் இன்டஸ்ட்ரியல் ஸ்கூல் பிரஸ் சூப்பெரின்டென்டெண்டுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## Here and There.

### நானா சங்கதிகள்.

**The War.** கடந்த மாதமுதல் நேசக் கட்சியார் ஜெயத்திற்குமேல் ஜெயம்பெற்று வருகிறார்கள். அநேக ஊர்களையும், பலமான பல கோட்டைகளையும், ஆயிரக்கணக்கான கைதிகளையும் அபரிமிதமான தளவாடங்களையும் பிடித்துக்கொண்டு ஜெர்மானியரைப் பின்தள்ளி வருகிறார்கள். முடிவான ஜெயத்தின் நாள் உதித்திருக்கும்போல் தோன்றுகிறது. இச்செய்திகள் வெகு சந்தோஷகரமானவைகளாக இருந்தாலும், போர் முகத்திலிருந்து கஸ்திக்குரிய வேறு சமாசாரம் வந்தது. அதாவது, சங். கிரெஸாக் சுவாமியார் (Rev. Fr. P. Crayssac) தமது இரண்டு கால்களிலும் கடினமான காயம்பட்டிருக்கிறார். சங். தூர்னியெர் சுவாமியார் (Rev. Fr. L. Tournier) ஜெர்மானியரால் கைது செய்யப்பட்டிருக்கிறார். இவ்விரண்டு நல்ல குருமாருக்கும் சர்வேசுரன் சொஸ்தமும், ஆறுதலும், மனதைரியமும் அளிப்பாராக.


# The St. Anthony's Messenger.

## அர்ச். அந்தோனியார் தூதன்.

**Vol. IV.** **November 1918.** **No. 11.**

புத்தகம் IV.] FIDES AC ROBUR. [நம்பர் 11.


6 NOV 1918

## MORAL INSTRUCTION.

## நல்லொழுக்க போதவனை.

### Truthfulness.

### உண்மை.

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"—குறள்.

இவ்வுலகிற் பொய்யும் உண்மையுங் கலந்திருக்கின்றன. உண்மையுள்ள மனிதனை எல்லாரும் மதித்து நம்புவார்கள். ஆனால் பொய்யனைத் திருடனிலுங் கேடாக மதிப்பார்கள். அவனை ஒருவரும் நம்பமாட்டார்கள். ஏதோ ஒரு சமயத்தில் அவன் உண்மை பேசினபோதிலும் அம்மொழியிற் ஜனங்களுக்கு நம்பிக்கையிராது. 'புலிவருகிறது, புலிவருகிறது' என்று மூன்று தடவை ஏமாற்றின பையனுடைய சொல் நான்காம் தடவை உண்மையிற் புலிவந்து கூவினபோது நம்பிக்கையற்றுப்போய் பிராணஹானியை விளைவித்த கதை எல்லாருக்குந் தெரியும்.

பொய்யென்னும் ஒரு துர்க்குணத்திலிருந்து, சூது, கபடு மோசம் முதலிய பல தீமைகள் விளையும். அதனால் நல்லொழுக்கத்துக்கும், நாணயத்துக்கும் பெருந்தீங்கு நேரும்.

பொய்யன் பிறரை மோசஞ் செய்வது மாத்திரமேயல்லாமல் தனக்குந் தீங்கை விளைவித்துக்கொள்ளுகிறான். தனது கண்ணியத்தையும், மானத்தையும், அழித்துத் தன்னை நீசனுக்

கிக்கொள்ளுகிறான். அவன் செய்யும் வாணிபம் முதலிய ஏற்பாடுகளுக்கு விக்கினமும் நஷ்டமும் வரும்.

பொய்யன் பிரமாணஞ் செய்தாலும் அவன் உறுதிமொழிகளை ஒருவரும் நம்பமாட்டார்கள். எப்போதும் மெய்பேசுகிறவனை யாவரும் கவுரவமாகயெண்ணி அவனை வாக்குறுதியுள்ளவனெனப் புகழ்வார்கள். வாக்குத்தவறாதவன் வைத்தியஞ் செய்யவேண்டியதில்லை. அவன் வார்த்தையே நம்பிக்கை பெறும். அவனோடு யாவரும் கூடி தொழின்முறைகளை நடத்துவார்கள். இப்படியிருக்கப் பொய் சொல்லாமலும், சூதில்லாமலும் வியாபாரஞ் செய்யமுடியாதென்று சிலர் சொல்லுவது முழுதும் தவறு.

பொய் சொல்லுவது எப்போதும் தவறான காரியமாகயிருக்கச் சிலர் பொய்யாணை, பொய்ச்சத்தியம், பொய்ச்சாட்சி முதலியவை சொல்லுவது மிகப் பெரிய குற்றமாம். ஏனெனில் இவர்கள் உபாயத்தால் பிறர் நம்பும்படியான பொய்யைக் கூறி அவைகளை உண்மையாக நம்பச் செய்வதாகும். இவை கடவுள் முன்னிலையில் எவ்வளவோ அவமான செய்கையென்பதை எண்ணிப்பாருங்கள். மேலும் மோச வார்த்தை பேசுவோனுடைய மனச்சாட்சியே அவனது மோசத்தன்மையை அவனுக்கு எடுத்துக்காட்டி அவனைப் பார்த்துச் சிரிக்கும். பொய்ச்சாட்சியோடு பொய்ச் சத்தியஞ் சேர்ந்திருப்பதால் பிறருக்குப் பொருள் நஷ்டமாவது, மான நஷ்டமாவது அதனால் நேரும். சூது, கபடு, பித்தலாட்டம் முதலிய மோசங்கள் உண்மைக்கு விரோதமாயும் பிறருக்கு நஷ்டத்தை வருவிக்கும்போது, அவையும் ஒருவகைத் திருட்டேயாகும். ஏன்? பொய் உண்மையைத் திருடினதுபோல மறைப்பதால், அது திருட்டென்பதற்குத் தடையென்ன? அதனால்தான் வழக்கமாய்ப் பொய்யனைத் திருடனென்றும், திருடனைப் பொய்யனென்றுங் கூறுவார்கள்.

இவ்வளவு கேடும் துர்க்குணமுமுள்ள நீசத்தன்மையை மிகவும் அருவருத்துத் தள்ளி எப்போதும் உண்மையே பேசு. உனக்கு அதனால் மிகப் பெரிய நஷ்டம் வருமாயினும், இறக்க நேருமாயினும், எவ்விடத்தும், எல்லாச் சமயத்திலும், யாவரிடமும் உண்மையே பேசு. நீ செய்த குற்றத்தினின்று தப்பித்துக்கொள்ளவென்று பொய் சொல்லாதே. அக்குற்றத்தைப் பிறர்மேல் சாட்டாதே. கோளும் குறளை (கோட்சொல்லுதல்)யும் பேசாதே. அப்படிச் செய்வது கோழைத்



தனம். அதுவுமன்றி ஒரு குற்றத்தை மறைக்கப் பொய்கூறி அக்குற்றத்தை இரட்டித்துக்கொள்ளுகிறாய்.

சிலர் ஒரு சிறு உண்மையைப் பாரித்துரைப்பார். ஈறைப் பேனாக்கிப் பேனைப் பெருமாளாக்கிக் கூறுவர். தன் வீட்டுப் பூனையையும் அடுத்த வீட்டுப் பூனையையுங் கண்ட சிறுவன் ஆயிரம் பூனையைக் கண்டேனென்று கூறியதுபோலக் கூறுவர். அதுவும் தவறே. உள்ளதை உள்ளதுபோலுரைப்பாயாக. அதனைப் பெருக்கியும் குறைத்துங் கூறாதே. அப்படிச் செய்வது நாளடைவில் உனக்குள்ள உண்மையை உள்ளபடி கூறும் பழக்கத்தைக் கெடுத்து நீ கூறுவது நிசமோ பொய்யோவென நீயே சந்தேகிக்கும்படி செய்துவிடும்.

விளையாட்டில் நீ ஜெயிக்கவேண்டி பொய் கூறாதே. பள்ளிக்கூடத்திற் பரீட்சையில் தேறும் எண்ணத்துடன் அடுத்தவன் எழுதுவதைப் பார்த்தெழுதாதே; பொய் சொல்லி வேலைக்கு ரஜாவெடுக்காதே; அதிக ஆசைப்பட்டாவது அல்லது பெருநஷ்டத்திற்குப் பயந்தாவது பிறரை ஏமாற்றப் பார்க்காதே. நியாயஸ்தலத்திற்குப் பொய் வழக்கைக்கொண்டு போகாதே. உன்னைச் சாட்சியாகக் கோறினால் உண்மையை ஒழித்துப் பட்சபாதமாகக் கூறாதே. பயம், சிநேகம், இரக்கம் பகை அநியாயமான லாபம், பரிதானம் (லஞ்சம் அல்லது கைக்கூலி) முதலியவற்றைக் கருதிப் பொய்ச்சாட்சி கூறாதே. 'உண்மையுரைத்துக் கெட்டவருமில்லை, பொய்புகன்று வாழ்ந்தாருமில்லை' என்னும் முதுமொழியைக் கருது.

கதை :—ஒருத்தி தன் வீட்டுக்குள் வந்த அயல் வீட்டுக்காரியின் கோழியைப் பிடித்துச் சமைத்து தின்றுவிட்டாள். அவ்வீட்டுக்குள் தன் கோழி போனதைப் பார்த்திருந்த கோழியின் சொந்தக்காரி அவளைக் கேட்டபோது தான் ஒன்றும் அறியாததுபோலப் பாசாங்கு செய்தாள். கோழிக்காரி நியாயஸ்தலத்தில் வழக்குக் கொடுத்தாள். சரியான சாட்சியில்லாமையால் வழக்கை இழந்துவிட நேர்ந்தது. நியாயாதிபதி இருவரையும் போகச் சொல்லி, அவர்கள் காதில் படும்படியாக, "கோழி திருடிய ஒருத்தி தான் திருடிய கோழியின் சிறகு தனது தலைமயிரிலிருக்கவும் தனக்கொன்றுந் தெரியாதென்று சாதித்துப் போகிறாள் பார்!" என்று கூறினார். உடனே கோழி திருடியவள் தன் தலையைத் தடவிப் பார்த்தாள். நியாயாதிபதி அவளை உடனே கவனித்து, மறுபடி

யும் சபையிலழைத்து, உண்மையைக் கூறும்படி செய்து, அவனைத் தண்டித்துக் கோழிக் கிரயத்தையும் வாங்கிக் கொடுத்தார்.

“பொய் மெய்யை ஒருநாளும் வெல்லாது.”
(சத்திய நேசன்.)

---

## Letter to a friend.

### சிநேகிதனுக்கு எழுதின கடிதம்.

பிரிய சிநேகிதா!

நீ நாள்தோறும் அடிக்கடி யோசித்து தியானிக்கவேண்டிய அதிமுக்கிய காரியம் ஒன்றுண்டு. ஆனால் அதைப்பற்றி யோசிப்பதால் உனக்கு ஏதோ பெரிய மோசம், ஆபத்து வருமென்று நினைத்து, அந்த எண்ணம் உன் மனதில் தோன்றினவுடனே அதை விலக்க நிரம்பவும் பிரயாசப்படுகிறாய். மற்றவர்கள் அதைப்பற்றி பேசினாலோ, உனக்குக் கேட்கக் கொஞ்சமாவது இஷ்டமில்லாமல், கூடுமானமட்டும் பேச்சை வேறு விஷயத்தில் திருப்பப் பார்க்கிறாய். ஆனால் இந்த எண்ணமானது உனக்கு எவ்வளவு பிரயோஜனமும், நன்மைக்கு வழியுமென்று நீ அறிந்தால் இப்படிச் செய்வாயா? இப்படி உன்னை பயத்துக்குள்ளாக்கும் காரியமென்ன? சாவுதான். சாவு திடீரென நினையாத நேரத்தில் வருமென்று உனக்குத் தெரிந்திருந்தாலும், அதற்கு ஆயத்தஞ் செய்யாமல் வீணில் காலங் கழித்து வருகிறாய். நீ ஒரு வழியாய் நடக்கும்போது, பிரேதங்கள் கல்லறைக்குக் கொண்டுபோகப்படுவதையும், இன்றைக்கு எத்தனையோ சாவு ஊரில் ஆயிற்றென்றும் கேட்கும்போதும் “இன்றைக்கு உனக்கு, நாளைக்கு எனக்கு” என்னும் அநுதின பரீட்சையால் நீ அறிந்துள்ள உண்மையைப்பற்றி ஏன் கொஞ்சமாவது யோசிப்பதில்லை. சாவை நினையாதிருந்தால் அதன் கொடூரத்தினின்று எவ்விதத்திலும் தப்பிப்போகலாமென்று நினைக்கிறாயா? ஆயினும் சாவினின்று தப்பிப் போவார் யாருமில்லை. அதன் பயங்கரத்தை உணராமல் மாயமாய் மறைந்துபோவாருமில்லை. உலகமெல்லாம் ஆண்டுவரும் சக்கரவர்த்திமுதல் ஊர்ந்து திரியும் சகல ஜெந்துக்களும் சாவாகிய சாபத்திற்கு உட்பட்டிருக்கின்றன. ஐம்புலனடக்கித் தவம் புரியும் அருமுனிவர்களும் சாவைத் தியானித்து நடுநடுக்கமுற்று கலங்கிக் கண்ணீர் சிந்தியிருக்கிறார்கள். ஏனெனில் கல்லிலோ, புல்லிலோ, ஆற்றிலோ, சேற்றிலோ, வீட்டிலோ, காட்டிலோ எத்தருணத்தில், எவ்விடத்தில், எவ்விதமாய் சாவு வருமென்று உற்று நினைத்தால் யாருக்குத்தான் நடுநடுக்கம் உண்டாகாதிருக்கும். ஆகையால் சாவை அடிக்கடி நினைவுகூர்ந்து அதற்காக நீ எப்போதும் ஆயத்தமாயிருப்பது மிகவும் உத்தமமும் அவசியமுமான காரியம்.

எப்போது சாவைப்பற்றி நீ நினையாமலிருக்கிறாயோ, அப்போது உனக்குச் சாவு நேரிடக்கூடும். எத்தனையோபேர் முழு சௌக்கியத்தோடு இரவில் நித்திரை செய்யப்போய் காலையில் படுக்கையில் செத்துக்கிடக்கிறார்கள். இப்படியே உனக்கும் நேரிடக்கூடாதோ? இந்தவிதமாய்ச் செத்தவர்களெல்லோரும் தாங்கள் இப்படி சாவார்களென்று கனவிலும் நினைக்கவில்லை. அச்சமயத்தில் அவர்கள் சாவானபாவ அந்தஸ்தில் செத்திருந்தால் ஐயோ! இப்போது எங்கே இருக்கிறார்கள்? இன்னம் ஊழியுள்ளகாலம் எங்கேயிருப்பார்கள்? சிநேகிதா! எச்சரிக்கையாயிரு மனுமகன் எப்போது வருவாரென்று உனக்குத் தெரியாது. எப்போதும் மூஸ்திப்பாயிரு. நீ இப்போது நடக்கும் நடத்தையை விசாரித்துப்பார். இரக்கமும் தயாளமும் நிறைந்த சர்வேசுரன் இப்போது உன் எண்ணிறந்த பாவங்களைப் பொறுத்து நீ உன் பாவங்களுக்குத் தபசு செய்ய நேரங்கொடுத்திருக்கிறார். தபசினாலும், நற்கிரிகைகளினாலும் சாவுக்கு முஸ்திப்பு செய்யவும், உன் மனச்சாட்சியைக்கொண்டு உன்னை ஏவுகிறார்; எச்சரிக்கையாயிரு. உன் பாவப் பழக்கத்தை விட்டுவிட்டு மனந்திரும்பி சர்வேசுரனோடு சமாதானமாயிரு. இப்போது இரக்கமும் தயாளமும் நிறைந்திருக்கிற சர்வேசுரன் நீ செத்தபிறகு நீதியுள்ளவராய் மாத்திரம் இருப்பார். நீ மரித்தபிறகு உன் பாவங்களுக்கு தபசு செய்ய ஒரு நிமிஷமாத்திரம் கொடுக்கவேண்டுமென்று கெஞ்சிக்கேட்டபோதிலும் ஒருபோதும் கொடுக்கமாட்டார். தமது நீதியின்படி உன்னை நடத்துவார்.

தன் ஜீவியகாலமெல்லாம் பிரமாணிக்கமாய் தன் இராஜாவுக்கு ஊழியஞ்செய்துவந்த ஒரு பிரபு, தான் சாகுந்தருணத்தில் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்யாததைப்பற்றி நினைத்துத் துக்கித்து, “நான் ஏதுக்காக இவ்வுலகில் பிறந்தேனென்று அறியாமல் செத்தேன்” என்னும் வார்த்தைகளைக் கல்லறையில் எழுதிவைக்கச் சொன்னதுபோல, நீயும் செய்யாதபடி சாவைப்பற்றி அடிக்கடி நினைத்து உன் ஜீவியத்தை இப்போதே சீர்திருத்திக்கொள்.

இப்படிக்கு, பிரிய நண்பன்

## The Mysterious Fever.

### புதுக்காய்ச்சல்.

தற்காலம் ஒரு அதிசயமான புதுக்காய்ச்சல் உலகமெங்கும் பரவியிருக்கிறது. அதற்குப் பலவிதப் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது 'பம்பாய்க் காய்ச்சல்' 'ஸ்பெயின் காய்ச்சல்,' 'Influenza இன்புளுவென்சாக் காய்ச்சல்' என்று இவ்வாறு சொல்லப்படுகிறது. அது முதலில் தொண்டைவலியும், பிறகு தலைவலியும் கடைசியில் காய்ச்சலும் துவக்கி உடம்பு, கை, கால், மணிக்கட்டுகளிலெல்லாம் நோவெடுக்கிறது. இந்த வியாதி முதலில் துவக்குகையில் தகுந்த மருந்து சாப்பிட்டால் சௌக்கியமாகும். துவக்கத்தில் அதை அசட்டை பண்ணினாலோ, அது நியூமோனியாவாக அதாவது ஈரல்வலி நெஞ்சு நோயாக மாறிப் பிறகு கஷ்டத்தில் கொண்டுவந்துவிடுகிறது. இந்த வியாதியினால் அநேக ஜனங்களுக்கு மெத்தவும் கஷ்டம் நேரிடுகிறது. சில வீடுகளில் புருஷன், பெண்சாதி, பிள்ளைகள் சகிதமாய்ப் படுத்திருக்கிறார்கள். அந்த வியாதிக்காரரைக் கவனித்துப் பார்க்க ஒருவருமில்லை. அதினால் அநேகர் சாகிறார்கள்.

இதற்கு விஷ்ணுக்கிராந்தி, வெள்ளைமிளகு, திப்பிலி, நிலவேம்பு, தும்பைப்பூ இவற்றில் வகைக்கொரு பலமெடுத்துக் கஷாயம் எட்டுக்கொன்றாக இறக்கிச் சர்க்கரை போட்டுச் சாப்பிடக் குணமாகும். படுக்கையைவிட்டு எழாமலும், குளிர் காற்றிற்கு நேராக நெஞ்சைத்திறந்து காட்டாமலும் மூன்று நாள் அசையாமற் படுத்திருப்பது மிகுந்த குணத்தைச் செய்யும்.

இப்போது நடக்கும் பயங்கரமான அகோர யுத்தத்தாலும், பஞ்சம், கொள்ளைநோய், பெருவாரிக் காய்ச்சலாலும் கடவுள் மனிதரைச் சோதிக்கிறார். ஏன் கடவுள் இவ்விதம் மனுஷர்களைச் சோதிக்கவேண்டுமென்று கேட்டால் அவர்கள் மனந்திரும்பி தம்மையறிந்து பாவ வழியை விட்டு விடும்படி மனுஷர்களைச் சோதிக்கிறார். ஆகையால் இது சமயத்தில் நமது ஆத்தும காரியங்களை ஒழுங்குசெய்து உலகத்தில் கட்டிக்கொள்ளப்பட்ட பாவங்களுக்காக நம்மாலானமட்டும் பரிகாரம் செய்து கடவுளை ஆராதித்து வேண்டிக்கொள்வோமாக.

---



## Listen to the Priests.

### குருக்களுடைய புத்தி பிரசங்கங்களுக்குக் காது கொடு.

"உங்களுக்குச் செவி கொடுக்கிறவன் எனக்குச் செவி கொடுக்கிறான்.—உங்களைப் புறக்கணிக்கிறவன் என்னைப் புறக்கணிக்கிறான்" என்னும் சுவிசேஷ வாக்கியத்தை அறியாதார் சிலர். குருக்கள் சேசுநாதர்சுவாமிக்குப் பதிலாய் நின்றுகொண்டு கோவிலில் பிரசங்கம் செய்யும்போது நீங்கள் வெளியே போய் வீண்கதை பேசிக்கொண்டிருப்பது ஞாயமா? குருக்கள் செய்யும் பிரசங்கத்தைவிட எங்களுக்கு அதிகம் தெரியுமென்று எண்ணி வெளியே போய்விடுவது நன்றா? இந்தப் பிரசங்கம் நன்றாயிராது என்று போய்விடுவது அழகா? பிரசங்கம் கேட்க நேரமில்லையென்றும், கடமையில்லையென்றும் சொல்லி உங்கள் சிநேகிதருடன் போய்விடுவது புத்தியா? இதெல்லாம் வீண்சாக்குப்போக்கு. மேலே சொன்னபிரகாரம் நீங்கள் குருக்களுக்குச் செவி கொடாவிடில் சர்வேசுரனுக்குச் செவி கொடுக்கிறீர்களாவென்பதை நன்றாய் யோசித்துப் பாருங்கள்.

சேசுக்கிறீஸ்துநாதர் தம் சீஷர்களை நோக்கி, "நீங்கள் பூமியின் உப்பாயிருக்கிறீர்கள்" என்று சொல்லியிருக்கிறார். உப்பானது சாரமற்றுப்போனால் எதனால் பதார்த்தங்களுக்கு உருசியுண்டாகும்? அவ்வுப்பும் புறம்பே கொட்டப்படவும், மனிதரால் மிதிக்கப்படவுமன்றி வேறொன்றுக்குமாகாது. இங்கே அப்போஸ்தலர்கள் பூமியின் உப்பாய் இருக்கிறார்கள் என்றாலென்ன? உப்பானது இரண்டு காரியங்களுக்குதவும். மாமிசத்தைக் கெட்டுப்போகாமல் காப்பாற்றவும், போஜனங்களுக்கு உருசி கொடுக்கவுமாகும். அப்போஸ்தலர் உத்தியோகத்தைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு இந்த இருவிதத் தொழிலுமுண்டு. அதாவது, ஆத்துமாக்கள் கெட்டுப்போகாதபடிக்கு மெய்ப்போதகத்தால் அவற்றைக் காப்பாற்றுதலும், கிறீஸ்துவர்களுக்கு ஞான காரியங்களில் பிரியமுண்டாகும்படிக்கு அவைகளை ஞான ருசிகரத்தோடு ஊட்டுதலுமாம். குருவானவர் பிரசங்கத் தொட்டியில் ஏறுவதற்குள் அநேகர் அந்த அமுதைப் புசிக்க விருப்பமில்லாமல், துப்பாக்கியில் ரவை வைத்துச் சுடுமுன் குருவிமுதலிய பக்ஷிகள் சத்தங்கேட்டுப் பயந்து பறந்து போகின்றனபோல், வெளியே போய் கோவில் முன்னிலையிலோ அல்லது ரோட்டிலோ நின்றுகொண்டு, 'இராத்திரி நடந்த டிராமா வெகு நேர்த்தியாயிருந்தது. ராஜபார்ட் போட்டுக்கொண்டவன் மிகக்

கெட்டிக்காரன். நாற்காலிக்கு ஒரு ரூபாய் கொடுத்தது மோசமில்லை' என்று வீண் கதைகள் பேசிப் பிரசங்கம் முடியுமட்டும் வெளியே நின்றுகொண்டு நேரம் போக்குகிறார்கள். வாரத்தின் திருநாட்களை முதலாய்க் கேட்பதில்லை. அந்தோ! பரிதாபமே! பத்து நிமிஷமிருந்து பிரசங்கத்தைக் கேட்கக் கூடாதா? இரவு ஓய்வுநேரம். அந்நேரத்தில் விடியும் வரையில் டிராமாகொட்டகையிலோ, அல்லது பாட்டுக்கச்சேரியிலோ தூக்கம் வந்தாலும், காப்பி, பொடி முதலியவற்றை உபயோகித்துத் தூக்கம் வராமலிருக்க எவ்வளவோ பிரயாசப்படுகிறார்கள். அப்படித் தன்னையறியாமல் தூக்கம் வந்துவிட்டாலோ, 'ஐயோ! நான் தூங்கிவிட்டேனே! நல்ல ஆக்டர்கள் பாடுகையில் கேட்கவில்லையே!' என்று விசனமடைகின்றனர். இவைகளெல்லாம் ஒருவன் சாகும்போது பொக்கிஷமாக வந்து சேருமோ? ஒருபோதுமில்லை. தன்னாத்துமத்தைக் கெடுத்துப் பேய்க்கு இரையாக்குகிறானேயொழிய புண்ணியத்தைத் தேடுகிறதில்லை. புண்ணியவான் ஒருவன், "ஏன் ஐயா! பிரசங்கம் கேட்காமல்போகிறீரோ! சற்று இருந்து கேட்கக்கூடாதா?" என்று கேட்டால், "நீர் வீட்டிலிருப்பவர். உமக்கு வேலையில்லை. உமக்கு சாப்பாடு கிடைத்துவிடுகிறது. உமக்கென்ன வேலை. நான் இன்று நேரந் தப்பி உத்தியோகத்துக்குப் போனால் எஜமான் உடனே வேலையைவிட்டு நீக்கிவிடுவார். என் பெண்சாதி பிள்ளைகளுக்கென்ன கதி! சந்நியாசி, கன்னியாஸ்திரிகளுக்குத்தான் வேறு வேலையில்லை. அவர்கள்தான் தினந்தோறும் கோவிலுக்கு வரவேண்டும். எனக்கு அப்படி முடியுமோ? வாரத்தில் வரும் திருநாட்களைக் கேட்பதினால் என் பிள்ளைகுட்டிகளுக்குச் சாப்பாடு வந்துவிடுமோ?" என்பான்.

"ஓ! நண்பனே! அப்படியா நினைக்கின்றாய். நான் சொல்வதைக் கேள். குருக்களுடைய பிரசங்கம் எப்பேர்ப்பட்டதென்றால், அதைப்போல் வாசனைபொருந்திய மலர், பூஞ்செடிகளில்லை. அதில் நிறைந்துள்ள சிந்தனைகள் வேறெந்த சாதாரணமான மனிதன் வாயிலிருந்து வராது. பத்தியுள்ள விசுவாசிகள் அதைக் கேட்டு தேவகாரியங்களின்மேல் பிரீதி கொள்ளுவார்கள். அவர்கள் செய்யும் பிரசங்கங்களில் சுத்தவாளர் திருச்சரித்திரங்களுமுண்டு; உலகாரம்பமுதல் மனிதர் ஈடேற்றம்வரைத் தேவன் பாவிகளுக்குக் காட்டியிருக்கிற தாட்சணிய அன்புக்குச் சாட்சிகளுண்டு; போதனையுண்டு; சாதனையுண்டு; தீர்க்கதரிசனங்களுமுண்டு; அவற்றின் நிறை



வேறுதலுமுண்டு; தேவகோபாக்கினியின் வெருட்டுதல்களுமுண்டு; அவர் பாவிகளின்மேற் காட்டும் உருக்க இரக்கங்களுமுண்டு.

"ஆகையால் ஆத்தும வைத்தியரும் ஞான போதகருமான குருக்கள் சொல்லும் புத்திமதிகளுக்குக் காதுகொடுக்க நாம் காசு, பணம் கொடுக்கவேண்டுமோ? இல்லை. அவரோ நம் ஆத்தும நன்மையைக் கருதி சலிப்பில்லாமல் ஞான மலர்களைத் தெளிக்கையில், அவைகளை நாம் சட்டைபண்ணாமல் உதறிவிட்டால் அவர்களுக்கு எவ்வளவோ கஸ்தியாயிருக்கும் நீங்களே யோசியுங்கள்" என்று அப்புண்ணியவான் சொன்னாலும் கேளான்.

அக்கம்பக்கத்திலுள்ள வீட்டுக்குக் கோடங்கி குறிகாரன் வந்துவிட்டால் தங்கள் வீட்டுக்கு எப்போது வருவானோவென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்து, அவனையழைத்து வீட்டில் உட்காரவைத்துத் தாம்பூலம் தட்சணைவைத்து, குறி கேட்க கைநீட்டிக்கொடுத்தும், தன் புருஷன் பெயரைக் கேட்க, சொல்லக்கூடாத பெண்பிள்ளை அவனிடம் புருஷன் பெயர் சொல்வதும், எத்தனை நாளையில் என் துன்பந் தீர்ந்து சந்தோஷமுண்டாகுமென்றும், மகள் மருமகனை எந்த மாதம் புருஷன் வீட்டுக்கு அனுப்பலாமென்றும், இவ்விதமாகப் பல கேள்விகளைக் கேட்டு அவன் சொல்லும் பதில்களை வெகு அக்கறையுடன் காதுகொடுத்துக் கேட்கிறார்கள். இவைகளெல்லாம் உண்மையாகவே நமது நாட்டில் வழங்கிவருகின்றன. மேலும் சில கிறீஸ்துவர்கள் கலியாணம் செய்வதற்கும், ருதுசாந்தி செய்வதற்கும், பிரயாணம் செய்வதற்கும், பெண்ணைப் புருஷன் வீட்டுக்கு அனுப்புவதற்கும் மாதமும் நல்ல நாளும் வேண்டுமென்றும், இவைகளெல்லாம் அநுசரிக்காமல் செய்தால் துன்பம் விளையுமென்றும் சொல்லுகிறார்கள். ஐயோ! என்ன விந்தை இது! குருவானவர் சொல்லும் புத்திமதிகளைக் கேட்கக்கூடாத மேதாவிகளான பெரிய கனவான்கள் மேலே சொன்ன அஞ்ஞான சாஸ்திரமான குருட்டாட்டத்தை எப்படி அநுசரித்து நடக்கிறார்கள்? இவ்வுலகம் நமக்கு சதமல்ல. நாம் ஒருநாள் சாவது நிச்சயம். அப்போது சர்வேசுரனிடத்தில் என்ன கணக்கு ஒப்புவிக்கப் போகிறோம்?

ஒரு குடியானவன் தனக்கு நல்ல நிலத்தை உண்டுபண்ண விரும்பினால் அநேக காரியங்களைச் செய்யவேண்டும். அப்படியே தன் ஆத்துமத்தைச் சர்வேசுரனுக்குப் பிரியமுள்ள

சுகிர்த தோட்டமாக்கி அதிலே புண்ணியம் விளைவிக்க விரும்புகிறவன், அவைகளுக்கு ஒத்த பல முயற்சிகளைச் செய்யக்கடவான். நிலத்தைத் திருத்தக் குடியானவன் பிரயாசப்படுவதுபோல் தன்னுடைய துர்க்குணமெல்லாம் மாற்றிவிடவும்; தன் ஆத்துமத்தைச் சரியாய்த் திருத்தவும் பிரயாசப்பட வேண்டியது ஒவ்வொருவருடைய கடமை. அத்துர்க்குணங்களை ஜெயித்து விலக்கிவிடுவதற்குக் குருவானவர் கற்பிக்கும் முறையை அநுசரித்துக்கொள். உதவாத நிலத்தை பிரயாசையால் நல்ல நிலமாக்குகிறதுபோல தேவானுக்கிரகத்தைக் கொண்டு வேண்டிய பிரயாசைப்பட்டால் தன் துர்க்குணங்களையெல்லாம் வேரோடு களைந்துவிட்டு தன் ஆத்துமத்தைச் சற்குணப்படுத்தலாம். நெல் விதைத்தால் நெல் விளையும். சதுரக்கள்ளி முதலிய முட்செடி நட்டால் எவனையும் குத்துகிற முட்களைக் கொடுக்கும். அப்படியே சுகிர்த புண்ணியங்களை நம் ஆத்துமத்தில் விதைத்தால் நமக்கு அத்தியந்த புண்ணியம் விளையும் என்பது சத்தியம்.

---

## Annual Report of the Society of Foreign Missions for the year 1917.

### அந்நிய தேசத்துப் போதகர் சபையின் 1917-ம் ஆண்டின் வருஷாந்தர ரிப்போர்ட்.

| | | கோயமபுத்தூர் மேற்றிராசனம். |
|---|---|---|
| மேற்றிராசனங்கள் ... | 35 | |
| கத்தோலிக்கரின் தொகை ... | 1639853 | 42225 |
| கோவில்கள் ... | 6184 | 121 |
| ஐரோப்பிய வேதபோதகர் ... | 1234 | 34 |
| சுதேச குருக்கள் ... | 1043 | 19 |
| உபதேசிமார் ... | 3268 | 46 |
| குருமடங்கள் ... | 50 | 2 |
| குருமடத்திலுள்ள வித்தியார்த்திகள் ... | 2369 | 12 |
| சந்நியாசிகள் ... | 425 | 14 |
| கன்னியாஸ்திரிகள் ... | 6839 | 118 |
| மனந்திரும்பின அஞ்ஞானிகள் ... | 29331 | 268 |
| பாடசாலைகள் ... | 5322 | 74 |
| மாணுக்கர்கள் ... | 184093 | 5464. |



## Which is true happiness?

### மெய்யான பாக்கியமெது?

நெப்போலியன் என்னும் கீர்த்திபெற்ற சக்கரவர்த்தி ஒருநாள் சண்டையில் ஒரு முக்கியமான ஜெயம்பெற்ற பிறகு தன் கூடாரத்தில் இளைப்பாறியிருந்தார். அவருடைய சேனாதிபதிகள் அவரிடம் வந்து ஜெயத்தைப்பற்றிப் புகழ்ந்தார்கள். அவர்களில் ஒருவர் சக்கரவர்த்தியை நோக்கி இதுதான் உமது ஜீவிய நாட்களில் பாக்கியமான நாள் என்ன, 'இல்லை, இல்லை', என்று சக்கரவர்த்தி மறுமொழி சொன்னார். பிறகு மற்றொருவர், (Mariengo) மறைங்கோவென்றும், வேறொருவர் (Austerlitz) ஆஸ்டர்லீஸ் என்றும், இன்னொருவர் சக்கரவர்த்தி பட்டாபிஷேக நாள் என்றும் சொன்னார்கள். அதற்கு நெப்போலியன் என்பவர்: "இல்லை, இவையெல்லாம் என் ஜீவிய காலத்தின் முக்கிய நாட்களல்லவே. என் ஜீவியகாலத்தில் பாக்கியமான நாள் எதுவென்றால் நான் புதுநன்மை வாங்கின நாள்தான்" என்று பதிலுரைத்தார்.

இதுபோலவே பெயர்பெற்ற மனிதர்களும், பெரிய சாஸ்திரிகளும் சத்தியவேதத்திலும் புண்ணியத்திலும் மெய்யான பாக்கியம் கிடைக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். உலக, மகிமை, சிலாக்கியம், ஆஸ்திபாஸ்தி, இவைமுதலியவைகள் அழிந்துபோகும். அவை நன்மைகளல்ல. சத்தியவேதமாத்திரம் மனிதனுக்கு மனச் சந்தோஷமும், ஆறுதலும், மெய்யான பாக்கியமும் கொடுக்கும்.

ஆனால் இந்த மேலான பாக்கியம் கிடைக்கும்படி நாம் சத்தியவேதத்தை உறுதியாய் விசுவசிக்கிறதுமல்லாமல் அதன் சட்டங்களை நுணுநுணுக்கமாய் அநுசரிக்கக்கடவோம்.

(Olim)

---

## Here and There.

### நாநா சங்கதி.

The war: சென்ற மாதத்தில் நேசக்கட்சியார் அநேக ஊர்களையும், கைதிகளையும், யுத்தத்தளவாடங்களையும் மிகுதியாய்ப் பிடித்திருக்கிறார்கள். அவைகளில் முக்கிய பட்டணங்களாவன: பிரான்ஸ் தேசத்திலும், பெல்ஜியத்திலும் (St. Quentin) சென்ற் குயென்டீன், (Cambrai) காம்பிரே, (Lille) லில்லி, (Ostende) ஓஸ்டெண்ட், (Bruges) புரூஜெஸ் என்பவையாம்: ஜெர்மானியர்கள் எல்லாப் போர்முகத்திலும்

நாளுக்குநாள் பின்வாங்குகிறார்கள். ஜெர்மானியர் ஜெயங்கொள்ளமுடியாதென்று சமாதானம் கேட்கிறார்கள். உலகப்பொது நன்மைக்காகவும், சமாதானத்திற்காகவும் நேசக்கட்சியார் செய்யும் ஏற்பாடுகளுக்கு ஜெர்மானியர் ஒப்புக்கொண்டால்மட்டும் சமாதானம் நடக்கும். சமாதானத்தின் நாள் வெகு சமீபமாயிருக்கும்போல் தோன்றுகிறது. பல்கேரியர்கள் மிகவும் கேவலமாய்த் தோற்கடிக்கப்பட்டார்களாதலால், அவர்கள் சண்டை செய்ய முடியாமல் முழுதும் சரணமடைந்தார்கள். நேசக்கட்சியார் பல்கேரியாவைப் பிடித்துக்கொண்டு எல்லா ரயில்வேக்களையும், பீரங்கிகளையும், சண்டைக்கு வேண்டிய இதர சாமான்களையும் பிடித்துக்கொண்டனர். துருக்கியர் 50000-க்குமேலே கைதிகளாகப்பிடிபட்டும், யுத்தத்தளவாடங்களை அபரிமிதமாய் விட்டுவிட்டும், ரயில்வேக்களை இழந்தும், மெத்த நஷ்டமடைந்து பலவீனர்களாய்ப்போனார்கள். இந்திய போர்வீரர்கள் மிகவும் மேம்பாடாக சண்டைசெய்து வெற்றிகளைப் பெறும்படி உதவியாயிருந்தார்கள்.

Coimbatore: சரியாய் வந்திக்கத்தக்க கோயம்புத்தூர் மேற்றிராணியார் தேவமாதாவைப்பற்றி நேர்த்தியான நிருபம் ஒன்றெழுதி அதை ஒவ்வொரு பங்குக்கோவிலுக்கும் அனுப்பியிருக்கிறார். அதன் சுருக்கம் அடுத்தமாதம் இப்பத்திரிகையில் பிரசுரிப்போம்.

The New Governor of Madras:—தற்போது பம்பாய் கவர்னராயிருக்கிற (Lord Wellington) லார்ட் வில்லிங்டன் மதராஸ் கவர்னராக (Lord Pentland) லார்ட் பென்ட்லண்டுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் சில மாதங்களுக்குப் பிறகுதான் பம்பாயிலிருந்து மதராசுக்கு வருவார்.

Coonoor: குன்னூர் அர்ச். அந்தோனியார் பாடசாலை உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ R. இராஜேந்திரம் பிள்ளையவர்கள் இன்புளுவென்ஸாக் காய்ச்சலால் கடந்த மாதம் 11-ஆ வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இறந்துபோன செய்தியை மிக்க விசனத்துடன் தெரிவிக்கிறோம். அவருக்கு வயது 50. அவர் 27 வருஷகாலம் பாடசாலையில் உபாத்தியாயராயும், நல்ல பக்தியுள்ள கத்தோலிக்கராயும், நமது சிறிய பத்திரிகைக்கு மெத்தவும் உதவியாயுமிருந்தார். அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்வோமாக.

---

2-DEC 1918 MADRAS

# The St. Anthony's Messenger.

# அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. IV. December 1918. No. 12.

புத்தகம் IV.] FIDES AC ROBUR. [நம்பர் 12.

## MORAL INSTRUCTION.

## நல்லொழுக்க போதனை.

### Purity.

### தூய்மை.

ஒருவன் தன் சரீர சௌக்கியத்தைக் காப்பாற்றவேண்டுமானால் அதன் சுத்தத்தைக் கவனிக்கவேண்டும். அதுபோலவே மனிதன் தன் ஆத்துமத்தின் அழகையும் வல்லமையையுங் காப்பாற்றுவதற்கு அதன் தூய்மையைக் கருதவேண்டும். அத்தூய்மையைக் கற்பு என்று கூறுகிறோம்.

இக்கற்பு ஒருவனுக்கு எந்த அந்தஸ்திலும் காக்கவேண்டிய அவசியமான நற்குணமாம். அதுவே ஆத்துமத்துக்கு அழகைத்தருவது. இது ஸ்திரி புருஷர்களுக்கு அன்றலர்ந்த புஷ்பத்தைப்போல் அழகு, மணம், ஜனவசியம், கௌரவம் முதலிய பல யோக்கியதையைக் கொடுக்கிறது. அகத்தினழகு முகத்திலென்றும், அகத்துக்கு முகம் கண்ணாடியென்றும் கேட்டதில்லையா?

சிற்றின்பம், இவ்வுலகத்து மக்களுக்குப் பலவகையிலும் துன்பத்தைத் தருவதாம். காமத்தால் எத்தனையோ பெயர் புத்திக்கேடும், பைத்தியமும், வியாதியும் அடைந்திருக்கிறார்கள். அத்துர்நடத்தையால் இரத்தம் கெட்டு ரோகியாகி நிர்ப்பாக்கியமான வேதனைக்கும், வெட்கத்திற்கும் உள்ளாகிறார்கள். இத்துர்க்குணத்தால் கண் கெட்டும், சரீர காந்தியிழந்து வாடித்திரிவதுடன், அதன் பலமும் குறைந்து போகும். அதனால் எத்தனையோ வாலிபர்கள் அகாலமரணத்துக்குள்ளாகிறார்கள். இதனால் எத்தனையோ குடும்பங்கள் நாசமாய்ப்போகின்றன.

இக்கொடிய துர்க்குணத்தால் அறிவு மழுங்கும்; ஞாபக சக்தி குறையும். ஒரு விஷயத்திலும் மனதை ஓர்மைப்படுத்தமுடியாது. காமுகர்களுக்குச் சரி பிசகேயறிய முடியாமற் போய்விடும். பன்றிகள் சேற்றில் துளைந்து அதனைப் பரம சுகமாக நினைப்பதுபோல இத்தீயர்கள் தாங்கள் செய்யும் காரியங்களே சிறப்பான காரியங்களென எண்ணுவார்கள். இவ்வகை புத்திகெட்டபிறகு நல்விஷயங்களைக் கவனிக்கவும், அவற்றை நிதானித்து அறியவும், தாம் அவ்வகையறிந்த குற்றமற்ற கோட்பாடுகளின்படி நடக்கவும் எப்படி முடியும்?

இக்காமத்தால் மனிதன் தன் தெய்வீக உணர்ச்சியையிழந்து மிருகவுணர்ச்சியை யடைகிறான். அவன் இருதயம் மிருகத்தன்மையை யடைந்தபின்னர் அவனுக்கு நற்குணங்களும் பெருந்தன்மையும் எங்கிருந்து வரும்? கொஞ்சங்கொஞ்சமாக அவன் தீய வழிகளாலிழுக்கப்பட்டுக் கடைசியிற் வெட்க நாணமில்லாமல் திரிகிறான். துவக்கத்தில் அவனது மனச்சாட்சி அவன் செய்யுங் காரியந் தவறென்று சொல்லும். ஒரு முறையைப்போலப் பலமுறையும் அவன் காமத்தாலிழுக்கப்பட்டு அம்மனந் தடித்துப்போக அவனுக்கு மனச்சாட்சியென்பது அற்றுப்போகிறது. "ஆசை வெட்கமறியாது" என்றபடி அவனுக்கு வெட்கமும் பயமும் போய்விட அவன் இரண்டு கால் மிருகத்தைப்போலத் திரிகிறான்.

"தேட்டம் மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின், தரியாது காணுந் தனம்" என்றார் கிழவியும். ஒருவனுக்கு மரியாதையே சம்பாதிக்கவேண்டிய பொருளாம். "அரைக் காசுக்கு அழிந்த மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது." ஆகையால் மோகத்தை முனிந்து கற்பைக் காப்பது ஆண் பெண் அனைவருக்கும் அத்தியாவசியம். மனிதனது



பஞ்சேந்திரியங்கள் அவனுக்குப் பணிந்து நடக்கவேண்டுமேயன்றி அவன் அவற்றின் வசத்தனாய் மயங்கித்திரியக்கூடாது. இந்திரியங்கள் ஒருவனுக்குக் குதிரைபோன்றது. அக்குதிரையை அடக்கியாளாமல் தன்னிச்சைப்படி திரியுமாறு விட்டுவிட்டால் பல இடக்குகளையும்பண்ணி அது சவாரிசெய்பவனைப் படுகுழியில் தள்ளிவிடும். அதுபோலவே நல்லொழுக்கத்தில் பஞ்சேந்திரியங்களை அடக்கப் பழகாவிடின் அவைப் பல இடக்குகளையும் செய்து அவன் பிறவிப்பயனை யடையாதபடி செய்துவிடும்.

முதலில் கண்களைத் தூய்மையாயமைக்கவேண்டும். அதுவே ஆத்துமத்தின் பலகணி. சுத்தாசுத்த வஸ்துக்கள் அவற்றின் வழியாகவே உட்செல்லுகின்றன. அதனால் கண் அசுத்த வஸ்துவைப் பார்க்க நேரிடின் அதனோடு மனத்தைச் சேர்க்காதிருப்பாயாக. மனத்தைச் செலுத்தாவிடில் கண் உடனே பார்ப்பதை நிறுத்திவிடும். நீயும் நல்வழிப்பட்டவனாவாய்.

நாவும் சுத்தமாயிருக்கவேண்டும். பேச்சு மனிதனுக்குத் தெய்வத்தால் அளிக்கப்பட்ட வரமாம். அவ்வரத்தைக் கெடுத்துக்கொள்ளலாகாது. கெட்ட வார்த்தைகளையும், அக்கிரமமான கதைகளையும், சிற்றின்பப் பாட்டுகளையும் உச்சரிப்பதைக் கண்டிப்பாக விலக்கிவிடுவாயாக.

நீ விலக்குவது மாத்திரம் போதுமென்றெண்ணாதே. பிறர் பேசும்போதும் காது அதனைக் கேட்காதபடி பார். மனதினால் நினைக்கமுடியாத பல குரூரச் செய்கைகளைப்பற்றி அடிக்கடி கேட்பதனால், உனது பரிசுத்த இருதயம் கூர்மை மழுங்கிப்போகும். அதனால் தெய்வபலம் குறையும். சிறுவயதிற் கெட்ட சம்பாஷணைகளைக் கேட்டுக் கெட்டுப்போனவர்கள் எத்தனையோபேர்.

ஆகையால் உன் இருதயமாகிய கோட்டையின் வாயில்கள்போலிருக்கும் கண், வாய், காது இவற்றின் வழியாக மோகம், ஆசை, சிற்றின்பம் என்னும் இவற்றைப் புகவிடாதே. கற்புக்கு விரோதமான துர்ச்செய்கை, துர்ச்சிநேகம், துர்ப்பார்வை, துர்ப்பேச்சு, துர்நினைவு, துராசை இவற்றிற் கிடங்கொடாதே. மரியாதையோடும் அடக்கவொடுக்கத்தோடும் நட. லிலிமலர்போல் தோன்றுங் கற்பை உனது கண்ணின் கருமணியைக் காப்பதுபோலக் காப்பாயாக.

**கதை** :—முன்னொருகாலத்தில் தகப்பனும் மகனுமாகிய இருவர் தவஞ்செய்யக் காட்டிற்குப் போனார்கள். இடையில்

புத்திரனுக்கு உலக சுகங்களில் இச்சை வர அவன் தகப்பனிடத்து விடைகேட்டான். தகப்பன் ஒரு நாற்பதுநாளிருந்த பின்னர் போகலாமென்று உத்தரவிட்டான். சரியென்று மகனும் அப்படியே தங்கினான். இருபதாநாளில், மிக அவலட்சணமுடையவளும், துர்க்கந்தம் வீசுகிறவளுமாகிய ஒரு கிழவி அவனருகே வர, அவளைப் பார்த்து, "நீ யார்?" என்று கேட்டான். அதற்கு அவள், "மகனே! நான்தான் மோகம் என்பவள். உலகத்தவர் என்னையே அழகுள்ளவள் என்று எண்ணுகிறார்கள். அதனால் மிகவும் மோசமும் போகிறார்கள். நீ நல்லவன். உன் தந்தையினது பேச்சின்படியே நடக்க உடன்பட்டு நாற்பது நாளிருக்கச் சம்மதித்தபடியால் உனக்கு உண்மையை யுரைத்து உன் மயக்கத்தைத் தெளிவிக்க வந்தேன்" என்றாள். அதுமுதல் அவன் உலக சுகங்களை வெறுத்து மரணபரியந்தம் காட்டிலேயே தவஞ் செய்துகொண்டு காலங் கழித்தான்.

(சத்திய நேசன்.)

---

## Pastoral Letter.

### கோயம்புத்தூர் மேற்றிராணியாருடைய நிருபம்.

சிலநாட்களுக்குமுன் சரியாய் வந்திக்கத்தக்க கோயம்புத்தூர் மேற்றிராணியாராகிய அகுஸ்தீன் ஆண்டவரவர்கள் நேர்த்தியானதும், விஷய புஷ்டியுமுள்ள ஒரு நிருபத்தை எழுதித் தமது மேற்றிராசனத்திலுள்ள குரு சுவாமிமார்களுக்கும், விசுவாசிகளுக்கும் அனுப்பினார். அந்நிருபத்தின் சுருக்கமாவது:—

மூன்று இராஜாக்கள் நமது திவ்விய இரட்சகராகிய சேசுநாதனை ஆராதிக்க வந்தபோது, "வீட்டில் பிரவேசித்துப் பாலனை அவர் தாயாரான மரியம்மாளோடு கண்டார்கள்" என்று சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் திருக்குடும்பம் திருச்சபைக்கு அடையாளமாயிருக்கிறது. நாம் திருச்சபையில் சேரும்போது சேசுநாதனைத் தேவமாதாவோடுதான் காண்கிறோம். கிறீஸ்துவேதம் பரிசுத்த கன்னிமரியாயின் திருக்குமாரனுடைய வேதமாமே. ஆகையால் பதிதர் செய்வதுபோல், சேசுநாதனைத் தேவமாதாவினின்றும் பிரித்தல், சுவாமிதானே சேர்த்ததைப் பிரிப்பதுபோலாகும்.

நாமோ சேசுநாதனைத் தேவமாதாவோடும் தேவமாதா வழியாயும் கண்டடைகிறோம்.



தேவமாதாவின்பேரில் சரியான பத்தி, விசுவாசம் வைக்காமலிருக்கிறதினால் நமது விசுவாசம் மெலிந்து தளர்ந்து தேவ நம்பிக்கை குறைந்து தேவசிநேகம் குன்றிவிடுகிறது.

தேவமாதாவின்மேல் பத்தி இல்லாவிட்டால் நமது விசுவாசம் தளர்ந்துபோகும். இப்பூலோகத்தில் நம்மைப் பெற்ற தாயைவிட நம்மை அதிக நன்றாய் அறிபவர் யார்? அதன்பிரகாரம், தேவமாதாவைவிடச் சேசுநாதனைப் பூரணமாக அறிந்தவள் யார்? ஆகையால் சேசுநாதனை நமக்கு விளக்கிக் காட்டக்கூடியவள் தேவமாதாதானே!

மரியாயை அறிவதும் சேசுநாதனை அறிவதுமாகிய இவ்விரண்டும் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்கக்கூடாதனவாம்.

"அஞ்ஞான ஜனங்கள் தேவமாதாவால் கிறீஸ்துவேத விசுவாசத்திற்கு இழுக்கப்பட்டார்கள்" என்று அர்ச். சிரில் என்பவர் சொல்லியிருக்கிறார். சிலகாலத்துக்குமுன் மரணமடைந்த அந்நியவேத போதகர் சபையைச்சேர்ந்த ஒரு குருவானவர், இருபதினாயிரம் அஞ்ஞானிகள் தேவமாதாவின் உதவியினால் மனந்திரும்பியதாகச் சொல்லுகிறார். தேவமாதா உதவியில்லாமல் அஞ்ஞானிகள் சேசுநாதனை அறிந்துகொள்ள முடியாதென்று அவரே சொல்லுவார்.

திவ்வியநற்கருணைக் கதிருக்குள் சேசுநாதனை கிறீஸ்துவர்களுக்குக் காட்டுவதுபோல், ஓ! மதுரம் பொருந்திய கன்னிகையே! நீர் திவ்வியநற்கருணைக் கதிரைப்போலிருந்து உம்மில் விசுவாசக் கண்ணால் நாங்கள் சேசுநாதனை இப்பூலோகத்தில் காணச்செய்தருளும்.

தேவமாதாவின்பேரில் பத்தி இல்லாவிட்டால் தேவ நம்பிக்கை குறைந்துபோகும். அவள்பேரில் மெய்யான பத்தியிருக்குமாகில் தேவநம்பிக்கை சுளுவாயிருக்கும். அதினால்தான் திருச்சபை, "பரிசுத்த நம்பிக்கையின் மாதாவே!" என்று நமது மாசற்ற தாயை அழைக்கிறது.

பாவியானவன் தன் நிர்ப்பாக்கியமான ஸ்திதியைப் பார்க்கும்போது மன்னிப்படைய யாரிடம் போவான்? கடவுளிடத்தில்தான். ஆனால் கடவுளின் நீதி பயங்கரத்துக்குரியது. இச்சமயத்தில் அவனுடைய அடைக்கலம் யார்? நேசம் நிறைந்து பாவிகளுக்கடைக்கலமான தேவமாதாதானே!

மேலும் அர்ச். பெர்நார்து சொல்லியிருப்பதுபோல், "தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் நானுமொருவன்" என்று

யார் சொல்லக்கூடும். தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் நீயும் ஒருவனென்று அறியவேணுமோ? உன் இருதயத்தைச் சோதித்துப்பார். தேவமாதாவின்பேரில் மெய்யான பத்தியுள்ளவனாயிருந்தால் மோட்சம் அடைவாய். ஏனெனில் மெய்யான பத்தி, நாம் இரட்சணியமடையத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்பதின் நிச்சயமான அடையாளமென்று திருச்சபை கூறுகிறது. ஆகையால் தேவமாதா, மெய்யாகவே பரிசுத்த நம்பிக்கையின் தாய் என்று சொல்லத்தகும்.

தேவமாதாவின்பேரில் பத்தி இல்லாவிட்டால் தேவசிநேகம் குறைந்து ஆறிக்கிடக்கும். பரிசுத்த கன்னிமரியாயி பரிசுத்தமான நேசத்தின் தாய். "உன் தேவனாகிய கர்த்தனை உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமத்தோடும், உன் முழு சத்துவத்தோடும் நேசிப்பாயாக," என்னும கட்டளை மோயீசன் வழியாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் மோட்சத்தில் கடவுள் மகிமைப்பிரதாபம் நிறைந்தவரும் பயங்கரத்துக்குரியவருமாகிய ஆண்டவர். இதோ தேவமாதா கைகளிற் நேசத்துக்குரிய ஒரு சிறு பாலகனைக் காண்கிறோம். "சேசுநாதரைப் பெற்றெடுத்ததினால் தேவமாதா இப்பூலோகத்துக்கு தேவசிநேகத்தைக் கொண்டுவந்தாள்" என்று ஒரு வேத சாஸ்திரி சொல்லியிருக்கிறார்.

ஆகையால் சேசுநாதரைக் கண்டடைவது என்றால் அவரைச் சிநேகிப்பதுதான். அவரை யாருடைய சேர்க்கையில் காணலாம் என்பதையும் சுவிசேஷம் நமக்குத் தெரிவிக்கிறது. "வீட்டில் பிரவேசித்து பாலனை அவர் தாயாரான் மரியம்மாளோடு கண்டார்கள்."

சத்தியவேதத்தில் தேவமாதாவைச் சேசுநாதரினின்று பிரிக்கமுடியாது. அவள் மோட்சத்தில் நித்திய பாக்கியத்தை அநுபவித்துக்கொண்டிருப்பதினாலும், அவள் இன்னமும் நம்மோடு கூடவேயிருந்து, நமதுமட்டில் ஏக கவலையாயிருந்து சேசுநாதரின் வரங்களை நமக்குப் பகிர்ந்து கொடுத்துக்கொண்டிருப்பதினாலுமே.

ஆகையால் நாம் இவ்வுலகில் தேவமாதாவைப் பட்சத்தோடே நேசித்து அவள்மட்டில் மெய்யாகவே பத்தியுள்ளவர்களா யிருப்போமாகில் மோட்சத்தில் அவளோடுகூடச் சேசுநாதரையும் கண்டடைவோம்.

---



## Christmas.

### கர்த்தர் பிறந்த திருநாள்.

உலக முழுதுமுள்ள சகல கிறீஸ்துவ ஜனங்களும் வருஷா வருஷம் மகா சந்தோஷ மகிழ்ச்சியுடன் கொண்டாடும் சிறந்த இத்திருநாள் இம்மாதம் 25-உ வருகின்றது. பூலோக சகல ஜனங்களால் எதிர்பார்க்கப்பட்டவரும் மனுக்குலத்தின் இரட்சகருமான நமது திவ்விய ஆண்டவர் ஜனனமான உற்சவத்தை நாம் அன்று கொண்டாடப்போகிறோம். அந்த மகா நாளில் நடந்த சம்பவங்களை அனைவோரும் அறிந்திருந்தும் வெகு கொஞ்சம்பேர் மாத்திரம் அதன் படிப்பினையைப் பின்செல்லுகிறார்கள். இப்பெரிய திருநாளுக்குமுன் ஸ்நானஞ் செய்து, சிறப்பான துணிமணிகளையுடுத்தி, பலவித பலகார பதார்த்தங்களுடன் விருந்துண்டு கோவிலுக்குப்போய் பூசை கண்டால் சகலமும் முடிந்ததென்று சிலர் எண்ணுகிறார்கள். தவிர சிநேகிதர்கள் ஒன்றுகூடி ஆடிப்பாடி உல்லாசங்கொண்டாடி, அளவுக்கு மிஞ்சிக் குடித்துத் தெருக்களில் தட்டித்தடுமாறி நடந்து, சரீர சிற்றின்பங்களை அநுபவிப்பதில் அச்சிறந்த நாளின் சந்தோஷம் அடங்கியிருக்கிறதென்று பலர் நினைக்கிறார்கள். ஞாயிறுக்கிழமைகளில் பூசைக்கு வராதவர்களும், பல வருஷங்களாகப் பாஸ்குக் கடன் தீர்க்காதவர்களும், தாறுமாறாய்த் திரிந்து வெளிக்கு மாத்திரம் கிறீஸ்துவர்களாக கள்ளவேஷம் பூண்ட நிர்ப்பாக்கியர்களும், அன்று கோவிலில் சூழ்ந்து இவ்வுற்சவத்தைக் கொண்டாடுவதாக நினைக்கிறார்கள். திருச்சபையின் போதனையின்படி நடக்கிறவர்கள் இவர்களோ? இவர்கள் மெய்யான கிறீஸ்துவர்களாவார்களோ?

கோவிலில் கட்டியிருக்கும் மாட்டுக்கொட்டிலைப் பார்த்தால் நீ செய்யவேண்டியது இன்னதென்று யறியலாம். தங்க இடமில்லாமல் காட்டில் ஒரு குகையில் மனிதவுதவியின்றி மிருகங்கள் மத்தியில் நமது திவ்விய இரட்சகர் பிறக்கச் சித்தமானார். மழை குளிரால் பனியால் தாக்கப்பட்டு, போர்த்த வஸ்திரமின்றி வைக்கோலிற் கிடத்தப்பட்டிருக்கிறார். மூவுலகத்தையும் படைத்து ஆண்டு நடத்திவரும் தேவாதிதேவன் பாவிகளான நம்மை இரட்சிக்கும்படியாய் தமது மகத்துவத்தை மறைத்து நீச அடிமை வேஷமெடுத்து அட்டத் தரித்திரத்திற் பிறந்ததைக்காணும் நீ, உன் ஆங்கார சிலாக்கியத்தை அடக்கி தாழ்ச்சியுள்ளவனாக நடக்கவேண்டியது ஞாயமல்ல

வோ? சிருஷ்டிகளுக்கு அலங்காரத்தைக் கொடுத்து தமது மாட்சிமையை விளங்கச் செய்யும் கர்த்தர், பிறக்க இல்லிடமில்லாமல் காட்டில் ஓர் குகையில் இராத்திரியில் பனியின் குளிரால் பரிதவிப்பதைக் காணும்போது உன் மனங் கரையாதோ? உலக சுகசெலவ மகிமை அழியாப் பாக்கியமென்று எண்ணி நீ அதுகளைப் பின்செல்லலாமோ? உன் அற்பப் புத்தியின் திறத்தையும், பலத்தையும் நம்பி மோசம் போகாமல், உன் ஆங்கார கர்வத்தைத் தாழ்த்தக்கடவாய். ஆண்டவர் உன்னை வைத்த அந்தஸ்தில் திருப்திகொண்டு, தரித்திரம், துன்பம், வியாதி முதலியவைகளை நல்லமனதோடு சகித்து வரக்கடவாய்.

கர்த்தர் பிறந்த திருநாளை நீ சரியான பத்தி விநயத்தோடும், ஆவல் ஆசையோடும் நன்றியறிதலோடும் கொண்டாட ஆயத்தஞ்செய். பூர்வ மனிதர்கள் ஆவலோடு அவருடைய வருகைக்காக எதிர்பார்த்திருந்ததுபோல், நீயும் அவருடைய ஜனன உற்சவ நாளில் திவ்விய நற்கருணை வழியாய் உன்னிருதயத்தில் வந்து அவர் பிறக்க ஆசைகொள்ளக்கடவாய். தக்க ஒறுத்தல், உபவாசத்தினால் உன் ஒழுங்கற்ற ஆசாபாசங்களையடக்கி, நல்ல பாவசங்கீர்த்தனத்தால் உன் ஆத்துமத்தைச் சுத்தப்படுத்தி, புண்ணிய முயற்சிகளால் அவருக்கு யோக்கியமான விடுதியாக்கி, அதில் அவரை ஆசையோடு வரவழைப்பாயாக. நீ பரிசுத்தத்தனத்தில் நிலைக்கொண்டு புதிதான ஜீவியம் ஜீவித்து வருவாயாகில், உனக்கு எவ்வளவோ மனச் சமாதானமும் சர்வேசுரனுக்கு மகிமையும் உண்டாகுமென்பதற்கு ஐயமில்லை.

"தேவாதி தேவனைத் தேடுவோம்—நாளும்
செபதபங்களை நாடுவோம்.
பாவாக்கிரமங்களைப் போக்குவோம்—மரி
பாலன்மேல் பதங்கள் பாடுவோம்."

---

## Tribulations of the Kaiser.
## கைஸரது மனோவியாகுலம்.

ஒருகாலத்து ஒருவன் அரசனைப்போல் சுகமாயிருக்கிறதாகப் பெருமை பேசிக்கொண்டானாம். அப்போது பக்கத்திலிருந்த ஒரு பெரியவர் அரசனுடைய சுகதுக்கங்களை யெடுத்துரைத்து அவனைத் திருத்தினார் என்பார்கள். நாலணாவுக்குக் கூலிவேலை செய்து, தன் அன்றையச் செலவைக் கழித்து,



அடுத்த வீட்டுக்குப்போய் அரட்டையடிக்கும் ஒருவனைச் சோம்பேறியென்றும், திண்ணை தூங்கியென்றுங் கண்டித்துத், தன் வீட்டுக்கூழை அமிர்தம்போலருந்தித், தனது குடங்கையே தலையணையாகவும், தரையே பாயாகவும் படுத்துக்கொண்டபோதிலுங் குறட்டைவிட்டுத் தூங்கும் பெருமை வாய்ந்த ஏழையே மன நிம்மதியோடிருப்பவன். அப்படியல்லாமல், கொடியும் முரசும் கொற்ற வெண்குடையுந் தாங்கித், தன்னிலும் செல்வவானது சொத்தை எப்போது பிடுங்கிக்கொள்ளுவோமென்று துராலோசனைகள் செய்துகொண்டு, அன்னத் தூவியினும் பஞ்சினாலுமான மெத்தையிற் படுத்துப் புரண்டும் தூக்கம் வராமல், உள்நாட்டுக் கலகம், வெளிநாட்டார் பகை முதலியவற்றைக்கண்டு பலகாலும் கொல்லுலையைப்போல பெருமூச்செறிந்து, தனது இரவுகளைப்போக்கும் அரசனது பெருமையும் சுகமும் எத்தன்மைத்தாம்! இதற்குத் திருஷ்டாந்தமாகத் தற்காலம் ஜெர்மன் சக்கரவர்த்தியின் கதியை எடுத்துக்கொள்வோம்.

கடவுள் தனக்கடுத்தபடியான மரியாதையை யடையும் வண்ணம் கௌரவப்படுத்தச், சாத்தான், தானே கடவுளாயின அவ்வளவு மரியாதைகளுந் தனக்கே கிடைக்குமெனப் பேராசைகொண்டு கடவுளைத் தள்ளிவிட எண்ணிய முயற்சிபோலத், தனது பெருமையையே உலகத்தவர்கள் முதன்மையாக எடுத்துப் பேசவேண்டுமென்னும் பேராசைகொண்டு, தான் ஒன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்குமென்பதை மறந்து, தனது தோள் வலியாலும், சேனாபலத்தினாலும், யுத்த தளவாடப் பெருக்கினாலும், மற்றும் பல சாஸ்திர விபரீத ஞானத்தினாலேற்பட்ட மூழ்கு கப்பல், ஆகாயக்கப்பல், வெடிகுண்டு, விஷக்காற்றுப்பை முதலிய பல பைசாசப் படைகளினாலும், வெற்றி பலவானுக்கென்பதும், தோல்வி பலவீனனுக்கென்பதுமில்லையென்னும் உலக வழக்கை மறந்து, பெரும்பிசாசு மாதிரி உலக முழுவதையும் பகைத்துத் தான் போரில் வென்றுவிடுவோமென்று மனத்துணிவுடன், இப்பெரும்போரைக் கிளப்பிவிட்டு இப்பொழுது படும்பாட்டை என்னென்று சொல்வது!

தான் சதாகாலமும் எழுதிவிட்ட பொய்யெல்லாம் இப்போது தன் நாட்டு ஜனங்கள் அறிந்துவிட்டார்களே என்ற வருத்தம் ஒரு பக்கம்; தன் நாட்டார்கள் தன் அக்கிரமங்களையெல்லாம் அறிந்து தன்னை அவமதிக்கலானார்களே என்ற துக்கம் மற்றொரு பக்கம்; தான் சக்கரவர்த்தியாயிருந்தது

போய்ப் பட்டத்தைவிட்டு சாதாரண மனிதனிலும் கேடான கதியை அநுபவிக்க நேரப்போகிறதே யென்ற விசனம் இன்னொரு பக்கம்; தான் எவ்வளவோ பிரயத்தனம் செய்தும் தன் எதிரிகளை ஜெயித்துத் தான் உலகமுழுதும் ஆளமுடியவில்லையே என்ற ஏக்கம் வேறொரு பக்கம்; தன் கப்பற்படையாவும் நேசக்கட்சியார் கையில் அகப்படப்போகிறதே யென்ற சோகம் இன்னொரு பக்கம்; இப்படியாக அவன் படும்பாட்டையெண்ணினால் நாயும் அத்தனை பாடுபடாது.

தவிர தன்னோடு சேர்ந்த ராஜ்யங்களெல்லாம் தன்னைக் கைவிட்டுவிட்டதனால் தான் தனியாக நின்று சண்டை செய்யத் திறமையில்லாமல், அகவுரமான சமாதானம் செய்துகொள்ளவேண்டி வந்ததே யென்று விழிப்பதையும் பாருங்கள்!

(தொடரும்) உற்றதுணைப்போன்.

---

## Reminiscence of a Convert.

### மனந்திரும்புதலின் ஞாபகம்.

முன் இப்பத்திரிகையில் எழுதப்பட்டிருந்ததுபோல (Mr. Mackenzie I. C. S) மிஸ்டர் மெக்கன்ஸி துரையவர்கள் பதித வேதத்தைவிட்டு நமது சத்திய திருச்சபையில் சேர்ந்து நல்ல கத்தோலிக்கரானார். இவர் 1877-ம் ௵ பாஸ்குத் திருநாளில் ஓத்தகமந்து அர்ச். மோட்சராக்கினி மாதாக் கோவிலில் திருச்சபையிற் சேர்ந்தார். இவர் ஸ்காட்லண்டில் பிறந்தவர். தமது சிறு பிராயமுதற்கொண்டு தாம் பிறந்து வளர்ந்து வந்த வேதத்தைப்பற்றி சந்தேகப்பட்டார். மெய்யான வேதத்தை யறியவேண்டுமென்று ஆவல்கொண்டு நல்ல மனதோடு அநேக பதிதப் புஸ்தகங்களையும், கத்தோலிக் புஸ்தகங்களையும் படித்தார். ஒரு விஷயம் அவர் மனதில் சந்தேகமாயிருந்தது. அது என்னவென்றால், கத்தோலிக் திருச்சபையானது அப்போஸ்தலர் முதல் இந்நாள் வரையில் நிலைக்கொண்டிருக்கிறது. பதித வேதமோ அப்படியல்ல. பதிதர்கள் சத்தியவேதத்தை விட்டுப் பிரிந்துவிட்டபடியால் சேசுநாதசுவாமியும் அப்போஸ்தலர்களும் ஸ்தாபித்த திருச்சபைக்குப் புறம்பாயிருக்கிறார்கள். அப்படி பலவிதமாக அவர் மனம் கலக்கமாயிருக்கையில் சர்க்கார் உத்தியோகத்தின்பேரில் அவர் இந்தியாவுக்கு வந்தார். அவருக்கு வேதத்தின் பேரில் உண்டான மனக்கலக்கம்



அவரை ஒருபோதும் விடவில்லை. ஓத்தகமந்தில் அவர் இருக்கையில் அதை அவர் பொறுக்கமாட்டாமல் சங். (Rev. Fr. Mc Carron) மக்காரன் என்னும் குருசுவாமியாரிடம்போய் தன் ஆத்துமத்தின் அந்தஸ்தை அவருக்கு வெளிப்படுத்தினார். அவரிடம் கத்தோலிக் வேதத்தைப்பற்றி அநேக கேள்விகள் கேட்டார். அவைகளில், "மோட்சத்திலிருக்கிற அர்ச்சியசிஷ்டவர்கள் எப்படி நம்முடைய ஜெபங்களைக் கேட்கக்கூடும்" என்று கேட்டார். அதற்குக் குருவானவர், "அர்ச்சியசிஷ்டவர்கள் நம்முடைய ஜெபங்களைக் கேட்க மோட்சத்திலிருந்து இப்பூலோகத்துக்கு வர அவசரமில்லை. நாம் தந்தியடித்துத் தூர ஊருக்குத் தெரிவிக்கவேண்டிய சமாச்சாரத்தைத் தெரிவிப்பதுபோல நமது ஜெபங்கள், அர்ச்சியசிஷ்டவர்களிடம் சேரும்படி சர்வேசுரன் ஏற்பாடு செய்ய வல்லமையுள்ளவராயிருக்கிறார். ஆனால் வேத சத்தியங்களை யறிவதற்கு தர்க்கம் செய்வது போதாமல், விசுவாசமும், கீழ்ப்படிதலும், நல்ல மனதும் வேண்டும்" என்று சொன்னார்.

பிறகு சங். மக்காரன் சுவாமியார் அவரைத் திருச்சபையில் ஏற்றுக்கொண்டார். அச்சமயத்தில் அப்போஸ்தலரான அர்ச். தோமாஸ் என்பவர், "கண்ணால் கண்டால்மட்டும் நம்புவேன்" என்று சொன்னதுபோல், மிஸ்டர் மெக்கன்ஸி துரை வெகுகாலம் வேதத்தையறியாமலிருந்து, பிறகு கண்டுபிடித்ததால் அவர் தோமாஸ் என்று பெயர் வைத்துக்கொள்ள வேண்டுமென்று அவரே தெரிந்துகொண்டார்.

ஞானஸ்நானம் பெற்று சத்தியவேதத்திற் சேர்ந்த பிறகு அவருடைய மனக்கலக்கமெல்லாம் நீங்கிவிட்டது. அதன் பிறகு ஒருநாள் அவருடைய சிநேகிதனான பதிதனொருவன், 'ஏன் நீர் ரோமான் சபையிற் சேர்ந்திருக்கிறீர்" என்று கேட்டதற்கு, "நான் வெகுகாலத்திற்கு முந்தியே ஏன் கத்தோலிக் வேதத்தில் சேரவில்லையென்று நான் ஆச்சரியப்படுகிறேன். ஏனெனில் அதுவொன்றே 'சத்திய திருச்சபை" என்று சொன்னார். (Olim)

---

## Here and There.

### நானா சங்கதிகள்.

Victory: நேசக்கட்சியார் எல்லாப் போர்முகத்திலும் எதிரிகளைப் பூரணமாய் ஜெயித்துக் கடந்த நான்கு வருஷம்

4 மாதமாய் நடந்த யுத்தம் கடந்த நவம்பர்-மீ 11-உ பகல் 11 மணிக்கு முடிந்தது. முதலில் பல்கேரியா, இரண்டாவது துருக்கி, மூன்றாவது ஆஸ்டிரியா, கடைசியாக ஜெர்மானியரும் தங்கள் சேனைகள் அழிந்து தங்களால் முடியவில்லையென்று சரணடைந்துவிட்டார்கள். சத்துருக்களின் இராஜாக்கள் தங்கள் சிம்மாசனத்தைவிட்டு நீங்கிவிட்டார்கள். அதனால் தேசத்தில் ஜனங்களுக்குள் கலகமும் அலங்கோலமுமாயிருக்கிறது. கொடிய அரசனாகிய கெயிசரால் உலக முழுதும் கஷ்டப்பட்டது. இப்போது உலகம் இரட்சிக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டதால் சந்தோஷம் கொண்டாடுகிறது. மார்ஷல் (Marshal Foch) போஷ் என்பவர் ஒருநாள் சொன்னதுபோல ஜெயத்திற்காக என்னைப் புகழவேண்டாம். ஜெயம் அளிக்கிற கடவுளுக்கு நன்றியறிதலாக ஸ்தோத்திரம் பண்ணக்கடவோம். இப்போது உலக பொது நன்மைக்காக செய்யப்போகும் சமாதானம் இனி ஒரு காலத்தில் இவ்வித யுத்தம் நடவாதபடிக்கு தகுந்த ஏற்பாட்டுடன் ஒழுங்கு செய்து நிறைவேறக் கடவுளைப் பிரார்த்திப்போமாக. கடவுள் நமது காருண்ணிய சக்கரவர்த்தியையும் ஏகாதி பத்தியத்தையும் காப்பாற்றுவாராக.

Coimbatore: நமது ஞானப்பிதாவின் ஸ்தானாதிபதியாகிய மிகவும் வந். புமாசோனி பயாங்கி ஆண்டவர் நவம்பர்-மீ 16-உ கோயமுத்தூருக்கு வந்திருக்கிறார். நீலகிரியில் ஓரிடத்தைத் தமது வாசஸ்தலமாக இருக்க நியமிக்கப்போகிறார். அதனால் நாம் பாக்கியம்பெற்றவர்களாவோம்.

Obituary: புதுச்சேரி அதி மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங், (Rev. Fr. E. Marcier) மேர்ஷியர் சுவாமியார் இன்புளூவென்சாக் காய்ச்சலால் மரணமடைந்ததும், கும்பகோணம் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். (Rev. Fr. J. B. Croze) குரோஸ் சுவாமியார் போர்முகத்தில் காயம்பட்டு இறந்துபோனதாகக் கேள்விப்பட்டு விசனமடைகிறோம். R. I. P.

Influenza: இன்புளூவென்சாக் காய்ச்சலால் குன்னூரில் 83 கத்தோலிக் கிறீஸ்துவர்களும், ஒத்தகமந்தில் அர்ச். மோட்ச ராக்கினிமாதாக்கோவில் பங்கில் 110 பேரும், வெலிங்டன் பங்கில் 108 பேரும் மரணமடைந்தார்கள்.

160924